சோர்வும் தீர்வும்



Prof: S.பன்னீர்செல்வம்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

சோர்வும் தீர்வும்

Prof. S. பன்னீர் செல்வம்

WORD PUBLISHERS TRUST

Civil Aerodrome Road
Coimbatore - 641 014

வார்த்தை வெளியீடு

முதல் பதிப்பு : ஜனவரி 2000
1000 பிரதிகள்

இரண்டாம் பதிப்பு : பிப்ரவரி 2002
1000 பிரதிகள்

'SORVUM THEERVUM'

© Word Publishers Trust

விலை : ரூ. **25/-**

இரண்டு புதிய அதிகாரங்கள் சேர்க்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்டது.

PUBLISHED BY:
WORD PUBLISHERS TRUST
Civil Aerodrome Road
Coimbatore - 641 014

Printed at : **GRAPHIC ARTS,** Coimbatore - 641012
Ph. 0422 - 493226

சோர்வும் தீர்வும் - முகவுரை

மனித வாழ்க்கையின் மகிழ்ச்சியின் இரகசியம் நமது வாழ்க்கையில் பிரச்சனைகளோ, சோர்வோ வராமல் தடுப்பதில் அடங்கியிருக்கவில்லை. மாறாக அப்படி தவிர்க்க முடியாத சோர்வுகள் நமக்கு வரும் போது அதை எப்படி மேற்கொள்வது என்பதில் தான் மனித வாழ்க்கையின் உண்மையான வெற்றியும், மகிழ்ச்சியும் அடங்கியிருக்கிறது. இந்தக் கோட்பாட்டை உங்கள் மனரீதியில் ஏற்றுக் கொள்வீர்களானால் சோர்வும் தீர்வும் என்ற இந்தப் புத்தகத்தில் அடங்கியிருக்கிற நடைமுறை சத்தியங்கள் உங்களுக்கு ஊன்றுகோலாக, உறுதுணையாக இருக்கும் என்று நம்புகிறேன். நமது வாழ்க்கையில் நமது தலைக்கு மேலே பறவை பறப்பதை நம்மால் எப்படி தவிர்க்க முடியாதோ அதே போல நமக்கு வரும் "சோர்வுகளையும்" நம்மால் தவிர்க்க முடியாது.

மனச்சோர்வு என்பது நமது மனரீதியில் ஏற்படும் ஒரு 'கலக்கம்', ஒரு 'சலனம்'. ஒரு நதியில் தண்ணீர் அமைதியாக ஓடிக் கொண்டிருக்கும் வேளையில் யாராவது ஒருவர் அந்தத் தண்ணீரின் மேல் ஒரு கல்லைப் போடும்போது, அந்தத் தண்ணீரில் சில சலனங்கள் - Ripples ஏற்பட்டு அந்த நதியின் ஓட்டத்தில் சிறிது தடை ஏற்படுகிறது. இந்தச் சிறு சலனம் நதியின் தண்ணீர் ஓட்டத்தை தடை செய்யாது. சரீரக் களைப்பு வந்தால் ஒரு ஸ்டிராங்க் டீ குடித்தால் சரியாகிவிடும். ஆனால் இந்தச் சோர்வு என்பது நமது சரீரத்தில் அல்ல. நமது மனதில் ஏற்படும் ஒரு 'களைப்பு'. இந்த மனக்களைப்பைப் போக்குவதற்கு நமக்கு 'மனரீதியான பானம்' தேவை; அதாவது நமது மனதின் சிந்தனையைச் சரியான திசையில் திருப்பக்கூடிய சில ஆலோசனைகள் நமக்குத் தேவை. அதைத் தான் இந்தப் புத்தகத்தில் அச்சடித்துக் கொடுத்திருக்கிறோம்.

பிசாசைப் பற்றி ஒரு கதை உண்டு. தன்னிடத்திலுள்ள எல்லா உபகரணங்களையும் ஏலம் போடப் போவதாக அந்த பிசாசு அறிவித்தது. அந்த ஏலத்தில் பங்கெடுக்க அநேகர் கூடி விட்டார்களாம். தன்னுடைய பல கருவிகளையும், ஆயுதங்களையும் ஏலம் போட ஆயத்தமாயிருந்த பிசாசு ஒரே ஒரு ஆயுதத்தை மாத்திரம் பத்திரமாக ஒரு கவரில் போட்டு விட்டு அந்த கவருக்கு வெளியே "Not for sales - இது விற்பனைக்கு அல்ல"

- என்று எழுதியிருந்தானாம். இது மாத்திரம் ஏன் விற்பனைக்கு இல்லை என்று ஒருவர் கேட்ட போது அந்தப் பிசாசு கொடுத்த பதில், " ஐயோ, இது தான் நான் வைத்திருக்கிற எல்லா ஆயுதங்களிலும் மிகவும் வல்லமையானது. இந்த ஆயுதத்திற்குப் பெயர், "சோர்வு" இந்தச் சோர்வு என்ற ஆயுதத்தின் வாயிலாக நான் எந்த மனிதனின் உள்ளத்திற்குள்ளும் எளிதில் பிரவேசித்து விடுவேன். எனவே இதை மாத்திரம் நான் யாருக்கும் கொடுக்க மாட்டேன்" - என்று பதில் கொடுத்ததாம். ஆம் ! நம்மைக் கீழே தள்ளுவதற்குப் பிசாசு அடிக்கடி உபயோகிக்கும் ஒரு ஆயுதம் தான் "சோர்வு".

மனம் ஒரு குரங்கு என்பது உண்மையானால் அந்தக் குரங்கையும் கையாள நாம் பழகிக் கொள்வது நல்லது. இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருப்பது பெரிய தத்துவ ஞானியின் கருத்துக்கள் அல்ல. ஆனால் நடைமுறை வாழ்க்கையின் சில அடிப்படை உண்மைகள் தான் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன. இவைகள் வெறும் சாதாரண உண்மைகள்; எளிமையான எதார்த்தங்கள். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பார்கள். எனவே இந்த சாதாரண எளிமையான கருத்துக்கள் உங்களது வாழ்க்கையில் நீங்கள் எதிர்கொள்ள நேரும் போராட்டங்களையும், மனச்சோர்வுகளையும் எதிர்த்து எதிர்நீச்சல் போடவும் உங்கள் வாழ்க்கைப் படகு அக்கரை போய் சேர உதவும் துடுப்புக்களாக மாறும் என்று நம்புகிறேன்.

'கற்றது கைமண்ணளவு; கல்லாதது உலகளவு' என்ற சான்றோர் கூற்றின்படி இப்புத்தகத்தில் சோர்வும் தீர்வும் என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்கள் உங்களுக்கு 'முடிவாக' மாறாமல் 'ஆரம்பமாக' அமையட்டும். இங்கே கொடுக்கப்பட்டுள்ள 'எண்ணங்கள்' சுதந்திரமாக சிந்திக்கும் உங்களது ஆழ்மனதை அனல்மூட்ட உதவும் 'தீக்குச்சிகளாக' மாறட்டும்; இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்கள் உங்கள் வாழ்க்கையின் 'கருவூலமாகவோ' 'பொக்கிஷமாகவோ' மாறாமல் அந்த பொக்கிஷத்தைத் திறக்கும் 'திறவுகோலாக' மாத்திரம் இருக்கட்டும்.

பூமியின் கடையாந்திரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்து போவதில்லை. சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார் (ஏசா. - 40 : 28,29)

12-01-2000

கோவை -14

S. பன்னீர் செல்வ[ம்]

பொருளடக்கம்

1.	மனச்சோர்வு	1
2.	மனித சமுதாயத்திற்கு வந்த முதல் சோர்வு	8
3.	தோல்வியினால் ஏற்படும் சோர்வு	15
4.	மற்றவர்களோடு ஒப்பிடுதல்	23
5.	இழப்புகள்	31
6.	மற்றவர்கள் நமது கடின உழைப்பை பாராட்டத் தவறும் போது	39
7.	மற்றவர்களது ஏளனப்பேச்சுக்கள்	46
8.	கவலைகள்	55
9.	திடீர் ஆபத்தினால் ஏற்படும் சோர்வு	64
10.	எலியாவிற்கு ஏற்பட்ட சோர்வு	75
11.	சிட்சைகளின் மூலம் சோர்வு	90
12.	காலதாமதம்	99
13.	தடைகள் மூலம் மனச்சோர்வு	105
14.	எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றமாய் மாறும்போது	113
15.	மனச்சோர்வின் அறிகுறிகள்	121
16.	மனச் சோர்வின் மிக மோசமான விளைவு	124

1. மனச்சோர்வு

நமது பூலோக வாழ்க்கையில் நாம் அடிக்கடி சந்திக்கும் ஒரு எதிரி 'மனச்சோர்வு'. இந்த உலகத்தில் பிறந்த எந்த மனிதனும் இந்த 'மனச்சோர்வு' என்ற வியாதிக்கு விதிவிலக்கு அல்ல. சிலர் பசி என்றால் என்ன? பணக்கஷ்டம், பற்றாக்குறை, பஞ்சம், பட்டினி - என்றால் என்னவென்று அறியாமல் வாழக்கூடும். ஆனால் இந்த மனச்சோர்வு என்ற மனவியாதி மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனையும் தாக்கும் சக்தி படைத்தது. அரசன் முதல் ஆண்டி வரை, ஏழை, பணக்காரன், படித்தவன், படிக்காதவன் என்று வித்தியாசம் பாராமல், பாகுபாடு இல்லாமல் இந்த 'மனச்சோர்வு' மனித சமுதாயத்தின் எல்லா மட்டத்திலும் பரவும் சக்தி வாய்ந்தது.

சிலந்திப் பூச்சியை எடுத்துக் கொள்ளுங்கள். அது குடிசையிலும் கூடு கட்டும்; இங்கிலாந்து தேசத்து ராணியின் அரண்மனைக்குள்ளும் எளிதில் உட்புகும். அது போலத்தான் இந்த மனச்சோர்வு என்ற சிலந்திப் பூச்சியும் எல்லா மனித இருதயத்திற்குள்ளும் எளிதில் நுழைந்து விரைவில் கூடு கட்டும் திறன் வாய்ந்தது.

முன்னேற்றப்பாதையின் முட்டுக்கட்டை

இந்த மனச்சோர்வு நமது வாழ்க்கையின் முன்னேற்றப்பாதையில் ஒரு பெரிய முட்டுக்கட்டையாகவும் வேகத்தடையாகவும் (Speed-Breaker) இருப்பதை நாம் அடிக்கடி உணர்ந்திருக்கிறோம். இப்படி மனச்சோர்வு நமக்கு வரும்போது, நாம் இடிந்து போய், கப்பல் கவிழ்ந்தது போல கன்னத்தில் கை வைத்து மனமுடைந்து உட்கார்ந்து விடுகிறோம். பல மணி நேரங்கள், பல நாட்கள் சோர்ந்து போய் செயலிழந்து, விரக்தியடைந்து உட்கார்ந்து விடுகிறோம். இதன் விளைவு? இந்த மனச்சோர்வு என்ற வெட்டுக்கிளிக்கு நமது வாழ்க்கையின் பல நேர்த்தியான பகுதிகள் இரையாகி விடுகிறது. நமது வாழ்க்கையின் நீரோட்டத்தில் சாக்கடல் போன்ற தேக்க நிலை ஏற்படுகிறது; நமது திட்டங்கள் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் அனைத்தும் ஸ்தம்பித்து நின்று விடுகிறது. முன்னேற்றப் பாதையில் நம்மை ஏற்றிச் செல்லக்கூடிய பல பஸ்களை நாம் மிஸ் பண்ணிவிடுகிறோம்.

மனச்சோர்வு மாரடைப்பில் முடியக்கூடும்

இங்கே மனச்சோர்வு என்று குறிப்பிடுவது சரீரக் களைப்பை நான் குறிப்பிடவில்லை. சரீரம் களைப்படைவது மிகவும் நல்லது என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். அப்படியே சரீரம் களைப்படைந்தாலும் அதைப் போக்குவது மிக எளிது. சிறிது ஓய்வு, அல்லது ஸ்டிராங்காக ஒரு டீ அல்லது காபி குடித்தால் அந்தச் சரீரக்களைப்பு நீங்கிவிடும். ஆனால் இந்த மனச்சோர்வு மிகவும் ஆபத்தானது; அது ஒரு எலும்புருக்கி; அது நீண்ட கால விளைவுகளையும், பாதிப்புக்களையும், மனக்கொதிப்பையும் உண்டாக்கக்கூடிய சக்தி உடையது. சரீரக்களைப்பு நமது சரீரத்தில் ஒரு சில அவயவங்களை மாத்திரமே பாதிக்கும். ஆனால் இந்த மனநோய் நமது ஆவி, ஆத்துமா, சரீரம்-முழு ஆள்தத்துவத்தையே பாதிக்கக்கூடியது. அது மாத்திரமா? நமது கடந்த காலம், நிகழ்காலம், எதிர் காலம்-நமது ஆயுள் சக்கரத்தையே தாக்கி தகர்த்து விடும்.

நமது தலையில் ஒரு பெரிய பாராங்கல்லை வைத்துக் கொண்டு நடப்பது கூட சுலபம். ஆனால் நமது உள்ளத்தில் ஒரு கவலையையோ, மனப்பாரத்தையோ சுமந்து கொண்டு நமது வாழ்க்கைப் பயணத்தில் நடப்பது மிகக் கடினம். நமது சரீரக் களைப்பை நமக்கு அடிக்கடி வரும் தலைவலி, காய்ச்சலுக்கு ஒப்பிடுவோமானால், இந்த 'மனச்சோர்வை' இருதய நோய்க்கு ஒப்பிட வேண்டும். தலைவலியும் காய்ச்சலும் ஓரிரு நாளில் நம்மை விட்டுப் போய்விடும்; ஆனால் 'இருதய நோய்' மாரடைப்பிலும், மரணத்திலும் நம்மை கொண்டு போய்விடும் என்பதை நாம் மறக்கக் கூடாது. அந்த அளவிற்கு இந்த மனச்சோர்வு ஆபத்தானது என்ற உண்மையை நாம் உணர வேண்டும்.

அறுபது டாலர் செலவில் அடக்க ஆராதனை

ஒரு நகைச்சுவையான சம்பவம் ஒன்று என் நினைவிற்கு வருகிறது. டாக்டர் பார்க் டக்கர் என்ற போதகர் ஒரு நாள் மிக மனச்சோர்வுடனும், மனப்பாரத்துடனும், தொங்கிய முகத்துடனும் வீதியில் நடந்து போய்க் கொண்டிருந்தாராம். அந்த வீதியில் "இறந்தவர்களை அடக்கம் பண்ணும் ஒரு நிறுவனம்" (Funeral Home) இருந்தது. அந்த நிறுவனத்தார் தங்களது சுவற்றில் ஒரு சுவாரசியமான. நகைச்சுவையான வாசகம் எழுதியிருந்தார்களாம். மனச்சோர்வோடு நடந்து போய்க் கொண்டிருந்த போதகர் அந்த வாசகத்தைப் படித்துவிட்டு சற்று அதிர்ச்சியடைந்தார். அது

என்ன வாசகம் தெரியுமா?. "ஏனய்யா, அரை உயிராய், நடைப் பிணமாக (சோர்ந்து போய்) நடந்து திரிகிறீர்? உள்ளே வாரும்; அறுபது டாலர் செலவில் உமக்கு அருமையான அடக்கம் செய்ய காத்துக் கொண்டிருக்கிறோம்". இதைப் படித்தவுடனே, அவருக்கு சிரிப்பு வந்துவிட்டது. சே! ஒரு சாதாரண பிரச்சனைக்குப் போய் நான் இப்படி மனச்சோர்வு அடைந்திருக்கக் கூடாது என்று தனக்குள்ளே சிந்தித்து, தன்னைத்தானே உற்சாகப்படுத்திக்கொண்டு போய் விட்டாராம். ஒரு வேளை நாம் கூட இந்தப் போதகர் பார்க் டக்கரைப் போல நீண்ட முகத்துடனும், பாரமான இருதயத்துடனும் நமது வாழ்க்கைப்பாதையில் தற்சமயம் நடந்து கொண்டிருக்கலாம்; அந்தச் சமயங்களில் பிசாசும் நம்மைப்பார்த்து, "ஏன் அரை உயிருடன் வாழ்கிறாய், என்னிடம் வா; உன்னை நல்ல மரியாதையுடன் அடக்கம் செய்கிறேன்" - என்று அழைக்கும் எச்சரிப்பை உணர்ந்து, நாம் உணர்வடைந்து, விழித்தெழுந்து "அப்பாலே போ, சாத்தானே" என்று அதிகாரத்துடன் கட்டளையிடக் கற்றுக் கொள்ள வேண்டும் - என்று ஆண்டவர் விரும்புகிறார்.

மனச்சோர்வை நேருக்கு நேர் சந்தியுங்கள்

ஆம்! இந்த மனச்சோர்வு என்ற எதிரியை நாம் மேற்கொள்ள நமது மனதின் அரைகளை வரிந்து கட்டிக்கொண்டு புறப்படவேண்டும்; அதைப் பார்த்து நாம் பயப்படாமல் அதை நேருக்கு நேர் சந்தித்து அதை மேற்கொள்ளும் வழிமுறைகளை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். மனச்சோர்வு வந்த பின் காப்பதைப்பார்க்கிலும் அது வருமுன் காப்பதற்கு தேவையான வழிமுறைகளை நாம் அறிந்து கொண்டு செயல்படுத்துவது நல்லது.

நமது கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு வெற்றியுள்ள வாழ்க்கையாக, ஆண்டவருக்கும், மற்றவர்களுக்கும் பயனுள்ளதாக மாற வேண்டுமானால், அவ்வப் பொழுது வரும் மனச் சோர்வுகளை சரியாக கையாட நாம் கற்றுக் கொள்ளுதல் மிக அவசியம். திடீரென வரும் இந்த மனச்சோர்வு என்ற இடியும் மின்னலும் நம்மை வந்து தாக்கும்போது நமது ஆவிக்குரிய வாழ்க்கையின் மின்னோட்டத்தின் Fuse போய்விடுகிறது, நாம் செயலிழந்து காணப்படுகிறோம். ஆவிக்குரிய இருள் நம்மைச் சூழ்ந்து கொள்கிறது. அதற்கு மாறாக வாழ்க்கையில் அதிர்ச்சிகள் ஏற்படும்போது பவுல்

அப்போஸ்தலனைப் போல, தானியேலைப் போல நாம் தைரியமுள்ளவர்களாய் இருப்போமானால் நமது வாழ்க்கையின் மின்னோட்டமோ அல்லது Fuse-சோ போவது கிடையாது. இன்னும் சிலருக்கு வீட்டின் Fuse - தான் போகும். சிக்லாக் பட்டணம் சுட்டெரிக்கப்பட்ட சம்பவத்தின் மூலமாக தாவீதின் உள்ளத்தில் இடி விழுந்தது. அது சுக்கு நூறாக உடைந்த போது அவன் தானாகவே விழித்தெழுந்து ஜெபம் என்ற Fuse ஐ அவனாக போட்டு வெற்றி பெற்று வெளிச்சம் பெற்றான்; ஆனால் இன்னும் சிலருக்கு மின்னல், இடிவிழுந்தவுடனே, Line-ல் அதாவது மின் கம்பத்திலேயே Fuse போய்விடும் அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆண்டவரே நேரில் வந்துதான் சரிசெய்ய வேண்டும். நீங்கள் எந்த குருப்பை (group) சேர்ந்தவர்கள்?

தானியேல், யோசேப்பு போன்றவர்கள் முதல்வகையைச் சேர்ந்தவர்கள். வாழ்க்கையில் என்ன அதிர்ச்சி ஏற்பட்டாலும், எந்தப் பெரிய இடியும், மின்னலும், இன்னலும் ஏற்பட்டாலும் அவர்களது Fuse போகவே போகாது; அவர்களது ஆவிக்குரிய வாழ்க்கையின் மின்னோட்டம் எந்த சூழ்நிலையிலும் தடைபடாது, இரண்டாவது வகை சிக்லாக் பட்டணத்தில் தவித்த தாவீது போன்றவர்கள்; சிறிது நேரம் தவித்தான்; பின்பு தானாகவே ஜெபம்பண்ணி தன்னை சரிபண்ணிக் கொண்டான்; அதாவது வீட்டில் உள்ள Fuse தான் போனது; அதை நாமாகவே போட்டுக்கொள்ளலாம். ஆனால் 3-வது வகையைச் சேர்ந்தவர்களுக்கு அதிர்ச்சி ஏற்படும் போது மின்கம்பத்திலேயே Fuse போய்விடும். எம்மவு ஊருக்குப் போன சீஷர்கள் சோர்ந்து போய் பயணம் செய்தபோது ஆண்டவரே நேரில் வந்து சரி செய்ய வேண்டியதாயிற்று. நீங்கள் இதில் எவ்வகையைச் சேர்ந்தவர்கள் என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

விரும்பியதைப் பெறுவதைக் காட்டிலும் பெற்றதை விரும்புவது சாலச்சிறந்தது

நமது தலைக்கு மேல் பறவை பறப்பதை நம்மால் எப்படி தடுக்க முடியாதோ, அதே போலத்தான் நமது வாழ்க்கையிலும் பல வித்தியாசமான சூழ்நிலைகளாலும், அழுத்தங்களினாலும் 'மனச்சோர்வு' உண்டாவதையும் நம்மால் தடுக்க முடியாது. நமது வாழ்க்கையில் நமது எண்ணம், நமது விருப்பம் போலவே ஒவ்வொரு காரியமும் நடக்க வேண்டுமென்று

எதிர்பார்ப்பது பைத்தியக்காரத்தனம். அதற்கு மாறாக, நமது வாழ்க்கையில் நமது விருப்பத்திற்கு மாறாக ஏற்படும் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் ஏற்றவாறு நமது விருப்பங்களையும், எதிர்பார்ப்புக்களையும் வாழ்க்கையின் அணுகு முறைகளையும் மாற்றிக்கொள்வதுதான் புத்திசாலித்தனம். நீ காதலித்த பெண்ணை திருமணம் செய்வதைக் காட்டிலும், நீ திருமணம் செய்த பெண்னை காதலிப்பது தான் சாலச்சிறந்தது. நீ விரும்பும் வேலையை அடைவதைக் காட்டிலும் நீ அடைந்த வேலையை விரும்புவதில் தான் வாழ்க்கையின் சந்தோஷமும், வெற்றியின் ரகசியமும் அடங்கியிருக்கிறது. இந்த உண்மை மனிதர்களுக்கு மாத்திரமல்ல; இந்த உலகில் வாழும் எல்லா உயிரினங்களுக்கும் பொருந்தும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு நமது கிறிஸ்தவ வீடுகளில் 'Prayer changes things' - 'ஜெபம் உன் சூழ்நிலையை மாற்றும்' என்ற வாசகம் எழுதப்பட்ட சுவர் அட்டை Wall Text தொங்குவதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் சமீப காலங்களில் இது, "Prayer changes you according to the things around you" அதாவது "ஜெபம் சூழ்நிலைக்கு ஏற்றபடி உன்னை மாற்றும்'' என்று சற்று வித்தியாசமான கண்ணோட்டத்தோடு மாற்றப்பட்டிருக்கிறது.

மேலே கூறப்பட்ட கருத்திற்குள் புரையோடிப்போயிருக்கிற ஒரு உண்மையை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அது என்ன தெரியுமா? நமது வாழ்க்கையில் பலர் நமக்கு பிரச்சனையாக இருப்பதாக நாம் அடிக்கடி புலம்புகிறோம்; மன உலைச்சல் படுகிறோம். ஆனால் கசப்பான உண்மை என்னவென்றால் நமது பிரதான பிரச்சனை நாமே தான். 'நான்' தான் எனக்கு எதிரி; நாம் தான் நமது எதிரி. நமது வாழ்க்கையில் ஏற்படும் சோர்வுகளையும், பிரச்சனைகளையும், அதின் தீர்வுகளையும் ஆராயும் முன்பு நமது மனதை, நமது இதயத்தை பக்குவப்படுத்திக் கொள்வது நல்லது.

ஆரம்பத்தில் இந்த 'மனச்சோர்வு' என்பது ஒரு சாதாரண வியாதியாகத்தான் இருக்கும். ஆனால் அதற்கு சரியான நேரத்தில் தக்க சமயத்தில் அதைத் தடுப்பதற்கு ஆவண செய்ய தவறுவோமானால் அது அசாதாரண விளைவுகளை உண்டாக்க முடியும். பரீட்சையில் பெயில் ஆனதற்காக அப்பா திட்டினார் என்பதற்காக எத்தனையோ பேர் தற்கொலை செய்திருக்கிறார்கள். கணவன் கோபத்தில் பேசிய சில சூடான

வார்த்தைகளினால் தங்களைத் தீயெரித்துக் கொண்ட மனைவிகள் அநேகர் உண்டு. வியாபாரத்தில் தோல்வி, காதலில் தோல்வி, பரீட்சையில் தோல்வி, தேர்தலில் தோல்வி, குடும்பத் தகராறு - இது போன்ற காரணத்திற்காக தற்கொலை செய்துகொண்ட அநேக செய்திகளைச் செய்தித்தாளில் நாம் வாசித்திருக்கிறோம்.

ஒரு நிமிடத்திற்கு 10 பேர்கள் தற்கொலை முயற்சி

மனச்சோர்வினால் வாழ்க்கையில் விரக்தியடைந்து இந்த உலகத்தில் ஒரு நிமிடத்திற்கு 10 பேர்கள் தற்கொலை செய்ய முயற்சிக்கிறார்கள். அதில் ஒருவர் வெற்றி பெறுகிறார் (அதற்குப் பெயர் வெற்றியா?). இந்த புத்தகத்தை நீங்கள் வாசிக்கத் தொடங்கிய இந்த 5 நிமிடங்களில் இந்த மனச்சோர்வினிமித்தம் 50 பேர்கள் தற்கொலை செய்ய முயற்சித்திருக்கிறார்கள் - 5 பேர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள் என்ற உண்மை நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது.

வேதாகமம் வெறும் போதனைகளை போதிக்கும் ஒரு புத்தகம் மாத்திரமல்ல; மனித வாழ்க்கையில் சாதாரண ஒரு மனிதன் அடிக்கடி சந்திக்கும் பிரச்சனைகளையும், போராட்டங்களையும் படம் பிடித்துக் காட்டும் வாழ்க்கை வரலாறுகள் அடங்கிய ஒரு புத்தகம். இந்த சாதாரண மனிதர்களின் வாழ்க்கை வரலாறுகள் நமக்கு பல நல்ல பாடங்களைக் கற்பிக்கிறது. வேதத்தில் நாம் சந்திக்கும் ஆபிரகாம், மோசே, எலியா போன்ற மனிதர்கள் அனைவருமே நம்மைப் போல சாதாரண மனிதர்கள்தான்; அவர்கள் ஒன்றும் சூப்பர் மனிதர்களல்ல. அவர்களது வாழ்க்கையில் அவர்கள் சந்தித்த பிரச்சனைகள், பெற்ற வெற்றிகள், தழுவிய தோல்விகள், உபயோகப் படுத்திய அணுகுமுறைகள், கையாடிய நடைமுறைகள் அனைத்துமே இந்த 21ஆம் நூற்றாண்டில் நுழையப் போகிற நமக்கும் ஏற்றதாயிருக்கிறது.

நமது சரீரத்தில் அவ்வப்பொழுது வரும் ஒவ்வொரு வியாதியையும், டாக்டர் தனித்தனியாகப் பாவித்து, தனித்தனியாக மருந்து மாத்திரை கொடுக்கிறார். அது போலவே நமது வாழ்க்கையில் எழும் ஒவ்வொரு பிரச்சனையையும் நாம் தனித்தனியாகக் கையாள, அதற்குத் தீர்வு காண முயலுவது நல்லது.

நமக்கு மனச் சோர்வை உண்டு பண்ணும் ஒவ்வொரு பிரச்சனையையும் - அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். மனச்சோர்வு என்பது ஒரு Virus - ஒரு தொற்று நோய்க்கிருமி. அது வானத்திலிருந்து பொத்தென்று நம்மேல் விழவில்லை. உதாரணமாக ஒரு காய்ச்சலோ, சளியோ, தலைவலியோ நமக்கு வருவதாக வைத்துக் கொள்ளுங்கள்; அது திடீரென்றா நமக்கு வந்து விட்டது? நிச்சயமாக இல்லை. அந்தக் காய்ச்சலை, சளியை நமக்கு யார் கொண்டு வந்தது? டாக்டரிடம் கேட்டால் - உங்களுக்கு ஏதோ ஒரு Infection வந்திருக்கிறது. ஒரு கிருமி நம்மை வந்து ஒட்டிக்கொண்டது. இல்லை, இல்லை, அந்தக் கிருமி நம்மை ஒட்டிக் கொள்வதற்கு நாம் வழிவகுத்து இடம் கொடுத்து விட்டோம். குடித்த தண்ணீர் அல்லது மழையில் நனைந்தது; ஏதோ ஒரு காரணம். எனவே அடுத்த முறையும் அந்தக் கிருமி உங்களை ஒட்டிக் கொள்ளாதபடி ஜாக்கிரதையாயிருங்கள் என்று டாக்டர் நமக்கு ஆலோசனை கொடுக்கிறார். அந்த ஆலோசனையைக் கேட்டு நாம் முன் எச்சரிக்கையுடன் வாழ்வோமானால் அதே வியாதி மீண்டும் நம்மைத் தாக்காதபடிக்கு நம்மை நாமே பாதுகாக்கமுடியும்.

எதிரி யார் என்பதை அடையாளம் கண்டு கொள்வது பாதி வெற்றிக்குச் சமம். அதுபோலவே எந்தெந்த சூழ்நிலையில், யார் யார் மூலமாக, என்ன காரணங்களுக்காக நமக்கு மனச்சோர்வுகள் ஏற்படுகின்றன - என்று நாம் அறிந்து கொள்வோமானால் அந்த மனச்சோர்வை மேற் கொள்ளும் முயற்சியில் நாம் பாதிவெற்றியைப் பெற்று விட்டோம் என்பது அர்த்தம்.

அதைத்தான் இந்த புத்தகத்தில் நாம் ஆராய்ந்து கற்றுக் கொள்ளப் போகிறோம். அடுத்து நீங்கள் வாசிக்கப் போகும் சில பக்கங்கள் உங்கள் வாழ்க்கையின் சில முக்கியமான பாடங்களாக அமையக்கூடும்; கவனத்துடனும் ஒரு பெரிய எதிர்பார்ப்போடும் படியுங்கள்; நிச்சயம் பயனடைவீர்கள்; பலன் பெறுவீர்கள், பெலனடைவீர்கள். அவை உங்களை சோர்வு என்ற குகையை விட்டு வெளியே கொண்டு வருவதோடு நில்லாமல் உங்கள் வெற்றிப்பாதைக்கு வழிகாட்டியாகவும் இருக்கும் என்று நம்புகிறேன்.

☆☆☆

2. மனித சமுதாயத்திற்கு வந்த முதல் சோர்வு

ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார். ஆனால் காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கீகரிக்கவில்லை. அதனால் காயீனுக்கு மிகவும் எரிச்சலுண்டாக, அவன் முகநாடி வேறுபட்டது. (ஆதி. 4 : 4,5)

மனித வரலாற்றில் முதன் முதலாக ஏற்பட்ட மனச்சோர்வைப் பற்றிய விளக்கம் மேலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ஆதாமின் பிள்ளைகளிடத்திலேயே தொடங்கிவிட்டதென்றால் இந்த மனச்சோர்வு எவ்வளவு பழமையானது, தொன்மையானது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். அப்பா, அம்மா சொல்லாமலே ஆதாமின் இரண்டு மகன்களும் ஒழுங்காக ஆண்டவருக்கு காணிக்கை படைத்ததை நாம் மனதாரப் பாராட்டாமல் இருக்கமுடியாது. இதில் எழுந்த பிரச்சனை என்ன வென்றால் ஆபேலின் காணிக்கையை ஆண்டவர் அங்கீகரித்தார்; ஆனால் அவனது சகோதரன் காயீன் படைத்த காணிக்கையை ஏனோ ஆண்டவர் அங்கீகரிக்கவில்லை. இதனிமித்தம் காயீனுக்கு எரிச்சலும், மனச்சோர்வும் ஏற்பட்டது. நாளாவட்டத்தில் இது பொறாமையாக, கோபமாக மாறி இறுதியில் கொலையில் போய் முடிந்துவிட்டது. இது எவ்வளவு பெரிய அறிவீனம். இந்தக் காயீன் தனக்கு ஏற்பட்ட மனச்சோர்வை ஆரம்பத்திலேயே அலசி ஆராய்ந்து பார்த்து ஆவன செய்திருந்திருப்பானானால் இந்த மனித சமுதாயத்தின் முதல் கொலை நடந்திருக்காது.

"சோர்வும் தீர்வும்" என்ற தலைப்பில் முதன்முதலாக காயீனுக்கு வந்த மனச்சோர்வையும் அதனுடைய காரணங்களையும், பின்னனியையும் நாம் ஆராய்வது நல்லது. இந்த காயீன்-ஆபேல் என்ற இரு சகோரர்களும் தங்களது பெற்றோர்களாகிய ஆதாமும், ஏவாளும் இவர்களுக்குச் சொல்லாமலே இவர்களாகவே முன் வந்து 'உலகிலேயே முதன் முதலாக ஆண்டவருக்குக் காணிக்கை கொடுத்தவர்கள்' என்ற பெயரை எடுத்து விட்டார்கள். ஆனாலும் காயீன் ஏன் சோர்ந்து போனான்? அதன் காரணத்தை நாம் ஆராய்வது நல்லது. அவனும் அவனது தம்பி ஆபேலும் இருவரும் சேர்ந்து தான் ஆண்டவருக்கு காணிக்கை படைத்தார்கள். ஆபேலின் காணிக்கையை ஆண்டவர்

அங்கீகரித்தார். ஆனால் காயீனின் காணிக்கையை அவர் அங்கீகரிக்க வில்லை. ஏன் என்று நமக்குப் புரியவில்லை.

ஆனால் இந்தக் காயீன் தன் மனச்சோர்வு என்ற வியாதிக்கு பலியாவதற்குப் பதிலாக, 'உண்மையான பிரச்சினை' என்ன என்பதையும், அதனுடைய 'காரணத்தையும்', அதை நீக்குவதற்கு அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதையும் அவன் ஆக்கப்பூர்வமாக ஆராயத் தவறி விட்டான். அதை ஆராயத் தவறியதின் விளைவு தான் கொலையில் போய் முடிந்தது. ஆம்! மனச்சோர்வு சில வேளைகளில் நமது வாழ்க்கையிலும் பயங்கரமான பின் விளைவுகளை உண்டாக்க முடியும் என்பதை நாம் அறிந்து எச்சரிப்படைய வேண்டும்.

மனம்திறந்து பேசுங்கள்

தனது காணிக்கை ஏன் ஆண்டவரால் அங்கீகரிக்கப்படவில்லை என்பதை ஆண்டவரிடத்திலேயே இவன் நேரிடையாகவே கேட்டு தெரிந்து கொண்டு ஆவன செய்திருக்கலாம். இங்கே இந்த காயீன் ஆண்டவரிடத்திலேயே நேரடியாகவே கேட்டிருக்க வேண்டும் என்று நான் எழுதும் போது ஒரு சிறு சம்பவம் என் நினைவிற்கு வருகிறது. ஒரு விளம்பரக் கம்பெனி ஒரு பெண்ணின் புகைப்படத்தைப் பெற விரும்பியது. அதற்கு பல முறைகளைக் கையாண்டார்கள். அந்த வீட்டிற்கு Telephone repair பண்ண போகிறவன், Electrician, Plumber, Postman - இவர்களுக்குப் பணம் கொடுத்து வீட்டிற்குள் போய் எங்கேயாவது அப்பெண்ணின் புகைப்படம் கிடைத்தால் எடுத்து வர முயற்சி செய்தார்கள். எல்லாம் தோல்வியடைந்தது.

இறுதியாக ஒருவன் அச்சவாலை ஏற்று எப்படியாவது, ஏதாவது ஒரு வழியில் அப்பெண்ணின் புகைப்படத்தை வாங்கி வருகிறேன் என்று கூறிப் போனான். ஒரு மணி நேரத்திற்குள்ளாக புகைப்படத்தைப் பெற்றுக் கொண்டு திரும்பினான். ஒரே ஆச்சரியம்! 'எப்படி இப்படத்தைப் பெற்றாய் என்று ஆச்சரியத்தோடு கேட்ட போது அவன் கொடுத்த பதில், "நான் நேரே அந்த வீட்டிற்குச் சென்று Calling bell-ஐ அடித்தேன். அந்தப் பெண் வந்த போது உங்களது புகைப்படம் ஒன்று வேண்டும் என்று கேட்டேன். கொடுத்தார்கள். இதோ அந்தப் படம்" - என்று பதில் கூறினானாம்.

பார்த்தீர்களா? எளிதில் செய்யக் கூடிய சில காரியங்களை நாமாகவே அதைப் பெரிதுபடுத்தி அநாவசியமாக கவலைப்பட்டுக் கலங்குகிறோம்.

உதாரணமாக நீங்கள் வேலை செய்யும் அலுவலகத்தில் உங்களது மேலதிகாரி உங்களைப் பற்றி சில தவறான அபிப்பிராயங்கள் வைத்திருக்கிறார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள் - அதனால் உங்களது பதவி உயர்வு - எதிர்காலம் பாதிக்கப்படப் போகிறது - என்ன செய்வது. யாரிடத்தில் போய்க் கேட்பது என்று அடிக்கடி நினைத்து நீங்கள் சோர்ந்து போகும் சூழ்நிலை இருக்குமானால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்? உங்களது சகாக்களிடம் போய் அடிக்கடி குசு, குசு என்று பேசி குழம்பிக் கொண்டிராமல், அடுத்த முறை உங்கள் BOSS-யிடம் போகும் போது - சரியான சந்தர்ப்பம் வரும் போது - அவரிடமே நேரடியாகக் கேட்டு விடுங்கள். "சார், என்னிடத்தில் ஏதாவது குறையிருந்தால் சொல்லுங்க; நான் திருத்திக் கொள்ள உதவியாக இருக்கும்" - என்று கேட்டு விடுங்கள். இதைக் கேட்கும் போது பணிவுடனும், பொறுமையுடனும், திறந்த மனதுடனும் கேளுங்கள். அவர் ஒரு வேளை உங்களது குறைகளைக் கூறுவாரானால் அதைத் திருத்திக் கொள்ள முயலுங்கள். அப்பொழுது உங்களது சோர்வு தானாய்ப் போய் விடும்.

ஆபேலிடம் ஆலோசனை கேட்டிருக்கலாம்

காயீனின் கதைக்கு திரும்புவோம். தனது காணிக்கையை ஆண்டவர் ஏன் அங்கீகரிக்கவில்லை என்பதை அறிவதற்கு இன்னொரு வழி - ஆண்டவரின் அங்கீகாரத்தை ஏற்கனவே வாங்கியிருக்கும் தனது தம்பி ஆபேலிடத்திலேயே இவன் காரணம் கேட்டிருக்கலாம். நமது மனச் சோர்வை நீக்குவதற்கு மற்றவர்களது ஆலோசனை நல்லதொரு மாற்று மருந்து. சுயபுத்தி இருக்க வேண்டும்; இல்லாவிட்டால் 'சொல்புத்தி' இருக்க வேண்டும் என்பது ஒரு பழமொழி. நம்மைக் காட்டிலும் வயதிலும், அனுபவத்திலும், அறிவிலும் உயர்ந்தவர்களது ஆலோசனையைக் கேட்பது நல்லது. அவர்களது வார்த்தைகள் நம்மை ஊன்றக் கட்ட முடியும். ஏற்ற காலத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகள் வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம் (நீதி. 25 : 11). எனவே இந்த காயீன் ஆபேலிடத்தில் ஆலோசனை கேட்கத் தவறிவிட்டான். ஒரு வேளை சுயபெருமை அல்லது பொறாமை அவனைத் தடுத்திருக்கக்கூடும்.

வேறொரு காணிக்கையைப் படைத்திருக்கலாம்

மூன்றாவதாக, இவனாகவே யோசித்து, "சரி, ஆண்டவர் இந்தக் காணிக்கையை அங்கீகரிக்க வில்லை; அப்படியானால் வேறொரு

காணிக்கையைப் படைப்போம்" - என்று யோசித்து வேறு காணிக்கையைப் படைக்க முன் வந்திருக்க வேண்டும். அதையும் ஆண்டவர் அங்கீகரிக்கத் தவறினால் இன்னொரு காணிக்கை படைக்க அவன் முயற்சி எடுத்திருக்க வேண்டும். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்". இறுதியாக ஆண்டவரே பார்த்து, "சே! என் மகன் காயீன் இவ்வளவு முயற்சிக்கிறான். அவனது காணிக்கையை அங்கீகரித்து விடுவோம்" என்று சொல்லி ஆண்டவர் நிச்சயம் அவனது காணிக்கையை அங்கீகரித்திருப்பார். ஆனால் இதை எல்லாம் முயற்சிக்காமல் இந்தக் காயீன் உடனே கோபப்பட்டான். எரிச்சலடைந்தான். இறுதியாக உடன் பிறந்த தனது சகோதரனைக் கொலை செய்தான். அதாவது மனச்சோர்வு என்ற வியாதி தனது கோபத்தை யார் மேலாவது கொட்டுவதற்கு தூண்டிவிடும். அது மாத்திரமல்ல; இந்த மனச் சோர்வு தன்னைத் தானே நொந்து கொண்டு சுயபரிதாபத்தில் ஈடுபடும். தன்னைப் போல ஒரு துரதிஷ்டசாலி இந்த உலகத்தில் யாருமே கிடையாது என்று எண்ணத் தூண்டும். நம்மை நாமே நொந்து கொள்ள ஆரம்பிக்கும் போது நாம் மனச் சோர்வு என்ற குகைக்குள் நுழைந்து விட்டோம் என்பது தான் அர்த்தம்.

நமது மனித வாழ்க்கையில் சோர்வு என்ற எதிரியை நாம் சந்திக்காமல் இருக்க முடியாது. 'சோர்வு' என்ற மனநோயினால் பாதிக்கப்படாத மனிதன் இந்த உலகில் யாருமே இருக்க முடியாது. வாழ்க்கை என்ற ஏணியில் எந்த அளவுக்கு ஒரு மனிதன் ஏறி முன்னேற முற்படுகிறானோ அந்த அளவிற்கு அவன் தன் வாழ்க்கையில் சோதனையையும், சோர்வையும் சந்திக்கத் தன்னைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும். நான் 'சோர்வும் தீர்வும்' என்ற தலைப்பில் இந்தப் புத்தகத்தின் முகவுரையை எழுத ஆரம்பிக்கும் போது எனக்கு ஒரு கடிதம் வந்தது. எப்படிப்பட்ட கடிதம் தெரியுமா? நான் சென்ற மாதம் சாலையை கடக்கும் போது ஒரு மொபெட்டினால் இடித்து தள்ளப்பட்டு கீழே விழுந்து காயமடைந்தேன். இதை 'வார்த்தை' பத்திரிக்கையில் வெளியிட்டு எனக்காக ஜெபியுங்கள் - என்று போட்டிருந்தோம்.

அதைப்படித்து விட்டு என் நலத்தை விசாரித்து அநேகர் கடிதம் எழுதி இருந்தார்கள். ஆனால் சமீபத்தில் வந்த கடிதம் சற்று வித்தியாசமானது. அதை எழுதியவர் ஏறக்குறைய இப்படி எழுதியிருந்தார். "உனக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்" - என்று எழுதியிருந்தார். 'சோர்வும் தீர்வும்

என்ற தலைப்பில், புத்தகத்தை எழுத ஆரம்பித்த எனக்கு இது போன்ற கடிதம் நல்லதொரு ஆரம்பம். பொதுவாக இப்படிப்பட்ட கடிதங்கள் நமக்கு வரும் போது நாம் சோர்வடைந்து விடுவோம். ஆனால் எனக்கு சிரிப்பும், அதை எழுதியவர் மேல் சற்று அனுதாபமும் தான் ஏற்பட்டது. பொதுவாக மன உளைச்சலையும், மனக்கசப்பையும் மனதில் வைத்திருப்பவர்கள் தான் இப்படிப்பட்ட கடிதத்தை எழுத முற்படுவார்கள்.

நமது மனதைப் புண்படுத்த வேண்டும், நம்மை சோர்வடையச் செய்ய வேண்டும் என்ற ஒரே குறிக்கோளோடு எழுதப்படுகின்ற இப்படிப்பட்ட கடிதங்களின் உள்நோக்கம் நிறைவேற நாம் ஒரு போதும் இடம் கொடுக்கக் கூடாது. D.L. மூடியின் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவம் என் நினைவிற்கு வருகிறது. அவரது பிரசங்கத்தை அடியோடு வெறுத்த யாரோ ஒருவர் அவர் பிரசங்கம் பண்ணுவதற்கு முன் அவரது 'மூடை' (Mood-ஐ) அப்செட் (Upset) பண்ணவிரும்பினார். எனவே 'Fool' 'முட்டாள்' என்று ஒரு தாளில் எழுதி மேடையில் செய்தி கொடுக்க ஆயத்தமாயிருந்த D.L. மூடி அவர்களிடம் கொடுத்தாராம். அதாவது மூடி பிரசங்கியார் ஒரு முட்டாள் - என்ற அர்த்தத்தில் அதை எழுதியிருந்தார். ஆனால் அதைப் படித்த மூடிப் பிரசங்கியார் பின் வருமாறு கூட்டத்தில் கூறினாராம். "எனக்கு பல மொட்டை கடிதங்கள் அதாவது தாங்கள் சொல்ல வேண்டிய விஷயத்தை எழுதிவிட்டு கையொப்பமிடாத கடிதங்கள் (Anonymous letter) வருவது உண்டு. ஆனால் இப்பொழுது என் கையில் இருக்கும் கடிதம் சற்று வித்தியாசமானது. தான் என்ன விஷயம் எழுத இவர் நினைத்தாரோ அதை எழுத மறந்து விட்டு, Fool - முட்டாள் என்று தனது கையொப்பத்தை மாத்திரம் போட்டிருக்கிறார் - என்று கூட்டத்தாரிடம் கூறினாராம். நிச்சயமாக அதை எழுதிய நபர் அந்தக் கூட்டத்தை விட்டு ஓடியே போயிருப்பார்.

பார்த்தீர்களா? நமது வாழ்க்கையில் பிசாசு, நமது எதிரிகள் மூலமாக நமக்குக் கொண்டு வரும் சோர்வுகளை மாற்றியமைத்து அவைகளை நமது வாழ்க்கைக்கு உற்சாகமூட்டும் டானிக்காக, உந்தித்தள்ளும் சக்தியாக மாற்ற நாம் கற்றுக் கொள்வோமானால் உங்களது முன்னேற்றப் பாதையில் உள்ள ஒரு மிக முக்கியமான முட்டுக்கட்டையை நீக்கிவிட்டீர்கள் என்று அர்த்தம். வெற்றியின் இரகசியத்தைக் கற்றுக் கொண்டு விட்டீர்கள்; பல சாதனைகளைப் படைக்கும் திறவு கோல்கள் உங்கள் கரங்களில் பெற்றுக் கொண்டுவிட்டீர்கள் - என்பது உறுதி.

'சோர்வு' என்ற வியாதி இன்று நேற்று தோன்றியதல்ல; ஆதாமிலிருந்து இன்றைய 20-ம் நூற்றாண்டில் வாழும் மனிதன் வரைக்கும் மனித சமுதாயத்தை பெலன் குன்றச் செய்திருக்கிறது. அது மாத்திரமல்ல இந்த வியாதிக்கு வயது வரம்பும் கிடையாது; காலவரையும் கிடையாது. சில வியாதிகள் சில சீசனில் தான் வரும். சில நாட்களுக்கு முன்பு எனது கண்ணில் திடீரென்று அரிப்பு ஏற்பட்டது. மெட்ராஸ் ஐ (Madras Eye) (இந்த வியாதிக்கு மாத்திரம் சென்னை ஐ என்று பெயர் மாற்றப்படவில்லை) எனக்கு வந்து விட்டதோ என்று (இதற்கு கோவை ஐ என்று பெயர் மாற்றிவிடுவார்களோ என்று அஞ்சும் அளவிற்கு இது கோவையில் மிகப் பரவலாக பரவி விட்டது) அஞ்சி மருந்துக் கடைக்கு நான் சென்ற போது கடைக்காரர் என்னிடம் "சார், இது Madras Eye Season, எனவே இந்த சொட்டு மருந்து தீர்ந்து விட்டது" என்று கூறினார்.

ஆம்! சில வியாதிகள் சில சீசனில் தான் வரும். ஆனால் இந்த சோர்வு என்ற வியாதியோ எல்லா சீசனிலும் வரும். திடீரென என் கண்ணில் அரிப்பு ஏற்பட்டது போல, இந்தச் சோர்வும் திடீரென - யாரோ ஒருவர் சொல்லிய வார்த்தை மூலமாக, நாம் கேட்ட ஒரு துர்ச்செய்தி மூலமாக, நமது நண்பர்கள் 'வாயி'லாக - இந்தச் சோர்வு என்ற கிருமிகள் நமது ஆள்த்தத்துவத்திற்குள் நுழைந்து விடும். ஆனால் இது நமது சம்மதமும், அனுமதியும் இல்லாமல் நமக்குள் நுழைய முடியாது என்பதை நாம் ஒரு போதும் மறக்கக் கூடாது. இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட கடிதத்தை நான் படித்து முடித்த மூன்று நிமிடங்களுக்குள்ளாக அதைக் கிழித்து குப்பைத் தொட்டியில் போட்டு விட்டேன். நமது வாழ்க்கையில் சில விஷயங்களை மறக்கவும், சில கடிதங்களைக் கிழித்துப் போடவும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

மறதி - ஒரு ஆசீர்வாதம்

நமது வாழ்க்கையில் கிழிக்க வேண்டிய சில சமாச்சாரங்களை கால தாமதமில்லாமல் கிழிப்பது மாத்திரமல்ல, அழித்தும் விட வேண்டும். கிழிக்க வேண்டியதைப் பத்திரப்படுத்துவதோ, அழிக்க வேண்டியதைப் பாதுகாப்பதோ வம்பை நாம் விலை கொடுத்து வாங்குவதற்குச் சமானம். நமது மனம் என்ற ஞாபகப் பெட்டகத்தில் 'மறதி' என்ற ஒரு பகுதி இருப்பது நமக்கு ஒரு பெரிய ஆசீர்வாதம். நமது வாழ்க்கையில் மனச்சோர்வையும், கசப்பையும், வெறுப்பையும், பகைமையையும் உண்டு பண்ணக் கூடிய

சில 'புளித்த மாவை' நாம் அகற்றிவிடுவது நல்லது. சுண்ணாம்பு தடவிய தேங்காய் ஓட்டை யானைப் பாகன் யானைக்குக் கொடுத்தது தவறு தான்; ஆனால் அதை தனது மனதில் வைத்து அந்த யானை ஒரு நாள் அந்த யானைப் பாகனைக் கொன்றது - அதைக் காட்டிலும் மிகப் பெரிய தவறு. இது போலத் தான் சிலர் தங்களுக்கு இழைக்கப்பட்ட தீங்குகளை, மனச் சோர்வுகளைத் தங்களது எண்ண அறையில், பத்திரப்படுத்தி, பாதுகாத்து அதற்கு தூபமிடும் போது அது பல நாட்கள் கழித்து கொலை வெறியாக விசுவரூபம் எடுக்கிறது. மனச் சோர்வு என்ற 'களைகளை' அவ்வப்பொழுது நீக்காவிட்டால் அவைகள் வெறியாக மாறி, எரிமலையாகி அது மற்றவர்களை மாத்திரமல்ல நம்மையும் சேர்த்து எரித்து விடும்.

இந்த மனச்சோர்வு என்ற எதிரியை நாம் எப்படி மேற்கொள்வது என்பதைத்தான் இந்தப் புத்தகத்தில் சிந்திக்கப் போகிறோம். நமது வாழ்க்கையின் எவ்வித சூழலில் நம்மை இந்த மனச் சோர்வு என்று வியாதி தாக்குகிறது? அந்த மனச் சோர்வின் காரணங்கள் என்ன? அதை நாம் எப்படிப் போக்குவது? அடுத்த முறை மனச்சோர்வு வராமல் எப்படி நம்மைப் பாதுகாத்துக் கொள்வது? என்ற பல ஆலோசனைகளை, வழிமுறைகளை நாம் சிந்திக்கப் போகிறோம்.

மனச் சோர்வு சில வேளைகளில் ஒரு தொற்று வியாதி. உதாரணமாக இந்தியாவின் கிரிக்கெட் அணியை எடுத்துக் கொள்ளுங்கள். டாப் ஆர்டர் பேட்ஸ்மென், இரண்டு அல்லது மூன்று பேட்ஸ்மென் அவுட் ஆனால் உடனே மனச்சோர்வு என்ற தொற்று நோய் மற்ற எல்லோரையும் கவ்விக் கொள்ளுகிறது. உடனே எல்லோரும் வெகு விரைவில் அவுட் ஆகி விடுகிறார்கள். இப்படித் தான் நம்மில் பலர் நமது வாழ்க்கையில் மனச் சோர்வினால், நமக்கு முன்பாக உள்ள சவாலைச் சமாளிக்க முடியாமல் அவுட் ஆகிவிடுகிறோம். இப்போக்கைத் தடுத்து நிறுத்த வேண்டுமானால் நமது மனதின் அரைகளைக் கட்டிக் கொண்டு, நமது தசை நரம்புகளை ஸ்டீல் நரம்புகளாய் மாற்றிக்கொண்டு தேவனுடைய வல்லமையையும். சர்வாயுதத்தையும் தரித்துக் கொள்ள வேண்டும். உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து செல்லுவேன். என்னுடைய தேவனாலே ஒரு மதிலையும் தாண்டுவேன் (சங். 18:29). என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு (பிலி. 4:13) என்று நாம் 'டார்ஜான்' குரல் எழுப்பி மனச்சோர்வு என்ற நமது எதிரியை நாம் மேற்கொள்ளக் கற்றுக் கொள்ள வேண்டும்.

3. தோல்வியினால் ஏற்படும் சோர்வு

இஸ்ரவேல் ஜனங்கள் ஆயி-பட்டணத்தின் மனுஷருக்கு முன்பாக முறிந்தோடினார்கள். ஆயி-பட்டணத்தின் மனுஷர்கள் அவர்களில் 36 பேர்களை வெட்டிப் போட்டார்கள். இஸ்ரவேல் ஜனங்களின் இருதயம் கரைந்து தண்ணீராய்ப் போயிற்று.

அப்பொழுது யோசுவா தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு அவனும், மூப்பர்களும் சாயங்காலம் மட்டும் கர்த்தரின் பெட்டிக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து, தங்களது தலைகளின்மேல் புழுதியைப் போட்டுக்கொண்டு கிடந்தார்கள் (யோசு. 7 : 4-6).

ஆனைக்கும் அடி சறுக்கும் என்ற பழமொழி இந்த இஸ்ரவேல் ஜனங்களின் வாழ்க்கையில் அப்படியே நிறைவேறியது. யோசுவா அவனது காலத்தில் அவனது அண்டை நாடுகளுக்குள் வாழ்ந்த ஒரு 'மகாஅலெக்ஸாண்டர்' - ஒரு 'நெப்போலியன்' என்பது குறிப்பிடத்தக்கது. அப்பொழுதுதான் எரிகோ பட்டணத்தை வீழ்த்தி, வெற்றிவாகை சூடிய சூடுகூட இன்னும் ஆறவில்லை. ஆனால் அதைத் தொடர்ந்து அடுத்து வந்த ஆஃப்டர் ஆல் (After all) ஆயி பட்டணத்திடம் இவ்வளவு பெரிய தோல்வியா? யோசுவாவினால் இதை ஏற்றுக்கொள்ளவோ, ஜீரணிக்கவோ முடியவில்லை. இஸ்ரவேல் ஆயி பட்டணத்தாரிடம் பெற்ற தோல்வி, நயாகரா நீர்வீழ்ச்சியில் விழுந்து அதை வெற்றி கண்டவன், தனது குளியலறையில் உள்ள தண்ணீர் தொட்டியில் மூழ்கிச் செத்த கதையைப் போல் ஆகிவிட்டது. ஜப்பானியருக்கு ஒரு ஹிரோஷிமா, நெப்போலியனுக்கு ஒரு வாட்டர்லூ, அதுபோலவே யோசுவாவிற்கு ஒரு ஆயி பட்டணம்.

இந்தத் தோல்வியை அவர்கள் சந்தித்தபோது சகல ஜனங்களின் இருதயமும் தண்ணீரைப் போலக் கரைந்து போயிற்று - என்று வேதம் விளக்குகிறது. எல்லோருடைய முகத்திலும் ஈயாடவில்லை; செத்தவர்களைப்போல அனைவரும் காட்சியளித்திருப்பார்கள். இந்த ஜனங்கள் இப்படி சோர்வடைந்தது எனக்கு ஆச்சரியமில்லை. ஆனால் இந்தக் கூட்டத்தாரோடு சேர்ந்து இந்த யோசுவாவும் மனமடிந்து போனதுதான் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. உச்சிமீது வானிடிந்து

வீழுகின்ற போதிலும், அச்சமில்லை, அச்சமில்லை என்று இந்த மாவீரன் தைரியமாய்ப் பாடுவதற்குப் பதிலாக, வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு தலையில் மண்ணை வாரிப் போட்டுக்கொண்டு, மனம் உடைந்து ஆண்டவரது சமூகத்தில் பல மணி நேரமாக விழுந்து கிடக்கிறான். தோல்விக்கு என்ன காரணம் என்று மக்களிடம் விசாரிக்கவும் இல்லை. ஏதோ, ஆண்டவர் தான் நம்மைக் கைவிட்டு விட்டார்; அவர்மேல்தான் ஏதோ தவறு இருக்கிறது போல அவரது சமூகத்தில் விழுந்து கிடக்கிறான்.

ஆம்! சிலவேளைகளில் நாம் நமது வாழ்க்கையில் கசப்பான தோல்விகளைச் சந்திக்க நேரிடும்போது, நமது தோல்விக்கான காரணங்களை நாம் ஆராயாமல், 'ஆண்டவர்தான் இதற்குக் காரணம். அவருக்குத்தான் கண் இல்லை, காது இல்லை, இரக்கமே இல்லை' - என்று நமது தோல்விக்கான காரணத்தை ஆண்டவர்மேல் போட நாம் முயலுகிறோம். இது மிகப் பெரிய தவறு. இதன் காரணமாகத்தான் தனக்கு முன்பாக யோசுவா விழுந்து கிடப்பதை ஆண்டவர் அவ்வளவாக விரும்பாமல் அவனைப் பார்த்து, "எழுந்திரு, நீ இப்படி முகங்குப்புற விழுந்து கிடப்பது என்ன?" என்று சற்று கோபத்துடன் சொல்கிறார் (யோசு. 7 : 10).

ஆம்! நமது வாழ்க்கையில் தோல்வியைச் சந்திக்கும் போது நாம் மனம் தளர்ந்து போகிறோம். அப்படி நாம் மனம் தளர்ந்து போகக் கூடாது. தோல்வியைச் சந்திக்காமல் யாருமே வெற்றி பெற்றதாக இந்த உலகத்தில் சரித்திரமே கிடையாது. தோல்விதான் வெற்றிக்கு முதல்படி. ஒரு குழந்தை நடக்க முயற்சிக்கிறது. முதல் முயற்சியிலேயே வெற்றி பெறுகிறதா? நிச்சயமாக இல்லை. பலமுறை கீழே விழுந்து, எழுந்து, பின்பு நடக்கப் பழகுகிறது. அதுபோலவே உனது வாழ்க்கையிலும் பல தோல்விகளுக்குப் பின்புதான் உனக்கு வெற்றி கிடைக்கும் என்ற உண்மையை நீ மறக்கக்கூடாது. இப்பொழுது ஏதோ ஒரு தோல்வியை நீ சந்தித்ததினிமித்தம் மனமடியவோ, சோர்வடையவோ அவசியமில்லை.

ஆபிரகாம் லிங்கனின் தோல்விகள்

ஆபிரகாம் லிங்கன் தனது வாழ்க்கையில் பல தோல்விகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கடல் அலையைப் போலச் சந்தித்தார். அவரது வியாபாரத்தில் தோல்வி (1831), முதல் தேர்தலில் (1832) படுதோல்வி, மீண்டும் வியாபாரத்தில் (1833) பயங்கர நஷ்டம், பின்பு தேர்தலில் வெற்றி (1834) திடீரென மனைவியை இழந்தார் (1835), பின்பு நரம்புத் தளர்ச்சி நோய் (1836), இரண்டு தேர்தலில் தோல்விகள், பின்பு தேர்தலில் மீண்டும் வெற்றி

(1846), மீண்டும் நான்கு முறை தேர்தலில் (1848, 1858) தோல்விகள். அவர் பல தோல்விகளைத் தொடர்ந்து சந்தித்தபோது, "இந்த உலகத்திலேயே மிக பரிதாபத்திற்குரிய ஒரு மனிதன் இருப்பானானால், அது நானாகத்தான் இருக்க முடியும்; இனிமேல் நான் வாழமுடியுமா என்பதே ஒரு பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது" - என்று எழுதினார். ஆனாலும் இறுதியாக 1860-ம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தோல்வியின் காரணத்தைக் கண்டுபிடியுங்கள்

இந்த யோசுவா ஆயி பட்டணத்தில் ஏற்பட்ட தோல்வியின் காரணத்தை ஆராயவும், அதை அடையாளம் கண்டு கொள்ளவும் முயற்சி எடுக்கத் தவறி விட்டான். தனது போர் வீரர்களை அழைத்து 'ஏன் தோல்வி' என்ன காரணம்? யாராவது ஆண்டவர் சொன்ன கட்டளையை மீறி விட்டீர்களா? என்று கேட்பதற்குப் பதிலாக ஆண்டவர் மேல் பழியைப் போட ஆரம்பித்தான். "ஆண்டவரே, இப்படிப்பட்ட தோல்வியை சந்திக்கவா எங்களை வழிநடத்திக் கொண்டு வந்தீர்? ஏன் ஆண்டவரே எங்களைக் கைவிட்டீர்" - இப்படிப் புலம்ப ஆரம்பித்து, ஆண்டவர் மேல் குற்றம் சுமத்த ஆரம்பித்து விட்டான்.

மற்றவர்கள்மேல் குற்றம் சுமத்தாதீர்கள்

நமது வாழ்க்கையில் தோல்வியை சந்திக்கும் போது, தயவு செய்து மற்றவர்கள் மீதோ அல்லது ஆண்டவர் மீதோ பழியை சுமத்த முயற்சிக்காதீர்கள். இது நம்மைச் சுற்றி இருக்கிறவர்கள் மத்தியில் குழப்பத்தையும், மனக்கசப்பையும் உண்டாக்கும். தோல்விக்கான காரணத்தை நிதானமாக பொறுமையாக ஆராய்வது நல்லது. அவசரப்பட்டுக் கோபத்திற்கும் தாபத்திற்கும் இடம் கொடுக்கக்கூடாது. அமைதியாக ஆராய்ந்து பார்த்து ஆகானைக் கண்டு பிடிக்க வேண்டும். நமது வாழ்க்கையில் ஏற்படும் தோல்விகளுக்கு நமக்கு வெளியேயும், நமக்குள்ளேயும் இருக்கும் ஆகான்களை கண்டு பிடித்து ஊரறிய, நாடறிய கல்லெறிந்து கொல்ல வேண்டும். நமது பாளையத்தை பாவமற சுத்திகரிக்க வேண்டும்.

வெற்றிக்கு புதிய யுக்தியை கையாளுங்கள்

தோல்வியினால் உண்டாகும் சோர்வைப் போக்குவதற்கு இன்னொரு வழி-யோசுவா ஆயி பட்டணத்தை மேற்கொள்ள உபயோகப்படுத்தியது போல-புதிய வழிமுறையை உபயோகப்படுத்த வேண்டும். இங்கே

யோசுவா-ஒரு படையை மறைத்து வைத்தும்-இன்னொருபடை தோல்வியடைந்து பின்வாங்கி ஒடுவது போலவும் நடித்து-ஆயி பட்டணத்தை ஜெயித்தான். அது போல புதிய வழிமுறைகளை நாம் பின்பற்ற முயற்சிக்க வேண்டும். புதிய திட்டங்களைத் தீட்ட வேண்டும். புதிய தீர்மானங்களை எடுக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, தோல்வியைத் தவிர்த்து வெற்றியைப் பெறுவதற்கு, சோர்வைப் போக்குவதற்கு ஒரு நல்ல மாற்று மருந்து உங்களுக்குச் சொல்லிக் கொடுக்கப் போகிறேன். கவனமாய் கேளுங்கள்; ஆவலாய் எதிர்பாருங்கள்; அது என்ன தெரியுமா? கடின உழைப்பு.

கடின உழைப்பு - வெற்றியின் கிரயம்

இதைத் தான் 1093 புதிய கண்டு பிடிப்புக்களை கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிசன் இப்படியாகக் கூறுகிறார். "வெற்றிக்குத் தேவை 99 சதவிகிதம் வியர்வை; ஒரு சதவிகிதம் உற்சாகம் 99% Perspiration - 1% Inspiration ஆம்! 99 சதவிகித வியர்வை சிந்த நீங்கள் ஆயத்தமாயிருக்க வேண்டும். வியர்வை சிந்தி யாரும் மூழ்கிப் போனதாக சரித்திரமே கிடையாது. ஆனால், கவலை, சோர்வு என்ற வியர்வையில் அநேகர் மூழ்கி அமிழ்ந்து போயிருக்கிறார்கள்.

தோல்வியின் மூலம் ஏற்படும் சோர்விற்கு ஒரு நல்ல தீர்வு - கடின உழைப்பு. மாதத்திற்கு நான்கு டாலர் சம்பளத்தில் வாழ்க்கையைக் தொடங்கின ஆண்ட்ரூ கார்னிகி பின்பு அமெரிக்காவின் மிகப்பெரிய எஃகு தொழிலதிபராக மாறினார். தனது வெற்றிக்கு அவர் கூறும் மூன்று மூல காரணங்கள்: முழுமனதுடன் எதையும் செய்வது; இரண்டாவது வேலையில் உண்மையும் விசுவாசமும்; மூன்றாவது "கடின உழைப்பு". உலகத்திலேயே மிகப்பெரிய பணக்காரரான ராக்ஃபெல்லர் வாரத்திற்கு ஆறு டாலர் சம்பளத்தில்தான் வாழ்க்கையை ஆரம்பித்தார். உலக அளவில் மிகப்பெரிய கார் உற்பத்தியாளரான ஹென்றிஃபோர்டு வாரத்திற்கு இரண்டரை டாலர் சம்பளத்தில் ஆரம்பித்தார். இவர்கள் எல்லோரும் தங்களது வாழ்க்கையில் சோர்வை சந்தித்தவர்கள் தான். ஆனாலும் தங்களது கடின உழைப்பால் தடைகளையும் சோர்வையும் வென்று வாழ்க்கையில் வெற்றி வாகை சூடினார்கள்.

தோல்வியைப் பற்றி எழுதும் போது யுத்தத்தில் பல முறை தோல்வியடைந்த ஒரு ராஜாவைப் பற்றிய ஒரு சம்பவம் நினைவிற்கு வருகிறது. ஆறுமுறை யுத்தத்தில் தோல்வியடைந்த இவன் ஒரு குகையில்

தங்கி மறைந்து வாழ்ந்து கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு எறும்பு ஒரு சுவற்றில் ஏற முயற்சித்ததை அவன் தற்செயலாகக் கண்டானாம். பாதி சுவற்றை ஏறும் வழியில் கீழே விழுந்தது. இந்த எறும்பு எத்தனை முறை தோல்வியடைகிறது என்று எண்ணத் தொடங்கினான். ஆறுமுறை தோல்வியடைந்தது. இவனும் ஆறு முறை தோல்வியடைந்தது - இவன் நினைவிற்கு வந்தது. இவனைப் போல் அந்த எறும்பு ஒரு குகைக்குள் சோர்ந்து போய் உட்காராமல், ஏழாவது முறையாக ஏற முயற்சித்தது. இவனும் ஆவலோடு அந்த எறும்பைப் பார்த்தான். ஏழாவது முறை அந்த எறும்பு வெற்றி பெற்று அந்த சுவற்றை ஏறிக் கடந்து சென்றது. இச்சம்பவத்தை பார்த்த பின் இவனுக்குள் ஒரு புத்துணர்ச்சியும், உத்வேகமும் உண்டானது. உடனே தனது சோர்வு, தோல்வி என்ற குகையை விட்டு வெளியே சென்று தனது படையைத் திரட்டி மீண்டும் ஏழாவது முறையாக யுத்தத்திற்கு சென்றான். இந்த முறை வெற்றி வாகை சூடினான்.

தோல்வியின் மறுபக்கம்

தோல்வியை நாம் சந்திக்கும் போது அதனுடைய மறு பக்கத்தையும் நாம் பார்க்கத் தவறக் கூடாது. மேலே நாம் சிந்தித்தது தோல்வியின் ஒரு பக்கம் தான். அதாவது நமது விடாமுயற்சியினாலும், கடின உழைப்பினாலும் நாம் வெற்றியாக மாற்றக் கூடிய தோல்விகள். ஆனால் தோல்வியின் இன்னொரு பக்கம் என்ன தெரியுமா? நமது வாழ்க்கையில் ஏற்படும் தோல்விகளை - அதாவது நமது Disappointments அது ஆண்டவர் அனுப்பிய appointments என்று எடுத்துக் கொள்ளக் கூடிய மனப்பக்குவம். சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்குமென்று நாம் அறியும் ஒரு மேலான பக்குவத்தின் மூலம் ஏற்படும் அறிவு. ஏன் இந்த ஏமாற்றம்? ஏன் இந்த தோல்வி? என்று கேள்வி கேட்டு நாம் பதற்றமடையாமல், இந்த ஏமாற்றத்தில், இந்த தோல்வியின் இன்னொரு பக்கத்தில் மறைந்து கிடக்கும் ஆண்டவரது நோக்கத்தினை கண்டு பிடிப்பது. நமது வாழ்க்கையின் பயணத்தில் பல மைல் கற்களை தாண்டிய பின்பு தான் இந்த தோல்வியில் புதைந்து கிடக்கும் ஆண்டவரது மாணிக்கக் கற்களை நம்மால் கண்டு பிடிக்க முடியும். புரிந்து கொள்ளும் பக்குவம் பெறுவோம்.

தோல்விகள் தான் நமது வாழ்க்கையின் வெற்றிப் படிகள். தோல்விகளைக் கண்டு நாம் துவண்டு விடக் கூடாது. என்னால் வெற்றியடையவே முடியாது என்ற தோல்வி மனப்பாண்மையை குழிதோண்டிப் புதைத்து விடுங்கள். என்னைப் பெலப்படுத்துகிற

கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய முடியும் (பிலி. 4:13) என்று உரத்த சத்தமாய் அடிக்கடி கூறுங்கள். பலத்தினாலுமல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என் ஆவியினாலே ஆகும் என்று கூறிய சகரியா தீர்க்கதரிசியைப் போல் (சகரியா 4:6) கூறுங்கள். "என்னை விசுவாசிக்கிறவன் என்னிலும் பெரிய காரியங்களைச் செய்வான்" என்ற இயேசுவின் வார்த்தைகளை உங்கள் இதயமாகிய பெட்டகத்துக்குள் நன்கு எழுதி வைத்துக் கொள்ளுங்கள். தன் உடன் பிறந்த சகோதரன் மரித்த போது சோர்ந்து போய் அமர்ந்திருந்த மரியாளைப் பார்த்து, "நீ விசுவாசித்தால் தேவ மகிமையைக் காண்பாய்" என்று இயேசு சொன்னாரல்லவா? அது போல உன்னையும் பார்த்து ஆண்டவர் கூறுகிறார்.

கடலில் பிரயாணம் செய்து கொண்டிருந்த ஒரு கப்பல் மூழ்கியது. அதில் பிரயாணம் செய்த ஒருவன் அதிலிருந்து தப்பி கரையை நோக்கி நீந்தினான். பல மைல்கள் நீந்தினான். இனிமேல் எங்கே நாம் கரை சேரப் போகிறோம். இனிமேல் நமக்கு மரணம் தான்" - என்று எண்ணி சோர்ந்து போய் தனது முயற்ச்சியைக் கைவிட நினைத்தான். அந்த சமயத்தில் தூரத்திலிருந்த ஒரு சிலுவையின் காட்சியைக் கண்டானாம். அந்த சிலுவைக் காட்சியை கண்டவுடன் அவனுக்குள் ஒரு பெரிய நம்பிக்கை பிறந்தது. ஒரு புத்துணர்ச்சியும், ஒரு உத்வேகமும் அவனுக்குள் உண்டானது. மரிக்கும் தருவாயில் இருந்த அவன் மீண்டும் நீந்த ஆரம்பித்தான். விரைவில் கரை சேர்ந்தான்.

இதை வாசிக்கும் வேளையில் உன்னுடைய வாழ்க்கையில் கூட இப்படிப்பட்ட சோர்வு என்ற கடலில் நீ நீந்திக் கொண்டிருக்கலாம். சோர்ந்து போகாமல் நம்பிக்கையின் உறுதியோடு நீ தொடர்ந்து நீந்துவாயென்றால் உனக்கும் சிலுவைக் காட்சி கிடைக்கும். சோர்ந்து போய் விடாதே; மனந் தளர்ந்து விடாதே. முயற்சியுடையார் நிச்சயம் இகழ்ச்சியடையார். "அக்கரைக்கு போவோம் வாருங்கள்" என்று அழைக்கும் ஆண்டவர் நம்மேல் அக்கறை உள்ளவராய் நம்மை நிச்சயம் அக்கரை கொண்டு போய் சேர்ப்பார்.

கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் வெற்றி சிறக்கப்பண்ணுகிற தேவனுக்கு ஸ்தோத்திரம் - என்று பவுலைப் போல் வெற்றிக்குரல் எழுப்ப நீ கற்றுக்கொள்.

தோல்விகளை வெற்றியின் படிகளாக மாற்று

தோல்விகள் மூலம் நமக்கு வரும் மனச்சோர்வை மாற்றுவதற்கு இன்னொரு நல்ல மாற்று மருந்து விடாமுயற்சி. அமெரிக்கா ஜனாதிபதி பதவிக்கு நிக்சன் அவர்கள் கென்னடியோடு போட்டியிட்டு சோர்ந்து போனார். அதன் பின்பு லிண்டன் ஜான்சனுடன் அடுத்து நடந்த தேர்தலி லும் தோற்றுப் போனார். ஆனாலும் இவர் சோர்ந்து போகவில்லை. மீண்டும் போட்டியிட்டு 1968ல் அமெரிக்க ஜனாதிபதியாக மாறினார். "சோர்ந்து போகாமல் இருப்போமானால் அறுவடை செய்வோம்" என்ற வசனத்தில் விடாமுயற்சி மறைந்து கிடக்கின்றது. 32 இந்திய மொழிகளில் வேதாகமத்தை மொழிபெயர்க்க மூலகாரணமாயிருந்த வில்லியம் கேரியை "விடாமுயற்சியின் வீரன்" என்று சரித்திர ஆசிரியர்கள் அழைக்கிறார்கள். அவரது மிஷனெரிப் பணியில் பல தடைகள், இடையூறுகள் ஏற்பட்டது. ஒரு முறை அவரது அச்சுக் கூடத்தில் தீடிரென தீப்பிடித்து அதிலிருந்த அச்சு இயந்திரம், பேப்பர், விலையேறப் பெற்ற பல மொழிகளின் மொழிபெயர்ப்பின் பகுதிகள் - ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு இலட்சக்கணக்கான மதிப்புள்ள பொருட்கள் தீக்கு இரையாகின. ஆனாலும் இவர் சோர்ந்து போகவில்லை; தளர்ந்து போகவில்லை.

பல ஆண்டுகளாக தான் பேணிக்காத்த அச்சுக்கூடம் சிலமணி நேரத்தில் கருகி சாம்பலாய்க்கிடந்தது. அந்த சாம்பலுக்கு நடுவில், அவர் முழங்கால் படியிட்டு, ஆண்டவரே, இந்த சாம்பலிலிருந்து மீண்டும் உம் சாம்ராஜ்யத்தைக் கட்ட எனக்கு பெலன்தாரும் என்று ஜெபித்துவிட்டு எழுந்தார். இந்த அக்கினி சோதனையின் முடிவு என்ன? இங்கிலாந்து தேசம் முழுவதும் இவரது பெயர்-அக்கினியைப் போல மிக வேகமாய் பரவியது. ஆயிரக்கணக்கான மக்கள் இவரது ஊழியத்தை தாங்க முன்வந்தனர். மீண்டும் ஒரு புதிய அச்சுக்கூடம் கட்டினார். அழிந்து போன மொழிபெயர்ப்புக்குப் பதிலாக புதிய இன்னும் தரமான மொழிபெயர்ப்புக்களை உருவாக்கினார்.

தோல்வியை வெற்றிப்படிகளாய் மாற்றினார். இதை வாசிக்கும் நண்பனே! ஏதோ சில தோல்விகளை உன் வாழ்க்கையில் நீ சந்தித்த காரணத்தினால் சோர்ந்து போய் உட்கார்ந்திருக்கிறாயா?

கசப்பும், இனிப்பும்; துன்பமும், இன்பமும்; பிறப்பும், இறப்பும்; வெற்றியும், தோல்வியும் நமது மனித வாழ்க்கையில் ஒன்றரக் கலந்துவிட்ட, தவிர்க்க முடியாத அனுபவங்கள். இதை வாசிக்கும் வேளையில் ஒரு

வேளை உன் வாழ்க்கையில் நீ சில தோல்விகளைத் தொடர்ந்து சந்தித்திருக்கலாம். அதினிமித்தம் மனச்சோர்வுடன் உட்கார்ந்திருக்கலாம். உன்னை உற்சாகப்படுத்த விரும்புகிறேன். நடந்தது நடந்தவைகளாயிருக்கட்டும்; இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும். யோசுவாவைப் போல நீயும், உன் தோல்விக்கான காரணத்தை கண்டுபிடி. பரீட்சையில் தோல்வி என்றால், அதற்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்து, இன்னும் நன்றாகப் படித்து, அடுத்த தேர்வுக்கு உன்னை ஆயத்தப்படுத்து; யாருக்குத் தெரியும், அடுத்த தேர்வில் இதைக் காட்டிலும் அதிக மதிப்பெண்கள் எடுக்கலாம்.

வேலை தேடிப்போகும் நேர்முகத் தேர்வில் (Interview) தோல்வியா? அடுத்த நேர்முகத் தேர்வில் வெற்றி பெற்று, முந்தைய வேலையைக் காட்டிலும் நல்ல வேலை உனக்குக் கிடைக்கப் போகிறது. வியாபாரத்தில் தோல்வியா? உன்னைக் காட்டிலும் அனுபவம் வாய்ந்த மற்றவர்களிடம் ஆலோசனை கேள்; தோல்விக்கான காரணங்களை அலசி ஆராய்ந்து பார்க்கவோ, அவைகளை நேருக்குநேர் முகமுகமாய் சந்தித்து அடையாளங் கண்டுகொள்ளவோ, வெட்கப்படாதே, பயப்படாதே; இப்படிச் செய்தால் அவைகள் உன் எதிர்கால வாழ்க்கைக்கு மிக உதவியாக இருக்கும்.

யோசுவா உடனே புறப்பட்டுச் சென்று, ஆகானை அடையாளம் கண்டு பிடித்து, அவனைக் கொன்று சாபத்தீடானதைப் பாளையத்தை விட்டு அகற்றினான். அதுமாத்திரமல்ல, யோசுவா யுத்தத்தில் ஒரு புதிய, புரட்சிகரமான, யுத்த தந்திரத்தை உபயோகப்படுத்தினான். ஆயி பட்டணத்தின் பின்பக்கம் ஒரு படையை மறைத்து வைத்து, முன் பக்கம் வந்து அவர்களுக்குப் பயந்து ஓடுவதுபோல ஓடி, ஒரு நாடகமாடி, எதிரியைத் திணறடித்து தந்திரமாக அந்தப் பட்டணத்தை அவன் கைப்பற்றுகிறான். அதுபோலவே நாமும், நமது தோல்வியின் காரணங்களை அடையாளம் கண்டிபிடித்து, அகற்றிய பின்பு, நமது அணுகுமுறைகளை மாற்றியமைக்க நாம் தயங்கக் கூடாது.

வெற்றி நமது தலையையும், தோல்வி நமது இருதயத்தையும் அடையாதபடி எச்சரிப்புடன் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். வெற்றியைக் கண்டு மிதப்பதும், தோல்வியைக் கண்டு துவண்டு போவதும், இரண்டுமே தவறு. வெற்றியும், தோல்வியும் வீரனுக்கு அழகு. நாம் புசித்தாலும், குடித்தாலும் அதை ஆண்டவரின் நாம மகிமைக்கே செய்ய வேண்டும்.

4. மற்றவர்களோடு ஒப்பிடுதல்

பேதுரு இயேசுவை நோக்கி, "ஆண்டவரே இவன் காரியம் என்ன" என்றான். அதற்கு இயேசு, "நான் வருமளவும் இவன் உயிரோடு இருப்பது என் சித்தமானால், உனக்கு என்ன? நீ என்னைப் பின்பற்றி வா" - என்றார் (யோவான் 21 : 21,22).

தன்னை மற்றவர்களோடு ஒப்பிடுதல் - மனிதனுடைய ஒரு இயற்கைக் குணம். இதை மாற்றுவது சற்று கடினம். ஆனால் இப்படி நம்மை மற்றவர்களோடு ஒப்பிடும் போது நம்மையறியாமலேயே மனச் சோர்வுக்கு இடம் கொடுத்து விடுகிறோம். மேலே கொடுக்கப்பட்ட பகுதியில் பேதுரு தன்னுடைய மோசமான நிலையை யோவானோடு ஒப்பிட்டு தனக்குத் தானே ஆறுதல் அடைய முயற்சிக்கிறான். - "நீ முதிர்வயதை அடையும் போது உன் வேஷ்டியைக் கட்டுவதற்குக் கூட இன்னொருவர் உதவி உனக்குத் தேவையாயிருக்கும். அந்த அளவிற்கு நீ பெலவீனமுள்ளவனாய் மாறிவிடுவாய், உன் விருப்பத்திற்கு மாறாக உன் மரணத்தை நீ சந்திக்க நேரிடும்" என்று இயேசு கூறுகிறார். இதைக் கேட்ட பேதுரு, "சே! நமக்குப் போய் இப்படி ஒரு மரணமா?" - என்று தனக்குள் தன்னைத் தானே நொந்து கொள்கிறான்.

அந்த சமயத்தில் யோவானின் மேல் பேதுருவின் கவனம் செல்கிறது. "நமக்குத் தான் இப்படிப்பட்ட சாவு. இந்த யோவானுக்கு எப்படிப்பட்ட சாவு வரும்" - என்றதொரு கேள்வி. "நம்முடைய சாவைக் காட்டிலும் இவனது சாவு மோசமானதாக இருக்க வேண்டும்" - என்றதொரு மறைமுகமான நப்பாசையுடன் இந்தப் பேதுரு இக்கேள்வியை இயேசுவிடம் கேட்கின்றான். இவனது உள்ளான மனநிலையை அறிந்த இயேசு, இவனுக்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்கும் வண்ணம், "இந்த யோவான் சாகாவரம் கூடப் பெற்றிருப்பான்; அதைப் பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்? நீ பேசாமல் என்னைப் பின்பற்றி வா" என்று முகத்தில் அறைந்தாற் போல் பதில் கொடுக்கிறார். பேதுருவிற்கு நிச்சயம் இப்படிப்பட்ட பதில் தேவை தான்.

நம்முடைய நிலைமையை மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பது ஒரு கெட்ட பழக்கம். இது நமக்குள் மறைந்து கிடக்கும் பொறாமையை, அதிருப்தியை வெளிப்படுத்துகிறது. "மற்றவர்கள் நம்மைக் காட்டிலும் நன்றாக இருக்கக் கூடாது. உயர்ந்து விடக் கூடாது" என்றதொரு கெட்ட எண்ணம் "எனக்கு இரண்டு கண்களும் போனாலும் பரவாயில்லை, அடுத்தவனுக்கு ஒரு கண்ணாவது போகனும்" என்று நினைக்கும் சாக்கடைக் குணம்.

மற்றவர்களைப் பார்த்துப் பொறாமைப்படாதீர்கள்

மற்றவர்களோடு ஒப்பிடும் பழக்கத்தின் இன்னொரு பக்கத்தையும் பார்ப்பது நல்லது. அது நம்மைக் காட்டிலும் மிக உயரமான நிலையில் இருக்கும் இன்னொருவரோடு ஒப்பிட்டு, "அவர்கள் மாதிரி நாம் இல்லையே" என்று ஏங்குவது. சைக்கிளில் போகிறவன் ஸ்கூட்டரில் போகிறவனைப் பார்த்து ஏங்குவது. ஸ்கூட்டரில் போகிறவன் காரில் போகிறவனைப் பார்த்து பெருமூச்சு விடுவது; சாதாரண காரில் போகிறவன் ஏ.சி. காரைப் பார்த்து ஏங்குவது. இதை நாம் செய்ய முற்படும் போது மிஞ்சுவது என்ன தெரியுமா? நாம் சோர்வடைந்து, தன்னம்பிக்கையை இழந்து, விரக்தியடைந்து விடுகிறோம். இது நாமாக வரவழைத்துக் கொண்ட பிரச்சனை.

இந்த உலகத்தில் பிறந்த எந்த இரண்டு பேர்களும் எப்படி எல்லா விதத்திலும், ஒரே மாதிரி தோற்றம், ஒரே மாதிரி எண்ணம். இருக்க முடியாதோ அதே போலத் தான் எந்த இரண்டு பேரும் வாழ்க்கையில் ஒரே சம நிலையில் இருக்க முடியாது. ஒருவர் தாழ்ந்தும் இன்னொருவர் சற்று உயர்ந்தும் இருப்பது இயற்கையின் நியதி. இதை யாராலும் - மாற்ற முடியாது. நமது கையின் விரல்களைக் கவனித்துப்பாருங்கள். ஐந்து விரல்களும் ஒரே மாதிரியாகவா இருக்கிறது? நிச்சயமாக இல்லை. ஒன்று நீளமாகவும் இன்னொன்று குட்டையாகவும், ஒரு விரல் ஒல்லியாகவும், இன்னொன்று தடியாகவும் இருக்கிறதல்லவா? இதில் இன்னொரு முக்கியமான உண்மை அடங்கியிருக்கிறது. அப்படி வித்தியாசமாக இருப்பதினால்தான் அந்தக் கையின் விரல்கள் நமக்கு நன்கு பயன்படுகின்றது. அந்த வித்தியாசம் இல்லையேல் அதன் பயனும் இல்லாமற் போய்விடுகிறது. இந்த ஏற்றத் தாழ்வுகளிலிருந்துதான் மனித சமுதாயத்தை இயக்கும் சக்தியே உருவாகிறது.

நாம் பெற்ற பிள்ளைகளையே எடுத்துக் கொள்ளுங்கள். எல்லோரும் ஒரே மாதிரியா இருக்கிறார்கள்? அல்லது நாம் தான் அவர்கள் அனைவரையும் ஒரே மாதிரியாக நடத்துகிறோமா? அவர்களுக்கு நாம் கொடுக்கும் சலுகை, அன்பு, சாப்பாடு, படிப்பு வித்தியாசமில்லையா? ஏசாவையும், யாக்கோபையும் அவர்களது பெற்றோர்கள் ஒரே மாதிரியாகவா நடத்தினார்கள்? நிச்சயமாக இல்லை. இந்த உண்மையை ஏற்றுக் கொள்வோமானால் நம்மைக் காட்டிலும் படிப்பிலும், பணத்திலும், வசதியிலும், வாழ்க்கைத் தரத்திலும், தாலந்திலும், திறமையிலும், - உயர்ந்த நிலையில் இருப்பவர்களைப் பார்த்து நாம் அதிருப்தி அடையக் கூடாது. அது இயற்கையின் நியமணம் என்ற பரிணாமக் கொள்கையை நாம் ஏற்றுக் கொள்ள மனமுவந்து முன் வர வேண்டும். இல்லையேல் நம்மிடத்தில் உள்ள பொறாமையும், அதிருப்தியும், எரிச்சலும், நம்மை மிக அவல நிலைமைக்கு கொண்டு போய் விடும்.

தன்வினை தன்னைச் சுடும்

இதை எழுதும் போது ஒரு உண்மைச் சம்பவம் என் நினைவிற்கு வருகிறது. ஒரு பட்டணத்தில் விளையாட்டுப் போட்டியில் பல பரிசுகளைப் பெற்ற ஒரு வாலிபனுக்கு சிலை வைக்கப்பட்டது. அவனோடு விளையாட்டுப் போட்டியில் கலந்து தோல்வியடைந்த ஒருவன் இதைப் பார்த்து பொறாமையும், வெறுப்பும் அடைந்து அந்த சிலையைத் தகர்க்க இரகசியமாகத் திட்டமிட்டான். ஒவ்வொரு நாளும் இரவு நேரத்தில் வந்து ஒரு உளியை எடுத்து அந்த சிலையை தகர்க்க ஆரம்பித்தான். பல நாட்கள் கழித்து ஒரு நாள் அந்த சிலை கீழே விழுந்தது. ஆனால் அந்தோ பரிதாபம், அந்த சிலையைத் தகர்த்த அவன் மேலேயே விழுந்து, அந்த இடத்திலேயே அவன் மரித்தான். தன் வினை தன்னைச் சுடும் என்று தான் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இங்கு அவனது வினை அவனைக் கொன்றே விட்டது. குழியை வெட்டியவன் தான் வெட்டிய குழியிலேயே விழுந்த கதையாக மாறிவிட்டது.

இதை வாசிக்கிற நாம் சற்று நிதானமாய் சிந்திந்துப் பார்ப்பது நல்லது. ஆண்டவர் ஏன் இன்னொரு மனிதனை அளவில்லாமல் ஆசீர்வதித்து இருக்கையில் ஏன் என்னைக் கொஞ்சம் கூட ஆசீர்வதிக்கவில்லை. மற்றவர்கள் எல்லோரும் நன்றாக ஆரோக்கியமாக இருக்கும் போது எனக்கு மாத்திரம் ஏன் இந்த தீராத வியாதி? எனக்கு மாத்திரம் ஏன் இந்த ஆண்டவன் இவ்வளவு பாடுகளையும், கஷ்டங்களையும் கொடுத்திருக்கிறார். ஏன் எனக்கு எல்லாமே பெண் குழந்தைகளாய் பிறந்து

விட்டது? மற்றவர்கள் வீடு கட்டி விட்டார்கள். ஏன் எனக்கு வீடு கட்ட முடியவில்லை. இப்படி நான் பல 'மனப் புழுக்கங்களை' சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் இவைகள் அனைத்திற்கும் ஒரே பதில் தான் உண்டு. தயவு செய்து உங்களை மற்றவர்களோடு ஒப்பிடுவதை நிறுத்திக் கொள்ளுங்கள், கடவுள் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரே மாதிரி அளந்து படி போட மாட்டார். இது வெறும் மாயை. இவைகள் அனைத்தும் வெறும் மன பிரம்மை. உதாரணத்திற்கு நம்மைக் காட்டிலும் அதிக பணமும், வசதியும் வைத்திருப்பவர்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் மகிழ்ச்சியாயிருக்கிறார்களா? வீட்டுக்கு வீடு வாசப்படி - பணம் எந்த அளவுக்கு அதிகமாக இருக்கிறதோ அதைப் பார்க்கிலும் பன்மடங்கு பிரச்சனைகளும், மன உளைச்சலும் அதிகமாக இருக்கும். இக்கரைக்கு அக்கரை பச்சையாக இருக்கலாம். ஆனால் அதிக பசுமையாக இருக்கும் அக்கரைக்கு அதிக தண்ணீர் செலவாகும் என்பதை நாம் மறக்கக் கூடாது.

உண்மையான பணக்காரன் யார் தெரியுமா? தனது தேவைகளை அதிகப்படுத்துவதற்காக அதிகமாக சம்பாதிக்கிறவன் அல்ல. தனது தேவைகளை குறைத்துக் கொண்டு தனது வருமானத்தில் வாழக் கற்றுக் கொள்கிறவன் தான் உண்மையான பணக்காரன். நமது பாட்டனார், பூட்டனார் காலத்திலே வாழ்ந்தவர்களின் சராசரி தேவைகள் 50 என்றால், இன்று வாழும் நமது தேவைகள் 500 ஆக உயர்ந்து விட்டது, நமது பேரப்பிள்ளைகளின் தேவைகள் 1000 ஆக உயரப் போகிறது. இது தான் நமது பிரச்சினை. நமது தேவைகளின் எண்ணிக்கை அதிகமாக உயர, உயர நமது அதிருப்தியின் அளவும் உயர்ந்து கொண்டே போகிறது. அதே போல உண்மையான ஏழை யார் தெரியுமா? குறைவாக சம்பாதிப்பவன் அல்ல. எவ்வளவு இருந்தும் இன்னும் அதிகமாக வேண்டும் என்று ஆசைப் படுகிறவன் தான் பெரிய ஏழை. அதிகப் பொருளின் மேல் ஆசைப்பட்டு அதிருப்தியுடன் வாழ்நாள் முழுவதும் வாழ்வதைக் காட்டிலும், கொஞ்சத்தை விரும்பி அதிக திருப்தியுடன் வாழ்வது எவ்வளவோ மேல்; ஆயிரம் அறைகள் இருக்கிற மாளிகையில் நாம் வாழ்ந்தாலும், ஒரு அறையில் தானே நாம் படுத்து உறங்க முடியும்.

இக்கரைக்கு அக்கரை பச்சை

ஒரு பத்திரிக்கையில் ஒரு கார்ட்டூன் படம் வெளி வந்தது. அதில் இரண்டு புல்வெளிகள். ஒரே மாதிரி புல்தரை, ஒரே மாதிரி பசுமை, ஒரே

அளவு. ஆனால் இந்த இரண்டு புல் வெளிகளுக்கும் நடுவே ஒரு வேலி இருந்தது. இந்த இரண்டு புல்வெளியிலும் ஒவ்வொரு மாடு மேய்ந்து கொண்டிருந்தது. அந்த கார்ட்டூன் படத்தின் விசேஷம் என்ன தெரியுமா? வலது பக்கத்தின் புல்வெளியில் மேய்ந்து கொண்டிருந்த மாடு வேலிக்குள் தன் தலையை விட்டு இடது பக்கத்தில் உள்ள புல்வெளியை மேய முயல்கிறது. அது போலவே இடது பக்கத்தில் மேயும் மாடு வலது பக்கத்தில் உள்ள புல்வெளியை மேய வேலிக்குள் தன் தலையை கொடுக்கிறது. இப்படி இந்த இரண்டு மாடுகளுக்கும் தனது புல்வெளியைக் காட்டிலும் அடுத்த புல்வெளி தான் அதிக பசுமையாக தோன்றுகிறது. பொதுவாக வேலிக்கு அந்தப்புரம் இருக்கும் எந்தப் பொருளும் அதிக விலையேறப் பெற்றதாக காட்சியளிக்கும். இப்படி இரண்டு மாடுகளும் அடுத்த புல்வெளியை மேய முயற்சித்து, தலைகள் வேலியில் சிக்கிக் கொள்ளும் கார்ட்டூன் படத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கும் தலைப்பு "அதிருப்தி Discontentment".

ஆம்! இங்கே சித்தரிக்கப்பட்டுள்ள மாடுகள் மனிதர்களைக் குறிக்கிறது. மனிதனுடைய கண்களுக்கு அடுத்த வீட்டில் உள்ள பொருட்கள் தான் மதிப்புள்ளதாய், விலையேறப் பெற்றதாய்க் காணப்படுகிறது. அதனால் தான் என்னவோ அடுத்தவனுடைய பொருளை இச்சியாதிருப்பாயாக என்று பத்துக் கட்டளைகளில் ஒன்றை ஆண்டவர் கட்டளையிடுகிறார். பெண்களைப் பொருத்தவரையில் அடுத்தவர்கள் கட்டியிருக்கிற சேலைதான் அழகாகக் தோன்றும். ஆண்களுக்கு மாற்றானுடைய மனைவிதான் அழகாய்த் தோன்றும். அடுத்த முறை உங்களுக்கு "இக்கரைக்கு அக்கரை பச்சை" என்று ஏதாவது ஒன்றை நீங்கள் பார்த்து ஆசைப்பட ஆரம்பிக்கும் போது, இந்த வேலியில் தலைகளை மாட்டிக் கொண்ட இந்த இரண்டு மாடுகளையும் நினைவில் வைத்துக் கொண்டு உங்களை திருத்திக்கொள்ளுங்கள். அப்படி நீங்கள் செய்தால் உங்களது அதிருப்தி அலை ஓய்ந்து உங்கள் வாழ்க்கைக்கடல் அமைதியடையும்.

ஆண்டவர் ஒவ்வொருவருக்கும் சரியாகத் தான் படி அளக்கிறார். இதை எழுதும் போது இயேசுகிறிஸ்து சொன்ன ஒரு உவமை என் நினைவிற்கு வருகிறது.

அடுத்தவீட்டு ஜன்னலில் எட்டிப்பார்க்காதீர்கள்

தோட்டத்தில் வேலை செய்ய அநேகரை அவர் அழைக்கிறார். சிலர் காலை 8 மணிக்கே வந்து வேலை செய்ய ஆரம்பித்தார்கள். இன்னும்

சிலர் 10 மணிக்கு, சிலர் 12 மணிக்கு வந்து வேலையில் அமர்ந்தார்கள். வேலையை ஆரம்பிப்பதற்கு முன்பாகவே தோட்டக்காரன் இன்றைக்குக் கூலி 150 ரூபாய் என்று பேசிவிட்டான். அவர்கள் மனப்பூர்வமாய் சம்மதித்து பின்புதான் தங்கள் வேலையைச் செய்ய ஆரம்பித்தார்கள். வேலை முடிந்து சாயங்காலம் சென்ற போது எல்லோருக்கும் 150 ரூபாய் கூலி கொடுக்கப்பட்டது. அப்பொழுது முந்தி வேலைக்கு வந்தவர்கள், "8 மணிக்கு வந்த எங்களுக்கும் 12 மணிக்கு வந்தவர்களுக்கும் ஒரே கூலி எப்படி கொடுக்கலாம்'' என்று புகார் செய்தார்கள். அப்பொழுது அந்தத் தோட்டக்காரன், "அது என்னுடைய இஷ்டம். உனக்கு என்ன கூலி கொடுப்பதாக நான் சொன்னேனோ, எந்தக் கூலிக்கு நீ சம்மதித்தாயோ அதை உனக்குக் கொடுத்தாயிற்று. மற்றவர்களுக்கு நான் கொடுக்கும் கூலி யைப் பார்க்கவோ, அதை உன்னுடைய கூலியோடு ஒப்பிடுவதோ உனக்கு அடுத்தது அல்ல. நான் தாராள மனப்பான்மையுடன் செயல்பட்டால் நீ வன்கண்ணனாக இருக்க அவசியமில்லை" - என்று பதில் கூறுகிறான்.

இயேசு கூறிய இந்த உவமானத்தில் மனித சமுதாயம் அனைத்திற்கும் தேவையான ஒரு முக்கியமான படிப்பினை இருக்கிறது. நமக்குத் தேவையானதை ஆண்டவர் நமக்குக் கொடுத்திருக்கும் போது, நாம் அதில் திருப்தி அடையக் கற்றுக் கொள்ள வேண்டும். அதை விட்டுவிட்டு அடுத்தவன் எவ்வளவு பெறுகிறான் என்று நாம் அறிய முற்படும் போது தான் நமக்குள் பிரச்சனை உருவாக ஆரம்பிக்கிறது.

அமெரிக்காவில் வேலை பார்க்கும் எனது நண்பனின் தொழிற்சாலைக்கு ஒரு முறை சென்றிருந்தேன். நான் விசாரித்த போது ஒரு கம்பெனியில், ஒரே அறையில் வேலை செய்யும் இருவர் - அடுத்தவர் எவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்பதே தெரியாது. இதில் உள்ள உண்மை என்னவென்றால் தனது குழுவில் உள்ள இன்னொருவரது சம்பளம் எவ்வளவு என்பதை அறிய வேண்டுமென்ற ஆசை ஒரு துளி கூட அவர்களுக்கு வராது. அடுத்தவன் எவ்வளவு கூலி பெறுகிறான், எவ்வளவு சம்பளம் வாங்குகிறான் என்பதை அறிய விரும்புவது தவறு. இது அவனது சொந்த வாழ்க்கையில் தலையிடுவதற்குச் சமானம். அடுத்த வீட்டில் உள்ள ஜன்னல் வழியாக அங்கே உள்ளே என்ன நடக்கிறது என்பதை அறிய முயற்சிப்பது எவ்வளவு கீழ்த்தரமான செயலோ அதே அளவு தான் அடுத்தவன் வாங்கும் கூலியை அறிய முயற்சிப்பது. அடுத்தவன் வாங்கும்

கூலியை, சம்பளத்தை நீ அறிந்து கொள்வதினால் உனக்கு என்ன பயன்? அவன் சம்பளம் குறைவாக இருந்தால் உனக்குள் பெருமை வரும், கூடுதலாக இருந்தால் பொறாமை வரும். ஆம்! ஏதாவது ஒரு 'ஆமை' உனக்குள் வருவது நிச்சயம். அறியாமல் இருப்பது நல்லது. 'அறியாமை ஒரு ஆசீர்வாதம்' என்ற ஷேக்ஸ்பியரின் வார்த்தைகள் எவ்வளவு உண்மை.

ஆம்! மற்றவர்களோடு உங்களை ஒப்பிடும் கெட்ட பழக்கத்தை விட்டு விடுங்கள். சோர்வை நீக்குவதற்கு இது ஒரு நல்ல மாற்று மருந்து. இதை நீங்கள் கடைபிடித்தால் சோர்வு என்ற வியாதி வராமலே தடுத்து விடலாம். "பக்கத்து வீட்டுக்காரரும் உங்க படிப்பு தான் படிச்சவர். அவர் எவ்வளவு சம்பளம் வாங்குகிறார்'' என்று கூறி தனது கணவனை இன்னொருவரோடு ஒப்பிடும் ஒப்பாரியில் ஈடுபடும் மனைவி தனது கணவனை விவாகரத்துச் செய்ய தூண்டுகிறாள் என்பதை அறிய மாட்டாள். ஏனென்றால் இப்படிக் கூறும் மனைவியின் வார்த்தையைக் கேட்ட கணவனுக்கு மூக்கின் மேல் கோபம் வந்து "அப்படீன்னா, அந்த ஆளைப் போய் கல்யாணம் செய்து கொள் போ" என்று கூறுகிறான். இதனால் வீட்டில் மனக் கசப்பு உருவாகி, சிறு பூகம்பமே ஏற்பட்டு விடுகிறது. இதை மனைவி சற்றும் எதிர்பார்த்திருக்க மாட்டாள். இது நமக்குத் தேவையா?

இதே தவறைத் தான் ஆமானின் மனைவியாகிய சிரேஷ் செய்தாள். அவள் கணவனைப் பார்த்து, "மொர்தெகாய்க்கு முன் நீர் தாழ்ந்து போனீர். இனி மேல் நீர் அவனுக்கு மேலாக உயர முடியாது". - என்று (எஸ்தர். 6 : 13) கூறுகிறாள். இவளது வார்த்தைகள் இவர்களது விவகாரத்தில் முடிந்திருந்தாலும் பரவாயில்லை. ஆனால் இதன் முடிவு ஆமான் தூக்கு மரத்தில் தொங்குவதற்கு வழிவகுத்து விட்டது. எவ்வளவு பரிதாபம். ஆமானின் மனைவி நினைத்திருந்தால், தனது கணவனுக்கு சரியான யோசனை கூறி நல்வழிப் படுத்தியிருக்க முடியும். ஆனால் அவளது வார்த்தைகள் எரிகிற தீயில் தண்ணீரை ஊற்றுவதற்குப் பதிலாக எண்ணெயை ஊற்றுகிறாள்.

மற்றவர்கள் கார் வாங்கினால், தானும் கார் வாங்க நினைப்பது; T.V., Fridge, வீடு கட்டுவது, வீட்டில் மாடி கட்டுவது, பிள்ளைகளைப் புகழ்பெற்ற English Medium பள்ளியில் சேர்க்க முயற்சிப்பது - இவையெல்லாம் தவறு கிடையாது. ஆனால் இவைகளைச் செய்வதற்கு, வாங்குவதற்கு தனக்குத் திராணி இல்லையென்று நன்கு தெரிந்தும், மற்றவர்களைக் காட்டிலும் நாம்

தாழ்ந்து போய் விடக்கூடாது என்பதற்காகவும், தனது மதிப்பை (Prestige)-ஐ உலகத்தார் பார்வையில் காப்பாற்றிக் கொள்ளவும் பலர் முயற்சிக்கிறார்கள். இதன் விளைவு வீட்டில் கடன் தொல்லை, தேவையற்ற அழுத்தங்கள் பல திசைகளில் உருவாகி விடுகிறது. இறுதியில் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு கவலையில் உட்கார்ந்து விடுகிறோம். அந்தக் கவலை மூலமாகச் சோர்வு நம்மை கவ்விக் கொள்கிறது.

இப்படி மற்றவர்களோடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்த காரணத்தினால் விபரீதத்தில் முடிந்த ஒரு உண்மைச் சம்பவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். மற்றவர்களோடு ஒப்பிடுவதில் உள்ள மிகப் பெரிய ஆபத்தை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். மனைவியை இழந்த ஒருவருக்கு இரண்டாவது தாரமாக ஒரு இளவயதுப் பெண் திருமணம் செய்து கொடுக்கப்பட்டாள். முதல் தாரத்திற்கு ஏற்கனவே இரண்டு குழந்தைகள் இருக்கிறது. இந்தப் பெண், முதல் தாரம் பெற்ற பிள்ளைகளைப் பார்க்கிலும் நான் அதிகமான பிள்ளைகளை பெற்றெடுத்தால் தான் எனக்கு சொத்தில் அதிக பங்கு கிடைக்கும் என்று ஆசைப்பட்டு மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். ஆனால் இவள் பெற்றெடுத்த மூன்றாவது குழந்தை இரண்டு வயதாக இருக்கும் போது அவளது கணவர் தனது 50வது வயதில் திடீரென மாரடைப்பினால் மரித்து விட்டார். இப்பொழுது இந்த மூன்று குழந்தைகளையும் எப்படி கரையேற்றப் போகிறேன் என்று அந்த 30 வயது இளம் விதவை அழுகிறாள். என்ன ஒரு பைத்தியக்கார ஆசை! என்ன விபரீதமான ஆசை!.

இதை வாசிக்கிற நாம், நமது வாழ்க்கையை மற்றவர்களோடு ஒப்பிட்டு அதன்மூலம் வரும் ஏக்கத்தையும், கவலையையும், சோர்வையும் நீக்குவதற்குத் தீர்மானிப்போம். அயலானை ஆண்டவர் ஆசீர்வதிப்பாரானால் ஆண்டவரை துதிக்கக் கற்றுக் கொள். பொறாமை கொள்ளாதே, எரிச்சலடையாதே. உனக்கு என்ன ஆசீர்வாதம், கூலி கொடுப்பதாக ஆண்டவர் வாக்களித்தாரோ, அதைப் பெற்றுக் கொண்டு சந்தோஷமாய்ப் போ. உன் அயலானைப் பார்க்காதே. ஆண்டவர் பட்சபாதம் பார்க்கிறவர் அல்ல. ஒவ்வொருவருக்கும் என்ன ஆசீர்வாதத்தைக் கொடுக்க வேண்டும். எந்த அளவிற்குக் கொடுக்க வேண்டும், எப்பொழுது கொடுக்க வேண்டும் மென்று ஆண்டவர் அறிந்திருக்கிறார்; அதில் நீ தலையிடவோ, ஆலோசனை கூறவோ அவசியமில்லை.

5. இழப்புகள்

அத்திமரம் துளிர் விடாமல் போனாலும், ஒலிவ மரத்தின் பலன் அற்றுப் போனாலும், வயல்களில் தானியம் விளையாமற் போனாலும், கிடையில் ஆடுகளற்றுப் போனாலும், தொழுவத்தில் மாடுகள் இல்லாமற் போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன். (ஆப.3:17,18)

நமது பூலோக வாழ்க்கையில் நமக்கு சோர்வை உண்டாக்கும் இன்னொரு காரியம்-நாம் அவ்வப்பொழுது சந்திக்கும் இழப்புகள். நாம் தற்சமயம் அனுபவதித்துக் கொண்டிருக்கும் ஆரோக்கியம், ஆஸ்தி, அந்தஸ்து, அழகு, பேர், புகழ், அனைத்துமே நிரந்தரமற்றது. இவைகள் அனைத்தையும், அல்லது இதில் ஏதாவது ஒன்றை நாம் திடீரென்று இழக்க நேரிடும் போது நமது வாழ்க்கையின் சத்துவங்களும், அஸ்திபாரங்களும் அசைக்கப்படுகின்றன. நாம் பல ஆண்டுகளாக ஆகாயத்தில் கட்டியிருந்த மனக் கோட்டைகள் சில மணி நேரத்தில் உடைக்கப்பட்டு, தவிடு பொடியாகி நமக்கு முன்பாக சாம்பல் மேடாக குவிந்து விடுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் மூர் மார்க்கெட் ஒன்று இருந்தது நம்மில் அநேகருக்கு நினைவிருக்கலாம். அதில் நூற்றுக்கணக்கான வியாபாரிகள் கோடிக்கணக்கான வியாபாரம் நடத்தி வந்தனர். அங்கு ஒரு நள்ளிரவில் தீப்பிடித்து ஏறக்குறைய 2 ஏக்கர் பரப்பளவில் இருந்த அனைத்துக் கடைகளும் எரிந்து சாம்பலாயின. அதில் ஒரு மனிதன் ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள பணத்தையும், பொருளையும் இழந்தான். அடுத்த நாள் அவன் தற்கொலை செய்து கொண்டான். என்ன பரிதாபம்! இந்த மாபெரும் இழப்பை தாங்கிக் கொள்ளும் சக்தி இவனிடத்தில் இல்லாத காரணத்தினால் விரக்தியடைந்து இந்தத் தற்கொலை முடிவிற்கு வந்து விட்டான்.

மேலே கொடுக்கப்பட்ட வசனத்தை நாம் மறுபடியும் படிப்பது நல்லது. ஆபகூக் என்ற தீர்க்கதரிசி ஏறக்குறைய 2780 ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்த அவர் தனது வாழ்க்கையில் சந்தித்த சில இழப்புக்களை வரிசைப்படுத்தி எழுதுகிறார். அக்காலத்தில் வாழ்ந்தவர்களுக்கு வருமானம் நான்கு வகையில் வந்தது. தோட்டத்தில் உள்ள மரங்கள் வாயிலாக, வயலில் விளையும் பயிர்கள் மூலம், அதாவது அசையாத சொத்துக்கள்

மற்றும் ஆடு-மாடுகள்-ஆகிய அசையும் சொத்துக்கள் மூலம் குடும்பத்தின் தேவைகள் சந்திக்கப்படுகின்றன. இந்த நான்கு வகையான சொத்துக்கள் மூலமாக வரும் வருமானங்கள் திடீரென்று நின்று விட்டன. பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும் என்ற பழமொழிக்கு இந்த ஆபகூக் தீர்க்கதரிசியின் குடும்பம் இலக்காகி விட்டது. நிச்சயமாக இது போன்ற இழப்புக்களை ஈடுகட்டுவது முடியாத ஒரு காரியம்.

சமீபத்தில் ஒரு கிறிஸ்தவ வியாபாரியைச் சந்தித்தேன். அவரது வியாபாரத்தைப் பற்றி விசாரித்த போது அவர் என்னிடம் கூறியது, ஐயா! எனது பாத்திர வியாபாரத்தோடு ஒரு சீட்டுக் கம்பெனி நடத்தினேன். அதில் ஏறக்குறைய பத்து இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு விட்டது என்று மனபாரத்துடன் கூறினார். ஆனாலும் அந்த மூர்மார்க்கெட் வியாபாரியைப் போல் மனமுடைந்து போகாமல் தைரியமாகக் கர்த்தருக்குள் நம்பிக்கையுடன் இருக்கிறார். ஆபகூக் தீர்க்கதரிசி கூறும் வார்த்தையில் இப்படிப்பட்ட திடீர் இழப்புகளை எப்படிச் சந்திப்பது என்பதற்குச் சரியான ஆலோசனை கொடுக்கப்பட்டிருக்கிறது. அது என்ன? கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்கக் கற்றுக்கொள்வது. இந்த ரகசியத்தை ஆபகூக் தீர்க்கதரிசி மாத்திரம் கூறவில்லை. இதே கருத்தை நெகேமியாவும் கூறுகிறார். "கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே, உங்கள் பெலன்" (8 : 10) என்று சற்று விளக்கமாகக் கூறுகிறார்.

துன்பம் சூழ்கையில் யாழெடுத்து இன்பம் சேர்த்துக்கொள்

பொதுவாக நமது வாழ்க்கையில் கஷ்டம், துன்பம், இழப்பு வரும் போது அதை பெரு மூச்சுடன் சந்திப்பதற்குப் பதிலாக 'புன்முறுவலுடன்' சந்திக்கும் போது அதில் பாதிவெற்றி நமக்கு கிட்டி விட்டது என்று அர்த்தமாகிறது. இதைப் பற்றி எழுதும் போது ஒரு தமிழ்ப் புலவன் இப்படியாகப் பாடுகிறான். "துன்பம் சூழ்கையில் யாழ் எடுத்து நீ இன்பம் சேர்ப்பாயா?" என்று பாடுகிறான். எந்தப் பிரச்சனையையும் புன்முறுவலுடனும் கர்த்தரைத் துதிக்கும் துதியுடனும் சந்திக்கும் போது நாம் எளிதில் வெற்றிக் கொடியை நாட்ட முடியும் என்பது உறுதி.

"கர்த்தரைத் துதிக்கும் துதி எப்பொழுதும் என் வாயிலிருக்கும்" என்று சங்கீதக்காரன் (சங். 34 : 1) எழுதுகிறான். யோபு என்ற பக்தன் ஒரே நாளில் ஏறக்குறைய மூன்று கோடி ரூபாய் மதிப்புள்ள, ஆடு, மாடுகள், கழுதைகள், ஒட்டகங்கள் அடங்கிய அசையும் சொத்துக்களை இழந்தான். மாத்திரமல்ல அவனது ஏழு மகன்கள், மூன்று மகள்கள் எல்லோரையும் இழந்தான். ஆனாலும் இவ்வளவு இழப்பையும் எப்படிச் சந்திக்கிறான் என்று பாருங்கள்.

இந்தச் செய்தியைக் கேட்டவுடன் அவனுக்கு மாரடைப்பு வரவில்லை. ஆனால் அவன் தைரியமாக, விசுவாசத்தோடு, "கர்த்தர் கொடுத்தார்; கர்த்தர் எடுத்தார். அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; கர்த்தரிடத்திலிருந்து நன்மையை பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ?" என்று கூறுகிறான். (யோபு. 1 : 21; 2 : 10)

என்ன அருமையான, அனுபவம் முதிர்ந்த வார்த்தைகள். இலாபமான காரியங்களை ஆண்டவர் கொடுக்கும்போது சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிற நாம் அதே ஆண்டவர் நஷ்டத்தை நம் வாழ்க்கையில் அனுமதிக்கும் போது பூமிக்கும் வானத்திற்கும் நடுவிலே குதித்துக்கொண்டு "ஆண்டவரே ஏன் இந்த நஷ்டம்" என்று கேட்டு அவரோடு மல்லுக்கு நிற்கிறோம். இது என்ன நியாயம்! லாபத்தையும், நன்மையையும் மாத்திரம் தான் ஆண்டவர் நமக்குக் கொடுக்க வேண்டும் என்று நாம் ஆண்டவருக்குச் சட்டம் விதிக்கலாமா? மனிதன் பிறப்பது உண்மையானால் அவன் மரிப்பதும் அதிக உண்மையல்லவா? இந்த உலகத்தில் இது வரை பிறந்த அனைவரும் இன்றைக்கும் உயிரோடு இருப்பார்கள் என்றால் நாம் வாழும் பூமி என்னவாகும்? இரவும், பகலும்; பிறப்பும், இறப்பும்; நன்மையும், தீமையும்; நல்லதும், கெட்டதும்; லாபமும், நஷ்டமும்; இன்பமும், துன்பமும், வெற்றியும், தோல்வியும், கசப்பும், இனிப்பும் இவைகள் இரண்டும் இல்லாமல் மனித வாழ்க்கையே கிடையாது.

இப்படி நமது வாழ்க்கையில் திடீரென நஷ்டத்தை சந்திக்கும் போது மனமுடைந்து தற்கொலை செய்கிறவன் ஒரு கோழை மாத்திரமல்ல; ஒரு வடிகட்டின முட்டாள். இவர்கள் மனித வாழ்க்கையின் சவாலைச் சந்திக்க மறுக்கிறார்கள். இவர்களுக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆலோசனைகளைக் கொடுக்க விரும்புகிறேன்.

உங்களிடம் மீதம் இருப்பதைப் பாருங்கள் :

உங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பது உண்மை தான். நீங்கள் ஈடு செய்ய முடியாத இழப்பைச் சந்தித்திருப்பது உண்மை தான். ஆனால் மனம் உடைந்து போய் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு உட்காரத் தேவையில்லை.

ஒரு பெரிய கிறிஸ்தவ தொழிலதிபருக்கு திடீரென பல கோடி ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டு விட்டது. அதிர்ச்சியடைந்த அவர் தனக்கு ஏற்பட்ட இந்த நஷ்டத்தை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தன்னிடம் வருகிறவர்கள் எல்லாரிடத்திலும் எல்லாம் போச்சு, எல்லாமே

போச்சு என்று புலம்ப ஆரம்பித்தார். இதைக் கண்ட அவரது போதகர் அவருக்கு நல்லதொரு பாடம் கற்பிக்க விரும்பினார். போதகர் வீட்டிற்கு வந்தவுடனே இவர் எப்பொழுதும் போல எல்லாம் போச்சு என்று பல்லவி பாட ஆரம்பித்தார். அதைக் கேட்ட போதகர் அவரைப் பார்த்து உங்கள் தொழிற்சாலையை இவ்வளவு சீக்கிரம் இழுத்து மூடுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை என்றார். அதற்கு அவர் "பாஸ்டர் தொழிற்சாலையை நான் மூடவில்லை. அது ஓடிக்கொண்டுதான் இருக்கிறது" என்று பதில் கொடுத்தார்.

ஆனால் கொஞ்ச நேரம் கழித்து மீண்டும் எல்லாம் போச்சு என்று பாட ஆரம்பித்தார். உடனே போதகர் "உங்கள் மனைவியையும் இரண்டு பிள்ளைகளையும் இவ்வளவு சீக்கிரம் இழந்து விட்டீர்களே" என்றார். "என் மனைவி, பிள்ளைகள் உயிரோடுதான் இருக்கிறார்கள்" என்றார் அவர். உடனே அந்தப் போதகர் அந்த தொழிலதிபரைப் பார்த்து "நான் வந்ததிலிருந்து கவனித்துக் கொண்டிருக்கிறேன். எப்பப் பார்த்தாலும் எல்லாம் போச்சு, எல்லாம் போச்சு என்று சொல்கிறீர்களே! ஆனால் எல்லாமே உங்களிடம் தான் இருக்கிறது. உங்கள் தொழிற்சாலை, மனைவி, மக்கள் உங்கள் பங்களா, தொழிலாளர்கள் எல்லாமே உங்களிடம் இருக்கும் போது எதற்காக எல்லாம் போச்சு என்று கூறுகிறீர்கள். உங்கள் ஒரு கோடி ரூபாய் நஷ்டத்தை உங்களால் எளிதில் சரிகட்ட முடியும். உங்களிடத்தில் மீதம் இருப்பதை பார்க்கக் கற்றுக் கொள்ளுங்கள். ஒரு இழப்பைப் பெரிதுபடுத்தி இருப்பதையெல்லாம் போச்சு என்று சொல்லாதீர்கள்" என்ற ஆலோசனை கூறினார்.

இப்படிப்பட்ட ஆலோசனை நம் அனைவருக்கும் தேவை தான். இழப்பையே நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது. நம்மிடத்தில் இருப்பதை பார்த்துச் சந்தோஷப்பட கற்றுக் கொள்ள வேண்டும். ஏதோ ஒரு பொருளை, சிறிது பணத்தை இழந்தது உண்மைதான். ஆனால் அதையே நினைத்துக் கொண்டு அடுத்தது செய்ய வேண்டிய காரியங்களை, கடமைகளை கோட்டை விடக் கூடாது.

ஒரு முறை உ.பி. பணித்தளங்களைப் பார்வையிட நான் சென்ற போது, ரயில் பிரயாணத்தின் போது இரவு 2.30 மணிக்கு கண் விழித்த போது, சங்கிலி போட்டு பூட்டு போட்டு கட்டியிருந்த எனது சூட்கேசை யாரோ திருடி விட்டார்கள். என்னுடைய பிரயாணத்தின் சகல பொருட்களும்- துணிமணி முதல் டூத்பிரஷ் வரை எல்லாமே போய்விட்டது. தனியாக பயணம் செய்கிறேன். ஆனால் என் தலைக்கு அடியில் வைத்திருந்த ஒரு

டையில் கொஞ்சம் பணமும், Return journey ticketம் அத்துடன் நான் அணிந்திருந்த பேண்ட், சர்ட்டும் இருந்தது. கையில் வைத்திருந்த பணத்தை வைத்துக்கொண்டு எனது பத்து நாட்கள் சுற்றுப் பயணத்தை முடித்து விட்டு வீடு திரும்பினேன். சூட்கேஸ் காணாமல் போன முதல் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் கொஞ்சம் சோர்வு இருந்தது. பின்பு உடனே என்னிடம் மிச்சம் இருந்த பணத்திற்காக, Return Ticket ற்காக கர்த்தரைத் துதித்து கர்த்தருக்குள் என்னை திடப்படுத்திக் கொண்டேன்.

சூட்கேஸ் காணாமற் போனால் நாம் என்ன செத்தா போவோம்; குடியா முழுகிப் போச்சு; சில துணிமணிகள், சிறிது ரூபாய் இவைகள் தான் காணாமற் போச்சு. இதை நினைத்து நான் டென்ஷன் ஆகி இன்னொரு இருதய மாரடைப்பு வர அனுமதிக்கலாமா? ஏதோ சில ஆயிரம் ரூபாய்கள் காணாமற் போய்விட்டது. நஷ்டமாகிவிட்டது. அவ்வளவுதான். என்னுடைய பொறியியல் கல்லூரியில் படித்த ஒரு பாடம் என் நினைவிற்கு வந்தது. அதாவது Matter can neither be created nor destroyed. ஒரு பொருளை அழிக்கவும் முடியாது, அதை உருவாக்கவும் முடியாது. என்னிடம் இருந்த சூட்கேஸ் கை மாறி இன்னொருவருக்கு சொந்தமாகி விட்டது. அவ்வளவுதான். ஒரு இழப்பை ஒரு ஏமாற்றத்தை நமது வாழ்க்கையில் சந்திக்கும் போது அதை நாம் எந்த மனநிலையில், எவ்வித attitude உடன் அதை நாம் சந்திக்கிறோம் என்பது தான் முக்கியம்.

பொதுவாக இப்படிப்பட்ட இழப்புக்களை நாம் சந்திக்கும் போது, அந்த இழப்பின் அளவோ, அதன் பணமதிப்போ, அதன் தொகையோ நம்மை அதிகமாகப்பாதிப்பதை பார்க்கிலும் அந்த இழப்பின் மூலமாக நமக்கு ஏற்படும் மனரீதியான ஏமாற்றமும், மன அதிர்ச்சியும், மனதுக்கமும், சோர்வும் தான் நம்மை அதிகமாகப் பாதிக்கிறது. இந்த இழப்பின் மூலமாக நமது பொருளாதாரம் பாதிக்கப்படுவதைப் பார்க்கிலும் நமது மனநிலை பாதிப்புத்தான் அதிகம். இதை நாம் ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது. இந்த உண்மையை நாம் புரிந்து கொள்வோமானால், இழப்பின் மூலம் வரும் சோர்வை ஜெயிப்பதில் நாம் பாதிவெற்றியை பெற்றுவிட்டோம் என்பது நிச்சயம்.

உதாரணமாக மனைவி காபி கொண்டு வருகிறாள். கணவன் அதை கைநீட்டி வாங்குகிறான். இடையில் ஏதோ ஒரு தவறு நடந்து விடுகிறது. காபி கொட்டி விடுகிறது. கண்ணாடி டம்ளர் கீழே விழுந்து உடைகிறது. கணவனின் பேண்ட்டில் காபி கொட்டி விடுகிறது. உடனே வீட்டில் ஒரு குட்டி உலகமகா யுத்தமே தொடங்கி விடுகிறது. கணவன், மனைவி

இருவருக்கும் இடையே பெரிய மனத்தாங்கலும் ஏற்படுகிறது. இச்சம்பவத்திற்குப் பின் பல நாட்களாய் இருவரும் பேசவில்லை. அதினால் வீட்டில் ஒரு பெரிய சூன்யமும், அழுத்தமும் நிலவியது.

இதற்கு மாறாக காபி கொட்டிய உடனே, கணவனும், மனைவியும் சற்று பொறுமையாக இருந்திருந்தால் இப்பிரச்சனையை இப்படியாக யோசித்திருக்கலாம். இப்பொழுது என்ன நடந்து விட்டது. காபி கொட்டி, ஒரு கண்ணாடி டம்ளர் உடைந்து விட்டது. பேண்ட்டில் காபிக்கறை படிந்து விட்டது. மனைவி கொடுத்த காபியின் கிரயம் அதிகமாய் போனால் நான்கு ரூபாய் (நிச்சயம் அதற்கு மேல் இருக்க வாய்ப்பில்லை-ஹோட்டல் கௌரிசங்கர் காபியே ஆறு ரூபாய்தான்), உடைந்த கண்ணாடி டம்ளரின் விலை இருபது ரூபாய் போட்டுக் கொள்ளலாம். தரையில் கொட்டிய காபியைத் துடைக்கவும், பேண்டில் படிந்த காபிகறையைப் போக்க சோப்பு, தண்ணீர் செலவு, Labour charge எல்லாம் சேர்த்து ஆறு ரூபாய்-ஆக மொத்தம் நஷ்டம் முப்பது ரூபாய் தான் இதற்குப் போய் எதற்காகக் கணவனும், மனைவியும் யுத்தத்தில் இறங்க வேண்டும்.

மனைவி கணவனைப் பார்த்து "நீங்க கையை நீட்டி வாங்க வேண்டியது தானே" என்று கூற உடனே கணவன் "நான் கையைத் தானே நீட்டணும்" என்று கூறி மனைவியின் மேல் தன் கைவரிசையைக் காண்பிக்க, அடி வாங்கிய மனைவி ஓவென்று அழ-இப்படி வீட்டில் ஒரே போராட்டம் நடப்பது எவ்வளவு மோசமானது. இதற்குப் பதிலாகக் கணவன் மனைவியைப் பார்த்து "இது என்னுடைய தவறுதான். நான்தான் கையை நீட்டி வாங்கியிருக்க வேண்டும்" என்று கூறியிருந்தால்; அல்லது மனைவியும் "இல்லெங்க நான் தாங்க கொஞ்சம் கையை நீட்டி கொடுத்திருக்க வேண்டும்" - என்று கூறியிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்.

சாதாரண பிரச்சனைகளை விசுவரூபம் எடுக்க ஒரு போதும் அனுமதிக்காதீர்கள். எறும்புப் புற்றை எரிமலையாக்கி விடாதீர்கள். உங்களது இழப்பு முப்பது ரூபாய்தான். ஆனால் அதே காபி கீழே கொட்டிய எறும்பு புற்று போன்ற பிரச்சனையை பெரிதாக்கினால், கணவனும் மனைவியும் மனத்தகராறு ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு முப்பது ரூபாய் இழப்பு, முப்பதாயிரம் ரூபாயில் போய் விட்டு விடக்கூடாது.

தவிர்க்கமுடியாத இழப்புக்கள்

நமது வாழ்க்கையில் இழப்புக்கள், நஷ்டங்கள், நடக்காமல் பார்த்துக் கொள்ள நாம் கவனமாய் இருக்க வேண்டியது அவசியம் தான். அதில்

எந்தவித சந்தேகமும் இல்லை. ஆனால் தவிர்க்க முடியாத இழப்புக்கள், சேதங்கள், விபத்துக்கள் ஏற்படுமானால் அதனிமித்தம் நாம் மனமுடைந்து, வாழ்க்கையே சூன்யமாகி விட்டது என்று எண்ணி இடிந்து போய் உட்கார்ந்து விடக்கூடாது. தவிர்க்க முடியாத அந்த இழப்பை. ஆண்டவர் அனுமதித்திருக்கிற அந்த இழப்பை நாம் சரியான கோணத்தில் பார்க்கக் கற்றுக்கொள்ள வேண்டும். உங்களுக்கு ஏற்பட்ட இழப்பை ஏக்கத்தோடு பார்த்து அந்த இழப்பின் மதிப்பை உயர்த்தி விடாதீர்கள். (எந்தப் பொருளும் நமது கையைவிட்டு போன பின்பு அது மிக விலையேறப் பெற்றது போல தோற்றமளிக்கும். இது வெறும் பிரம்மையே தவிர உண்மையல்ல). அந்த இழப்பையே பற்றி சிந்தித்துக் கொண்டிருக்காதீர்கள். உங்கள் கையை விட்டுப் போய் விட்ட அந்தப் பொருள் உதாரணமாக ரயில்பயணத்தின் போது தொலைந்து போன என்னுடைய சூட்கேஸ் உங்கள் சிந்தனையையும், மனதையும் ஆக்கிரமிக்க அனுமதிக்காதீர்கள். இழந்து போன பொருளை மறந்து விட்டு இப்பொழுது உங்களிடத்தில் இருக்கும் மற்ற பொருளின் மேல் கவனத்தைத் திருப்புங்கள். இழந்ததையே நினைத்துக் கொண்டிராமல் உங்களிடம் தற்சமயம் இருப்பதைப் பாருங்கள். உங்களிடம் இருப்பது இழந்ததைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிகம்-எண்ணிக்கையில் மாத்திரமல்ல, மதிப்பிலும் கூட.

ஒரு முறை உலகப் புகழ் பெற்ற வேதாகம மொழிபெயர்ப்பாளரான பிலிப் என்பவருடைய பாக்கெட்டில் இருந்த 'பர்ஸை' யாரோ பிக்பாக்கெட் அடித்து விட்டார்கள். அதைப் பற்றி அவர் இவ்வாறு கூறுகிறார். "நான் திருடவில்லை நான் திருடப்பட்டேன்; அதற்காக ஆண்டவரைத் துதிக்கிறேன். இரண்டாவது அந்தத் திருடன் மிகக் கண்ணியமான திருடன்-என்னை அடிக்காமல், உதைக்காமல் எனக்கே தெரியாமல் என் பர்ஸை எடுத்துக் கொண்டு போய்விட்டான். மூன்றாவதாக அந்தத் திருடன் என் பாக்கெட்டில் இருந்த பணத்தைத் தான் எடுத்தான். என் வீட்டில், பேங்கில் உள்ள பணத்தை அவன் திருட வில்லை" - என்று கூறினாராம்.

இழப்பைக் குறித்த சரியான அணுகுமுறையைக் கடைப்பிடியுங்கள்

பார்த்தீர்களா? இழப்பைக் குறித்து இவரது அணுகுமுறையை நீங்கள் நன்கு கவனிக்க வேண்டும். தான் இழந்ததைக் குறித்துக் கவலைப்படாமல், தன்னிடத்தில் இருப்பதை அவர் பார்க்கிறார். இதுதான் சரியான அணுகுமுறை. ஒரு பொருளை இழந்த பின்பு அதைப்பற்றியே சிந்தித்துக கொண்டிருப்பதை நிறுத்திவிட்டு, அடுத்து நாம் என்ன செய்ய வேண்டுமென்று யோசிப்பது நல்லது. நடந்தது நடந்தவைகளாயிருக்கட்டும்.

இனி நடப்பவைகள் நல்லவைகளாயிருக்கட்டும்.

தாவீதும் அவனது சகாக்களும் பெலிஸ்திய ரோடு கூட்டணி சேர்ந்து கொண்டு யுத்தக் களத்திற்குச் சென்றார்கள். ஆனால் அங்கு யுத்தத்தில் அனுமதிக்கப்படாத காரணத்தால் திரும்பி வந்தார்கள். அவர்கள் தங்கியிருந்த சிக்லாக் பட்டணத்திற்கு வந்த போது, அது சுட்டெரிக்கப்பட்டுக் கிடப்பதைக் கண்டார்கள். அவர்களது மனைவி, பிள்ளைகள் எல்லோரும் சிறைபிடிக்கப்பட்டுப் போய்விட்டார்கள். எல்லோரும் தலையில் மண்ணை வாரிப்போட்டுக் கொண்டு தங்களது பெலன் அற்றுப் போகும் வரைக்கும் அழுகிறார்கள். தாவீதும் கூட அவர்களோடு சேர்ந்து சிறிது நேரம் அழுகிறான். ஆனால் திடீரென்று அவன் 'தான் ஒரு தலைவன்' என்ற பொறுப்பை உணருகிறான். உடனே அடுத்து என்ன செய்ய வேண்டுமென்று சிந்திக்கத் தொடங்குகிறான். அதன் விளைவு? ஆண்டவர் சமுகத்தில் ஜெபிக்கிறான். என்ன செய்வது என்று ஆண்டவரிடத்தில் விசாரிக்கிறான். அந்தக் கொள்ளைக் கூட்டத்தைப் பின் தொடர்ந்து போய், தான் இழந்த அனைத்துப் பொருட்களையும் மனைவிகள், பிள்ளைகள் அனைவரையும் மீட்டுக் கொள்கிறான்.

நமது குடும்பத்தில், நமது வியாபாரத்தில், நமது பணியில், ஊழியத்தில் இது போன்ற மாபெரும் இழப்புக்களைச் சந்திக்கும் போது அதை எப்படி நாம் சந்திப்பது, சமாளிப்பது? இங்கே தாவீது செய்த காரியங்கள் நமக்கு நல்லதொரு வழிகாட்டி. தாவீதைப் போல் முழுங்காற்படியிட்டு ஜெபி. அவரிடத்தில் ஆலோசனை கேள். அடுத்து என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய புறப்படு. புலம்பலை நிறுத்தி விட்டு, உன் கடமையை நிறைவேற்றப் புறப்படு.

நான் எந்த நிலைமையில் இருந்தாலும் மனரம்மியமாய் இருக்கக் கற்றுக் கொண்டேன்.

தாழ்ந்திருக்கவும் தெரியும், வாழ்ந்திருக்கவும் தெரியும். பரிபூரணமடையவும், குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலன் உண்டு. (பிலி. 3 : 7.11 4 : 11-13)

☆☆☆

6. மற்றவர்கள் நமது கடின உழைப்பை பாராட்டத் தவறும் போது

கனம் பண்ண ஒருவொருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள் (ரோமர். 12 : 10).

நாம் செய்யும் வேலையை மற்றவர்கள் குறை கூறும் போது நாம் சோர்ந்து போவது போலவே, நமக்கு மேலே பதவியில் இருப்பவர்கள் நாம் செய்யும் பணியை பாராட்டத் தவறும் போதும் நமக்குச் சோர்வு வருகிறது. இது மனித வாழ்க்கையில் நாம் வாழும் சமுதாய சூழ்நிலையில் அடிக்கடி நிகழ்கிறது. ஆனால் இப்படிப்பட்ட எதிர்பார்ப்புகள் ஏமாற்றமாய் மாறும் போது அதன் விளைவாக ஏற்படும் மனப்புழுக்கமும், இருதயத்தின் ஆழத்தில் அழுத்தப்பட்டுக் கிடக்கும் ஏமாற்ற உணர்வுகளும் எளிதில் வெளியே வராது.

"இவ்வளவு வேலையையும் செய்து மாடாய் உழைத்தேன். இதைப் பாராட்டி ரெண்டு வார்த்தை நமது BOSS சொன்னாரா? அது தான் இல்லை" - என்று எத்தனையோ பேர் தங்கள் சகாக்களோடு கேண்டீனில் காபி குடிக்கப் போகும் போது சொல்லியிருக்கிறார்கள். இது போலத்தான் எலி சாவும், எலியாவினிடத்தில் ஏறக்குறைய ஒன்பது ஆண்டுகள் எடு - பிடி வேலை செய்தான். எலியா சாப்பிட்ட பின்பு அவன் கைகழுவ எலிசா தண்ணீர் ஊற்றுவான். எலிசா, எலியாவிற்கு கைகழுவ தண்ணீர் ஊற்றும் வேலை மாத்திரம் தான் செய்ததாகத் தெரிகிறது. ஆனால் உண்மையாக, நேர்மையாக ஒரு நாள் கூட தவறாமல் தண்ணீர் ஊற்றினான். எந்த அளவிற்குத் தெரியுமா? பெயர் வரும் அளவிற்கு? என்ன பெயர்? எலியா யார் என்று யாராவது கேட்டால், "அந்த 12 ஏர் பூட்டி உழுத பெரிய பண்ணையார் வீட்டுப் பையன்" என்று மக்கள் சொல்வதற்குப் பதிலாக "எலிசாவா, அவன் தான் எலியாவிற்கு கை கழுவ தண்ணீர் ஊற்றும் 'Water-boy' என்று மக்களும், முழு சமுதாயமே சொல்லும் அளவிற்குத் தன்னுடைய பணியில் கண்ணும் கருத்துமாய் இருந்தான்.

இதில் நாம் கவனிக்க வேண்டிய விஷயம் இப்படி உண்மையாக உழைத்த எலிசாவை இந்த எலியா ஒரு நாள் கூட பாராட்டியதோ, ஊக்குவித்ததோ, உற்சாகப் படுத்தியதோ கிடையாது. பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் படுவதற்குச் சிறிது நேரத்திற்கு முன்பு தான் இந்த எலியா, எலிசாவைப் பார்த்து, "தம்பி நான் உன்னை விட்டு நிரந்தரமாய் பிரிந்து போகும் முன் உனக்கு என்ன வேண்டுமென்று சொல்" - என்று கேட்கிறான்.

இதைத் தான் இந்த எலிசா எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த வேளை வந்த போது தனது இருகரத்தையும் நீட்டி அந்தப் பொன்னான சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் இறுகப் பற்றிக் கொள்ளும் வண்ணம் இந்த ஒன்பது ஆண்டுகளாக தனது எஜமானனிடம் என்னென்ன கேட்க வேண்டுமென்று எண்ணியிருந்தானோ அவை அனைத்தையும் ஒட்டு மொத்தமாகச் சேர்த்து ஒரு மந்திர மாத்திரையாக மாற்றி, "உமது ஆவியின் இரட்டிப்பான வரத்தைத் தாரும்" என்று கேட்கிறான். அதையும் எலியா எலிசாவிற்கு அருளும் போது ஒரு நிபந்தனை விதித்து விடுகிறான். தன் மேல் எலிசா வைத்திருக்கும் பற்று, அன்பு, மரியாதை, பக்தி - கடைசி வரைக்கும் இருக்கிறதா என்பதை சோதிக்கும் வண்ணம் - "நான் எடுத்துக் கொள்ளப் படுவதை நீ பார்த்தால், இந்த வேண்டுகோள் உனக்கு அருளப்படும்; இல்லையேல் கிடையாது" என்று கூறுகிறான். இறுதியாக இந்த எலிசா, எலியாவின் இரட்டிப்பான ஆவியைப் பெறுகிறான்.

இந்தச் சம்பவத்தில் நாம் கவனிக்க வேண்டிய இரண்டு குறிப்புகள் உண்டு.

எஜமானனின் இயற்கை சுபாவமாக இருக்கலாம்

முதலாவது இந்த எலிசாவின் எஜமானனாகிய எலியா, யாருடனும் அவ்வளவாகப் பழகாத, பேசாத, ஒட்டாத ஒரு reserve type-Boss. இதை இந்த வாலிபனான எலிசா நன்கு புரிந்து கொண்டான். இப்படித்தான் நமக்கு மேலே பதவியில் இருக்கும் பெரியவர்களும், மேனேஜர்களும், போதகர்களும், பிஷப்புகளும், நிர்வாகத்தின் தலைவர்களும், சில பேர் இப்படிப்பட்ட சுபாவம் உள்ளவர்களாக இருக்கக் கூடும். "அவர் யார் கிட்டேயும் ஒட்ட மாட்டார். நெருங்கிப் பழக மாட்டார். பேசினாலும் வார்த்தைகளை அளந்து, எண்ணித்தான் பேசுவார்" என்று சிலரைப் பற்றி நாம் கூற முடியும். எனவே நம்முடைய மேலதிகாரிகள், நமது தலைவர்கள் நம்மைப் பாராட்டிப் பேச வில்லையே என்று நீங்கள் வருத்தப் பட வேண்டாம். அது அவர்களது இயற்கையான சுபாவமாக இருக்கலாம். அவர்

உங்களைப் பாராட்டவில்லை என்ற ஒரே காரணத்திற்காக உங்களது வேலையில் அவரைப் பழிவாங்கி விடாதீர்கள். உங்களது வேலையில் சுணக்கம் காண்பிக்க ஆரம்பித்து விடாதீர்கள்.

மனுஷருக்கல்ல கர்த்தருக்காகச் செய்யுங்கள்

இரண்டாவதாக, நமது மேலதிகாரிகள் நம்மைத் தற்சமயம் பாராட்டத் தவறினாலும், அவர்கள் என்றைக்குமே பாராட்டப்போவதில்லை என்று நாம் நினைப்போமானால், அது பெரிய தவறு மாத்திரமல்ல; அவர்கள் மேல் அநாவசியமாக பழி சுமத்துவதற்குச் சமமாகும். யாருக்குத் தெரியும், நாம் பாராட்டாமலே, இவர் தொடர்ந்து உற்சாகமாக வேலை செய்கிறாரா என்று சோதித்துக்கூடப் பார்க்கலாம் அல்லவா? எதையுமே நாமாகவே ஒன்றை யோசித்து ஒரு தவறான முடிவிற்கு வரக்கூடாது – பொறுத்திருந்து பார்ப்பதுதான் உத்தமம்.

இப்படி நமக்கு மேலே அதிகாரத்தில் இருப்பவர்கள் நமது பணியை, கடின உழைப்பை பாராமுகமாக, கண்டு கொள்ளாமல், பாராட்டாமல் இருப்பார்கள் என்பதை உணர்ந்து தான் பவுல் இப்படியாக எழுதுகிறார்.

"வேலைக்காரரே, சரீரத்தின் படி உங்கள் எஜமான்களுக்கு (அதாவது மேலதிகாரிகளுக்கு) எல்லாக் காரியத்திலும் கீழ்ப்படியுங்கள். நீங்கள் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவர்களாய் பார்வைக்கு ஊழியம் செய்யாமல், தேவனுக்குப் பயப்படுகிறவர்களாய், கபடமில்லாத இருதயத்தோடு உங்கள் கடமைகளைச் செய்யுங்கள்.

எதைச் செய்தாலும், மனுஷருக்கென்று செய்யாமல், கர்த்தருக்காக மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள் (கொலோ. 3 : 23,24).

இதையெல்லாம் எழுதிவிட்டு இறுதியாக 3 : 23ம் வசனத்தில் "இப்படி உங்கள் கடமையை நிறைவேற்றுவதில் கண்ணும், கருத்துமாய் நீங்கள் இருப்பீர்களானால், உங்கள் மேலதிகாரி உங்களைப் பாராட்டத் தவறினாலும், உங்கள் எஜமானனுக்குச் செய்த பணியை கர்த்தருக்காகச் செய்தது உண்மையானால், கர்த்தர் உங்களுக்கு நிச்சயம் பலன் அளிப்பார்" என்று பவுல் குறிப்பிடுகிறார்.

போத்திபார் யோசேப்பைப் பாராட்டவில்லை

வாலிபனான யோசேப்பை எடுத்துக் கொள்ளுங்கள். அவன் தன் எஜமானனாகிய போத்திபார் வீட்டில் உண்மையாக, கடுமையாக உழைத்தான். போத்திபாரின் பாராட்டையோ, பிரதிபலனையோ எதிர்பார்த்து யோசேப்பு வேலை செய்ய வில்லை. உண்மையிலேயே அவனது உண்மையான கடின உழைப்புக்குக் கிடைத்த பரிசு - சிறைச் சாலை. பின்பு சிறைச்சாலையில் இருக்கும் போதும், அங்கும் அவன் உண்மையாக இருந்தான். இந்த போத்திபார் தன்னைப் பாராட்ட வேண்டுமென்று யோசேப்பு கொஞ்சம் கூட எதிர்பார்க்க வில்லை - என்பதை நாம் அறிவது நல்லது. (ஆனாலும் சில நாட்கள் கழித்து யோசேப்பைத் தனது வீட்டின் அனைத்துக் காரியங்களுக்கும் அதிகாரியாக நியமித்தது மூலமாக இந்த போத்திபார் தனது பாராட்டை வெளிப்படுத்தியிருப்பதை நாம் காண்கிறோம்). அதுபோல நீ செய்த கடினமான உழைப்பை எல்லோரும் மறந்து விட்டார்கள் என்று நினைக்காதே. ஒரு நாள் நிச்சயமாக அதற்குரிய பலனை நீ பெறுவாய்.

உடனடியாக பலாபலனை எதிர்பார்த்தோ அல்லது மற்றவர்கள் நம்மை பாராட்ட வேண்டும், புகழ வேண்டும் - என்பதற்காகவோ ஒரு காரியத்தை நாம் செய்யக்கூடாது. இந்தக்கருத்தை சாலொமோன், "ஆகாரத்தைத் தண்ணீர்களின் மேல் போடு, அதன் பலனை அநேக நாட்கள், மாதங்கள், வருடங்கள் கழித்து காண்பாய்" - என்று (பிரசங்கி 11 : 1) எழுதுகிறார். "போற்றுவார் போற்றட்டும்; புழுதி வாரித் தூற்றுவார் துற்றட்டும்" என்ற மனப்பான்மையோடு நமக்குக் கொடுக்கப்பட்ட பணியை உண்மையோடும், நேர்மையோடும் செய்ய நாம் பழக வேண்டும்.

அதற்காக நமக்குக் கொடுக்கப்பட்ட வேலையை நன்றாகச் செய்ததற்காக நமக்குமேலே உள்ளவர்கள் நம்மைப் பாராட்டாமல் இருப்பது சரி - என்று நான் கூறவில்லை. ஆனால் அதை எதிர்பார்த்து நாம் வேலை செய்யக் கூடாது. அவர்கள் நம்மை பாராட்ட மறந்திருக்கக் கூடும்; அல்லது இன்னும் கொஞ்சம் காலம் பொறுத்திருந்து எப்படி வேலை செய்கிறாரென்று பார்ப்போம் - என்று காலதாமதம் செய்யலாம்.

மொர்தெகாய் செய்த உதவியை ராஜா மறக்கவில்லை

உதாரணமாக மொர்தெகாயை எடுத்துக்கொள்ளுங்கள். ராஜாவைக் கொலை செய்யச் சிலர் சதித்திட்டம் தீட்டியதை இவன் அறிந்து அதை

எஸ்தர் மூலமாக ராஜாவிற்கு அறிவிக்கிறான். இதற்கு ராஜா நிச்சயமாக எஸ்தரையோ, மொர்தெகாயையோ நேரில் அழைத்து நன்றி செலுத்திப் பாராட்டியிருக்க வேண்டும். ஆனால் ராஜா கண்டுகொள்ளவில்லை. ஆனால் பல மாதங்கள் கழித்து ஒரு இரவு தூக்கம் வராமல் - அரண்மனையின் அன்றாட நடவடிக்கை புத்தகத்தை வாசிக்கிறான். அப்படி வாசிக்கும் போது மொர்தெகாய் தனக்குச் செய்த உதவியை நினைவு கூர்ந்து, "சே, இந்த மனிதனை நான் அன்றைக்கே பாராட்ட மறந்தது எவ்வளவு பெரிய தவறு. இதற்கு ஈடுகட்டும் வண்ணமாக இப்பொழுது நாடு முழுவதும் பெரிய அளவில் அவனை பாராட்டும் படியாக செய்யலாம்" - என்று தனக்குள் தீர்மானித்து ஒரு பெரிய ஊர்வலமே நடத்த கட்டளையிடுகிறான். ஆம்! கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிரித்துக் கொண்டு கொடுக்குமாம்.

இந்தச் சம்பவத்தில் இன்னொரு உண்மையை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். உதவி செய்த அன்றைய தினமே ராஜா மொர்தெகாயை பாராட்டியிருந்தால் அது ஒரு சாதாரண விஷயமாகப் போயிருக்கும். ஆனால் காலதாமதமாகப் பாராட்டுகிற காரணத்தினால் தான் அது ஒரு நாடுதழுவிய - ஊர்வலத்துடன் கூடிய மிகச்சிறந்த பாராட்டு விழாவாக மாறியது மாத்திரமல்ல; அது சரியான நேரத்தில், யூதர்களின் பரம எதிரியான ஆமானைத் திணறடித்து அவனை நிலைதடுமாறச் செய்தது - என்பதும் குறிப்பிடத்தக்கது. அப்படியானால் நமக்கு வரவேண்டிய பாராட்டுக்கள் காலதாமதமாக வருமானால், அந்தக் காலதாமதத்தோடு வட்டியும், முதலுமாக வரும் என்று எதிர்பாருங்கள்.

யோசேப்பின் வாழ்க்கையிலும் இதே போலத்தான் காலதாமதமானது. தன்னோடு சிறையில் இருந்தவன் கண்ட கனவின் அர்த்தத்தை விளக்கினான். "மூன்று நாளைக்குள் பார்வோனுக்கு முன்பு நீ நிற்பாய். நீ வாழ்வடைந்திருக்கும் போது நீ என்னை நினைத்து என்மேல் தயவுகூர்ந்து பார்வோனிடத்தில் என்னை விடுதலையாக்கும்படி சொல்" என்று கூறியிருந்தான். ஆனால் அவனோ மறந்து விட்டான். ஆனால் சில நாட்கள் கழித்து பார்வோன் கனவு கண்ட போது இந்தப் பானபாத்திரக்காரன் பார்வோனிடத்தில் யோசேப்பைப் பற்றி எடுத்துரைக்கிறான். நடந்தது என்ன? யோசேப்பிற்குக் கிடைத்தது சிறையிலிருந்து விடுதலை மாத்திரமல்ல, எகிப்து தேசத்தின் அதிபதி பதவியே கிடைத்தது, பார்த்தீர்களா? கொடுக்கிற

தெய்வம் கூரையைப் பிரித்துக்கூட கொடுக்கும் என்ற உண்மை இங்கும் நிறைவேறுகிறது.

அகித்தோப்பேலின் அபத்தம்

இஸ்ரவேல் ராஜாவிற்கு இருந்த பல ஆலோசகர்களில் மிக முக்கியமானவன் இந்த அகித்தோப்பேல். ராஜதந்திரம் அறிந்தவன். கூர்மையான அறிவு படைத்தவன், தாவீதின் மகன் அப்சலோம் தனது அப்பாவை நாட்டைவிட்டுத் துரத்தி விட்டு ஆட்சியைக் கைப்பற்றுகிறான். தாவீது வெறும் காலோடு நாட்டைவிட்டு உயிர்தப்ப ஓடுகிறான். ஆட்சியைக் கைப்பற்றிய அப்சலோமிற்கு சில ஆலோசகர்கள் தேவை. தாவீதைக் கொல்லுவதற்கு அகித்தோப்பேல் ஒரு அருமையான ஆலோசனை கூறுகிறான். அந்த யோசனையை புதிய ராஜாவாகிய அப்சலோம் பாராட்டுவான் என்று அகித்தோப்பேல் எதிர்பார்த்தான். ஆனால் அந்த யோசனையை அவன் நிராகரித்து விடுகிறான். தன் ஆலோசனை அவமதிக்கப்பட்ட உண்மையை இந்த அகித்தோப்பேலினால் ஜீரணிக்கவே முடியவில்லை. இதனிமித்தம் அவன் மனச்சோர்வு அடைகிறான். அவனது மனம் உடைந்து விடுகிறது. இறுதியாக இந்த மனச்சோர்வு அவனை தற்கொலையில் கொண்டுபோய் விடுகிறது. ராஜாவிற்கும், தேசத்திற்கும் ஆலோசனை சொன்னவன் தனக்குத் தானே ஆலோசனை சொல்லத் தவறிவிட்டான்.

தனது நல்ல யோசனை நிராகரிக்கப்பட்டதற்காக ஒருவன் கோபப்படலாம்; எரிச்சலடையலாம்; மல்லுக்குக் கூட நிற்கலாம். ஆனால் எதற்காக இவன் தற்கொலை செய்ய வேண்டும்? மனமுடைந்து தற்கொலை செய்யும் அளவிற்கு இது ஒரு பெரிய விஷயமா? ராஜாவிற்கு, ஒரு நாட்டை எப்படி ஆளவேண்டும் என்று ஆலோசனை கொடுக்கிற இவன் ஏன் இப்படி கண்மூடித்தனமான ஒரு செயலைச் செய்தான்? இங்குதான் நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஒரு சாதாரண, அற்ப விஷயம் விசுவரூபம் எடுக்க நாம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. எறும்புப்புற்று எரிமலையாகிவிடக் கூடாது. இப்படிப்பட்ட அகித்தோப்பேல்களை இன்றைக்கும் கூட நாம் பார்க்கலாம்.

மனதைப் புண்படுத்தக் கூடிய ஒரு வார்த்தையைக் கணவன் கூறியதற்காக மனம் உடைந்து தற்கொலை செய்யும் மனைவிகள் உண்டு பரீட்சையில் தோல்வியடைந்ததற்காக, சில ஆயிரம் ரூபாய்கள்

நஷ்டத்திற்காக எத்தனை பேர்கள் இன்றைக்கும் தற்கொலை செய்து கொள்கிறார்கள். எந்தத் தற்கொலைக்கும் மனச்சோர்வு தான் வித்தாக இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த சோர்வு என்ற வித்து வேரூன்றி, செடியாகி, மரமாக மாறி, அந்த மரத்தின்கிளையில் இந்த அகித்தோப்பேலைப் போல் தற்கொலை செய்யும் ஒரு சூழ்நிலை உருவாகாமல் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். முளையிலேயே அந்தச் சோர்வை கிள்ளியெறிய வேண்டும்.

மற்றவர்கள் உன் வார்த்தையை மதிக்காத காரணத்தால் நீ சோர்வடைய அவசியமில்லை. மற்றவர்கள் உன்னைப் பாராட்டவில்லை; அந்தக் கூட்டத்தில் பலரைப் பாராட்டிப் பேசிய அவர் நம்மைப்பற்றி இரண்டு வார்த்தை சொல்லவில்லையே என்று எண்ணி சோர்ந்து போகாதே. அதற்கு மாறாக அந்தரங்கத்தில் உன்னைப் பார்க்கும் ஆண்டவர் பகிரங்கமாக உனக்குப் பலனளிப்பார். அப்பொழுது உன் நீதி பட்டப்பகலைப் போல வெளிச்சமாகப் பிரகாசிக்கும்; உன்னைக் கன்மலையின் மேல் உயர்த்தும் காலம் சீக்கிரம் வரும். அதுவரைக்கும் ஏற்ற காலத்தில் உன்னை உயர்த்தும்படிக்கு அவரது பலத்த கரத்திற்குள் அடங்கியிருக்கக் கற்றுக்கொள்.

☆☆☆

7. மற்றவர்களது ஏளனப்பேச்சுக்கள்

எனக்கு விரோதமாக அநேகர் சொல்லும் அவதூறைக் கேட்டேன்; என் பிராணனை வாங்கத் தேடுகிறார்கள். திகில் என்னைச் சூழ்ந்து கொண்டது. நானோ, கர்த்தாவே உம்மை நம்பியிருக்கிறேன். (சங். 31 : 13,14) (மற்றவர்கள்) சொன்ன வார்த்தையினால் என் ஆத்துமா சோர்ந்து போயிற்று (உன். 5 : 6)

தீயினால் சுட்டபுண் உள்ளாறும், ஆறாதே நாவினால் சுட்ட வடு – குறள்.

நமது பூலோக வாழ்க்கையில் அடிக்கடி நாம் மனச்சோர்வு அடைவதற்குக் காரணம் மற்றவர்களது பரியாசமான வார்த்தைகளும், ஏளனப் பேச்சுக்களும். "இவர் என்னத்தைப் பெரிசா செஞ்சிட்டாரு"; "இந்த மனிதன் உருப்படியாக ஒரு வேலையும் செய்யவில்லை" - இப்படி நம்மை சிலர் விமரிசனம் செய்யும்போது நமக்குச் சோர்வு வருகிறது.

குத்துச்சண்டை வீரர்கள் களத்தில் இறங்குவதற்கு முன்பு ஒருவரையொருவர் அசிங்கமான, கேவலமான வார்த்தைகளினால் தாக்குவார்கள். அந்த வார்த்தைகளின் ஒரே நோக்கம் சண்டை ஆரம்பிக்கும் முன்னரே எதிரியை மனரீதியாக தோற்கடிப்பது.

இப்படிப்பட்ட சூடான வார்த்தைகள் அம்புகளாகமாறி நமது மனதைப் புண்படுத்தி விடுகின்றன. இவ்வகையான மனித வார்த்தைகள் என்ற ஏவுகணைகள் வித்தியாசமான நோக்கத்தோடு வித்தியாசமான சூழ்நிலைகளில் நம்மை நோக்கி ஏவப்படுகின்றன. நாவானது சிறிய அவயவமாயிருந்தாலும், அது ஒரு சிறிய நெருப்பு; ஒருபெரிய காட்டையே அழித்து விடும் - என்ற யாக்கோபுவின் வார்த்தைகள் (3 : 5) எவ்வளவு உண்மையானவைகள்.

இப்படிப்பட்ட பரியாசமான வார்த்தைகளை, கீழ்த்தரமான கேலியான பேச்சுக்களை, நாம் கேட்கும் போது நமது மனது புண்படுகிறது; வேதனையால் துடிக்கிறோம்; நமக்கு மனச்சோர்வு ஏற்படுகிறது. இவ்வகையான ஏளனப் பேச்சுக்களையும், பரியாசமான வார்த்தைகளையும் சரியான விதத்தில் கையாண்ட மூன்று மனிதர்களைப் பற்றி வேதத்திலிருந்து நாம் ஆராயப்போகிறோம். அவர்கள் கையாண்ட முறையை நாமும்

கையாள நாம் கற்றுக் கொள்ள வேண்டும். முதலாவது நெகேமியா, இரண்டாவது எசேக்கியா ராஜா, மூன்றாவது தாவீது. வேதத்தில் மற்ற எல்லோரைப் பார்க்கிலும் இவர்கள் தான் பரியாசமான சொற்களினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள், இவர்கள் மூவரும் தங்களை நோக்கி வீசப்பட்ட இந்த ஏளனப் பேச்சுக்கள் என்ற ஏவுகணைகளை எப்படி, எவ்வாறு திசை திருப்பினார்கள்; அதன்மூலம் மனச்சோர்வு என்ற வியாதி தங்களையும், தங்களைச் சார்ந்திருந்த மற்றவர்களையும் தாக்காதபடி எப்படி பாதுகாத்துக் கொண்டார்கள் என்று நாம் அறிந்து கொள்வோமானால் நமக்கு அது உதவியாக இருக்கும்.

1. நெகேமியாவை நையாண்டி செய்த சன்பல்லாத் தொபியா

எருசலேம் பட்டணத்தின் ஆலயம் செருபாபேல் தலைமையில் கட்டப்பட்டு முடிந்து விட்டது; எஸ்றா மூலம் அங்கு ஆராதனையும் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் பட்டணத்தைச் சுற்றிலும் உள்ள 5 கி.மீ. தூரமுள்ள அலங்கம் (Compound wall) இன்னும் கட்டப்படவில்லை. நேபுகாத்நேச்சாரால் ஏறக்குறைய 70 ஆண்டுகளுக்கு முன்பு இடிக்கப்பட்டு, சுட்டெரிக்கப்பட்ட அலங்கம் அப்படியே கவனிப்பாரற்றுக் கிடந்தது. இப்படி எருசலேமின் அலங்கம் அலங்கோலமாய்க் கிடப்பதைக் கேள்விப்பட்ட இந்த நெகேமியா பாபிலோனிலிருந்து 1000 கி.மீ. பயணமாகி எருசலேம் வந்து சேர்ந்திருக்கிறான். அலங்கத்தைக் கட்டி முடிக்கும் மிகப்பெரிய பொறுப்பை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டான்.

தனது பணியை ஆரம்பித்தவுடனேயே, பல எதிர்ப்புகள் கிளம்ப ஆரம்பித்தன. நாம் ஒரு நல்ல வேலையைத் தொடங்கும் போது தடை வருவது சகஜம். யூதர்களின் பரம எதிரிகளாகிய சன்பல்லாத்தும், தொபியாவும் இந்த நெகேமியாவை தங்களது வார்த்தைகளினால், தாக்க முயற்சிக்கிறார்கள். "இவன் கட்டும் அலங்கத்தின் மேல் ஒரு நரி ஏறிப்போனாலும் அவைகள் இடிந்து போகும்" என்று பரியாசம் பண்ணினார்கள்.

1a. பரியாசமான வார்த்தைகளை அலட்சியம் பண்ணுங்கள்.

நிச்சயமாக இந்த வார்த்தைகளின் முக்கியமான நோக்கம் கட்டப்படும் அலங்கத்தை இடிப்பதற்குப் பதிலாக அதைக் கட்டுகிறவர்களின் மனதை இடித்துத் தள்ளுவது தான். இந்த நெகேமியா நம்மைப்போல ஒரு சாதாரண மனிதனாக இருந்தால் இந்த வார்த்தைகளைக் கேட்டு மனச்சோர்வு

அடைந்து பாபிலோனுக்கு திரும்பிப்போயிருப்பான். ஆனால் இந்த நெகேமியா அஞ்சாநெஞ்சம் படைத்தவன். இந்த காட்டுநரி சலசலப்பிற்கு இவன் அஞ்சவில்லை. போற்றுவார் போற்றட்டும், மண்வாரி தூற்றுவார் தூற்றட்டும் - என்ற அறநெறியின்படி இவர்களது பரியாசச் சொல்லிற்கு இவன் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவர்களது பரியாச வார்த்தைகள் மனதைப் புண்படுத்தி மனச்சோர்வை கொடுக்கக்கூடிய இந்த வார்த்தைகளை இவன் அலட்சியம் பண்ணினான்; பரியாசச் சொற்களை நாம் பரியாசம் செய்ய வேண்டும். அலட்சியமான சொற்களை அலட்சியம் பண்ணவேண்டும். முள்ளை முள்ளால்தான் எடுக்கவேண்டும்.

ஆம்! நாமும் கூட இப்படி யாராவது நம்மை பரியாசம் பண்ணுவார்களானால், அவர்களது சொற்களுக்கு நாம் மதிப்புக் கொடுக்கக்கூடாது. அதை அலட்சியம் பண்ணுங்கள்; நம்மை சோர்வுக்குள்ளாக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு எழுதப்படும் கடிதங்களைக் கிழித்து குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு, அதை அடியோடு மறந்துவிடுங்கள். இவ்வகையான சோர்வை நீக்குவதற்கு நல்ல தொருமாற்று மருந்து இதுதான்.

1b. உங்களது பணியில் முழுக்கவனம் செலுத்துங்கள்

இந்த விஷயத்தில் நெகேமியா செய்த இரண்டாவது காரியம், அவன் மேற்கொண்ட வேலையில் முழுக்கவனம் செலுத்தினான். இந்த அலங்கம் கட்டும் காரியத்தைப்பற்றி பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தன்னை அழைத்த தனது எதிரிகளுக்கு அவன் கொடுத்த பதில், "நான் ஒரு மாபெரும் பணியில் ஈடுபட்டிருக்கிறேன். அது மெனக்கெட்டுப் போகும்படிக்கு என்னால் கீழே இறங்கி வர முடியாது" (நெகே. 6 : 3) என்று பதில் கூறுகிறான்.

மனச்சோர்வை மேற்கொள்வதற்கு ஒரு சிறந்த வழி எந்த வேலையைத் தடைசெய்ய வேண்டுமென்று அந்த பரியாச வார்த்தைகள் பேசப்பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேற நாம் ஒரு போதும் அனுமதிக்கக்கூடாது; அதே வாயை அடைக்கும்படியாக நமது திறமையை நமது வேலையில் காண்பிக்க வேண்டும். தன்னைப்பற்றி சற்று கேவலமாக விமர்சித்த பத்திரிக்கைகளுக்கு நீங்கள் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள் என்று ஒரு கிரிக்கெட் வீரரைக் கேட்டபோது அவர் கொடுத்த பதில், "என்னுடைய பேட் மூலமாக நான் பதில் சொல்லுவேன்" என்று பதிலளித்தார்.

ஆம்! நமது வேலையை, திறமையைப் பற்றி யாராவது குறை கூறுவார்களானால் அதற்கு வாயினால் பதில் சொல்லாமல் நமது

வேலைத்திறமையினால் பதில் சொல்லுவது நல்ல முறை.

2. எசேக்கியாராஜாவைக் கேவலமாகப் பேசிய அசீரியா ராஜா.

இரண்டாவதாக யூதா ராஜாவாகிய எசேக்கியாவைப்பற்றிச் சிந்திப்போம். யூதா ராஜாவாகிய எசேக்கியாவிற்கு விரோதமாக அசீரியா ராஜாவாகிய சனகெரிப் படையெடுத்து வந்தான். "என்னிடத்தில் ஒழுங்காக நீர் சரண் அடைந்து, கப்பம் கட்ட விரும்புகிறாயா? அல்லது நான் உன்மேல் படையெடுத்து வரவேண்டுமா" - என்று கேட்குமாறு தன் தளபதியாகிய ரப்சாக்கை அனுப்புகிறான். இந்த ரப்சாக் மிகவும் ராங்கி பிடித்தவன். அவன் வந்து எசேக்கியா ராஜாவை எவ்வளவு கேவலமாக, மட்டரகமாகப் பேச முடியமோ அந்த அளவிற்கு வாய் கூசாமல் பேசுகிறான்.

ஏசாயா 36 ஆம் அதிகாரத்தை வாசித்துப்பாருங்கள். "உனக்கு 2000 குதிரைகளை நான் கொடுக்கிறேன். அதிலே ஏறுவதற்கு தகுதி படைத்த வீரர்கள் உன்னிடத்திலே இருக்கிறார்களா?" என்று சகல ஜனங்கள் மத்தியிலும் யூத பாஷையிலே சத்தம் போட்டுச் சொல்லுகிறான். சீரியா பாஷை எனக்குத் தெரியும்; தயவுசெய்து சீரியா பாஷையிலே பேசுங்கள்; யூத பாஷையிலே பேச வேண்டாம்" என்று எசேக்கியாவின் தளபதிகள் கேட்டபோது, அந்த ரப்சாக்கிற்கு மூக்கின் மேல் கோபம் வந்து மூர்க்கத்தோடு சத்தம்போட்டுப் பேச ஆரம்பித்தான். அப்பொழுது தான் இவன் ஒரு அசிங்கமான வார்த்தையைப் பேசுகிறான். அவன் கேட்டது ஏறக்குறைய இப்படி இருந்தது, "என்னய்யா உங்க ராஜா சோறுதான் சாப்பிடுகிறாரா அல்லது மலத்தை சாப்பிடுகிறாரா".

இந்த வார்த்தைகளை யாராலும் தாங்க முடியாது. ஒரு நாட்டின் தூதுவன் இன்னொரு நாட்டின் தூதுவனிடத்தில் இப்படிப்பட்ட அசிங்கமான வார்த்தைகளை உபயோகிப்பது தரக்குறைவான செயல்; மிகப்பெரிய குற்றம்; கொலைக் குற்றத்தைக் காட்டிலும் பெரிய குற்றம்.

2a. பரியாசத்தின் உச்சகட்டத்திற்குப் போகிறவர்கள் நிச்சயம் கீழே விழுவார்கள்.

யாராவது நம்மை இந்த மாதிரி ரொம்ப ரொம்ப கேவலமாகப் பேசினால், அதனுடைய இன்னொரு அர்த்தம் என்ன தெரியுமா? அப்படி பேசுகிறவனுக்கு கெட்ட காலம், அழிவு காலம் நெருங்கி விட்டது - என்று

தான் அர்த்தம். இது நான் அடிக்கடி மனித வாழ்க்கையில் கண்டு பிடித்த ஒரு நடைமுறை உண்மை.

1977-ல் இந்திரா காந்தி தனது பதவியை தக்கவைத்துக் கொள்வதற்கு பல தவறான செயல்களையும், இமாலயத்தவறுகளையும் செய்யத் தொடங்கினார்கள், எதிர்கட்சித் தலைவர்கள் அனைவரையும் ஜெயிலில் அடைத்தார்கள். அப்பொழுது ஜெயப்பிரகாஷ் நாராயணன், "இந்திராகாந்தியின் அழிவு அந்த அம்மையாரின் முடிவு நெருங்கி விட்டது" என்று கூறினார். அது போலவே சில மாதத்திற்குள்ளாகப் பொதுத்தேர்தலில் படுதோல்வி அடைந்தார்கள்; அவர்களது அரசியல் வாழ்க்கைக்கு அது ஒரு சாவுமணியாக மாறியது.

எசேக்கியாராஜா இந்த ரப்சாக்கின் கிண்டலான வார்த்தைகளைக் கேட்டபோது தன் வஸ்திரங்களைக் கிழித்து இரட்டுடுத்தி, கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்து ஆண்டவரை நோக்கி ஜெபித்தான்.

2b. அமைதியைக் கடைப்பிடித்து பதில் பேசாதிருங்கள்

இந்த விஷயத்தில் எசேக்கியா ராஜா மிகவும் ஞானமாக நடந்துகொண்டான்; எதிரியின் கேவலமான வார்த்தைகளுக்கு எதிர்வார்த்தை ஒன்றும் பேச வேண்டாம் என்று எசேக்கியா ராஜா கட்டளையிட்டது மிகவும் போற்றத்தக்கது: சந்திரனைப்பார்த்து நாய் குரைத்தால் குரைக்கட்டுமே! அதற்குப் பதிலுரைக்க நாமும் குரைப்பதா? இப்படி நாம் வாயை மூடிக்கொண்டு அமைதியைக் கடைபிடிப்போமானால் ஆண்டவர் நமக்காக கிரியை செய்ய தொடங்குவார். "அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்" என்ற வசனத்தின் சாராம்சம் இதுதான்.

அடுத்த முறை யாராவது உங்களை மிக அவதூறாக, கேவலமாக, அசிங்கமாக பேசினால், நீங்கள் அமைதியாக இருக்கப் பழகுங்கள். பின்பு என்ன நடக்கிறது என்று சற்று பொறுத்திருந்து பாருங்கள். அவர்களது அழிவு மிக சமீபம்.

2c. அழிவிற்கு முன் அகந்தை

அழிவிற்கு முன் அகந்தை செல்லும் (நீதி. 18 : 12) என்ற சாலொமோனின் வார்த்தைகள் இந்த அசீரியா ராஜாவின் வாழ்க்கையில் நூற்றுக்கு நூறு அப்படியே நிறைவேறிற்று.

அசீரியா ராஜா சொன்ன வார்த்தைகளைக் கேட்டுப் பயந்து போயிருந்த எசேக்கியா ராஜாவை தைரியப்படுத்துவதற்காக ஏசாயா தீர்க்கதரிசி ஆள் அனுப்பி, பின்வருமாறு செய்தி அனுப்புகிறான், "அசீரியா ராஜாவிற்கு நீ கொஞ்சம் கூட பயப்பட வேண்டாம். அவன் எனக்கு விரோதமாய் கொந்தளித்து வீரியம் பேசினது என் செவியில் (அதாவது ஆண்டவரது செவியில்) விழுந்தது. நான் என் துறட்டை அவன் மூக்கிலும் என் கடிவாளத்தை அவன் வாயிலும் போட்டு, வந்த வழியே அவனைத் திரும்பப் பண்ணுவேன். அவனது தேசத்திலே அவனைப் பட்டயத்தால் விழப்பண்ணுவேன் என்று கர்த்தர் உரைக்கிறார்" - என்று செய்தி அனுப்பினான். என்ன தைரியமான வார்த்தைகள். இந்தத் தீர்க்கதரிசன வார்த்தைகள் எசேக்கியாவின் புண்பட்ட நெஞ்சிற்கு கீலேயாத்தின் தைலமாக இருந்தது.

2d. கர்த்தர் கேட்டார் - அவர் பதிலளிப்பார்

இங்கே இன்னொரு உண்மையையும் நாம் உணரத் தவறக்கூடாது. அதாவது, எசேக்கியா ராஜாவிற்கு விரோதமாக சனகெரிப் சொன்ன வார்த்தைகள் அனைத்தும் தனக்கு விரோதமாகக் கூறப்பட்ட வார்த்தைகளாக ஆண்டவர் கருதுகிறார். "அசீரியா ராஜா (உன்னையல்ல), என்னைத் தூஷித்த வார்த்தைகளைக் கேட்டு நீ பயப்பட வேண்டாம். அந்த வார்த்தைகளை நான் கேட்டேன், அதற்குரிய தண்டனையை நான் செய்வேன்" (ஏசாயா. 37 : 4-6) என்று ஆண்டவர் கூறுகிறார். ஆம்! நமக்கு விரோதமாக, நமது பணிக்கு விரோதமாகப் பேசப்படும் அனைத்து வார்த்தைகளும் ஆண்டவருக்கு விரோதமாகப் பேசப்பட்ட வார்த்தைகளாக நாம் அவைகளைத் திசை திருப்பிவிடக் கற்றுக் கொள்ளுவது நல்லது. அப்படி நாம் செய்வோமானால் அந்த வார்த்தைகளைக் குறித்து நாம் கவலைப்படவோ, மனவருத்தமடையவோ அவசியமே இல்லை. ஆண்டவரே அதை விசாரிக்கட்டும்; அது ஆண்டவர் பாடு; அதைச் சொன்னவர் பாடு; அதைச் சொன்னவர் படும் பாட்டை நாம் பொறுத்திருந்து, சற்று விலகியிருந்து பார்ப்பது நல்லது.

ஏசாயா தீர்க்கதரிசியின் வார்த்தையின் படியே சீரியா தேசத்து ராஜா சனகெரிப் திடீரென தன் தேசத்திற்குத் திரும்பிச் சென்றான். அங்கு அவனது மகனால் கொலை செய்யப்படுகிறான்.

3. தாவிதை நிந்தித்த சீமேயு

மூன்றாவதாக தாவீதின் வாழ்க்கையை நாம் சிந்திப்போம். தாவீதும் தனது வாழ்க்கையில் இது போன்ற அவச்சொற்களை, நிந்தையான

வார்த்தைகளைக் கேட்கும் சூழ்நிலை ஒருமுறை உருவானது. தனது ஆட்சியை இழந்து தன் மகன் அப்சலோமால் நாடு துரத்தப்பட்டு தப்பி ஓடுகிறான். அந்தச் சமயம் சீமேயு என்ற மனிதன் தாவீதை மிகவும் கேவலமாகப் பேசுகிறான். "இரத்தப் பிரியனே, தொலைந்து போ, தொலைந்து போ. உன் அக்கிரமத்தில் அகப்பட்டாய்" - என்று தூஷித்து மண்ணை வாரி நாசமாய் போ என்று சபிக்கிறான்.

நமக்குக் கஷ்டமும், துன்பமும் வரும்போதுதான் நண்பர்கள் யார், எதிரிகள் யார் என்பது தெரியவரும். பலரது சாயங்கள் வெளுக்கும்.

உங்களைத் தாழ்த்துங்கள்

இப்படி யாராவது நம்மைத் தெருவில் தூஷித்தால் நமக்கு எப்படி இருக்கும்? "இந்த சீமேயியின் தலையை சீவட்டுமா?" என்று அவனது வீரர்கள் கேட்ட போது தாவீது மிகவும் பெருந்தன்மையோடும், தாழ்மையோடும், "வேண்டாம், என்னை தூஷிக்கும் படி கர்த்தர் அவனை ஏவியிருக்கலாம். ஒருவேளை கர்த்தர் என் சிறுமையைப்பார்த்து இவன் நிந்தித்த நித்தனைக்குப் பதிலாக எனக்கு நன்மையைச் சரிக்கட்டுவார் (IIசாமு. 16 : 7 - 13)" என்று பதில் கொடுக்கிறான்.

இந்த இடத்தில் தாவீது குணத்தில் ஒரு கோபுரமாகவும். அவரது சாட்சி ஒரு பசும்பொன்னாகவும் ஜொலிக்கிறது. இப்படி ஒரு மன்னிக்கும் சுபாவம்; தரை மட்டும் தாழ்த்தக்கூடிய ஒரு தாழ்மைக் குணம்; இது ஒரு தெய்வீகக்குணம் என்றால் மிகையாகாது.

18-ஆம் நூற்றாண்டில் (1714-1770) வாழ்ந்து உலகத்திலேயே மிகப்பெரிய திறந்த வெளிப் பிரசங்கியராகிய ஜியார்ஜ் உய்ட்ஃபீல்டிற்கு "நீ மிகவும் மோசமானவன்" என்று ஒருவர் பயங்கரமாகச் சாடி ஒரு கடிதம் எழுதியிருந்தாராம். அதற்கு இவர் இப்படியாக பதில் எழுதினாராம், "நான் மிக மோசமானவன் என்று நீங்கள் எழுதிய கடிதம் கிடைத்தது. இது நீங்கள் சொல்லித்தான் நான் தெரிய அவசியமில்லை. உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? உண்மையிலே பார்க்கப்போனால் நீங்கள் நினைப்பதைக் காட்டிலும் நான் அதிகமாகவே மோசமானவன் தான்" - இப்படிக்கு கிறிஸ்துவுக்குள் உங்கள் சகோதரன் ஜியார்ஜ் உயிட்ஃபீல்டு - என்று பதில் கடிதம் போட்டாராம்; சரியான, பொருத்தமான பதில்.

4. நம்மைச் சோர்வடையச் செய்யும் மனித வார்த்தைகளில் மூன்று வகைகள் உண்டு என்பதை நாம் புரித்து கொள்வது நல்லது.

4a. வெறும் பரியாசச் சொற்கள்

முதல்வகை, சன்பல்லாத், தொபியா போன்ற மனிதர்களின் பரியாச வார்த்தைகள். இவைகள் நம்மை பரியாசம் செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு பேசப்படுபவைகள். இவ்வகையான வார்த்தைகளில் உண்மை இருக்காது; பரியாசமும், கேலியும், கிண்டலும் தான் காணப்படும். இவைகள் வெறும் பூச்சாண்டி காண்பிக்கும் சொற்கள். இவற்றை நாம் கண்டு கொள்ளாமல் விட்டு விடுவதும் அசட்டை செய்து புறக்கணிப்பதும் தான் சாலச் சிறந்தது.

4b. பொய்யான குற்றச்சாட்டுக்கள்

இரண்டாவது வகைச்சொற்கள் - நம்மைக் குற்றம் கண்டுபிடிக்கும் வார்த்தைகள். நமது குறைகளைச் சுட்டிக் காண்பிக்கும் வார்த்தைகள், இப்படி நமது எதிரிகள் நம்மை குற்றவாளிக் கூண்டில் நிறுத்த முயற்சிக்கும் குற்றச்சாட்டுக்கள். இதிலும் இரண்டு வகை உள்ளன. குற்றம் கண்டு பிடிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு பேசப்படும் வார்த்தைகள். அதில் பொய்யான, ஜோடிக்கப்பட்ட குற்றங்கள் மாத்திரமே காணப்படும். இது போன்ற உண்மையற்ற குற்றச்சாட்டுகளையும், சரக்கும் சாருமற்ற குற்றச்சாட்டுக்களையும் நாம் ஒதுக்கித்தள்ளி விடலாம்; அசட்டை செய்து விடலாம்.

4c. உண்மையான குற்றச்சாட்டுக்கள்

ஆனால் சில குற்றச்சாட்டுக்களில் உண்மையிருக்கலாம். சில சமயங்களில் நமது எதிரிகள் தான் நமது தவறுகள் என்ன என்பதைச் சரியாக சுட்டிக்காண்பிப்பார்கள். அப்படி நமது எதிரிகள் சொல்லும் குற்றச்சாட்டில் உண்மையிருக்குமானால் அதை ஏற்றுக் கொள்வதற்குத் தைரியம் நமக்குத் தேவை.

ஒரு முறை ஆபிரகாம்லிங்கன் ஒரு தவறு செய்துவிட்டார். அவரது எதிரி ஒருவர் இதைச் சுட்டிக்காண்பித்து. "ஆபிரகாம் லிங்கன் முட்டாள் தனமாக இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்" என்று குற்றம் சாட்டினாராம். இதைக் கேள்விப்பட்ட ஆபிரகாம் லிங்கன், சற்று யோசித்து விட்டு "ஆம் இந்த விஷயத்தில் நான் முட்டாள்தனமாகத் தான் நடந்திருக்கிறேன்" என்று

தனது தவறைப் பகிரங்கமாக அறிக்கையிட்டாராம்.

அடுத்த முறை யாராவது உங்களை ஏளனமோ, பரியாசமோ பண்ணும்போது மனம் சோர்ந்து போகாதீர்கள். சீமேயுக்கள், சன்பல்லாத்துக்கள், ரப்சாக்கள் இன்றைக்கும் உயிரோடு நம்மோடு நடமாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட தூஷிக்கும் மக்களை நாம் இன்றைக்கு இல்லாவிட்டாலும் என்றைக்காவது ஒருநாள் நமது வாழ்க்கையின் ஏதாவது ஒரு கட்டத்தில் அல்லது இக்கட்டில் சந்திக்கத்தான் போகிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகும் போது எசேக்கியா ராஜாவைப் போல் வாய்பேசாமல் இருங்கள்; தாவீதைப்போல "என்னைத் தூஷிக்க ஒருவேளை கர்த்தர் அவனை ஏவியிருக்கலாம்" என்று பெருத்தன்மையோடு கூறுங்கள். கொஞ்சம் பொறுமையுடனும், நிதானத்துடனும் பொறுத்திருந்து பாருங்கள். உங்களுக்கு விரோதமாக பேசப்பட்ட வார்த்தைகளுக்கு ஆண்டவர் உங்களுக்கு ஒரு அருமையான ஆசீர்வாதத்தையும், பேசியவர்களுக்கு ஒரு சாபத்தையும் வைத்திருப்பார்.

உனக்கு விரோதமாய் எழும்பும் எந்த ஆயுதமும் (பரியாச வார்த்தைகளையும் சேர்த்துத்தான்) வாய்க்காதே போகும். உன்மேல் எரிச்சலாயிருக்கிறவர்கள் வெட்கி இலட்சையடைவார்கள், உன்னோடு வழக்காடுகிறவர்கள் நாசமாகி ஒன்றுமில்லாமற் போவார்கள்.

உனக்கு விரோதமாய் தூஷணமான வார்த்தைகளைப் பேசிய சீமேயுக்கள் சிலநாட்கள் கழித்து தாவீதாகிய உன் காலில் வந்து விழுவார்கள் (IIசாமு. 19 : 18). யோசேப்பின் சகோதரர்களும் அவனுக்கு விரோதமாகப் பேசினார்கள். ஆனாலும் பல வருடங்கள் கழித்து ஒரு நாள் அவனது காலில் விழுந்து வணங்கினார்கள் என்பதை நாம் மறக்கவேண்டாம்.

மற்றவர்களது ஏளனப் பேச்சுக்கள் உங்களைச் சோர்வுக்குள்ளாக்க ஒருபோதும் அனுமதிக்காதீர்கள்; அந்தப் பேச்சுக்களை அலட்சியம் பண்ணுங்கள். அதைக் குப்பைத்தொட்டியில் எறிந்து விடுங்கள். உங்களது பணியில் முழுக்கவனம் செலுத்துங்கள்; பதில் பேசாமல் அமைதியைக் கடைப்பிடியுங்கள். அவர்கள் தானாகவே அழிந்து போவார்கள்.

☆☆☆

8. கவலைகள்

இயேசு "மார்த்தாளே, மார்த்தாளே நீ அநேக காரியங்களைக் குறித்து கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே. மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்'' என்றார் (லூக். 10 : 41,42).

கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? எதை உண்போம், எதைக் குடிப்போம், எதை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள் (மத். 7 : 27, 31).

மனிதகுலத்தின் முதல் எதிரி - கவலை. இந்தக் கவலை என்ற வியாதி யாரையுமே விட்டு வைப்பது கிடையாது. சமுதாயத்தின் எல்லா மட்டத்திலும், எல்லோரையும் எளிதில் தாக்கக் கூடிய ஒரு வியாதி. வேகமாக பரவக்கூடிய ஒரு தொற்று வியாதி. இந்தக் கவலையைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

கவலைப்படாதவர்கள் இந்த உலகத்தில் யாருமே கிடையாது. அரசன் முதல் ஆண்டி வரை, பிரதம மந்திரி முதல் பியூன் வரை எல்லோருமே கவலைப்படுகிறார்கள். பணம் இருக்கிறவன் அதை எப்படிப் பாதுகாப்பது என்று கவலைப்படுகிறான். பணம் இல்லாதவன் அதை எப்படி அடைவது என்று கவலைப்படுகிறான். நிறையப் பிள்ளைகளைப் பெற்றவன், இவ்வளவு பிள்ளைகள் இருக்கிறார்களே என்று கவலைப் படுகிறான். பிள்ளையே இல்லாதவன் ஒரு பிள்ளை கூட எனக்கு இல்லையே என்று கவலைப்படுகிறான். இப்படி நாம் கவலைப் படுவதினால் யாருக்குமே ஒரு பிரயோஜனம் கூட இல்லை - என்று நாம் உணரத் தவறுகிறோம்.

இந்த கவலை என்ற வியாதிக்கு என்ன மருந்து என்று சிந்திப்பதற்கு முன்பு இந்தக் கவலை ஏன், எப்படி, வருகிறது என்று ஆராய்வது நல்லது. சுகவீனமடைந்த நமது சரீரத்தை டாக்டர் சோதித்துப் பார்த்து வியாதி என்ன காரணத்தினால் வந்தது என்பதை நன்கு Diagonose பண்ணிய பின்பு தான் மருந்து கொடுப்பது நல்லது. அது போலவே கவலை என்ற வியாதிக்கு என்ன காரணம் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

கற்பனைக் கவலைகள்

நான் பயந்தது நடந்தது - யோபு

நாம் அடிக்கடி செய்கிற ஒரு தவறு என்ன தெரியுமா? கவலை என்ற கற்பனையில் சிறகடித்துப் பறக்க ஆரம்பித்து விடுகிறோம். இன்னும் பிறக்காத, இல்லாத பிரச்சனைகளை நினைத்து கவலைப்பட்டுக் கலங்குகிறோம். இல்லாததையும், பொல்லாததையும் நினைத்து கதி கலங்கி, கையைப் பிசைந்து கொண்டு கன்னத்தில் கைவைத்துக் கொண்டு உட்கார்ந்து விடுகிறோம். நமது வாழ்க்கையில் நடக்காதவைகள், நடக்கக்கூடாதவைகள் நடந்து விட்டதாகக் கற்பனை செய்து கவலை என்ற கடலில் முழ்கி விடுகிறோம்.

ஒருவன் தன் வயிற்றுக்குள் காகம் இருப்பதாகவும், அது அடிக்கடி கத்துகிறதாகவும் புகார் செய்தானாம். பல டாக்டர்களைப் பார்த்தான். எத்தனையோ டாக்டர்கள் "இது உன்னுடைய கற்பனைதான்; இது உன்னுடைய பிரம்மியம் தான், உண்மையில்லை" என்று சொல்லியும் அவனைத் திருப்திப்படுத்த முடியவில்லை. இவனது தொந்தரவு பொறுக்க முடியாமல் டாக்டர்கள் ஒரு நாடகம் ஆடத் தீர்மானித்தார்கள். இவனுக்கு மயக்க மருந்து கொடுத்து, ஆபரேஷன் தியேட்டருக்குக் கொண்டுபோய் வயிற்றைக் கிழித்து உள்ளே இருந்த காகத்தை எடுப்பது போல நடித்து - மயக்கம் தெளிந்த பின்பு ஒரு காகத்தைக் காண்பித்து - இது தான் உன் வயிற்றுக்குள் இருந்து கொண்டு தொந்தரவு செய்த காகம்; இனி மேல் உன் வயிற்றில் எந்த காகமும் இல்லை," - என்று கூறினார்களாம். அவன் இதைக் கேட்டு, விட்டு, "ஐயோ, தப்பான காகத்தை எடுத்து விட்டீர்களே - உள்ளேயிருப்பது வெள்ளைக்காகம்" என்று கூப்பாடு போட்டானாம்.

இப்படிப்பட்டவர்களைத் திருத்தவே முடியாது. ஒரு வேளை இதை வாசித்து விட்டு நீங்கள் சிரிக்கலாம். ஆனால் இந்த மனிதன் செய்ததைப் போல, பல சமயங்களில் இல்லாததையும், பொல்லாததையும் கற்பனை செய்து கவலைக் கடலில் எத்தனை தரம் நாம் மூழ்கியிருக்கிறோம்? அந்தக் கவலையினால் நமது மனம் எவ்வளவு அலைக்கழிக்கப்பட்டிருக்கிறது? எவ்வளவு மனப்பாரத்தை அநாவசியமாக சுமந்து கொண்டு திரிகிறோம்? இது தேவையா?

உதாரணமாக ஏதோ இரண்டொருதரம் இருமல் வந்திருக்கும்; பல்லில் இருந்து ரத்தம் சளியில் வந்திருக்கும். இதைப் பார்த்தவுடனே நமக்குப் புற்று நோய் வந்துவிட்டது என்று சிலர் எண்ணி அப்படியே இடிந்துபோய் உட்கார்ந்து விடுகிறார்கள். பல சமயங்களில் நமது வாழ்க்கையில் இல்லாத ஒன்றை இருப்பது போல் நாம் கற்பனை செய்வதினால்தான் கவலை உருவாகிறது.

ஆர்தர் ரேங்கு என்பவர் தனது வாழ்க்கையில் அவ்வப்பொழுது வரும் கவலைகளை ஒரு விநோதமான முறையில் கையாளக் கற்றுக்கொண்டார். வாரத்தில் ஒரு நாளை, அதாவது புதன் கிழமையை - அந்த வாரத்தில் வரும் எல்லாக் கவலைகளையும் ஒட்டு மொத்தமாக கையாளவும், பரிசீலிக்கவும் முடிவு செய்தார். எனவே வாரத்தின் மற்ற ஆறு நாட்களில் வரும் கவலைகளையெல்லாம் ஒரு துண்டுத்தாளில் எழுதி ஒரு பெட்டியில் (கவலைப் பெட்டி) போடுவாராம். அவையெல்லாவற்றையும் புதன்கிழமை தான் திறந்து பார்ப்பாராம். ஆனால் அந்த புதன்கிழமை வரும் போது பொதுவாக அவர் எழுதிப் போட்ட எல்லாக் கவலைகளுமே மாயமாய் மறைந்து போயிருக்குமாம். அவரது கற்பனையில் கவலைப்பட்ட எல்லா பிரச்சனைகளுமே தானாகவே தீர்ந்து போயிருக்குமாம்.

இயேசு நம்மைப் பார்த்து விபச்சாரம் செய்யாதிருங்கள் என்று கட்டளையிட்டிருக்கும் போது நாம் விபச்சாரம் செய்தால் அவரது கட்டளையை மீறிய பாவத்தை நாம் செய்ததாக அர்த்தமாகிறது. அதே போல 'கவலைப் படாதீர்கள்' என்று நமக்கு இயேசு கட்டளையிட்டிருக்கும் போது நாம் கவலைப்படுவோமானால், அவரது கட்டளையை மீறிப் பாவம் செய்கிறோம் என்று தானே பொருள். நாம் கவலைப்படும் போது ஆண்டவரை நாம் நம்பவில்லை என்றும், அவர் நமக்கு அளிக்கும் பாதுகாப்பும், பராமரிப்பும் போதுமானதாக இல்லை என்றும் பகிரங்கமாக பறைசாற்றி, அறிக்கையிடுவதற்குச் சமானம். ஒரு காரியத்தைக் குறித்து நாம் கவலைப்படும்போது அதில் அடங்கியிருக்கிற இரண்டு உண்மைகளை நாம் அறிந்து கொள்வது நமக்கு பயனளிக்கும்.

2. நம்மால் மாற்ற முடியாத காரியங்கள் :

முதலாவது நமது வாழ்க்கையில் நடந்துள்ள சில காரியங்களை நம்மால் மாற்ற இயலாது. நம்மால் மாற்ற இயலாத காரியங்களைக் குறித்து நாம் கவலைப் படுவதினால் யாருக்கு என்ன பிரயோஜனம்? உதாரணமாக

உங்களது நெருங்கிய உறவினர் ஒருவர் திடீரென இறந்து விட்டார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அது உங்களை வெகுவாகப் பாதித்திருக்கிறது. அதைக் குறித்துக் கவலைப் படுகிறீர்கள். இதை நம்மால் மாற்ற முடியுமா? நிச்சயமாக முடியாது.

சூரியன் வடக்கே உதிப்பதும், தெற்கே அஸ்தமாவதும் எப்படி இயலாத காரியமோ அதே போலத்தான் உங்களது உறவினர் மீண்டும் உயிரோடு வருவதும் ஒரு இயலாத காரியம். அதைக் குறித்து கவலைப்படுவது அவசியமற்றது மாத்திரமல்ல அர்த்தமற்றதும் கூட. எனவே நம்மால் மாற்ற முடியாததைக் குறித்து கவலைப்படாமல் அதை அப்படியே விட்டு விடுவது புத்திசாலித்தனம்.

3. நம்மால் மாற்றக்கூடிய காரியங்கள்

அடுத்ததாக நமது வாழ்க்கையில் நடந்துள்ள சில காரியங்களை நம்மால் மாற்ற முடியும். உதாரணமாக ஒரு நேர்முகக் தேர்வுக்குக் சென்றீர்கள். அதில் தோல்வியடைந்ததால் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அது உண்மையானால் அந்தத் தோல்வியை வெற்றியாக மாற்றக் கூடிய ஆக்கப் பூர்வமான நடவடிக்கையில் இறங்க வேண்டுமே தவிர கவலை என்ற கடலில் அமிழ்ந்து விடக்கூடாது.

ஒரு வீட்டிற்கு நான் போன போது சுவற்றில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு வாசகம் என் நினைவிற்கு இப்பொழுது வருகிறது. அதை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அந்த வாசகம் இது தான். If I could, I would; But if I can't, I won't நான் மேலே எழுதியிருக்கிற கருத்தின் சாராம்சம் தான் இது:

"உன்னால் எதை மாற்ற இயலுமோ, மாற்ற முடியுமோ, அதை மாற்ற முயற்சிசெய். உன்னால் எதை மாற்ற முடியாதோ, அதை மறந்து விடு. கனவில் கூட அதைக் குறித்து நினைக்காதே; கவலைப்படாதே". சூரியன் கிழக்கே உதிப்பதையும் மேற்கே மறைவதையும் உன்னால் மாற்ற முடியாது. நமது உயரத்தையும், நமது நிறத்தையும் மாற்ற முடியாது. நான் இன்னும் கொஞ்சம் உயரமாக, இன்னும் கொஞ்சம் சிவப்பாக பிறக்கவில்லையே என்று சொல்லிக் கவலைப்படுவது தவறு; முற்றிலும் தவறு; ஒரு வகையில் பார்த்தால் அது மதியீனம். உங்களால் எதை மாற்ற முடியாதோ, அதைப் பற்றி கவலைப்படாதீர்கள். கவலைப்படுவதினால் ஒரு பயனும் இல்லை.

அதனால் தான் இயேசு "கவலைப்படுவதினால் உங்களில் எவன் தன் உயரத்தை ஒரு அங்குலம் கூட்ட முடியும்?" - என்று கேட்கிறார், ஆம்! நம்மால் எதை மாற்ற முடியாதோ, அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

இதற்கு மாறாக, ஒரு வேளை ஒரு பரீட்சையில், ஒரு நேர்முகத் தேர்வில் தோல்வியடைந்து விட்டதாக வைத்துக் கொள்ளுங்கள் இதை உங்களால் நிச்சயம் மாற்ற முடியும். ஏன் இந்தத் தோல்வி என்று ஆராய்ந்து, இன்னும் நன்றாக, கடினமாக படித்து அடுத்த தேர்விற்கு உங்களை ஆயத்தப்படுத்துங்கள். அதை விட்டுவிட்டு, வெறுமனே சமன்கால் போட்டு உட்கார்ந்து கொண்டு கவலைப் படுவதினால் ஒரு பிரயோஜனமுமில்லை.

4. கவலைக்கு மருந்து :

4a. ஆண்டவரது பாதத்தில் அமருதல்

இயேசு மார்த்தாளை நோக்கி, "நீ அநேக காரியங்களைக் குறித்து கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாளோ தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்" (லூக்கா. 10 : 41,42) என்று கூறுகிறார்.

வீட்டிற்கு வந்த விருந்தினருக்கு உணவு ஆயத்தம் செய்வது இயற்கை; ஒரு வீட்டு மரபு. அதில் தவறு எதுவும் கிடையாது. ஆனால் வந்த விருந்தினர் தன்னைப் பாராட்ட வேண்டும்; புகழ வேண்டும் என்பதற்காக நிறைய பதார்த்தங்களைச் செய்ய முயற்சிப்பது தேவையற்றது. இதுதான் மார்த்தாள் செய்த தவறு. தன்னுடைய சகோதரி மரியாள் தனக்கு சமையலறையில் உதவி செய்யச் சொல்லுமாறு இயேசுவிடம் இந்த மார்த்தாள் கேட்கிறாள். வீட்டுக்கு வந்த ஒரு விருந்தினரிடம் புகார் செய்வது கண்ணியமல்ல. தன்னிடம் புகார் செய்த மார்த்தாளுக்கு இயேசு கொடுக்கும் பதில், "நீ அநாவசியமாக அநேகக் காரியங்களைக் குறித்து கவலைப்பட்டு கலங்குகிறாய்; உனக்குத் தேவை என்ன தெரியுமா? பேசாமல் அந்த வேலை அனைத்தையும் விட்டு விட்டு, உன் சகோதரியைப் போல என்பாதத்தில் அமர்ந்து, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேள். இது தான் உன் கவலைக்கு நல்ல மருந்து".

இதை வாசிக்கிற நாம் கூட, இந்த மார்த்தாளைப் போல பல காரியங்களை செய்வதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கலாம். அதன் நிமித்தம் நமக்குப் பல தொல்லைகள், மனப்பாரங்கள் நமக்கு வந்திருக்கக்கூடும். இதிலிருந்து நாம் விடுதலை பெற வேண்டுமானால்

நாம் இயேசுவின் பாதத்தில் அமருவது தான்.

அவர் உங்களை விசாரிக்கிறவராயிருக்கிறபடியால் உங்கள் பாரங்களையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள் (பேது. 5 : 7) என்று பேதுரு ஆலோசனை கூறுகிறார். நம்முடைய மனப்பாரத்தை நாமே சுமக்கக் கூடாது. நமது சுமைதாங்கியாகிய ஆண்டவர் மேல் இறக்கிவைக்க நாம் பழகிக் கொள்ளவேண்டும்.

ஒரு கிராமத்தானைப்பற்றிய கதை உங்களுக்குத் தெரிந்திருக்கும். தலையில் சுமையுடன் நடந்து போய்க் கொண்டிருந்த அந்தக் கிராமத்தானை, காரில் போய்க் கொண்டிருந்த ஒருவர், தனது காரில் ஏறும்படி சொன்னாராம். அதன்படி அவனும் ஏறிக்கொண்டான். கொஞ்ச தூரம் சென்றபின்பு காரை ஓட்டுகிறவர் திரும்பிப் பார்த்த போது, அந்த ஆள் தன் தலையில் சுமையைச் சுமந்து கொண்டே காரில் உட்கார்ந்து இருப்பதை கண்டார். கார் தன்னைமாத்திரம் சுமந்தால் போதும் தனது பார்த்தைத் தானே சுமக்க வேண்டும் என்று அவன் எண்ணினான்.

இந்தக் கிராமத்தானைப் போலத்தான் நாமும் ஆண்டவர் நம்மை சுமந்தால் போதும்; நமது பாரத்தை, கவலையை நாமே சுமந்து கொள்ளலாம் என்று நினைக்கிறோம்.

நமது கவலையை மறப்பதற்கு நல்லதொரு மருந்து நமது கவலையை ஆண்டவர் மேல் வைத்து விடுவது; அவரிடம் சொல்லி விடுவது. ஆங்கிலத்தில் "What a friend we have in Jesus" என்றதொரு அழகான பாடல் உண்டு. இந்தப்பாடலின் கருத்து என்ன தெரியுமா?

ஆண்டவரிடம் நமது கவலைகளைச் சொல்ல நாம் தவறும் போது, அநாவசியமாக நாம் எவ்வளவு வேதனையை அனுபவிக்க நேரிடுகிறது? தேவையற்ற மனப்பாரங்களை எல்லாம் நாம் ஏன் சுமக்கிறோம்?

ஆம்! நமது கவலையைப் போக்கும் முதல் மருந்து நமது கவலையை நமது ஜெபத்தின் மூலமாக ஆண்டவரிடம் தெரிவிப்பது. இதைத்தான் பவுல் அப்போஸ்தலன் இப்படியாக எழுதுகிறார்.

நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்து ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப் படுத்துங்கள்.

அப்பொழுது எல்லாப்புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும். (பிலி. 4 : 6,7)

4b. கவலையின் நிமித்தம் உங்கள் சிந்தனைகளை சிதற விடாதீர்கள்.

மனம் ஒரு குரங்கு என்று கூறுவது எவ்வளவு உண்மை. இந்த மனம் எப்பொழுதுமே ஓய்வு எடுப்பதே கிடையாது. நாம் தூங்கும் போதும் கூட அது Walking-க்கு போய்விடுகிறது. அதனால் தான் நாம் தூங்கும் போது கூட நாம் பல கனவுகளை நாம் காண்கிறோம். இந்த மனதையும், நமது சிந்தனையையும் அநாவசியமாக - தீனாள் ஊர் சுற்றிப் பார்க்க அப்பா அனுமதியில்லாமல் போய் தீட்டுப்பட்டு, அவமானப்பட்டு வந்தது போல - நமது மனதை ஊர் சுற்ற, சில சமயங்களில் உலகமே சுற்ற அனுமதித்து விடுகிறோம். அதனால் தான் அது பல இடங்களுக்கும் சென்று பல சுமைகளைக் கொண்டு வந்து நம்மை பாரப்படுத்தி விடுகிறது.

எல்லா எண்ணங்களையும், சிந்தனைகளையும் இயேசுவின் பாதத்திற்குக்கீழ் கொண்டு வரவேண்டுமென்று வேதம் கூறுகிறது. அதனால் நமது எண்ண அலைகள், சிந்தனை சிறகுகள் இவைகளைக் கட்டுப்படுத்தும் கடிவாளத்தை அதிகாரத்தை ஆண்டவரின் கரத்தில் ஒப்படைப்பது நல்லது.

4c. பறவைகளை, மிருகங்களை கவனித்துப்பாருங்கள்

ஆகாயத்துப் பறவைகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?

காட்டுப்புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்; அவைகள் உழைப்பதுமில்லை; நூற்பதுமில்லை. அற்ப விசுவாசிகளே, இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களை உடுத்துவிப்பது எவ்வளவு நிச்சயம் (மத். 6 : 26-30).

மனிதர்களாகிய நாம் தான் கவலைப்படுகிறோம். பறவைகள், மிருகங்கள் எதிர்காலத்தைப் பற்றியோ வேறு எதைப்பற்றியும் கவலைப்படுவதாக தெரியவில்லை. நாம் கவலைப்படும் போது அல்சர்

என்ற வியாதி வருகிறது. இந்த அல்சர் வியாதியைப்பற்றி ஆராய்ச்சி நடத்த விரும்பிய ஒரு டாக்டர் ஒரு நாயைப் பிடித்து அதைக் கவலைப்படக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கி, அதன் வாயிலாக ஒரு மருந்தைச் சோதிக்க விரும்பினார். ஆனால் அந்த நாயோ கொஞ்சம் கூட கவலைப்பட மறுத்து விட்டதால், இவர் மருந்தை சோதிக்க முடியவில்லை. இறுதியாக அல்சர் வியாதி வருவதற்காக அந்த நாயின் உடம்பில் - அல்சர் ஊசியும் போட்டார். ஆனால் அந்த ஊசியையும் அந்த நாய் பொருட்படுத்தாமல் அதைப்பற்றி ஒரு துளி கூட கவலைப்படாததினால் அந்த நாய்க்கு அல்சர் வியாதியும் வரவில்லை. இறுதியில் தனது ஆராய்ச்சியைக் கைவிட்டார்.

4d. கவலைப்பட நேரமே கிடைக்காதபடி சுறுசுறுப்புடன் உங்கள் வேலையில் ஈடுபடுங்கள்.

அருமையான தேவ பிள்ளையே! உன்னுடைய வாழ்க்கை ஆண்டவரது கரத்தில் பத்திரமாக இருக்கிறது. ஆகாயத்தில் பறக்கும் பட்சிகளைத் தவறாமல் போஷிக்கும் தேவன் உன்னையும் போஷிப்பார்; பராமரிப்பார். கவலைப்படுவதற்கு நேரமே கிடைக்காத அளவிற்கு பகலில் நீ கடுமையாக உழைப்பாயானால் இரவில், எதையும் குறித்து கவலைப்படுவதற்கு முன்னரே நீ நன்றாக உறங்கி விடுவாய். 90 வயது வரை வாழ்ந்த ஒரு பெண்ணிடம் உங்களது நீண்ட ஆயுசு நாட்களின் ரகசியம் என்னவென்று கேட்டதற்கு அந்தப் பெண் கொடுத்த பதில், "நான் வேலை செய்யும் போது நன்றாக கடுமையாக உழைப்பேன்; முடித்து விட்டு உட்காரும்போது ஆயாசமாக உட்காருவேன்; ஏதாவது கவலை என் பக்கத்திலே வந்தால் போதும் எனக்கு உடனே தூக்கம் வந்து அப்படியே தூங்கி விடுவேன்", என்ன அருமையான பதில்.

இயேசு மார்த்தாளின் வீட்டில் இருந்தபோது இவள் கவலைப்பட்டாள். எதற்காக? இயேசுவிற்கு உணவு ஆயத்தம் செய்வதில் தன் சகோதரி மரியாள் தனக்கு உதவி செய்யவில்லை என்ற காரணத்திற்காக. இதற்காக ஏன் கவலைப் படவேண்டும்? இயேசு இவளிடம் உணவையோ சிற்றுண்டியையோ கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லையே. ஏதோ ஒரு சாப்பாடு செய்து அவருக்குக் கொடுத்தால் போதும். இதற்குப் போய் இவள் இவ்வளவு கவலைப்பட்டுக், கலங்க வேண்டிய அவசியமே கிடையாது. இதே போலத்தான் இன்றைக்கும் வீட்டிற்கு யாராவது எதிர்பாரா விருந்தினர் வந்து விட்டால் அதைப்பற்றி ஆத்திரப்படாமல், அவசரப்படாமல்

கொஞ்சமாக இருந்தாலும் அதைப் பகிர்ந்து கொண்டு சாப்பிடப்பழகுவது எல்லோருக்கும் நல்லது.

இன்னும் வராத பிரச்சனைகளுக்கு நாம் செலுத்தும் வட்டி தான் கவலை. கவலை என்பது ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு அதை ஆட்டுவதற்கு சமானம். அந்த நாற்காலி இருந்த இடத்திலேயே தான் இருக்கும். நம்மை எங்குமே கொண்டு செல்லாது. நமது சரீரம் களைப்படைந்தது தான் மிச்சம், மீதி.

ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாமல், முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்.

நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும் (மத். 6 : 31-34).

☆☆☆

9. திடீர் ஆபத்தினால் ஏற்படும் சோர்வு

"ஆபத்துக் காலத்தில் நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் குறுகினது" - (நீதி. 24 : 10)

மனித வாழ்க்கை என்பது சூரியனை வலம் வரும் பூமியைப் போன்றது. நாம் வாழும் இந்த பூமி பல சீதோஷ்ண காலங்களைச் சந்திக்கிறது. கோடைகாலம், மாரிகாலம், வசந்தகாலம், இளவேனிற் காலம், முதுவேனிற் காலம். அதுபோலவே நமது மானிட வாழ்க்கையிலும் நாம் பல சீசன்களை, பல வித்தியாசமான காலச் சூழ்நிலைகளை சந்தித்துத்தான் ஆக வேண்டும். இந்தக் கண்ணோட்டத்தோடு வேதத்தை நாம் வாசிப்போமானால், உற்பத்திக்காலம் (2 ராஜா. 4 : 17), நெருக்கப்படுகிற காலம் (சங். 9 : 9), அனுக்கிரக காலம் (சங். 69 : 13), பூர்வகாலங்கள் (பிர. 1 : 10), நியாயந்தீர்க்கும் காலம் (பிர. 3 : 17) யுத்தத்திற்குப் புறப்படுங்காலம் (IIசாமு. 11 : 1), பலனளிக்கும் காலம் (வெளி. 11 : 18) அறுப்புக் காலம் (வெளி. 14 : 15) என்று பல காலங்களைப் பற்றி வேதத்தில் வாசிக்கிறோம்.

அதுபோலவே நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும், நாம் விரும்புகிறோமோ, விரும்பவில்லையோ, - ஆபத்துக்காலமும் உண்டு, எல்லாவற்றிற்கும் ஒரு காலம் உண்டு என்று எழுதிய சாலமோனின் (பிர. 3 : 1) வார்த்தையின் படி நமது வாழ்க்கையில், (நமது பூமியில் குளிரும், உஷ்ணமும், மழையும், காற்றும் மாறி மாறி வருவது போல) பல வித்தியாசமான சூழ்நிலைகள் நமது வாழ்க்கையில் வரத்தான் செய்யும். அப்படியானால் ஆண்டவர் அனுப்பும் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு ஆவலாய் இருக்கிற நாம் சில வேளைகளில் அவர் அனுப்பும் ஆபத்துக் காலத்தையும் சந்திக்க ஆயத்தமாயிருக்க கற்றுக் கொள்ள வேண்டும்.

நமது வாழ்க்கையில் ஆபத்துக்கள் நமக்குக் கடிதம் போட்டு விட்டோ, தந்தி கொடுத்துவிட்டோ, டெலிபோன் மூலம் முன் அறிவித்து விட்டோ நம்மை நோக்கி வருவதில்லை. திடீரென்றுதான் அவைகள் வருகிறது. இதை நான் எழுதும்போது, எனக்குத் தெரிந்த ஒரு கிறிஸ்தவ நண்பருக்கு அவரது அப்பா தீடீரென ஒரு விபத்தில் இறந்து விட்டார் என்ற செய்தி கிடைத்தது. 50 வயதான தனது தகப்பன் இறந்த செய்தியைக் கேட்ட அந்த இளம்

கிறிஸ்தவ வாலிபனின் உள்ளம் உடைந்து விட்டது. இனிமேல் குடும்பப் பொறுப்பு முழுவதும் அவனது தலையின்மேல் விழுந்து விட்டது.

ஆம்! அருமையான தேவனுடைய பிள்ளையே! உனது, வாழ்க்கையில் ஆபத்துக்காலம் ஒன்று உண்டு; அந்த ஆபத்துக் காலம் வரும்போது அதை அடையாளம் கண்டுகொள்ள நீ பக்குவப் படுவாயானால், அந்த ஆபத்தின் மூலமாக உன் வாழ்க்கையில் ஏற்படப்போகும் பாதிப்பின் அகோரத்தையும், அளவையும் உன்னால் தவிர்க்க முடியாவிட்டாலும் அதைக் குறைக்க முடியும் - என்பதை நீ உணருவது நல்லது.

1. தாவிது சந்தித்த திடீர் ஆபத்து

தாவீதின் வாழ்க்கையில் நடந்த ஒரு ஆபத்தான சம்பவத்தை நாம் ஆராய்வோமானால் நமக்கு மிகவும் உதவியாக இருக்கும் என நம்புகிறேன். அதை I சாமு. 30-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். தாவீதும் அவனோடிருந்த நானூறு பேர்களும் தாங்கள் வாழ்ந்த சிக்லாக் பட்டணத்திற்குத் திரும்பி வந்தபோது அவர்களுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. சிக்லாக் பட்டணத்தின்மேல் அமலேக்கியர் படையெடுத்துவந்து அதில் குடியிருந்த எல்லோரையும் சிறைபிடித்துக் கொண்டு போய்விட்டார்கள். அந்தப் பட்டணத்தையும் அழித்துச் சுட்டெரித்து விட்டார்கள்.

இந்தக் காட்சியைக் கண்ட தாவீதும் அவனோடிருந்தவர்களும் தங்களுக்கு பெலனற்றுப்போகும் வரைக்கும் அழுதார்கள் என்று வேதம் கூறுகிறது. என்ன ஒரு பரிதாபமான சூழ்நிலை. அனைவரது மனைவிகளும், பிள்ளைகளும், உடமைகளும் சடிதியில், பூமி பிளந்து உள்ளே போய்விட்டதுபோல மாயமாய் மறைந்து விட்டன. அவர்கள் உள்ளங்கள் சுக்கு நூறாக உடைந்தது. சோர்வு என்ற சொல் அவர்களது மனநிலையை விவரிக்கப் போதாது. துக்கம் என்ற சாகரத்தில் அவர்கள் மூழ்கிவிட்டார்கள் என்றுதான் கூறவேண்டும்.

ஒருநாள் நான் பஸ்ஸில் பிரயாணம் பண்ணிக்கொண்டு போகும் போது, முந்திய பஸ் ஒன்று விபத்திற்குள்ளாகிவிட்டது. ஒருவர் சாலையில் பிணமாகக் கிடந்தார். அவரது மனைவி அழுததை என்னால் மறக்கவே முடியாது. அப்பெண் தனது துக்கம் தாங்காமல் தனது மார்பிலும், தலையிலும் அடித்துக்கொண்டு அழும் காட்சி உருகாத நெஞ்சையும் உருக்கிவிடும். இப்படிப்பட்ட திடீர்

ஆபத்துக்களை நமது வாழ்க்கையில் நாம் எப்படி சந்திக்கப்போகிறோம்?

1a. கர்த்தருக்குள் தன்னை திடப்படுத்திக் கொண்டான்

தாவீது இந்தச் சூழ்நிலையில் என்ன செய்தார் என்பதை நாம் ஆராய்வது நல்லது. இப்படிப்பட்ட ஒரு பெரிய நெருக்கடியான சூழ்நிலையில், தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக் கொண்டரன் - என்று வேதம் கூறுகிறது. அதுமாத்திரமல்ல, ஆசாரியனைப் பார்த்து ஏபோத்தைக் கொண்டுவரச் சொல்லி, "நான் அந்தக் கொள்ளைக் கூட்டத்தாரைப் பின்தொடரட்டுமா? என்னால் அவர்களைப் பிடிக்க முடியுமா?" என்று ஆண்டவரிடத்தில் விசாரிக்கிறான். இதுதான் உண்மையான தலைவனுக்குரிய அடையாளம். தன்னைப் பின்பற்றுகிற அனைவரும் தன்னைக் கல்லெறியப் பார்க்கிறார்கள் என்பதை அவன் ஒரு பொருட்டாக எண்ணவில்லை அடுத்து என்ன செய்ய வேண்டும்; காலம் கடப்பதற்குமுன் செயல்பட வேண்டும் - என்று அவனது மனம் துடிக்கிறது.

இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலைகளில் நம்மில் பலருக்கு அதிர்ச்சியினாலும், துக்கத்தினாலும் மூளையே வேலை செய்ய மறுத்து, மரத்துவிடும்; ஆனால் தாவீது அப்படிப்பட்டவன் அல்ல. அதனால்தான் அவன் தலைவனாக, ராஜாவாக இருந்தான். ஆண்டவரிடத்தில் விசாரித்தபின்பு, அவன் தனது படையோடு புறப்பட்டுச் சென்று இழந்துபோன பெண்கள், பிள்ளைகள், பொருட்கள் அனைத்தையும் மீட்டுக்கொண்டு வருகிறான். பார்த்தீர்களா? ஒரு பயங்கரமான சூழ்நிலையை தாவீது மாற்றி இழந்த எல்லாவற்றையும் மீண்டும் பெற்றுக் கொள்கிறான்.

1b. தாவிது ஆபத்தை நேருக்குநேர் சந்தித்தான்.

தேவனுடைய பிள்ளையே! உன்னுடைய வாழ்க்கையில் திடீரென ஆபத்துக்களையும் விக்கினங்களையும் நீ சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள், சூழ்நிலைகள் உருவாகுமானால் அதைச் சந்திக்க உன் மனதின் அரையைக் கட்டிக்கொள், விழிப்பாயிரு. மனம் உடைந்து, உன் வாழ்க்கைப் படகு ஆபத்துக்குள்ளாகாத படிக்கு எச்சரிக்கையாயிரு. அதற்கு மாறாக அவற்றைச் சந்தித்து எதிர்நீச்சல் போடக் கற்றுக்கொள். உன் வாழ்க்கையில் அவ்வப்பொழுது நீ சந்திக்கப்போகும் ஆபத்துக்களையும், நாசமோசங்களையும் பார்த்து

பயந்து ஓடி, அவைகள் உன்னைத் துரத்த அனுமதியாதே.

அதற்குமாறாக, தாவீது சிங்கத்தையும், கரடியையும் நேர்முகமாகச் சந்தித்து, அவைகளின் வாய்களையும், தாடைகளையும் கிழித்ததுபோல, நீயும் உன் ஆபத்துக்களை நேருக்கு நேராகச் சந்தித்து, அவைகளைப் பார்த்துச் சிரிக்கக் கற்றுக் கொள். சாதாரணமாக அல்ல, வாய்விட்டு கலகலவென்று சிரிக்கக் கற்றுக்கொள்; அவைகளைப் பார்த்து நீ பரியாசம் பண்ணு. அப்பொழுது அவைகள் உன்னைவிட்டு ஓடிப்போகும்.

உம்மாலே ஒரு சேனைக்குள் பாய்ந்து செல்வேன், என் தேவனாலே ஒரு மதிலையும் தாண்டுவேன் - என்று தாவீதைப் போல நீ கூறலாம். நமது வாழ்க்கை சாதாரணமாக, சலனம் எதுவுமில்லாமல், சீராக ஓடிக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் நமக்கும் மற்றவர்களுக்கும் அவ்வளவு வித்தியாசம் தெரியாது. ஆனால் ஆபத்து வரும்போது தான் ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கைக்கும் மற்றவர்களது வாழ்க்கைக்கும் உள்ள வித்தியாசம் வெளிப்படுகிறது.

1c. கர்த்தரை எல்லாக்காலத்திலும் துதிக்கக் கற்றுக்கொள்

தாவீதின் வெற்றிக்கு இன்னொரு ரகசியம் சங். 34 : 1-ல் காணப்படுகிறது.

"கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்".

ஆம்! நாம் சந்தோஷமாக இருக்கும் காலத்தில் மாத்திரமல்ல; நாம் சோதனைகளை, வேதனைகளை, ஆபத்துக்களைச் சந்திக்கும் காலத்திலும் ஆண்டவரைத் துதிக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு கிறிஸ்தவ விசுவாசி தனது இல்லத்தில் ஜெபக்கூட்டம் நடத்தி, ஆண்டவரைத் துதித்துப்பாடி சந்தோஷமாக வாழ்ந்து வந்தார். ஆனால் ஒருநாள் ஓடி ஆடி விளையாடிக்கொண்டிருந்த அவரது மகன் திடீரென இறந்துவிட்டான். இதை அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. ஆண்டவரைத் துதிப்பதையும், பாடுவதையும், ஜெபக்கூட்டத்தையும் பலமாதங்களாக நிறுத்திவிட்டார்.

இதைக் கண்ட கிறிஸ்துவை அறியாத பக்கத்து வீட்டுக்காரர், ''சந்தோஷத்தில்தான் இந்தக் கிறிஸ்தவர் நம்மைக் காட்டிலும் வித்தியாசமுள்ளவராய் இருக்கிறார். ஆனால் துக்கத்தில், ஆபத்தில் இவர் நம்மைப் போலத்தான் இருக்கிறார். வித்தியாசமே இல்லை" - என்று கூறினாராம். இதைக் கேட்ட இந்த விசுவாசி, தனது தவறை உணர்ந்து, தனது துக்கத்தை மறந்து, மீண்டும் ஆண்டவரைத் துதிக்கவும், பாடவும், ஜெபக்கூட்டம் நடத்தவும் தொடங்கினார். அதைப் பார்த்த பின்புதான் பக்கத்து விட்டுக்காரர், இப்பொழுதுதான் இவர் ஒரு உண்மையான கிறிஸ்தவர் என்பதை அறிகிறேன் என்று கூறினாராம்.

தேவனுடைய பிள்ளையே! நீ ஒரு யூத பால சிங்கம்! தேவன் உனக்கு காண்டாமிருகத்திற்குரிய பெலத்தைக் கொடுக்க விரும்புகிறார். "உனக்கிருக்கும் இந்த பெலத்தோடே புறப்பட்டுப் போ" என்று கிதியோனைப் பார்த்துச் சொன்ன ஆண்டவர் உன்னையும் பார்த்துக் கூறுகிறார். "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு" - என்று பவுலைப் போல நீயும் டார்ஜான் குரல் எழுப்பு. நீ ஆபத்துக்களையும், அபாயங்களையும் துச்சமென மதிக்கக் கற்றுக்கொள். துணிந்தவனுக்குத் துக்கமில்லை. கோழைகள் அடிக்கடி சாவார்கள். தைரியசாலிகள் ஒரேஒருமுறை சாவார்கள். ஆனால் மரணத்தை வென்ற இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிற நீயும் நானும் ஒருமுறைகூட சாவது கிடையாது.

பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதிதேவன் சோர்ந்து போவதுமில்லை, இளைப்படைவதுமில்லை.

சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து சத்துவமில்லாதவனுக்கு சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார்.

இளைஞர் இளைப்படைந்து சோர்ந்து போவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுபெலன் அடைந்து கழுகுகளைப்போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; ஓடினாலும் இளைப்படைய-மாட்டார்கள், நடந்தாலும் சோர்ந்து போகமாட்டார்கள். (ஏசா.. 40 : 28-31)

2. யோசபாத் ராஜாவிற்கு வந்த திடீர் ஆபத்து

யூதாவின் ராஜாவாகிய யோசபாத்திற்கு திடீரென ஒரு ஆபத்து வந்தது (II நாளா. 20 : 1 - 26). மூன்று தேசத்து ராஜாக்கள் அவனுக்கு விரோதமாக

படையெடுத்து வந்து விட்டார்கள். அப்பொழுது அவன் கர்த்தரை தேடுவதற்கு ஒருமுகப்பட்டு யூதா தேசமெங்கும் உபவாசத்தை அறிவித்தான். பின்பு யுத்த களத்தை நோக்கி அவனது படை புறப்பட்டுச் சென்றபோது, முதலாவது பாடகர் குழுவை நிறுத்தி "கர்த்தரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது" என்று பாடச் சொன்னான். அப்படி அந்தப் பாடகர்குழு பாடித் துதிக்க ஆரம்பித்தபோது ஒரு மாபெரும் அற்புதம் நிகழ்ந்தது. எதிரிகளின் மத்தியில் பெரிய குழப்பம் நிலவி, அதன் விளைவாக அவர்கள் ஒருவரையொருவர் கொன்று எல்லோரும் பிணமாகக் கிடந்தார்கள்.

இந்த அற்புதம் எப்படி நடந்தது? வேதத்தை நாம் வாசிப்போமானால் இதற்கு 3 காரணங்கள் இருந்தன என்பதை நாம் விளங்கிக் கொள்ளலாம். திடீர் ஆபத்து வந்த போது இந்த யோசபாத் என்ற ராஜா ஆண்டவரை நோக்கி ஜெபிக்கிறான், உபவாசம் எடுக்கிறான், மூன்றாவது ஆண்டவரைத் துதிக்கிறான்.

ஒரு முறை எனது மகன் 7 வயதாக இருந்தபோது - நான் ஒரு கூட்டத்தை ஒழுங்கு பண்ணுவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்த சமயத்தில் அவனுக்கு திடீரென மூச்சுவிட முடியாமல் கஷ்டப்பட்டான். எனக்கும் என் மனைவிக்கும் என்ன செய்வது என்று புரியவில்லை. உடனே அவன் மேல் கைவைத்து ஜெபிக்க ஆரம்பித்தோம். சிறிது நேரம் ஜெபித்த பின்பு அவனுக்கு விடுதலை கிடைத்தது. ஆபத்து வரும்போது நாம் ஜெபம் பண்ணினால், ஆண்டவர் நிச்சயம் விடுதலை கொடுப்பார்.

3. ஆபத்தைச் சந்திக்கும் போது யோசபாத் ராஜா ஆண்டவரைத் துதித்தான்.

அடுத்ததாக இந்த யோசபாத் ராஜாவின் தலைமையில் நடந்த இன்னொரு விநோதமான காரியம். யுத்தக் களத்திற்குப் படைகளோடு புறப்பட்டுப் போகும்போது ஆண்டவரைத் துதிக்கும் பாடகர் குழுவை முதலாவது அனுப்பினான், அவர்கள் ஆண்டவரை துதித்த போது ஒரு பெரிய வெற்றி கிடைத்தது.

ஆம்! ஆண்டவரை நாம் துதிக்கும் போது நமது ஆபத்திலிருந்து ஆண்டவர் உதவி செய்கிறார். எனக்கு ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. சரீரம் முழுவதும்

வேர்வையினால் நனைந்து விட்டது. சரீரம் ஜில் என்று ஆகிவிட்டது. அந்த சமயத்தில் - மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கும் வேளையில் என் மனைவி ஆண்டவரை ஸ்தோத்தரிக்க ஆரம்பித்தாள் - நானும் ஆண்டவரை ஸ்தோத்தரிக்க ஆரம்பித்தேன் - அப்படி ஸ்தோத்தரித்ததனால் மரணப் பள்ளத்தாக்கிலிருந்து ஆண்டவர் என்னை மீட்டெடுத்தார்.

இதை வாசிக்கிற அருமையான சகோதரனே! உன்னுடைய வாழ்க்கையிலும் இது போன்ற ஆபத்துக்களை சந்திக்கும் வேளையில் நீ ஜெபிக்கவும், ஆண்டவரை துதிக்கவும் மறந்து போகாதே; அப்படி நீ செய்வாயானால் யோசபாத் ராஜாவிற்கும், எனக்கும் உதவி செய்த தேவன் நிச்சயமாக உனக்கும் உதவி செய்வார் என்பதில் சந்தேகமில்லை.

4. ஆபத்தின் அழுத்தத்திற்கு இலக்காகி விடாதீர்கள்.

நமது வாழ்க்கையில் திடீரென ஆபத்தான சூழ்நிலை உருவாகக்கூடும், நமக்கு அன்பானவர்கள் - நமது மனைவி, கணவன், பிள்ளை, நெருங்கிய நண்பர் ஒரு விபத்தில் சிக்கி மரிக்கக்கூடும். வியாபாரத்தில் பல லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படக்கூடும். இவற்றை சமாளிக்க நாம் எப்பொழுதும் தயார் நிலையில் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட ஆபத்துக்கள், விக்கினங்கள் நம்மைச் சந்திக்கும் போது நாம் அந்த ஆபத்தின் அழுத்தத்தில் அமிழ்ந்து போய் விடக்கூடாது.

இதை எழுதும் போது ஒரு கிறிஸ்தவ விசுவாசியின் குடும்பத்தில் நடந்த ஒரு சோக சம்பவம் என் நினைவிற்கு வருகிறது. இயேசுவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட அந்த வாலிபனுக்கு அடுத்தநாள் காலையில் அவனது வீட்டில் திருமணம். முந்தின இரவு சென்னையிலிருந்து புறப்பட்டு தனது வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்த அவனது கார் திடீரென விபத்தில் சிக்கி, அந்த இடத்திலேயே அவன் மரித்துப் போனான். அடுத்தநாள் காலையில் தனது மகனின் திருமண ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்த அவனது அப்பாவிடம் போலீஸ் அதிகாரி சென்று மகன் விபத்தில் இறந்து போன செய்தியை அறிவித்தார். திருமண வீடு துக்க வீடாக மாறியது. அந்தத் தகப்பனின் உள்ளம் எப்படி உடைந்து போயிருக்கும். ஆனாலும் அவர்கள் கிறிஸ்துவை நம்பி விசுவாசித்த காரணத்தினால் அதை அக்குடும்பம் தாங்கிக் கொண்டது. அந்த வாலி

பனின் சகோதரி இச்சம்பவத்தை ஒரு கைப்பிரதியாக வெளியிட்டு தன்தம்பி எப்படி ஆண்டவரைச் சந்திப்பதற்கு எப்பொழுதும் ஆயத்தமாயிருந்தானோ, அதுபோல நாம் ஒவ்வொருவும் இயேசுவை ஏற்றுக்கொண்டு அவரைச் சந்திக்க ஆயத்தமாயிருக்க வேண்டும் - என்ற செய்தியை வெளியிட்டார்கள்.

5. ஆபத்துக் காலத்தில் ஆண்டவரை நோக்கிக் கூப்பிடு

ஆபத்துக்காலத்திலே என்னை நோக்கிக் கூப்பிடு; அப்பொழுது நான் உனக்குப் பதில் கொடுத்து, "நீ அறியாததும், உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களைச் செய்வேன்" - என்று ஆண்டவர் நமக்கு வாக்குக் கொடுக்கிறார். அப்படியானால் நமக்கு ஆபத்துக்கள் வரும்போது நாம் மனிதர்களையோ, சூழ்நிலைகளையோ பார்க்காதபடிக்கு, உடனே ஆண்டவரை நோக்கி நாம் பார்க்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நமக்கு ஒரு மிகப்பெரிய ஆபத்து வரும்போது, நமக்குப் பிரியமானவர்கள், நாம் அதிகமாக நேசிக்கிறவர்கள் நம்மோடு இருக்கவேண்டுமென்று நம் மனம் ஏங்குவது இயற்கை. எந்த அளவிற்கு ஆபத்து அதிகமாக இருக்கிறதோ, அந்த அளவிற்கு நமக்கு நெருக்கமானவர்கள் நமக்கு அருகில் இருக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம், இதே கருத்தை இன்னொரு கோணத்தில் பார்ப்போமானால் நமக்கு ஆபத்து வரும்போது யாருடைய உதவியை நாடுகிறோமோ, அவர்கள் மேல் தான் நாம் அதிகமாக அன்பு, பாசம் வைத்திருக்கிறோம் என்று பொருள். மற்ற எல்லாரைப் பார்க்கிலும் ஆண்டவர் மேல் தான் அதிகமாக அன்பும் நம்பிக்கையும் வைத்திருக்கிறோம் என்பது உண்மையானால் ஆபத்து வந்தவுடன் அவரைத்தான் நாம் நோக்கிப் பார்க்க வேண்டும்.

6. ஆபத்து வரும்போது நாம் செய்ய வேண்டியவைகள்

6a. ஆண்டவரை நோக்கிக் கூப்பிடுங்கள்

தாவீது தனக்கு ஆபத்து வந்தவுடன் கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக் கொண்டான். அவரை நோக்கி ஜெபித்தான். யோசபாத் என்ற ராஜாவும் அதைத்தான் செய்தான். யோனா கடலில் மீனின் வயிற்றுக்குள். இருந்தபோது ஆண்டவரை நோக்கிக் கூப்பிட்டான். தம்மை நோக்கிக்

கூப்பிடுகிறவர்களுக்கு, உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிறவர்களுக்கு கர்த்தர் சமீபமாய் இருக்கிறார். "தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும்" என்று இயேசுவை நோக்கி ஒரு குருடன் அபயக்குரல் எழுப்பினான். கூட இருந்த மற்றவர்களும், இயேசுவின் சீஷர்களும் அவனை அதட்டினார்கள். ஆனாலும் இவன் உரத்த சத்தமாய் "தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்" என்று கதறிய போது, இயேசு அவனது கூக்குரலைக்கேட்டு, அவனருகில் வந்து அவனைத் தொட்டு சுகமாக்கினார்.

6b. அடுத்து என்ன செய்ய வேண்டுமென்று யோசித்து திட்டமிடுங்கள்

திடீர் ஆபத்தை நாம் சந்திக்கும் போது நமது மூளை உறைந்து போய் வேலை செய்ய மறுக்கிறது. இதை நாம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. இந்திராகாந்தி அவர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டவுடன், ஒரு மணி நேரம் குழப்பத்தில் வீணடிக்கப்பட்டதாம். அந்த ஒரு மணிநேரம் எவ்வளவு முக்கியமான நேரம். அதில் அநேகரது மூளை சரியாக வேலை செய்யாமல், சரியாக யோசிக்க, திட்டமிடத் தவறிய காரணத்தால் ஆஸ்பத்திரிக்கு போகும் வழியிலேயே அவர்களது உயிர் பிரிந்து விட்டது.

ஆபத்தைச் சந்தித்தவுடன் சிலரது மூளை வேலை செய்வது கிடையாது. ஆனால் சிலரது மூளை நன்றாக வேலை செய்யும். 25 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு உண்மைச் சம்பவம் என் நினைவிற்கு வருகிறது. ஒரு மிஷினெரி ஊழியத்தின் அலுவலகத்தில் வேலை செய்த ஒரு வாலிபனை அந்த ஊழியத்தை எதிர்த்த சிலர் இரவில் வந்து வாயை அடைத்து தூக்கில் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அடுத்த நாள் அலுவலகத்திற்கு வந்த 3 பேர்கள் இக்காட்சியைக் கண்டவுடன் அதிர்ச்சியில் 2 பேர்கள் ஓடிவிட்டார்கள். ஆனால் ஒருவர் தைரியசாலி. உடனே ஒரு மேஜையைப் போட்டு அவரை இறக்கி, முதல் உதவி செய்து, டாக்டரிடம் கொண்டுபோய் எப்படியோ உயிரைக் காப்பாற்றிவிட்டார். இவரும் அந்த அதிர்ச்சியில் ஓடிப்போயிருப்பாரானால் ஒரு உயிரை இழந்திருப்போம்.

அடுத்த முறை ஏதாவது ஒரு ஆபத்தான சூழ்நிலையை நீங்கள் சந்திக்க நேரிடும் போது, இதை மனதில் வைத்துக் கொண்டு, உன் மூளையை நன்றாக உபயோகப்படுத்தி சிந்திக்க முற்படு. செயல் படாமல்

கையைப் பிசைந்து கொண்டு நீ உட்காரும் ஒவ்வொரு நிமிடமும் ஏற்கனவே வந்துவிட்ட ஆபத்திற்கு வட்டி செலுத்துகிறாய் என்பதை நினைவிற்கொண்டு, வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல செயலில் இறங்கிவிடு.

6c. ஆபத்து வரும்போது ஆண்டவரைத் துதிக்கக் கற்றுக்கொள்

ஆபத்து வரும்போது ஆண்டவரைத் துதிப்பது யோசபாத் ராஜா நமக்குக் கற்றுக் கொடுத்த சூத்திரம் என்று சொன்னால் அது மிகையாகாது. லட்சக்கணக்கான எதிரிகள் தன்னைச் சூழ்ந்து கொண்டபோது, அவர்களைச் சந்திக்க படைக்கு முன்பு முதலாவது பாடகர் குழுவை அனுப்புகிறான். அவர்கள் ஆண்டவரைத் துதித்தபோது ஒரு பெரிய வெற்றி அவனுக்குக் கிடைத்தது.

நாம் ஆண்டவரை துதிக்கும் போது, மனரீதியாக என்ன நடக்கிறது தெரியுமா? ஆண்டவரைத் துதிப்பது, நமக்கு நேரிட்ட ஆபத்தைப் பார்த்து நாம் சிரிப்பதற்குச் சமானம், ஆபத்தைப் பார்த்து நாம் பயப்படுவதற்குப் பதிலாக, ஆபத்து நம்மைப் பார்த்துப் பயப்பட ஆரம்பிக்கும். இது தான் நமக்கு ஏற்பட்ட ஆபத்தின் மேல் வெற்றி கொள்ள நாம் எடுக்கும் முதல்படி.

நான் கனடாவில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் போது எனக்குத் திடீரென ஒரு நாள் மாரடைப்பினால் தாக்கப்பட்டேன். அந்த இக்கட்டான வேளையில், உண்மையாகவே நான் மரண இருளின் பள்ளத்தாக்கைக் கடந்து கொண்டிருந்தேன். அந்த மரண தருவாயில் என் மனைவி என் கையைப் பிடித்துக் கொண்டு ஆண்டவரை துதிக்க ஆரம்பித்தாள்; உடனே நானும் ஆண்டவரைத் துதிக்க ஆரம்பித்தேன். இதை நான் இங்கு சாட்சியாக எழுதுகிறேன். இப்படிப்பட்ட ஆபத்து வேளையிலும் நாம் ஆண்டவரைத் துதிக்க மறக்கக் கூடாது.

6d. திட்டமிட்ட பின்பு உடனே செயல்படுங்கள்.

தாவீது சிக்லாக் பட்டணத்தில் ஒரு பெரிய ஆபத்தைச் சந்தித்த பின்பு, ஆண்டவரை நோக்கி ஜெபிக்கிறான். பின்பு உடனே அடுத்து என்ன செய்ய வேண்டும்; எதிரிகளைப் பின் தொடரலாமா என்று கேட்டு,

உடனே செயலில் இறங்குகிறான்.

ஆபத்து என்ற மின்சாரம் நம்மைத் தாக்காமல் இருக்க வேண்டுமானால் ஆண்டவரைத் துதிக்கும் துதி என்ற Insulator-ஐ பாதுகாப்பு உறையை துதியின் வஸ்திரத்தை நாம் அணிந்து கொள்ள வேண்டும். தன்னுடைய 12 வயது மகள் திடீரென்று இறந்த செய்தியைக் கேட்ட ஒரு தாய் உடனே 5 நிமிடங்கள் பரிசுத்த ஆவியில் நிறைந்து அந்நிய பாஷையில் பேசினார்களாம். பின்பு தன் பிள்ளைக்காக அழுதார்கள்; புலம்பினார்கள். ஆனால் ஆண்டவரைத் துதித்த துதி, அந்த அதிர்ச்சி அவர்களை மனரீதியாக தாக்காமல் இருக்கும் பாதுகாப்புக் கவசமாக மாறியது. என்னுடைய கல்லூரியில் வேலைபார்த்த ஒரு Attender - அவனது மனைவி இறந்த அதிர்ச்சியில் மனரீதியாக பாதிக்கப்பட்டு - ரேடியோ, டேப்ரெக்கார்டர் - எதையும் ரிப்பேர் செய்வதில் மிகத் திறமை படைத்தவன் - இப்பொழுது பிரமை பிடித்தவன் போல் தோற்றமளிக்கிறான். ஏன்? அந்த ஆபத்தின் அதிர்ச்சி அவனைத் தாக்கி விட்டது.

நமது வாழ்க்கையில் திடீரென ஏற்படும் ஆபத்துக்களை - ஒரு சவாலாக எடுத்துக் கொள்ளுங்கள். அவற்றை நேரடியாக, தைரியமாகச் சந்தியுங்கள். அதைப் பார்த்து பயந்து ஓடாதீர்கள்; அப்படி ஓடினால் அது உங்களை விடாமல் துரத்தும். அதற்குமாறாக அதை நேருக்கு நேராகச் சந்தியுங்கள் ; தைரியம் கொள்ளுங்கள். ஆண்டவரின் அனுமதியில்லாமல் எதுவும் நடக்கவில்லை - என்று அறிந்து கொள்ளுங்கள். அந்த ஆபத்தை வாழ்க்கையின் ஒரு சவாலாக எடுத்துக் கொள்; அந்த சவாலை தைரியமாகச் சந்திக்க உன்னை எப்பொழுதும் தயார் நிலையில் வைத்துக்கொள்.

☆☆☆

10. எலியாவிற்கு ஏற்பட்ட சோர்வு

எலியா வனாந்தரத்தில் ஒரு நாள் பிரயாணம் பண்ணி, ஒரு சூரைச் செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று கோரி: போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும் - என்று சொல்லி சூரைச் செடியின் கீழ் படுத்து உறங்கினான் (I இராஜா. 19 : 4).

யோனாவிற்கு ஒரு ஆமணக்குச் செடி இருக்குமானால் எலியாவிற்கு ஒரு சூரைச்செடி இருந்தது. 'மனச்சோர்வு' என்ற தலைப்பில் உள்ள செய்தியில் எலியாவிற்கு வந்த சோர்வைப்பற்றிக் குறிப்பிடாவிட்டால் அந்தச் செய்தி முற்றுப் பெறாது. பண ஆசைக்கு ஒரு பிலேயாம்; பொருளாசைக்கு ஓர் சவுல்; விபச்சாரத்திற்கு ஒரு தாவீது; மறுதலித்தலுக்கு ஒரு பேதுரு; அது போல மனச்சோர்விற்கு ஒரு எலியா. அப்படியானால் எலியாவின் மனச்சோர்வையும் அந்த மனச்சோர்வை உருவாக்கிய சூழ்நிலையையும் நாம் ஆராய்வோமானால், பல நல்ல பாடங்களை நாம் கற்றுக் கொள்ள முடியும்.

இந்த எலியா, ஆகாப் என்ற சிங்கத்தை அதன் குகையிலே சந்தித்தவன், ஆகாபின் அரண்மனைக்குள் நுழைந்து, "என் வார்த்தையின் படியே அல்லாமல் இன்னும் 3½ வருடங்களுக்கு இந்த தேசத்தில் பனியும் பெய்யாது; மழையும் பெய்யாது" - என்று தீர்க்கதரிசனம் உரைத்தவன். சரியாக 3½ ஆண்டுகள் இந்த ஆகாபின் கழுகுக் கண்களுக்கு தப்பி தலைமறைவாக வாழ்ந்தவன்; இப்பொழுது தன்னை ஆகாபிற்கு முன்பாக வெளிப்படுத்தினான்; சூரைச் செடியில் சோர்ந்து போய் உட்காருவதற்கு 2 நாளுக்கு முன்பு தான் கர்மேல் பர்வதத்தின் உச்சியிலே நின்று கொண்டு "பாகால் தெய்வமா? யெகோவா தெய்வமா? என்று சவால் விட்டு இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடக்க வேண்டாம்" என்று சிங்கத்தைப் போல கர்ஜித்தவன். அப்படிப்பட்ட ஒரு தைரியமுள்ள தீர்க்கதரிசி ஏன் இப்பொழுது எலியைப் போல பயந்து கொண்டு ஓடுகிறான்? ஒரு நாள் வானத்திலிருந்து அக்கினியையும் அடுத்த நாள் அதே வானத்திலிருந்து மழையையும் வரவழைக்கக் கூடிய வல்லமை படைத்த மனிதன் ஏன் இப்பொழுது புறமுதுகு காட்டி ஓடிக் கொண்டிருக்கிறான்?

1. எலியாவின் இரண்டு பகுதிகள்.

மேலே நான் கேட்டிருக்கிற எல்லாக் கேள்விகளுக்கும் ஒரு எளிதான, சாதாரண பதில் உண்டு. அது என்ன தெரியுமா? அவனது மனச்சோர்வு என்ற வியாதி தான் அதற்குக் காரணம். ஒரு மனிதனுடைய வாழ்க்கையை நாம் ஆராய்வோமானால் அவனுக்குள் 2 அல்லது 3 வித்தியாசமான தன்மைகள், வேறுபட்ட குணங்கள் இருப்பதை நாம் காண முடியும். அது போலத்தான் இந்த எலியாவின் வாழ்க்கையிலும் சில முரண்பாடுகளையும் நாம் காண்கிறோம்.

அவனது முதல் பகுதி - நல்ல பகுதி - கர்மேல் பர்வதத்தின் மேல் ஆண்டவருக்காக வைராக்கியமாகப் போராடுகிறான். அவருக்காக பிரகாசமாக ஜொலிக்கிறான். இது தான் அவனது உண்மையான பகுதி. ஆண்டவர் விரும்பும் பகுதி.

ஆனால் அவனுக்குள் இன்னொரு பகுதியும் இருப்பதை நம்மில் அநேகர் பார்க்கத் தவறுகிறோம். அது தான் அவனது பெலவீனமான பகுதி. மறைந்திருக்கும் பகுதி. சோர்வு என்ற கிருமி ஒட்டிக்கொண்டவுடன் அக்கிருமி கருவாகி, உருவாகி வெளிப்படும் ஒரு கோளாறு நிறைந்த பகுதி.

சிங்கமாயிருந்த எலியா எப்படி எலியாக உருவெடுத்தான் என்பதை நாம் அறிந்து கொள்வது நல்லது. எலியாவிற்கு சோர்வு எப்படி வந்தது என்பதை ஆராய்வோம்.

எலியாவின் சோர்வுக்குக் காரணம் என்ன? யார் அதற்குக் காரணகர்த்தா? இதற்கு விடை காண்பது மிக சுலபம். இஸ்ரவேல் இராஜாவாகிய ஆகாபின் மனைவி யேசபேல்தான் காரணம். குறிப்பாக அவள் அனுப்பியிருந்த ஒரு பயமுறுத்தல் கடிதத்தைப் படித்து விட்டுத்தான், இந்த எலியா, பூனையைக் கண்டு எலி ஓடுவது போல, ஓடுகிறான். பொதுவாக மனித வாழ்க்கையில் புயலுக்குப் பின் அமைதியும், அமைதிக்குப் பின் புயலும் மாறி மாறி வருவது இயற்கை. அதுபோலவே ஒரு மாபெரும் வெற்றிக்குப்பின் ஒரு படுதோல்வி ஏற்படும். மிக தைரியமான ஒரு வீரச்செயலுக்குப் பின்பு பொதுவாக அடுத்து ஒரு கோழைத்தனமான செயலை நாம் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும். அதுபோலவே கர்மேல் பர்வதத்தின் உச்சியில் ஆண்டவருக்காக ஒரு மாபெரும் சாதனையை இவன் படைத்தான். 400 பாகால் தீர்க்கதரிசிகளுக்கு

முன்பாக அக்கினியை வானத்திலிருந்து வரவழைத்து யேகோவா தெய்வம்தான் உண்மையான தெய்வம் என்பதை நிருபித்தான்.

நமது வாழ்க்கையில் தோல்வி கிடைக்கும் போதுகூட ஜாக்கிரதையாக இருக்க அவசியமில்லை; ஆனால் ஒரு வெற்றி அதுவும் மிகப்பெரிய வெற்றி கிடைக்கும்போது நாம் மிக எச்சரிப்புடனும் விழிப்புடனும் இருக்க வேண்டும். ஏனெனில் வெற்றி கிடைத்தபின் கர்வம், பெருமை தலைக்கு ஏறும்; அந்த வெற்றியில் மனம் பூரிப்படைந்து அதில் மிதக்க ஆரம்பிப்போம். நாம் மெத்தனத்தோடு இருக்கிற சமயம்தான் (Most vulnerable time for Devil's attack) பிசாசு நம்மை பள்ளத்தில் தள்ளும் நேரம். இந்த உண்மையை எலியா மறந்து விட்டான். அதன் விளைவு - யேசபேல் இராணியின் மிரட்டலுக்குப் பயந்து ஓடுகிறான் - தலைதெறிக்க ஓடுகிறான் - வேலைக்காரனையும் விட்டுவிட்டு ஓடுகிறான்; சிங்கம்போல் கர்மேல் பர்வதத்தில் கர்ஜித்து டார்சான் குரல் எழுப்பியவன் இப்பொழுது உயிருக்குப் பயந்து ஓடும் காட்சி சற்று விநோதமாக இருக்கிறது.

2. எதிரியைக்குறித்த பயம்

எலியா உயிருக்குப் பயந்து ஓடுவதின் முதல் முக்கிய காரணம் - மனித பயம் - மன்னிக்கவும் - எலியாவைப் பொறுத்த வரையில் - மனுஷி பயம். மனித பயம் கண்ணியை வரவழைக்கும் என்று வேதம் கூறுகிறது (நீதி. 29 : 25). ஆம்! நமது வாழ்க்கையில் கூட எதைக் குறித்தாவது பயம்வரும் போது பயத்தின் தம்பியாகிய 'சோர்வும்' வந்து விடுகிறது. சோர்வை உண்டாக்கும் இன்னொரு வியாதி 'பயமுறுத்தல்'. யேசபேல் இராணியின் பயமுறுத்தலுக்குப் பயந்து எலியா ஓடுகிறான். சூரைச் செடியின் அடியில் உட்கார்ந்து என் உயிரை எடுத்துப்போடும் என்று ஜெபிக்கிறான். ஆனாலும் இன்னும் அவன் சாகவில்லை. 3,800 ஆண்டுகள் ஆகியும் இன்னும் உயிரோடுதான் இருக்கிறான் என்பது குறிப்பிடத்தக்கது.

பயம் ஒரு மனிதனுக்குள் வந்துவிட்டால் அவனது தனித்திறமைகள், தாலந்துகள் மங்கி, மறைந்து உறைந்து போகிறது. தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் எந்தச் சூழ்நிலையிலும் தைரியமிழக்கவோ, பயத்திற்கும் பீதிக்கும் இடம் கொடுக்கவோ கூடாது. வருவது வரட்டும் என்ற மனோபலத்தோடும் பரிசுத்த ஆவியின் வல்லமையோடும் எதிர்ப்புகள் மத்தியில் எதிர்நீச்சல் போடக் கற்றுக் கொள்ள வேண்டும். எலியா மூலமாக இராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்ட யெகூ

என்பவனால் இந்த யேசபேல் என்ற இராணி கொல்லப்படப் போகிறாள் - என்பதை எலியா அறிந்திருந்தானானால் அவளுக்கு இவன் இவ்வளவு பயப்பட அவசியமேயில்லை. சில சமயங்களில் பயப்பட அவசியமே இல்லாத ஒரு விஷயத்திற்காக நாம் பயப்படுகிறோம். செங்கடலைக் கடக்கும் வேளையில் எகிப்தியரைக் கண்ட இஸ்ரவேல் ஜனங்கள் பயந்தார்கள். ஆனால் அந்தச் சமயத்தில் மோசே, "இன்று நீங்கள் காணும் எகிப்தியரை என்றுமே இனிப் பார்க்க மாட்டீர்கள்" என்று கூறி உற்சாகப்படுத்துகிறார். யோசபாத் இராஜா இலட்சக்கணக்கான எதிரிகளைக் கண்டு பயந்தபோது ஒரு தீர்க்கதரிசி, "நீங்கள் பயப்பட வேண்டாம். யுத்தம் கர்த்தருடையது; அமரிக்கையும் நம்பிக்கையும் உங்களது பெலனாயிருக்கட்டும்" (II நாளா. 20 : 15-19) என்று கூறி அனைவரையும் உற்சாகப் படுத்துகிறான்.

தேவனுடைய பிள்ளையே! இப்படிப்பட்ட பயத்தை உண்டாக்கும் சூழ்நிலை உன் வாழ்க்கையில் உருவாகும்போது, நீ ஆண்டவருடைய வசனத்தை ஆயுதங்களாக உபயோகப்படுத்தக் கற்றுக்கொள். இயேசு கிறிஸ்துவைப் போல நாமும் "என்று எழுதியிருக்கிறதே" என்று கூறி, பிசாசை வெல்ல வேண்டும்; விரட்ட வேண்டும். சாத்ராக்கின் சாதனையையும், தானியேலின் தைரியத்தையும் நினைவு கூறுங்கள். பயம் வந்து உங்கள் மனதின் கதவைத் தட்டும்போது, உங்கள் விசுவாசத்தை அனுப்புங்கள். விசுவாசம் சென்று 'யாரது?' என்று கேட்டவுடன் பயம் ஓடியே போய்விடும். இரஷ்யாவின் அதிபதியாக இருந்த ஸ்டாலின் - எட்டு படுக்கும் அறைகள் வைத்திருந்தாராம். எந்த அறையில் படுத்துத் தூங்குவார் என்பது யாருக்குமே தெரியாத ரகசியம். தன்னைக் கொல்ல வருகிறவனிடத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள இந்தத் தந்திரத்தை ஸ்டாலின் பயன்படுத்தினார். மரணத்திற்குப் பயந்து பயந்து வாழ்ந்த இந்த ஸ்டாலின் இறுதியில் பயங்கரமான ஒரு மரணத்தைச் சந்தித்ததாக அவரது மகள் எழுதுகிறாள்.

சிலர் பயத்திற்குத் தங்களை விற்றுப் போடுகிறார்கள். தேவனுக்குப் பயப்படுகிறவன் மனிதனுக்குப் பயப்படமாட்டான். கடவுள் பயம் இல்லாதவன் தன்னுடைய நிழலுக்குக்கூடப் பயப்படுவான். பயம் ஒரு பரம்பரை வியாதிபோல சிலரிடம் காணப்படுகிறது. இந்தப் பயத்தைப் பற்றி ஒரு கதை உண்டு.

ஒரு எலி எப்பொழுதுமே பூனைக்குப் பயந்து கொண்டிருந்ததாம். ஒரு மந்திரவாதி அந்த எலியின் பயத்தைப் போக்க அதை ஒரு பூனையாக மாற்றினான். பூனையாக மாறிய எலி, இப்பொழுது நாயைப் பார்த்துப் பயப்பட ஆரம்பித்ததாம். உடனே மந்திரவாதி பூனையை நாயாக மாற்றினான். அந்த நாய் இப்பொழுது புலிக்குப் பயப்பட ஆரம்பித்தது. மீண்டும் அந்த மந்திரவாதி நாயைப் புலியாக மாற்றினானாம். புலியாக மாறிய பின்பு சிங்கத்திற்குப் பயந்தது. சிங்கமாக மாறிய பின்பு வேட்டைக்காரனுக்குப் பயந்ததாம். பின்பு அந்த மந்திரவாதி நீ சிங்கமாக உருவத்தில் மாறினாலும், உனக்கு எலியின் இருதயம்தான் இன்னும் இருக்கிறது என்று கூறி இறுதியில் அதை மீண்டும் எலியாகவே மாற்றி விட்டானாம்.

இதை வாசித்துவிட்டு நாம் புன்முறுவல் செய்யலாம். ஆனாலும் சில சமயங்களில் நாம் எதைக் கண்டாலும் பயப்படும் சூழ்நிலையில் நாமும்கூட இந்த எலியைப் போலத்தான் காணப்படுகிறோம் - என்ற உண்மையை நாம் உணருவது நல்லது. நமக்கு ஆண்டவர் பயத்தின் ஆவியைக் கொடுக்காமல், 'உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து செல்வேன்; என் தேவனாலே ஒரு மதிலையும் தாண்டுவேன்' (சங். 18 : 29) - என்ற தாவீதின் தைரியத்தைக் கொடுக்க விரும்புகிறார்.

3. சோர்வின் பின்னணி

பொதுவாக நமது வாழ்க்கையில் ஒரு மாபெரும் வெற்றியைப் பெற்றிருப்போமானால், அதைத் தொடர்ந்து ஒரு மாபெரும் சோதனையோ அல்லது தோல்வியோ வரப்போகிறது என்று நாம் எதிப்பார்ப்பது நல்லது. எலியா கர்மேல்பர்வதத்தின் உச்சியில் ஜெபித்து, வானத்திலுருந்து அக்கினியை வரவழைத்து ஒரு பெரிய வெற்றியைப் பெற்றான். பொதுவாக ஒரு வெற்றியைப் பெற்ற பின்பு, நாம் அந்த மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்க ஆரம்பிப்போம். அதுதான் ஆபத்தான சமயம் - எளிதில் தவறு செய்யக்கூடிய தருணம். விழித்திருப்பதற்குப் பதிலாக தூங்க ஆரம்பித்து விடுகிறோம். அங்கு தான் ஆபத்து ஆரம்பமாகிறது. வெற்றி நமது தலைக்கோ அல்லது தோல்வி நமது இருதயத்திற்கோ செல்ல அனுமதிக்கக்கூடாது - என்று ஒருவர் சரியாகச் சொன்னார்.

4. யேசபேல் ராணியின் கடிதம் - சோர்வின் மூலகாரணம்

ஒரு கம்ப்யூட்டரில் புதிதாக ஒரு Floppy -யை போடுவதற்கு முன்பு அதில் Virus இருக்கிறதா என்பதை சோதித்துப் பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் கம்ப்யூட்டர் முழுவதுமே Virus பரவிவிடும்.

அதுபோல நமது வாழ்க்கைக்குள் நுழையும் ஒவ்வொரு விஷயத்திலும் சோர்வு என்ற கிருமி Virus இருக்கிறதா என்பதை சோதித்துப் பார்க்க நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஒரு சாதாரண உண்மையை உங்களிடத்தில் சொல்ல விரும்புகிறேன். உங்கள் வீட்டில் தொலைபேசி மூலமாக ஒரு சோர்வு, டென்ஷன் என்ற கிருமிகள் வர முடியும்; ஒரு கடிதத்தின் வாயிலாக ஒரு கவலை Speed Post-ல், அல்லது Regd. Post - பதிவு தபாலில் வர முடியும். சும்மா நம்மைப் பார்ப்பதற்காக வீட்டிற்கு வந்த நமது உறவினர் அல்லது நண்பர் நமது உள்ளத்தில் ஒரு பொக்ரான்-II அணுகுண்டு விஷயத்தை வெடித்துவிட்டுப் போகலாம்.

நான் இருதய அறுவை சிகிச்சைக்குப் பின் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த சமயத்தில் என் மூத்த அண்ணன் என் வீட்டுக்கு வந்து இந்த ஆலோசனையைத்தான் சொன்னார். "தொலைபேசி மணி அடித்தால் நீ எடுக்காதே, வேறு யாராவது எடுக்கட்டும் - wrong நம்பராக இருந்து அவர் ஒன்று சொல்ல நீ ஒன்று சொல்ல அநாவசியமான Tension வரும். இது தேவையா? அது போலவே ஸ்கூட்டர், கார் ஓட்டும்போதும், மற்ற வாகன ஓட்டுனர்கள் நமக்கு எரிச்சலை, டென்ஷனை உண்டாக்க முடியும். கோபத்தைக் கிளற முடியும்; அதன் மூலமாக வாகனம் ஓட்டும் போதே பல பிரச்சனைகள் உருவாகலாம், ஏன் ஒரு விபத்தே ஏற்பட முடியும்". இந்த வார்த்தைகள் நல்ல அனுபவம் நிறைந்த அருமையான ஆலோசனை.

எலியாவிற்கு யேசபேல் ராணி அனுப்பிய பயமுறுத்தல் செய்தியும் இதுபோன்ற விரும்பத்தகாத பக்க விளைவுகளை உண்டாக்கி விட்டது. என்னைக் கேட்டால், யேசபேல் ராணியிடமிருந்து வந்த செய்தியை, கடிதத்தை இவன் வாசிக்காமலேயே கிழித்து குப்பைத் தொட்டியில் போட்டிருக்க வேண்டும். யேசபேல் ராணியிடமிருந்து எப்படிப்பட்ட செய்தியை இவன் எதிர்பார்க்க முடியும்? இவன் கர்மேல் பர்வதத்தின் உச்சியில் செய்த அற்புதத்தைப் பாராட்டும் கடிதத்தையா இவன்

எதிர்பார்த்தான்? பி.ஜே.பி. கட்சியின் தலைவர் தாக்ரேயிடமிருந்து பிஷப்பிற்கு கடிதம் வந்தால் அது எப்படிப்பட்ட கடிதமாக இருக்கும்? எப்படிப்பட்ட செய்தியை எதிர்பார்க்க முடியும்? நிச்சயமாக அது ஒரு பயமுறுத்தல் கடிதமாகத்தான் இருக்கவேண்டும். அதை இவன் படித்தது தவறு. சன்பல்லாத்து. தொபியா இப்படிப்பட்டவர்களிடமிருந்து நெகேமியாவிற்குக் கடிதம், பல செய்திகள் வந்தது. ஆனால் நெகேமியா அந்த பயமுறுத்தல் கடிதத்தை சட்டை செய்யவேயில்லை, அதைக் கிழித்துப்போட்டான்.

எப்பொழுதுமே வருமுன் காப்போனாக இருப்பது நல்லது. இதையெல்லாம் நான் இப்படி விரிவாக எழுதுவதன் நோக்கம் - உங்களுக்கு சோர்வு' எந்தெந்த வழியில், எந்தெந்த ரூபத்தில் வருகிறது என்பதை நீங்கள் அடையாளம் கண்டு கொண்டு அதற்கு உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்வது நல்லது, எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ - நமக்குத் தெரியாது. நமக்கு வரும் எந்த கடிதத்தில் எந்த டெலிபோன் அழைப்பில் சோர்வு இருக்குமோ - நமக்குத்தெரியாது.

5. யேசபேல் ராணியின் பிளாக்மெயிலுக்கு இலக்கானான்

யேசபேல் ராணியின் கடிதத்தில் வெறும் பயமுறுத்தல் தான் இருந்ததே தவிர அதில் சக்தியுமில்லை, சங்கதியுமில்லை - வெறும் பிளாக்மெயில் கடிதம்; அச்சுறுத்தல் கடிதம். அது வெறும் காகிதப் புலி - Paper Tiger இந்த சாதாரண உண்மையை இந்த எலியா - இவ்வளவு தீர்க்கதரிசனவரம் பெற்ற இவனுக்கு இது சரியாகப் புரியவில்லை. நான் மேலே குறிப்பிட்டபடி, இந்த எலியாவிற்கு அச்சுறுத்தல் செய்தி வந்தது போல, நெகேமியாவிற்கும் பல நிஜமான அச்சுறுத்தல்கள் வந்தது. ஆனால் அந்தக் காட்டுநரி சலசலப்பிற்கு இந்த நெகேமியா என்ற புலி சிறிதும் அஞ்சவேயில்லை.

ஆனால் இந்த எலியா யேசபேல் ராணியின் பயமுறுத்தலுக்கு பயந்து விட்டான். இது எலியா வெட்கப்பட வேண்டிய ஒரு விஷயம். "பாகால் தெய்வமானால் பாகாலை வணங்குங்கள்; யெகோவா தெய்வமானால் அவரை சேவியுங்கள்; இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடக்க வேண்டாம்" - என்று சிம்மக்குரல் எழுப்பியவன் இந்த எலியா, இப்பொழுது யேசபேலின் அச்சுறுத்தலுக்குப் பயந்து ஓடுகிறான். அதனுடைய அர்த்தம் என்ன? அந்த அரக்கச்சியின் தெய்வமாகிய பாகால் தன்னைக்

கொல்லப்போகிறது என்று பயந்தானா? ஏன் பயப்படவேண்டும். வானத்திலிருந்து இறங்கிய அக்கினி எரித்துப் போட்ட கட்டைகளும் சாம்பலும் இன்னும் மீதமாய் மிஞ்சிக் கிடக்கிறது. அதுபோல இந்த யேசபேல் மேல் அக்கினியை வரவழைப்பது இந்த அக்கினி தீர்க்கதரிசிக்குக் கடினமா? நிச்சயமாக இல்லை, பின்னை ஏன் இந்த எலியா இதைச் செய்யவில்லை?

இதற்கு ஒரு காரணம், திடீரென அவனுக்குள் உட்புகுந்த பயம், அரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பயம் என்று கூறுவார்கள். அதுபோல இந்த எலியா பயத்தினால் பீடிக்கப்பட்டான். அதன் விளைவு பெயர்பெற்ற பலசாலியான சிம்சோன் தன் வல்லமையைத் திடீரென இழந்தது போல - சிம்சோனுக்கு ஒரு தெலீலாள் - தாவீதிற்கு ஒரு பத்சேபாள் - எலியாவிற்கு ஒரு யேசபேல் - அவள் மூலம் வந்த செய்தி, அவனுக்குள் ஒரு பீதியையும், பயத்தையும், டாக்டர் மயக்க ஊசிபோட்டது போல - பயம் என்ற ஊசி ஏற்றப்பட்டுவிட்டது. அதன் விளைவு, தான் யார் என்பதை மறந்தான் - அதன் காரணமாக தனக்குள் உள்ள வல்லமையையும் - சிம்சோனைப்போல - தற்காலிகமாக இழந்தான்.

இது போலத்தான் நமது வாழ்க்கையிலும் சில சமயங்களில் சில அதிர்ச்சி தரக்கூடிய செய்தியைக் கேட்டவுடன் நாம் நிலை குலைந்து விடுகிறோம். நமக்கு ஆண்டவர் கொடுத்திருக்கிற அதிகாரத்தையும், வல்லமையையும் உபயோகிக்க மறந்து - செயலிழந்து ஆவியில் ஊனமுற்றோராக காணப்படுகிறோம்.

இப்பொழுது எலியா அவனது ஆவிக்குரிய வாழ்க்கையிலும் ஊழியத்திலும் உண்மையாகவே ஒரு பாலைவனத்திற்கு ஒரு வனாந்தரத்திற்கு வந்து விட்டான். எலியாவின் மன நிலையைப் பற்றி வேதம் இப்படியாகக் கூறுகிறது; எலியா உயிர்தப்ப வனாந்திரத்தை நோக்கி ஓடினான் (I ராஜா. 19 : 3). என்ன ஒரு பரிதாபம்! அக்கினியான தீர்க்கதரிசி, தைரியத்திற்கு பெயர் போன ஒரு மனிதன் தன் உயிருக்குப் பயந்து ஓடுகிறான். இதுதான் எலியாவின் இரண்டாவது பகுதி; விரும்பத்தகாத பகுதி.

6. மற்றவர்களிடம் உதவியோ ஆலோசனையோ கேட்கவில்லை

தன் வேலைக்காரன் தன் கூட இருந்தாலும் தனக்கு ஆபத்து என்று நினைத்து அவனையும் இந்த எலியா விரட்டிவிடுகிறான்.

இந்த இடத்தில் தான் எலியா ஒரு மாபெரும் தவறைச் செய்துவிட்டான். நமக்குச் சோர்வு வரும்போது நாம் செய்ய வேண்டிய முக்கியமான ஒரு காரியம் என்னதெரியுமா? நமக்குத் தெரிந்த நம்பிக்கையானவர்களிடத்தில் ஆலோசனை கேட்பது. எலியாவின் பிரச்சனை யாரிடத்திலும் ஒட்ட மாட்டான் - பழக மாட்டான் - மனம் விட்டுப் பேசமாட்டான். (ஆனால் எலிசா அப்படியல்ல; அவன் மற்றவர்களோடு அந்நியோன்யமாகப் பழகி - மற்றவர்களது பிரச்சனைகளில் ஈடுபாடு காண்பித்தான்) ஆனால் எலியா - ஒரு Secluded Person - Somewhat moody person இதைத்தான் சாலொமோன் ஒண்டியாயிருப்பவனுக்கு ஐயோ - இருவராய் படுத்திருந்தால் சூடுண்டாகியிருக்கும் - முப்புறி நூல் எளிதில் அறுபடாது - என்று எழுதுகிறான் (பிரசங்கி. 4 : 10-12).

அப்படியானால் இந்த எலியா - தனக்கு வந்த பயமுறுத்தல் செய்தியை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டோ அல்லது மற்றவர்களது ஆலோசனையையோ கேட்டிருக்க வேண்டும். மற்றவர்களோடு ஆலோசனை செய்யாவிட்டாலும் தன்னோடு எப்பொழுதும் தங்கியிருக்கும் தன்னுடைய வேலைக்காரனிடத்திலாவது தனது பிரச்சனையைச் சொல்லி யிருக்க வேண்டும். வேலைக்காரனிடத்திலா சொல்வது என்று நாம் நினைப்பது முற்றிலும் தவறு. எந்தப் புற்றில் எந்த பாம்பு இருக்கும் என்று கேள்விப் பட்டிருக்கிறோம். அதே போல ஆண்டவர் கூட நமக்கு எந்த ஊற்றில் என்ன தண்ணீர் வைத்திருக்கிறாரோ தெரியாது. அதுபோல ஒரு கழுதையின் மூலமாகக் கூட ஆண்டவர் நம்மோடு பேசமுடியுமல்லவா?

உதாரணமாக சீரியா தேசத்தின் ராணுவ தளபதி நாகமானின் குஷ்டரோகம் நீங்கி ஆண்டவரின் அற்புதம் நடந்ததற்கு முக்கிய காரணமாயிருந்தவள் அவனது வீட்டில் எடுபிடி வேலை செய்து கொண்டிருந்த ஒரு வேலைக்காரப் பெண் என்பதையும்; எதையும் யோசிக்காமல், தயங்காமல் ஆற்றில் மூழ்கும்படியாக ஆலோசனை கொடுத்ததும் அவனது உதவியாளன் தான் என்ற உண்மையையும் நாம் மறக்கக்கூடாது. சிறு துரும்பும் பல் குத்த உதவும். இந்த எலியா தன்

வேலைக்காரனிடத்தில் தனது பிரச்சனையைச் சொல்லியிருந்தால், யாருக்குத் தெரியும் கழுதையின் மூலம் பிலேயாமிற்குப் பேசிய ஆண்டவர் - இந்த வேலைக்காரன் மூலமாக ஆண்டவர் இந்த எலியாவிடம் பேசியிருக்கக்கூடும். ஆனால் இதைப் புரிந்து கொள்ள முடியாத இந்த எலியா தன்னுடன் இருந்த வேலைக்காரனையும் கட்டாய விடுமுறை கொடுத்து அனுப்பிவிடுகிறான்.

7. எலியா தற்கொலை செய்ய முயற்சிக்கிறான்

எலியா வனாந்திரத்தில் ஒரு நாள் பிரயாணம் செய்து ஒரு சூரைச் செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று விரும்பி, "போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும்" என்று சொல்லி சூரைச் செடியின் கீழ் படுத்துக் கொண்டு நித்திரை பண்ணினான் (I ராஜா. 19 : 4,5).

ஆம்! எலியா தற்கொலை செய்ய விரும்புகிறான். ஆனால் இந்த நாள் வரை அவன் சாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நான் ஏற்கனவே எழுதியது போல, ஒரு மனிதனின் ஒரு சாதாரண பிரச்சனை, உப்புசப்பு இல்லாத பிரச்சனை கூட சில சமயங்களில் விசுவரூபம் எடுத்து அவனை தற்கொலைக்கு நேராகக் கொண்டு செல்லக்கூடும். எலியா கூட இதற்கு இலக்கானான் - என்று நினைக்கும் போது நமக்கு அதிர்ச்சியைக் கொடுக்கிறது.

உங்களுக்கு அதிர்ச்சியைக் கொடுக்கக்கூடிய இன்னொரு உண்மையையும் உங்களுக்கு சொல்லப் போகிறேன். உங்களை ஆயத்தப் படுத்திக் கொள்ளுங்கள்.

இந்த உலகத்தில் ஒரு நிமிடத்திற்கு 10 பேர்கள் தற்கொலை செய்ய முயற்சிக்கிறார்கள். அதில் ஒருவர் வெற்றி (இதற்குப் பெயர் வெற்றியா?) பெறுகிறார் அதாவது தற்கொலை முயற்சியில் வெற்றிபெறுகிறார். மற்ற 9 பேர்கள் தடுக்கப் படுகிறார்கள். இதை வாசிக்கும் நீங்கள் கூட உங்கள் வாழ்க்கையில் எப்பொழுதாவது - ஏதோ ஒரு பிரச்சனையினால் தற்கொலை செய்து கொள்ளலாமா - என்று நினைத்ததுண்டா? அப்படியானால் மேலே நான் கொடுத்திருக்கிற புள்ளி விபரத்தில் நீங்களும் ஒருவர் என்பதை மறக்க வேண்டாம். நமது சோர்வு இப்படிப்பட்ட அபாயகரமான முட்டாள் தனமான முடிவுகளுக்கு நம்மைக் கொண்டு சென்று விடாதபடிக்கு நாம் மிக எச்சரிக்கை யாயிருக்க வேண்டும்.

8. சுயபரிதாபம் - தற்கொலைக்கு தூபமிடுகிறது

தற்கொலை செய்யும் இந்த எண்ணம் எலியாவிற்கு எப்படி வந்தது என்று நமக்குப் புரியவில்லை. பொதுவாக தற்கொலைக்கு ஒரு காரணம் சுய பரிதாபம் Self Pity - "என்னைப் போல ஒரு துரதிஷ்டசாலி இந்த உலகத்தில் யாருமே இருக்க முடியாது" - என்று எலியா எண்ணியிருக்கக்கூடும். இந்த சுயபரிதாபம் மிகவும் ஆபத்தான ஒரு உணர்வு. நமது வாழ்க்கைப் பயணத்தின் போது இந்த சுயபரிதாபம் என்ற கியரை (gear). நாம் போடவே கூடாது. அது நம்மை ஸ்தம்பித்து நிற்கச் செய்வது மாத்திரமல்ல; நம்மை பின்னடையச் செய்யும் ஒரு Reverse gear. எந்த சூழ்நிலையிலும், எவ்வளவு பெரிய இழப்பை நாம் சந்திக்க நேரிட்டாலும் ஒருபோதும் இந்த சுயபரிதாபத்திற்கு மாத்திரம், தயவு செய்து சிறிது நேரத்திற்குக் கூட இடம் கொடுத்து விடாதீர்கள். தற்கொலை எண்ணத்திற்கு தூபமிடுவது, வித்திடுவது இந்த சுயபரிதாப எண்ண அலைகள். இந்த சுய பரிதாபத்திடம் யார் அடைக்கலம் தேடி வருகிறார்களோ, அவர்களை இந்த சுயபரிதாபம் தொண்டையை நெரித்துக் கொன்று விடும் கொடூர தன்மையுடைது.

9. தவறான தகவல்கள் - தவறான விளைவுகளை ஏற்படுத்த முடியும்

சில வேளைகளில் தவறான புள்ளிவிபரங்கள் - பொய்யான தகவல்கள் கூட ஒரு மனிதனை தற்கொலைக்கு வழி நடத்த முடியும் என்பதற்கு எலியா ஒரு நல்ல உதாரணம். "இஸ்ரவேல் நாட்டில் பாகால்களுக்கு முழங்காற்படியிடாத எல்லா தீர்க்கதரிசிகளும் கொல்லப்பட்டார்கள். நான் ஒருவன் மாத்திரமே மிஞ்சியிருக்கிறேன் என்னையும் கொல்லப்பார்க்கிறார்கள்" என்று எலியா கூறும் தகவல்கள் முற்றிலும் தவறு (I ராஜா. 19 : 14). பாகால்களுக்கு முழங்காற்படியிடாத 7000 பேர்கள் இஸ்ரவேலில் இருக்கிறார்கள் என்று ஆண்டவர் கூறுகிறார் I ராஜா. 19 : 18).

ஆம்! சில சமயங்களில் சில தவறான தகவல்களின் அடிப்படையில் தவறான சில முடிவுகளை நாம் அவசரப்பட்டு எடுத்து விடக்கூடாது.

எலியாவினிடத்தில் வேதாகமத்தைக் கொடுத்துப் படிக்கச் சொல்லு வோமானால் I ராஜா 19-ம் அதிகாரம் அவனது வாழ்க்கையில் ஒரு Black Chapter கரும்புள்ளிகள் படர்ந்த ஒரு அத்தியாயம்.

10. எலியாவின் சோர்வு எப்படி நீங்கியது?

யாரிடத்திலும் பேசாமலும், உம் என்று கப்பல் கவிழ்ந்ததுபோல கன்னத்தில் கைவைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்த எலியாவின் சோர்வை நீக்குவதற்கு - இறுதியில் ஆண்டவரே முன் வருகிறார். அடம் பிடித்து அழும் சில பிள்ளைகளை அப்பாவே நேரில் வந்து பேசினால் தான் வேலை ஆகும். அது போலவே, சூரைச் செடியின் கீழ் வந்து உட்கார்ந்து கொண்டு வாழ்க்கையே ஸ்தம்பித்து விட்டது, சூன்யமாகி விட்டது - என்று புலம்பிக் கொண்டிருக்கும் எலியாவை சரி செய்வதற்கு ஆண்டவரே நேரில் வரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. "ஆண்டவரே, நீர் நேரில் வர அவசியமில்லை; நீர் ஒரு வார்த்தை சொன்னால் போதும்" - என்று இயேசுவிடம் சொன்ன ஒரு மனிதனின் வார்த்தைகள் மிகவும் அர்த்த புஷ்டியுள்ளது. ஒவ்வொரு சிறிய சிறிய பிரச்சனைகளுக்கும் ஆண்டவரே நேரில் வர அவசியமில்லை; அப்படி எதிர்பார்ப்பது சிறுபிள்ளைத் தனம் என்று புறஜாதியானாகிய அந்த நூற்றுக்கு அதிபதி நமக்கு அறிவுரை கொடுப்பது போல் இருக்கிறது.

10a. அப்பம் கொடுக்கப்பட்டது

பொதுவாக சிலரது மனப்பிரச்சனைகள் தீர வேண்டுமானால் முதலாவது அவர்களது வயிறு நிரம்ப வேண்டும்; அவர்களது பசியைப் போக்காமல், நாம் என்ன ஆலோசனை சொன்னாலும், அறிவுரை கூறினாலும் அது எடுபடாது; அவர்களது மனதிற்குள் நுழையாது. இந்த Human Psychology-ஐ இந்த மனோதத்துவத்தை அறிந்து தான் ஆண்டவர் எலியாவிற்கு அப்பத்தைக் கொடுக்கிறார். இந்த சூடான அப்பம் எப்படி வந்தது, யார் கொண்டு வந்தது - என்பதைக் கூடச் சிந்திக்காமல் அதைச் சாப்பிட்டு விட்டு மீண்டும் படுத்து விடுகிறான் இந்த எலியா (இந்த அப்பம் யேசபேல் ராணிதான் அனுப்பியிருப்பாள் - இதில் நிச்சயம் விஷம் கலந்திருக்கும் - என்று பயந்து அதைத் தூக்கியெறியாமல் அதை சாப்பிட்டதற்காக நாம் சந்தோஷப்பட வேண்டும்).

நமது வாழ்க்கையில் கூட சோர்வுகள் வரும்போது. நாம் விரும்புகிறோமோ விரும்பவில்லையோ நன்றாக ஆகாரம் சாப்பிடப் பழகிக் கொள்ளுங்கள். ஆவி, ஆத்துமா, சரீரம் மூன்றும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கிறது. ஒன்று பெலவீனமடையும் போது மற்றதும் தானாகவே பெலவீனம் அடையும் வாய்ப்பு ஏற்படுகிறது. சாப்பிடாமல்

உபவாசம் எடுக்கும் போது நமது உள்ளான மனிதனும், ஆவியும் பலனடைகிறது உண்மைதான்; ஆனால் சோர்வினால் நமது ஆவி பலனற்று சோர்ந்து போயிருக்கும் வேளையில் ஆகாரத்தினால் நமது சரீரம் பலனடைவது நல்லது: "ஆவியோ உற்சாகமுள்ளது, மாம்சமோ பலவீனமுள்ளது" என்று வேதம் கூறுகிறது. அது போல, நமது ஆவி பலவீனமடையும் போது, சரீரம் உற்சாகமடையுமானால் அது நமது முழு ஆள்தத்துவத்தை ஒரு சீரான நிலைக்குக் கொண்டுவர உதவுகிறது.

10b. அவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பை ஆண்டவர் நினைவூட்டுகிறார்

சோர்ந்து போய் எல்லாம் சூன்யமாகிவிட்டது என்று சூரைச் செடியின் கீழ் உட்கார்ந்திருக்கிற எலியாவைப் பார்த்து ஆண்டவர், "எலியாவே, நீ போகவேண்டிய தூரம் வெகுதூரம்; சீரியா, இஸ்ரவேல் தேசங்களின் ராஜாவையும், உன் ஸ்தானத்தில் எலிசாவையும் - ஆகிய மூவரையும் அபிஷேகம் பண்ண வேண்டும் - என்று கூறி, எலியாவின் கரத்தில் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பை நினைப்பூட்டுகிறார் (1 ராஜா 19 : 7-16).

ஆம்! நமது சோர்வை நீக்குவதற்கு ஒரு சிறந்த வழி - ஆண்டவர் நமது கரத்தில் ஒப்படைத்துள்ள பொறுப்பை நாம் உணருவது.

11. மனச்சோர்வின் (Side Effects) பிரதிபலிப்புகள்

இங்கே நாம் கவனிக்க வேண்டிய இன்னொரு உண்மையும் இருக்கிறது. அப்பத்தைச் சாப்பிட்டவுடன் பெலமடைந்த எலியா நீ போக வேண்டிய தூரம் வெகுதூரம் என்று ஆண்டவர் சொன்னவுடன் வேகமாக எழுந்து புறப்பட்டுப் போகிறான். 40 நாட்கள் எந்த உணவும் சாப்பிடாமல் நடந்து போகிறான். அப்படி வேகமாய் நடந்து போகும் எலியாவை நிறுத்தி, எலியாவே நீ எங்கே போகிறாய் என்று நாம் கேட்போமானால் ஆண்டவர் போகச் சொன்னார் அதனால் போகிறேன் என்று அவசரமாய்ச் சொல்லி விட்டுத் தன் பயணத்தைத் தொடர்ந்திருப்பான். இது எலியா செய்த இன்னொரு இமாலயத் தவறு.

ஆண்டவர் போகச் சொன்னது உண்மைதான். ஆனால் எங்கே போவது என்று அவன் கேட்டானா? அது தான் தவறு.

ஒருவர் தனது ரயிலிலிருந்து வேகமாக இறங்கி ஒரு Taxi - டேக்ஸிக்குள்

வேகமாக அமர்ந்து - Taxi Driver - வேகமாய் ஓட்டு - என்று சொன்னாராம். அந்த டேக்ஸி டிரைவரும் வேகமாய்ப் பறந்தான். பல மைல்கள் தாண்டின பின்பு தான் காரில் ஏறியவர் டிரைவரைப் பார்த்து டிரைவர், எங்கே போகிறாய் என்று கேட்டாராம். அப்பொழுது அந்த டிரைவர், ரொம்ப நிதானமாக "சார், நீங்க எங்க போகனும்னு சொல்லாமல், உடனே, வேகமாய் போ என்று தான் சொன்னீங்க. எங்கே போகனும்னு சொல்லவேயில்லை. இப்பச் சொல்லுங்க, எங்கே போகனும்னு" - என்று பதில் சொன்னானாம், ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு - என்ற பழமொழி எவ்வளவு உண்மை.

நமது எலியாவும் இதே மாதிரிதான். சென்னைக்குப் போக வேண்டியவன் கன்னியாகுமரிக்கு வந்து விட்டான். அதனால் தான் ஓரேப் பர்வதத்திற்கு வந்து களைத்துப் போயிருந்த அவனைப் பார்த்து ஆண்டவர், "நீ தமஸ்கு வழியாய் வனாந்திரத்திற்கு திரும்பிப்போ" என்று கட்டளையிடுகிறார். (1 ராஜா 19 : 15)

நமக்கு சோர்வு வரும்போது இது போன்ற தவறுகள் நடக்கும் என்பதை நாம் அறிந்து எச்சரிக்கையுடன் நடக்க வேண்டும். நாம் சோர்வடைந்த நேரத்தில் நமது மூளை சற்று மந்தமாக இருக்கும். இது போன்ற வேளைகளில் ஒரு முறைக்கு இரண்டு முறை கேட்டு விசாரித்து காரியங்களை நிதானமாய்ச் செய்ய வேண்டும். பதறுகிற காரியம் சிதறி விடும்.

இப்பொழுது எலியா ஓரேப் பர்வதத்திலிருந்து தான் வந்த பாதையிலே மீண்டும் நடந்து போகிறான். இதை எழுதும் போது சில வருடத்திற்கு முன்னால் நடந்த சம்பவம் ஒன்று என் நினைவிற்கு வருகிறது. கோவையில் இருக்கும் என்னைப் பார்ப்பதற்காக ஒருவர் எனது விலாசத்தை எடுத்துக்கொண்டு பெங்களூரிலிருந்து புறப்பட்டாராம். புறப்பட்டவர் மதுரைக்குப் போய்விட்டார். அங்கு யாரோ ஒருவர் இவரைப் பார்த்து, "நீங்கள் சொல்கிற விலாசம், கோவையில் அல்லவா இருக்கிறது" - என்று கூறினாராம். என் விலாசம், போன் நம்பர் - இதையெல்லாம் எடுத்தவர், ஊர் பேரை கோட்டை விட்டுவிட்டு, கோவைக்குப் போவதற்குப் பதிலாக மதுரைக்குப் போய்விட்டார். என்னைத் தேடி மதுரைக்குச் சென்ற இவரைப் போலத்தான் எலியா ஓரேப் பர்வதத்திற்குப் போய்விட்டான். இது மாதிரி குழப்பங்கள், தவறுகள் மனச்சோர்வின் ஒரு சில பிரதிபலிப்புகள் - Side Effects - என்பதை நாம் உணர வேண்டும்.

12. ஆண்டவரின் மெல்லிய சத்தம் - சோர்வை நீக்கும் மருந்து

சோர்வு என்ற குகைக்குள் இருந்த எலியாவை ஆண்டவர் வெளியே வரும்படியாகக் கட்டளையிடுகிறார். அவன் குகைக்கு வெளியே வந்து நின்ற போது எலியாவின் வாழ்க்கையில் ஒரு மாபெரும் புரட்சிகரமான மாறுதல் ஏற்படுகிறது. முதலாவது பாறையைக் கூட நொறுக்கக்கூடிய ஒரு மாபெரும் புயல் அடித்தது. இதன் பின்பு ஒரு பெரிய பூமி அதிர்ச்சி உண்டாயிற்று. இதைத் தொடர்ந்து கர்த்தருடைய மெல்லிய சத்தம் உண்டாயிற்று. புயலும், காற்றும், பூமியதிர்ச்சியும் சாதிக்க முடியாததை இந்த மெல்லிய சத்தம் சாதிக்கிறது. இந்த மெல்லிய சத்தம் எலியாவை மாற்றி அவனது பழைய நிலைமைக்கு அவனைக் கொண்டு வந்தது. அவனை மறுரூபமடையச் செய்தது. அவன் இப்பொழுது தனது சோர்வை மேற்கொண்டு, மீண்டும் கர்த்தருடைய பணியைத் தொடரத் தன்னை ஒப்புக் கொடுக்கிறான். இந்தக் கசப்பான சம்பவத்திற்குப் பின்பு இவ்வகையான சோர்வு எலியாவிற்கு வந்தது கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆம்! ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் அவன் குழந்தைப் பருவம், பள்ளிப்பருவம், கல்லூரிப் பருவம், திருமணவாழ்க்கை - இது போன்ற பருவங்களைத் தாண்டிச் செல்வது எப்படி அவசியமோ அது போல இந்த 'மனச்சோர்வு' என்ற பருவத்தையும் நாம் ஒவ்வொருவரும் கட்டாயம் தாண்டிச் செல்ல வேண்டியது அவசியமே. இது பலருடைய வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஒரு பருவம். இதைத் தவிப்பதற்காக அதைத் தாண்ட முயற்சித்து கீழே விழுவதற்குப் பதிலாக அதன் ஊடே கடந்து சென்று அதை மேற்கொள்ளப் பழகுவது சாலச்சிறந்தது.

☆☆☆

11. சிட்சைகளின் மூலம் சோர்வு

என்னிலிருந்து உம்முடைய வாதையை எடுத்துப்போடும்; உமது கரத்தின் அடிகளால் நான் சோர்ந்து போனேன் (சங். 39 : 10).

என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே; அவர் கடிந்து கொள்ளும்போது சோர்ந்து போகாதே.

கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தண்டிக்கிறார் (எபி. 12 : 5,6).

சில சமயங்களில் ஆண்டவர் நமது வாழ்க்கையில் அவ்வப்பொழுது அனுப்பும் சிட்சைகள் மூலமாக நமக்குச் சோர்வு வருகிறது. தற்செயலாக ஒரு சாதாரண வியாதிக்காக டாக்டரிடம் சென்ற போது அவர் நம்மைச் சோதித்து விட்டு, நமக்குப் புற்றுநோய் இருப்பதாக அவர் சொல்வாரானால் நமக்கு எப்படி இருக்கும்? கணவனுக்கு Blood Cancer – இன்னும் 3 மாதம் தான் உயிரோடிருப்பார் என்று டாக்டர் சொல்வாரானால் அதை நாம் எப்படி சந்திக்கப்போகிறோம்; புத்தி சுயாதீனமான ஒரு பிள்ளை நமக்கு பிறந்து விட்டால் காலமெல்லாம் நாம் கஷ்டப்பட நேரிடுகிறது; ஏன் இந்த துன்பத்தை ஆண்டவர் என் வாழ்க்கையில் அனுமதித்தார்? சிறுவயதிலேயே ஏன் என் கணவரை எடுத்துக்கொண்டு என்னை விதவையாக்கி விட்டார்? இப்படி ஏன், ஏன் என்று பல கோள்விகளை ஒன்றன்பின் ஒன்றாக நாம் எழுப்பிக் கொண்டே போகலாம். இப்படிப்பட்ட கேள்விகளுக்கு விடை கிடைக்குமா?

எல்லாக் கேள்விகளுக்கும் விடை கிடைக்கா விட்டாலும் சில கேள்விகளுக்காவது விடைகிடைக்கும் என்று நான் நம்புகிறேன். அதேபோல விடையே கிடைக்காத பல கேள்விகள் நமது வாழ்க்கையில் உண்டு. கருப்பு எருமை பச்சைப்புல்லைச் சாப்பிட்டு வெண்மையான பாலைக் கொடுக்கிறது. இது எப்படி நமக்குப் புரியவில்லையோ அதே போல ஆண்டவர் நமது வாழ்க்கையில் சில காரியங்கள் நடக்க அனுமதிப்பதும் ஒரு புரியாத புதிராக இருக்கலாம். ஆனால், ஒன்றுமட்டும் நிச்சயம். இந்தக் காரியங்கள் நமக்குப் புரியாவிட்டாலும் ஆண்டவரின் அனுமதியின்றி இவைகள் நடக்கவில்லை என்ற உண்மையில் நாம்

அடைக்கலம்புகவும் திருப்தியடையவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

1. ஆண்டவர் அனுப்பும் சிட்சையில் நோக்கம் உண்டு

ஆண்டவர் இந்த உலகத்தில் படைத்த அனைத்தும் ஒரு நோக்கத்திற்காகத்தான். அது உண்மையாயிருக்குமானால், நமது வாழ்க்கையில் அவர் அனுப்பும் சிட்சையிலும், கஷ்டத்திலும், துன்பத்திலும் நிச்சயம் ஒரு நோக்கம் இல்லாமல் இருக்காது - என்பதும் உண்மையாகத்தான் இருக்க வேண்டும். கீழே கொடுக்கப்பட்டுள்ள உண்மைச் சம்பவத்தை கவனமாகப் படியுங்கள். அப்பொழுது ஆண்டவர் அனுப்பும் சிட்சையில் ஆண்டவர் நோக்கம் வைத்திருக்கிறாரா இல்லையா என்பது நன்கு புரியும்.

வில்லியம் மூன் என்ற வாலிபன் தனது கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்துவிட்டு ஆண்டவரது பணியைத் தனது ஓய்வு நேரத்தில் செய்து கொண்டிருந்தான். ஆனால் திடீரென்று ஒரு நாள் தனது கண்பார்வையை இழந்து விட்டான். உண்மையாகவே அவனது வாழ்க்கை இருளடைந்து விட்டது. ஏன் என்று புரியவில்லை. ஏன் இதை ஆண்டவர் தன் வாழ்க்கையில் அனுமதித்தார் - என்பது அவனுக்குப் புரியவில்லை. ஆண்டவரோடு மனரீதியாகப் போராடினான், ஒரு பதிலும் கிடைக்கவில்லை.

சில ஆண்டுகள் கழித்து இவன் ஆண்டவர் மேல் வைத்திருந்த கோபமெல்லாம் போய் விட்டது. அமர்ந்திருந்து நானே கர்த்தரென்று அறிந்து கொள் - என்ற வசனத்தின்படி தன்னை முழுவதுமாக ஆண்டவரது கரத்தில் ஒப்புக்கொடுத்து, "ஆண்டவரே, நான் ஏன் பார்வையை இழந்தேன் பதில் தாரும்" என்று கேட்டான். இதற்காகத்தான் ஆண்டவர் இத்தனை நாட்களாய் காத்திருந்தார். உடனே அவனுக்குத் தனது திட்டத்தை வெளிப்படுத்தினார்; "உன்னைப்போல பார்வையற்றோர் வேதாகமத்தைப் படிப்பதற்கு ஒரு புதிய முறையை நீ கண்டுபிடிக்க வேண்டும்" - என்றதொரு சவாலை அவனிடம் ஒப்படைத்தார். உடனே அவன் தனது கூரிய மூளை அறிவைப் பயன்படுத்தி அந்தத் திட்டத்தை வடிவம் அமைக்கத் தொடங்கி சில ஆண்டுகளுக்குள்ளாக அதைச் செயல்படுத்தினான். தற்சமயம் உள்ள ப்ரெய்லி முறை வருவதற்கு முன்பு இந்த வில்லியம் மூன் கண்டுபிடித்த முறை தான் குருடர்கள் படிப்பதற்காக பயன்பட்டு வந்ததாம்.

பார்த்தீர்களா? மற்றவர்களுடைய கண்களைத் திறப்பதற்காக ஆண்டவர் இவனைக் குருடாக்கினார். எனக்கும் தெரியும் ஒரு சகோதரன் - அவருக்கு ஒரே ஒரு குழந்தை இருந்தது. அதுவும் 10 வயதில் திடீரென இறந்து விட்டது. உடனே அவர் என்ன செய்தார் தெரியுமா? பல குழந்தைகளை எடுத்து வளர்க்க ஆரம்பித்தார். ஆம் நமக்கு வரும் இப்படிப்பட்ட துன்பங்களை, துயரங்களை ஒரு தடையாகக் கருதாமல் அதை ஒரு தருணமாக மாற்ற நாம் கற்றுக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட மனப்பான்மையைத் தான் பவுல் முற்றிலும் ஜெயங்கொள்ளுதல் (ரோமர். 8 : 37) என்று குறிப்பிடுகிறார்.

ஆண்டவரது சிட்சையை நாம் அற்பமாக நினைக்கக் கூடாது. உதாரணமாக நீங்கள் ஒரு பரீட்சை எழுதுகிறீர்கள் அதுவும் IAS தேர்வு எழுதுகிறீர்கள். அதை அற்பமாய் எண்ணுவீர்களா? நிச்சயமாக இல்லை, அந்தத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்று IAS அதிகாரியாக வர வேண்டும் - என்றதொரு எதிர்பார்ப்போடு எழுதுவீர்கள் அல்லவா? நிச்சயமாக அதை அற்பமாக எண்ணமாட்டீர்கள்.

அது போலவே ஆண்டவர் நமக்கு அனுப்பும் ஒவ்வொரு சிட்சையையும் ஒரு பரீட்சையாக IAS தேர்வாக நினைத்து அதற்கு நம்மை ஆயத்தப்படுத்த வேண்டும். ஒவ்வொரு பரீட்சையையும் எழுதும் போது, இரவு பகலாக படித்து அதற்காக நம்மை ஆயத்தப்படுத்தும் போது - எப்படா இந்தப் பரீட்சை முடியப்போகிறது - என்று நினைப்போம். பின்பு அந்தப் பரீட்சையின் முடிவையும் நாம் பெற்ற மார்க்குகளையும் பார்த்து அடுத்த வகுப்பிற்குத் தேர்ச்சிபெற்றுப் போகும்போது அதில் ஒரு Thrill - ஒரு மனநிறைவு ஒரு சாதனைத் திருப்தி ஏற்படுகிறது. அது போலவே ஆண்டவர் நமக்கு ஒரு சிட்சையை - ஒரு பரீட்சையை அனுப்புகிறார். அது எதற்காக? என்ன நோக்கத்திற்காக? நமக்கு Promotion கொடுப்பதற்காகத் தான். வேறு எதற்கும் அல்ல.

பரீட்சைக்குப் பின்பு உயர்வு

சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ - என்ற 3 வாலிபர்களுக்கும் ஒரு பெரிய சோதனை வந்தது; நேபுகாத்நேச்சார் வைத்த சிலையை வணங்க மறுத்தார்கள். அந்த சம்பவம் நடந்த காலகட்டத்தில் அவர்கள் எத்தனையோ நாள் இது பற்றி பேசியிருப்பார்கள். எவ்வளவு டென்ஷன் மனதில்

உண்டாகியிருக்கும். எத்தனை நாள் தூங்காமல் இருந்தார்களோ நமக்குத் தெரியாது. ஆனாலும் அக்கினிச் சூளையில் தூக்கியெறியப்பட்டபோது அவர்கள் தைரியமாயிருந்தார்கள். ஆண்டவர் ஏன் இந்தச் சிட்சையை அனுப்பினார் என்று கேள்வி கேட்கவில்லை. ஆனால் நடந்தது என்ன? அக்கினிச்சூளையை விட்டு அவர்கள் வெளியே வந்த போது ராஜா அவர்களுக்கு பதவி உயர்வு கொடுத்தான். பார்த்தீர்களா? பரீட்சை முடிந்த பின்பு பதவி உயர்வு கிடைத்தது.

இதைத்தான் பவுல், "இக்காலத்துப் பாடுகள் இனிமேல் நமக்குக் கொடுக்கப்படப்போகிற மகிமையோடு ஒப்பிடமுடியாது" - என்று எழுதுகிறார்.

நமக்கு வரும் சிட்சை நமக்குப் பதவி உயர்வு கொடுப்பதற்கு மாத்திரமல்ல; அதற்கு இன்னொரு காரணமும் உண்டு. "கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ அவனை அவர் சிட்சிக்கிறார்" என்று வேதத்தில் வாசிக்கிறோம் (எபி. 12 : 6). அடிக்கிற கை தான் அணைக்கும் என்பது பழமொழி. அதில் மறைந்திருக்கும் இன்னொரு உண்மை - அணைக்கிற கைக்குத் தான் அடிக்கும் அதிகாரம் உண்டு. நம்முடைய பிள்ளைகள் தவறு செய்யுமானால் நாம் அடிப்போம். வேறொருவருடைய பிள்ளைகள் தவறு செய்தால் நாம் அடிக்க மாட்டோம்; அடிப்பதற்கு கை கூசும். காரணம் அது நம்முடைய பிள்ளை அல்ல; நாம் பெற்றெடுத்த பிள்ளைகளைத் தான் அடிப்போம்.

அணைக்கிற கைதான் அடிக்கும்

ஒரு வீட்டில் 3 சிறுபிள்ளைகள் வளர்ந்து வந்தார்கள். இரண்டு பிள்ளைகள் அந்த வீட்டில் பிறந்த பிள்ளைகள். ஆனால் மூன்றாவது பிள்ளை அவர்களது அத்தை மகன். தாயை இழந்த இந்தப் பையனை அவனது மாமா தன்வீட்டில் தன் பிள்ளைகளோடு வளர்த்து வந்தார். தங்களது இரண்டு பிள்ளைகளைக் காட்டிலும் தாயை இழந்த இந்தப் பையனைத்தான் கண்ணும் கருத்துமாக மனம் கோணாமல் வளர்த்து வந்தனர். ஆனாலும் ஒரு நாள் அவன் சோகமாய் இருந்தான். அப்பொழுது அவனது மாமா "ஏன் சோகமாய் இருக்கிறாய்" என்று கேட்டதற்கு "நீங்கள் என்மேல் உண்மையான அன்பு செலுத்துவதில்லை" என்று அவன் சொன்னது இவர்களுக்குத் தூக்கிவாரிப்போட்டது. "எதை வைத்து இப்படி

சொல்லுகிறாய்" என்று கேட்டபோது, அவன் கொடுத்த பதில் இன்னும் அவர்களை ஆச்சரியத்தில் மூழ்க்கியது; "உங்க ரெண்டு பிள்ளைகளையும் அடிக்கடி அடிக்கிறீங்க, ஆனால் என்னை ஒரு நாள் கூட அடிச்சதே கிடையாது" - என்று சொன்னான்.

பார்த்தீர்களா? இந்தச் சிறுபையன் வேதத்திலுள்ள ஒரு அருமையான சத்தியத்தை எவ்வளவு சுலபமாகத் தன் அனுபவரீதியாக நமக்கு போதித்துவிட்டான். ஆம்! ஆண்டவர் நம்மை நேசிப்பது உண்மையானால் அதை உறுதி செய்வது அவர் அவ்வப்பொழுது அனுப்பும் சிட்சை. ஆண்டவர் நம்மை சிட்சிக்காவிட்டால், நாம் வேசியின் பிள்ளைகள் - என்று வேதம் கூறுகிறது. (எபி. 12 : 8) இப்பொழுது சொல்லுங்கள், நீங்கள் ஆண்டவரின் பிள்ளையென்று அழைக்கப்பட விரும்புகிறீர்களா? அல்லது வேசியின் பிள்ளை என்று அழைக்கப்பட விரும்புகிறீர்களா? நீங்கள் சிட்சிக்கப்பட்டால் தான் ஆண்டவரது பிள்ளைகளாகும் பாக்கியம், சிலாக்கியம் பெறமுடியும், ஆண்டவரது பரிசுத்தத்தில் நாம் பங்குள்ளவர்களாக மாறும்படிக்கு நமது நன்மைக்காக ஆண்டவர் நம்மைச் சிட்சிக்கிறார்.

நாம் ஆண்டவரது சிட்சையை அனுபவிக்கும் காலத்தில் அது நமக்கு மிகவும் கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால் அதில் பழகிப்போனவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தருகிறது - என்று வேதம் கூறுகிறது (எபி. 12 : 11).

எந்த அளவிற்கு நாம் எத்தனை சிட்சைகளை, சோதனைகளை சகிக்கிறோமோ அந்த அளவிற்கு அத்தனை கிரீடங்களை ஆண்டவர் நித்தியத்தில் நமக்கு அளிக்கப்போகிறார். இந்தப் பூலோகத்தில் நமக்கு வரும் ஒவ்வொரு சிலுவையும் நித்தியத்தில் ஒவ்வொரு கிரீடமாக மாறும். எனவே இப்பூலோகத்தில் எத்தனை சிலுவைகளை, சிட்சைகளை நீங்கள் எடுக்கமுடியுமோ அத்தனையையும் நீங்கள் எடுத்துக்கொள்ள மறக்காதீர்கள்.

வில்லியம் பூத்தின் சாட்சி

இரட்சண்ய சேனையின் ஸ்தாபகர் வில்லியம் பூத் அவர்களுக்கு கண் ஆப்ரேஷன் செய்யப்பட்டது. ஆப்ரேஷன் முடிந்து விட்டது; ஆனால் அவருக்குக் கண்பார்வை நிரந்தரமாகக் கோளாறாகிவிட்டது. தான் கண்பார்வையை இழந்தது அவருக்குத் தெரியாது. அவரது கண்களுக்குப் போட்டிருந்த கட்டை அவிழ்க்கும் நாள் வந்தது. யார் அவரிடம் இந்த

அதிர்ச்சி தரும் செய்தியைச் சொல்லுவது? டாக்டர்கள் அவரது மகனை அழைத்து நீங்கள் தான் உங்கள் அப்பாவிற்கு இதைச் சொல்ல வேண்டும் என்று கூறிவிட்டார்கள். எனவே கண்களின் கட்டுகளை அவிழ்க்கும் போது அவரது மகன் வில்லியம் பூத் அவர்களைப் பார்த்து, "அப்பா, இனிமேல் உங்களுக்கு கண்பார்வையே கிடைக்காது" என்று கூறினான். அதைக் கேட்ட அந்த சிலுவை வீரர், கொஞ்ச நேரம் அமைதியாயிருந்து விட்டு உடனே, "என் மகனே, இதுவரை கண்பார்வையோடு இருந்த வில்லியம் பூத் ஆண்டவருக்காக என்ன செய்தான் என்பதை இந்த உலகம் அறிந்து கொண்டது. ஆனால் இனிமேல் கண்பார்வையை இழந்த வில்லியம் பூத்தினால் ஆண்டவருக்காக எதை செய்ய முடியும் என்பதை இந்த உலகம் காணப்போகிறது" - என்று தைரியமாக உரைத்தார். என்ன துணிச்சலான வார்த்தைகள்.

ஆம்! ஆண்டவர் நம்மைத் தண்டிப்பது நமது பிற்கால நன்மைக்காகத்தான். கண்டிப்பும், தண்டனையும், சிட்சையும் இல்லாமல் வளரும் குழந்தைகள் பிற்காலத்தில் ஒழுக்கமுள்ளவர்களாக வளர வாய்ப்பில்லை. பிரம்பை எடுக்காதவன் தன் மகனைப் பகைக்கிறான் என்று சாலொமோன் அறிவுரை கூறுகிறார். ஐந்தில் வளையாதது ஐம்பதில் பெற்றோரை வளைக்கும்.

நமது கிறிஸ்தவ வாழ்க்கையில் எந்த அளவிற்கு நமக்கு சிட்சை, சோதனைகள் வருகிறதோ அந்த அளவிற்கு ஆண்டவர் நம்மைப் பயன்படுத்தப் போகிறார் என்று பொருள். எல்லோருக்கும் ஒரே மாதிரி சிட்சையைக் கொடுக்கமாட்டார். "எனக்கு மாத்திரமா இந்த சிட்சை? மற்றவர்களுக்கெல்லாம் இல்லையா?" என்று கேட்பது தவறு. பேதுருவைப் பார்த்து இயேசு, "நீ முதிர்வயதுள்ளவனாகும் போது உன் வேஷ்டியைக் கூட நீயாகக்கட்டிக் கொள்ள முடியாமல் பெலனற்றுப்போவாய்" - என்று கூறினார். அந்த சமயத்தில் இந்தப் பேதுரு யோவானைச் சுட்டிக்காண்பித்து, "ஆண்டவரே இவன் காரியம் என்ன?" - என்று கேட்கிறான். எனக்கு இரண்டு கண்களும் போனாலும் பரவாயில்லை, இவனுக்கு ஒரு கண்ணாவது போகுமா? - என்று கேட்பது போல இருக்கிறது.

இப்படிக் குதர்க்கமாய் கேட்ட பேதுருவுக்கு இயேசு, "இவனைப் பற்றி நீ கவலைப் படவேண்டாம். உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ" - என்று இயேசு அவனை கடிந்து கொள்கிறார். உனக்கு ஆண்டவர்

சிட்சையைக் கொடுத்திருப்பாரானால். அதை நீ சகிக்க கற்றுக்கொள். மற்றவர்களுக்கு ஏன் ஆண்டவரே சிட்சையைக் கொடுக்காமலிருக்கிறீர் - என்று ஆண்டவரை நாம் கேட்பதற்கு நமக்கு அதிகாரமில்லை. ஒவ்வொருவருக்கும் என்னென்ன சிட்சை, சிலுவை கொடுக்க வேண்டும் என்பது ஆண்டவரது வேலை. அதில் நாம் தலையிடக்கூடாது.

ஆண்டவரது பிரமாணங்களைக் கற்றுகொள்

நான் உபத்திரவப்பட்டது நல்லது அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்கிறேன். அநேகமாயிரம் பொன்வெள்ளியைக் காட்டிலும் நீர் விளம்பின வேதமே எனக்கு நலம். (சங். 119 : 71,72)

நமது வாழ்க்கையில் ஆண்டவர் உபத்திரவத்தை, சிட்சையை அனுப்புவதன் இன்னொரு முக்கியமான நோக்கம் - அதன் மூலமாக நாம் அவருடைய கட்டளைகளைக் கற்றுக்கொள்வதற்கு.

நமது பூலோக வாழ்க்கையில் நாம் மகிழ்ச்சியாக, பாதுகாப்பாக, சமாதானமாக, ஒற்றுமையாக, செல்வச்செழிப்போடு வாழவேண்டுமானால் அதற்கென்று சில நெறிமுறைகள், வழிமுறைகள் இருக்கிறது. இந்த வாழ்க்கையின் நெறிமுறைகள், பயனுள்ள பாடங்கள் வெறும் எழுத்தில், காகிதத்தில், கரும்பலகையில் எழுதப்பட்டால் மாத்திரம் போதாது; வகுப்பறையில், பிரசங்கமேடையில் ஒலித்தால் மாத்திரம் போதாது; அவைகளை நமது அன்றாட மனித வாழ்க்கையில் நடைமுறையில் கைக்கொள்ள வேண்டும்.

ஒரு சிறுகுழந்தையை எடுத்துக்கொள்ளுங்கள். "பாப்பா, தீயைத் தொடக்கூடாது" என்று போதிக்கிறோம். ஆனால் இந்தச் சிறிய சாதாரண போதனை அக்குழந்தைக்குப் புரியாமல் இருக்கலாம். ஆனால் அதே குழந்தை ஒருநாள் அந்தத் தீயைத் தொட்டு சூடு வாங்கின பின்பு, அக்குழந்தை தன் வாழ்நாள் முழுவதும் தீயைத் தொடக்கூடாது என்ற சாதாரண ஒரு வாழ்க்கைப்பாடத்தைக் கற்றுக்கொள்வதற்காக - ஒரு சின்னச் சூடு வாங்கியது நல்லது தானே?

மேலே கொடுக்கப்பட்டிருக்கிற அதே வழிமுறையைத் தான் ஆண்டவரும் அவரது கட்டளைகளை நமக்குக் கற்றுக் கொடுப்பதற்கு உபயோகப் படுத்துகிறார்.

நல்லமாட்டிற்கு ஒரு சூடு

நான் கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் வேலையில் அமர்ந்தேன். முதல் சம்பளத்தில் தசமபாகம் நான் கொடுக்கவில்லை, காரணம் உங்களுக்கே தெரியும்; அதுதான் வேலையில் சேர்ந்தவுடன் ஏகப்பட்ட செலவு. அடுத்தமாதம் பார்த்துக்கொள்ளலாம் என்று மெத்தனமாக இருந்தது மாத்திரமல்ல, அதை மொத்தமாக மறந்தேவிட்டேன். என்ன நடந்தது? திடீரென எனக்குக் காதுவலி வந்துவிட்டது. கால் வலியை எளிதில் தாங்கிக் கொள்ளலாம். ஆனால் இந்த காதுவலி இருக்கிறதே, அது பயங்கரமான வலி. அது வந்தவர்களுக்குத் தான் புரியும். மிகவும் கஷ்டப்பட்டேன். டாக்டரிடம் சென்று மருத்துவம் பார்த்து, ஒரு வாரம் முழுவதும் கஷ்டப்பட்டேன். பின்பு குணமானபின்பு டாக்டருக்கு காணிக்கை - மன்னிக்கவும் - Fees கொடுத்தேன் - சரியாக 40 ரூபாய். எனது அறைக்கு வந்து யோசித்துப் பார்த்தேன் எதற்காக இந்தக் காது வலி வந்தது, காரணம் என்ன? அன்று நான் என் அறையில் ஜெபித்த போது ஆண்டவர் பின்வருமாறு பேசினார்.

என்மகனே, நீ தசமபாகம் கொடுத்திருந்தால் 35 ரூபாய் தான். ஆனால் இப்பொழுது டாக்டருக்கு 40 ரூபாய் கொடுத்தாய். சைக்கிள் வாடகை, ஒருவாரம் பட்ட கஷ்டம் - இது எல்லாம் மிச்சமாகியிருக்கும்.

அன்று நான் எனது 22-வது வயதில் கற்றுக் கொண்ட பாடம் இன்னும் பின்பற்றி வருகிறேன், நல்ல மாட்டிற்கு ஒரு சூடு. நிச்சயமாக நான் உபத்திரவப்பட்டது நல்லது. ஆண்டவரது கட்டளைகளைக் கைக்கொள்ள அது உதவியது - என்று நான் சாட்சி சொல்ல முடியும். இதை உங்களுக்காகத்தான் சொல்லுகிறேன், நிச்சயமாக உங்களுக்கும் இது போன்ற சாட்சிகள் ஏராளமாக இருக்கலாம்.

ஒரு முறை ஒரு ஆட்டு இடையனை ஒரு பிரசங்கியார் போய் பார்த்தாராம். நூற்றுக்கணக்கான ஆடுகள் அவனது பராமரிப்பின் கீழ் மேய்ந்து கொண்டிருந்தது. ஆனால் ஒரு ஆடு மாத்திரம் நொண்டி நொண்டி நடந்தது. "இந்த ஆடு ஏன் நொண்டி நடக்கிறது" என்று கேட்ட போது அந்த ஆட்டு இடையன், "இந்த ஆடு அடிக்கடி பாதை தவறி விடுகிறது; ஆபத்தான இடங்களுக்கு அடிக்கடி ஓடி விடுகிறது; இது வழி தவறுவது மட்டுமல்லாமல் மற்ற ஆடுகளையும் வழிதப்ப வைக்கிறது, எனவே, நானே இதன் காலை ஒடித்து விட்டேன். 3 நாட்களாய் என் மேல் கோபம்;

சாப்பிடமறுக்கிறது; நான் சாப்பாடு கொடுத்தாலும் என் கையைக் கடிக்கிறது. ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயம்; ஒருவாரம் கழித்து, இந்த ஆடுதான் மற்ற எல்லா ஆடுகளுக்கும் ஒரு முன்மாதிரியான ஆடாக மாறும் என்று நான் நிச்சயமாகச் சொல்ல முடியும்" - என்று கூறினானாம். என்ன அருமையான அனுபவம் நிறைந்த வார்த்தைகள்.

இதை வாசிக்கிற நாம் கூட இந்த ஆட்டைப்போல சில வேளைகளில் வழிதப்பி ஓடி விடுகிறோம். அந்தச் சமயத்தில் நமது மேய்ப்பனாகிய ஆண்டவர் நமது காலை ஒடிப்பாரானால், நாம் கோபப்பட்டு, அந்த ஆடு இடையனின் கையைக் கடித்ததுபோல, நாமும் ஆண்டவரிடத்தில் சண்டை போடாமல், நல்ல மாட்டிற்கு ஒரு சூடு - என்ற படிப்பினையின் படி, நல்ல பிள்ளையாக மாறும்படி ஆண்டவரது கரத்தில் ஒப்புக்கொடுப்போமாக.

நான் உபத்திரவப்பட்டது நல்லது உமது பிரமாணங்களைக் கற்றுக் கொண்டேன்.

நான் நேசிக்கிறவர்களை கடிந்து கொண்டு சிட்சிக்கிறேன் (வெளி. 3 : 19).

☆☆☆

12. காலதாமதம்

அநேக நாளாய்க் காத்திருப்பது இருதயத்தை இளைக்கச் செய்யும்; ஆனாலும் தான் விரும்பியது வரும்போது அது ஜீவ விருட்சம் போல இருக்கும். (நீதி. 13 : 12)

எப்பொழுது விடியும் என்று காத்திருக்கிற ஜாமக்காரரைப் பார்க்கிலும் அதிக ஆவலாய் என் ஆத்துமா ஆண்டவருக்காகக் காத்திருக்கிறது. (சங். 130 : 6).

நான் கூப்பிட்டுக் கூப்பிட்டு என் தொண்டை வறண்டு போயிற்று; என் தேவனுக்காக நான் காத்திருந்து என் கண்கள் பூத்துப்போயிற்று (சங். 69 : 3).

ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக ஒரு குறிப்பிட்ட தேவைக்காக நாம் ஆண்டவரிடத்தில் ஜெபத்தின் மூலமாக விண்ணப்பித்திருக்கிறோம். ஆனால் அந்த ஜெபத்திற்குப் பதில் வர காலதாமதமாகிறது. அடிக்கடி ஜெபித்திருக்கிறோம், உபவாசத்தோடு ஜெபித்திருக்கிறோம்; அவரது வாக்குத்தத்தத்தை முன்வைத்து உரிமை பாராட்டி ஊக்கமாக ஜெபித்திருக்கிறோம். ஆனால் இந்த ஜெபங்கள் அனைத்தும் கிணற்றில் போட்ட கல்லைப்போலத் தோன்றுகிறது; நமது ஜெபத்திற்குப் பதில் இன்று வரை வரவில்லை, இதன் நிமித்தம் நமக்கு மனச்சோர்வு வருகிறது.

மேலே கொடுக்கப்பட்டுள்ள 69, 130-ம் சங்கீத புத்தகங்களை எழுதியவரின் வேதனை இன்னும் அதிகப்படியாக இருக்கிறது. நான் ஆண்டவரை நோக்கிக் கூப்பிட்டுக் கூப்பிட்டு என் தொண்டையெல்லாம் வறண்டு போயிற்று. தேவனுடைய பதிலுக்காகக் காத்திருந்து காத்திருந்து என் கண்களும் பூத்து விட்டது - என்று தாவீது எழுதுகிறார் (69 : 3). ஒரு வேளை தாவீது சவுல் மூலமாகத் தனக்கு வரும் ஆபத்துக்களிலிருந்து தன்னை விடுவிக்கும்படியாக, தனிமையில், உயிருக்குப் பயந்து ஒளிந்து கொண்டு, தனது சத்தத்தைச் சவுல் கேட்டு விடுவான் என்று எண்ணி, ஒரு குகைக்குள் போய் அழுது ஜெபித்திருப்பான். தொண்டை வரண்டு போகும் படி என்றைக்காவது ஜெபித்திருக்கிறோமா? ஆனால் இந்தத் தாவீது

ஜெபித்திருக்கிறான். ஆனால் அப்படிப்பட்ட ஜெபத்திற்குக் கூட ஆண்டவர் பதில் கொடுக்கவில்லை. நிச்சயமாக தாவீது மனம் தளர்ந்து சோர்ந்து போயிருப்பான்.

ஆம்! காலதாமதம் நமக்கு மனச்சோர்வைக் கொண்டு வருகிறது. ஆண்டவர் நமது ஜெபத்திற்குப் பதில் கொடுப்பதற்குக் காலதாமதம் செய்வதால் நமக்கு வரும் மனச்சோர்வைப்பற்றி சிந்திக்கப் போகிறோம். சற்று கவனமாக படியுங்கள்.

1. உங்களது காலதாமதம் ஆண்டவருக்கு ஆயத்த நேரமாயிருக்கலாம்

நாம் வாழும் இந்த 21-ம் நூற்றாண்டு ஒரு 'வேகமான யுகம்'. நமது பூமிகூட ஒரு வினாடிக்கு 24 கி.மீட்டர் வேகத்தில் விண்ணில் ஓடிக்கொண்டிருக்கிறது. ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு நாம் பிரயாணம் செய்யும் போது, எந்த பஸ் வேகமாகச் செல்லும், மிகக்குறைந்த பிரயாண நேரத்தில் அந்த ஊர் போய் சேரும் என்று விசாரிக்கிறோம்.

இதுமாத்திரமா? Instant Coffee உடனடி காப்பி, Fast Food அதிவேக உணவு 5 நிமிடத்தில் நூடுல்ஸ் உணவு - 3 வருடத்தில் போட்ட பணம் இரண்டு மடங்கு பெருக்கம் - இப்படி எதைப் பார்த்தாலும் வேகமாய், துரிதமாய் நடக்க வேண்டுமென்று விரும்புகிறோம், எதிர் பார்க்கிறோம். அதே மனப்பான்மையைத்தான் ஆண்டவருடைய விஷயத்திலும் கடைப்பிடிக்க விரும்புகிறோம் - துரிதமாய் ஆராதனை முடிய வேண்டும் - குறுகிய பிரசங்கம், சுருக்கமான ஜெபத்திற்கு பெருக்கமான ஆசீர்வாதம் - இப்படியாக எல்லாவற்றிலும் துரிதமான, வேகமான, பதிலையும், பலனையும் எதிர்பார்க்கிறோம். நிச்சயமாக இது ஒரு கெட்ட பழக்கம் தான். இப்படியாக நம்மையறியாமலேயே ஒரு கெட்ட பழக்கத்திற்கு அடிமையாகி விட்டோம். இதன் எதிரொலிதான் ஆண்டவர் நமது ஜெபத்திற்கு உடனடியாகப் பதில் கொடுக்க வேண்டும் என்ற ஏக்கமும் எதிர்பார்ப்பும்.

ஆனால் நமது மனித வாழ்க்கையிலும், ஆண்டவரின் இயற்கை அமைப்பிலும் சிருஷ்டிப்பிலும் இருக்கும் ஒரு உண்மையை நாம் உணர வேண்டும்; ஒப்புக்கொள்ள வேண்டும். அது என்ன? அதி வேகமாய்ப் பெற்ற எந்த ஒரு பொருளும் அதே வேகத்தில் நம்மை விட்டுப்போய் விடும். திடீர் நட்பு; லாட்டரி சீட்டில் விழுந்த திடீர் பணம்; திடீர் புகழ்;

செவ்வாக்கு - இவையனைத்தும் வந்த வேகத்தில் மறைந்து விடும்; இது இயற்கை நமக்குக் கற்பிக்கும் ஒரு சாதாரண அடிப்படை உண்மை. உண்ணும் உணவையே எடுத்துக்கொள்ளுங்கள் - திடீர் சமையல் உதாரணமாக மைக்ரோவேவ் Microwave அடுப்பில் ஒரு கோழி இறைச்சியை 2 நிமிடத்தில் வேகவைத்து விடலாம் - ஆனால் அது அவ்வளவு ருசியாக இருக்காது.

பொதுவாக மனிதனுடைய சுபாவம் - எதையுமே உடனே பெற வேண்டுமென்று விரும்புவது - நினைத்தேன் வந்தாய் - என்ற கோட்பாட்டின் படி - ஜீம்பூம்பாங் - என்று நாம் சொன்னவுடன் நாம் நினைத்ததை அடைந்து விட விரும்புகிறோம். இது முற்றிலும் தவறானது மாத்திரமல்ல, ஆபத்தானது - என்பதை நாம் அறிவதில்லை; உணர்வதில்லை.

இந்த பூமியின் மேல் வானத்தின் கீழ் நடக்கவேண்டிய ஒவ்வொரு காரியத்திற்கும், செயலுக்கும் ஆண்டவர் ஒரு குறிப்பிட்ட காலம், கெடு வைத்திருக்கிறார். இதைதான் சாலொமோன் 'எல்லாவற்றிற்கும் ஒரு காலம்' உண்டு என்று கூறுகிறார். இதே கருத்தைத் தான் பேதுருவும் (I பேது. 5 : 6) ஏற்ற காலத்தில் உங்களை உயர்த்தும் படிக்கு அவரது பலத்த கரத்திற்குள் அடங்கியிருங்கள் என்று எழுதுகிறார். அப்படியானால் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும், சம்பவத்திற்கும் ஏற்ற காலம் என்று ஒன்று ஆண்டவரால் குறிக்கப்பட்டிருக்கிறது - என்பதை நாம் உணர்ந்து கொள்ளுவது நல்லது.

2. ஆண்டவரது கடிகாரம் சரியாகத்தான் ஓடுகிறது

நமது கடிகாரம் எப்பொழுதுமே வேகமாகவே ஓடிக் கொண்டிருக்கிறது. ஆனால் ஆண்டவரது கடிகாரம் எப்பொழுதுமே சரியாகத்தான் ஓடிக்கொண்டிருக்கிறது.

நாம் கால அளவைக்குறிக்கும் முறையும் ஆண்டவரது முறையும் வித்தியாசமாக இருக்கலாம். ஆண்டவருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும் ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கலாம் என்று வேதம் (I பேதுரு. 3 : 8) இதற்கு விளக்கம் கொடுக்கிறது. ஆண்டவர் காலதாமதம் செய்கிறார் - என்று புலம்புகிற நாம், ஆண்டவரது காலத்தை அளக்கும் அளவுகோல் சற்று வித்தியாசமானது என்பதை புரிந்து கொள்ளத் தவறுகிறோம். 8 வயது 3 அடி உயரமுள்ள ஒரு சிறுவன் தன் அம்மாவைப் பார்த்து அம்மா நான் 10 அடி உயரம் - கோலியாத்தைக் காட்டிலும் நான்

உயரமானவன் - என்று மகிழ்ச்சியோடு கூறினானாம். காரணம் அவன் உபயோகப்படுத்திய அளவுகோல் வித்தியாசமானது. இச்சிறுவனைப்போல நாமும் தவறான கால அளவுகோலை பயன்படுத்துகிற காரணத்தினால்தான் ஆண்டவர் காலதாமதம் செய்கிறார் என்று புகார் செய்கிறோம்.

கொஞ்சம் பொறுமையாக இருக்கப் பழகுங்கள். அவசரப் படாதீர்கள். ஆண்டவரது கடிகாரம் சரியாகத் தான் ஓடிக் கொண்டிருக்கிறது. கோளாறு நமது கடிகாரத்தில் தான் - என்பதை உணருங்கள்.

3. காலதாமதம் மறுப்பு அல்ல - அது பயிற்சியின் காலம்

காலதாமதம் மறுப்பு அல்ல (Delay is not denial), காலதாமதம் அதிகம் ஆகஆக நமக்கு ஆண்டவர் கொடுக்கப்போகிற ஆசீர்வாதத்தின் வட்டி விகிதமும் அதிகமாகும் என்பதை நாம் மறக்கக்கூடாது. தாமதம் அதிகரிக்கும்போது ஆசீர்வாதத்தின் எண்ணிக்கையும் அளவும் எடையும் அதிகரிக்கும்.

"கர்த்தருக்காக பொறுமையுடன் காத்திருக்கிறேன்" என்று தாவீது (சங். 40 : 1) தன் அனுபவத்திலிருந்து எழுதுகிறார். கர்த்தருக்காக காத்திருப்பது தான் கர்த்தருடைய கல்லூரியில் கற்றுக்கொள்ள வேண்டிய கடினமான பாடம். ஆண்டவருடைய வேளைக்காக காத்திருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஆபிரகாமிற்கு ஆண்டவர் கொடுத்த வாக்குத்தத்தம் நிறைவேற 25 ஆண்டுகள் எடுத்தது. அதன் பின்புதான் ஈசாக்கு பிறந்தான். மோசே 40 ஆண்டுகள் வனாந்தரத்திலே ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். அதன் பின்பு தான் ஆண்டவர் மோசேக்குத் தரிசனமாகி, இஸ்ரவேல் மக்களை கானான் தேசத்திற்கு தலைமை தாங்கி வழிநடத்தும் படியாக அழைக்கிறார். 40 ஆண்டுகள் இடைவெளி மிகவும் அதிகமான கால இடைவெளி. இதற்குக் காரணம் என்ன தெரியுமா? அவனுக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்பும் அந்த அளவிற்கு பெரியதாய் அதிக முக்கியமானதாய் இருந்தது. அதற்கு 40 ஆண்டுகள் - காலதாமதமல்ல - 40 ஆண்டுகள் அடங்கிய வனாந்தரப் பயிற்சியின் காலம் அது.

ஆம்! நமது காத்திருக்கும் காலம் ஆண்டவர் நமக்கு அளிக்க விரும்பும் பயிற்சியின் காலமாக இருக்கலாமல்லவா? அது மோசேயின் வாழ்க்கையில் அதி முக்கியமான உண்மை.

யோசேப்பு 17 வயதில் எகிப்திற்குச் சென்றான். தனது 30 வது வயதில் எகிப்தின் அதிபதியாக மாறினான். ஆனால் இந்த 13 ஆண்டு கால இடைவெளியில் அவன் சொல்லொணா பாடுகளையும், வேதனைகளையும் மனச்சோர்வுகளையும் அவன் அனுபவிக்க நேர்ந்தது. 13 ஆண்டுகளும் பொறுமையுடன் காத்திருந்தான். ஏன் இந்த போத்திபார் என்னை அநியாயமாக குற்றஞ்சாட்டி சிறைச்சாலையில் அடைத்தான்? ஏன் இந்த சிறைத்தண்டனை? ஏன் அந்த பானபாத்திரக்காரன் நான் சொன்னதை மறந்தான்? எத்தனை ஆண்டுகள் இப்படி நான் சிறைக்கம்பிகளை எண்ண வேண்டியிருக்கும் - என்று யோசேப்பு கேள்விமேல் கேள்வி கேட்கவுமில்லை, அங்கலாய்க்கவுமில்லை - அவசரப்படவுமில்லை. கர்த்தருடைய வேளைக்காக பொறுமையுடன் காத்திருந்தான்.

4. அன்னாளின் பொருத்தனைக்காக ஆண்டவர் காத்திருக்கலாம்.

இதை வாசிக்கும் கிறிஸ்தவ நண்பனே! சில தேவைகளுக்காக, ஆசீர்வாதங்களுக்காக, அல்லது சில வியாதிகள், சில தடைகள், சில பிரச்சனைகள் நீங்குவதற்காக நீ வெகுகாலமாய் ஜெபித்துக் கொண்டிருக்கிறாய். நாட்கள் மாதங்களாக, மாதங்கள் வருடங்களாக உருண்டோடி விட்டது. ஆனால் உன் ஜெபத்தை ஆண்டவர் கேட்டு பதிலளித்தபாடு இல்லை. என்ன செய்யலாம்? ஆண்டவரை விட்டு ஓடிவிடலாமா? யோபுவின் மனைவியைப் போல ஆண்டவரை சபித்து உன் ஜீவனை விடு - என்று சொல்லப் போகிறாயா? அவசரப்படாதே, ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு.

ஆண்டவரது வேளைக்காக காத்திரு. பொறுமையுடன் காத்திரு. முறுமுறுப்பு இல்லாமல் புன்முறுவலுடன் சிரித்த முகத்துடனும் காத்திரு. "உங்களுடைய வேளை எப்பொழுதும் இருக்கிறது, ஆனால் என்னுடைய வேளை இன்னும் வரவில்லை" என்று இயேசு தன் சீஷர்களைப் பார்த்து சொன்ன அதே வார்த்தைகளை உனக்கும் எனக்கும் அவர் எடுத்துரைக்கிறார். காலதாமதத்திற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது.

அன்னாளுக்கு குழந்தை பாக்கியம் அருளுவதிலும் கால தாமதம் ஏற்பட்டது. அவளது உள்ளம் நொறுக்கப்பட்டது. ஆண்டவரது சமூகத்தில் அவரோடு ஒரு பொருத்தனை பண்ணினாள். ஒருவேளை ஆண்டவரது கால தாமதத்திற்கு இது ஒரு காரணமாக இருக்கலாம். ஆண்டவரோடு இந்த

அன்னாளைப்போல பொருத்தனை பண்ணு. ஒரு வேளை ஏற்கெனவே நீ பண்ணின பொருத்தனைகள் ஏதாவது உண்டா? அதை நீ முதலாவது நிறைவேற்றும்படியாக ஆண்டவர் எதிர்பார்க்கலாம்.

5. அவசரப்படாதே - விசுவாசத்தை இழந்து விடாதே

ஒரு ஹாலில் ஒரு இன்னிசை விழா நடந்தது. அந்த விழாவில் பங்குபெற்ற ஒரு பெண், அந்த விழா முடிந்து வீடு சென்றபோது தனது விலையேறப்பெற்ற மோதிரத்தை அவள் தொலைத்துவிட்டாள். நிச்சயமாக அந்த ஹாலில் தான் தொலைந்திருக்கக்கூடும் என்று யூகித்து, அந்த ஹாலின் மேனேஜருக்கு ஃபோன் பண்ணினாள். அந்த மேனேஜரும் அந்தப் பெண்ணிடம், "உங்கள் மோதிரம் எதுவும் ஹாலில் கிடக்கிறதா என்பதை பார்த்து விட்டு வருகிறேன் லைனிலேயே இருங்க, ஃபோனை வைத்து விடாதீர்கள்" - என்று கூறிவிட்டு மோதிரத்தை தேட போய்விட்டார். சில நிமிடங்களில் காணாமற்போன அந்த மோதிரம் கிடைத்தது. ஆனால் மோதிரத்தைத் தொலைத்த அந்தப் பெண் காணாமற்போய்விட்டாள். பொறுமையை இழந்து மோதிரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் இழந்து ஃபோனை வைத்து விட்டாள். திரும்பவும் ஃபோன் பண்ணவுமில்லை.

பார்த்தீர்களா! அந்த அம்மாவிற்கு அவ்வளவு அவசரம். இனிமேல் அது எங்கே கிடைக்கப்போகிறது என்ற அவிசுவாசம், பொறுமையின்மை. இது தவறு. காலதாமதம் மறுப்பு அல்ல - வருவேன் என்று சொன்னவர் நிச்சயம் வருவார் என்று நம்புகிறோம் அதுபோல தருவேன் என்று சொன்னவர் நிச்சயம் தருவார். சோர்ந்து போகாமல் இருப்போமானால் ஏற்ற காலத்தில் அறுவடை செய்வோம்.

கர்த்தருக்குக் காத்திரு, அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திட மனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு (சங். 27 : 14).

கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புது பெலனடைந்து கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகமாட்டார்கள் (ஏசா. 40 : 31).

அநேக நாட்களாய் காத்திருப்பது இருதயத்தை இளைக்கச் செய்யும்; ஆனால் விரும்பினது வரும்போது அது ஜீவவிருட்சம் போல இருக்கும் (நீதி. 13 : 12).

13. தடைகள் மூலம் மனச்சோர்வு

அந்த தேசத்து ஜனங்கள் யூதர்களின் கைகளைத் தளரப்பண்ணி அவர்கள் ஆலயத்தைக் கட்டாதபடிக்கு அவர்களை சங்கடப்படுத்தினார்கள்.

அவர்கள் எருசலேமிலுள்ள யூதரிடத்திற்குத் தீவிரமாய்ப்போய், பலவந்தத்தோடும், கட்டாயத்தோடும், தேவனுடைய ஆலய கட்டுமானப் பணியைத் தடை செய்து நிறுத்திப்போட்டார்கள். தரியு ராஜாவின் இரண்டாம் வருஷம் மட்டும் எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயப்பணி நிறுத்தப்பட்டது (எஸ்றா. 4 : 23,24).

நம்முடைய வாழ்க்கையில் சில காரியங்களை முடிக்க, சில திட்டங்களை நிறைவேற்றி முடிக்க நாம் மும்முரமாய் முயற்சிக்கும் சமயத்தில் எதிர்பாராத வண்ணமாக ஒரு முட்டுக்கட்டை முளைக்கிறது, உடனே நமக்கு மனச்சோர்வு வருகிறது; இது இயற்கை.

70 ஆண்டுகளாய் பாபிலோன் தேசத்தில் அடிமைகளாய் வாழ்ந்த இஸ்ரவேல் மக்கள் மீண்டும் எருசலேமிற்கு வந்தார்கள். வந்தவுடன் முதல் வேலையாக எருசலேமிலுள்ள ஆலயத்தைக் கட்ட ஆரம்பித்தனர். அஸ்திபாரம் போடப்பட்டு ஆலயக்கட்டுமானப்பணி அங்கு விரைவில் நடந்து கொண்டிருக்கிற போது திடீரென ஒரு தடை ஏற்படுகிறது. எருசலேமில் வாழ்ந்த யூதரல்லாத மக்கள் அந்த ஆலயத்தைக் கட்ட விடாமல் தடை செய்தார்கள். இப்படிப்பட்ட தடை வந்த போது ஆலயக்கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த அனைவரது கைகளும் தளர்ந்து போயிற்று; மனச்சோர்வும் ஏற்பட்டது.

1. சில தடைகள் தற்காலிகமானவைதான் - நிரந்தரமானதல்ல

இது போலவே நமது கிறிஸ்துவ வாழ்க்கையிலும் பல விதமான தடைகள், இடையூறுகள், குழப்பங்கள் வரும் போது நமது மனம் தளர்ந்து போகிறது. உதாரணமாக, நீங்கள் புதிதாக ஒரு வீடு கட்டிக் கொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். திடீரென காண்ட்ராக்டர் தகராறு பண்ணுவான். அல்லது கொத்தனார் பாதியில் விட்டு விட்டு வேறு கட்டிட வேலைக்குப் போய் விடுவான். எனக்கு ஒரு

அனுபவம் உண்டு. என் வீடு கட்டுவதற்கு 7 அடி அஸ்திபாரம் தோண்டி முடித்த அன்று இரவு பயங்கரமான ஒரு பேய்மழை (கோவையில் இப்படிப்பட்ட மழை வருவது ரொம்ப அபூர்வம்) பெய்தது. அடுத்த நாள் காலையில் பார்த்தால் வீட்டின் அஸ்திபாரம் முழுவதும் தண்ணீர் நிரம்பி நிற்கிறது. நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே கொஞ்சம் கொஞ்சமாக மண்சரிந்து அஸ்திபாரத்திற்குள் விழுகிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் பொறுமையோடும், நம்பிக்கையுடனும் இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். இது போதாது என்று என் காண்ட்ராக்டர் வேறு, "சார் நீங்க நல்ல நேரம் பார்க்காமல் அஸ்திபாரம் போட்டீர்கள், அதனால் தான் இது" - என்று கூறி எரிகிற நெருப்பில் எண்ணையை ஊற்றினான். அப்பொழுது அவனைப் பார்த்து நான், "அஸ்திபாரம் தோண்டிய பின்பு தோண்டிய மண்ணை இதைச் சுற்றிலும் ஒரு இடைவெளியும் விடாமல் போட்டிருந்தால் இந்தத் தவறு ஏற்பட்டிருக்காது. உன்னுடைய ஆள் பக்கத்தில் இருந்து மழை ஆரம்பித்தவுடன் வந்து பார்த்திருந்தால் இந்த விபத்தைத் தடுத்திருக்க முடியும். இப்பொழுது நேரம் சரியில்லை என்று நீ சொல்லி உன் தவறை மறைக்காதே - என்று அவனை கடிந்து கொண்டேன்.

ஆம்! இப்படிப்பட்ட இயற்கைத் தடைகள் நமது அஜாக்கிரதையினால் தான் ஏற்படுகிறது. இதைப் பார்த்தபோது என் மனதிற்கு கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனாலும் நான் சற்றும் மனம் தளரவில்லை.

இப்படி வீடு கட்டும்போது சில தடைகள் வருகிறது. அதுபோல ஒரு திருமணத்தை நீங்கள் ஒழுங்கு செய்து கொண்டிருக்கும் போது சில எதிர்பாராத தடைகள் வரத்தான் செய்யும். அதனால்தான் "வீட்டைக் கட்டிப்பார், கல்யாணம் பண்ணிப்பார்" என்ற பழமொழியே வந்தது. ஆனால் இவ்வகைத் தடைகள் - வெறும் Passing Phase தற்காலிகமானவைகள் தானே தவிர, நிரந்தரமானவைகள் அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இஸ்ரவேல் மக்கள் கானான் தேசத்தை நோக்கிப் பயணத்தை ஆரம்பித்தபோது, செங்கடல் ஒரு பெரிய தடையாக வந்தது. மோசேயைக் கேட்டால் அவன் என்ன சொல்லுவான் தெரியுமா? "செங்கடல் கூட எனக்குப் பெரிய தடையாகத் தெரியவில்லை. ஆனால் இந்த இஸ்ரவேல் மக்கள் செங்கடல் ஓரத்தில் நின்று கொண்டு என்னைப் பார்த்து, "எகிப்திலே

பிரேதக் குழிகள் இல்லையென்றா எங்களை இந்த வனாந்தரத்திலே சாகும்படி கொண்டுவந்தீர்?" - என்று சொன்ன வார்த்தைகள் தான் எனக்கு செங்கடலைப் பார்க்கிலும் பெரிய தடையாக இருந்தது" - என்று மோசே சொல்லியிருப்பான்.

எருசலேமிலுள்ள ஆலயக்கட்டுமானப் பணியில் ஏற்பட்ட தடங்கலையும், இஸ்ரவேல் மக்களின் கானான் தேசத்தை நோக்கிப்போகும் பயணத்தில் இந்தச் செங்கடல் மூலம் ஏற்பட்ட தடையையும் - இந்த இரண்டையும் சற்று பொறுமையுடன் ஆராய்வோமானால் - உண்மையிலேயே இவைகள் தடைகள் அல்ல; மாறாக அவைகள் வெற்றிக்கு நடத்தி செல்லும் ஏணிப்படிகள் என்பதை நாம் எளிதில் புரிந்து கொள்வோம்.

2. தடைகள் வெற்றியின் படிகள் - ஆலயக்கட்டுமானப் பணியில் ஏற்பட்டதடை

யூதர்களின் எதிரிகள் ஆலயக்கட்டுமானப் பணியைத் தடை செய்வதில் வெற்றி பெற்றது என்னவோ உண்மை தான். ஆனால் அது தற்காலிகமானது தான். கோரேஸ் ராஜா அவனாகவே யூதர்களை அழைத்து எருசலேமிற்குச் சென்று ஆலயத்தைக் கட்டும்படி கட்டளையிட்டான். 'காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்' என்ற நடைமுறை உண்மையை இந்த யூதர்கள் மறந்த காரணத்தால் கோரேஸ் ராஜாவின் ஆட்சிக் காலத்திலே கட்டி முடிக்காமல் ஆலயப் பணியை சற்று ஆறப்போட்டார்கள். சற்று மெத்தனமும் சுணக்கமும் காண்பித்தார்கள். இதைப் பயன்படுத்தி யூதர்களின் எதிரிகள் தற்சமயம் ஆட்சிபுரியும் தரியு ராஜாவிற்கு புகார் கடிதம் எழுதினார்கள். அக்கடிதத்தில் ஆலயம் கட்டுவதைப் பற்றி அவ்வளவாக எழுதாமல், அலங்கம் கட்டுவதாகவும், இவர்கள் ராஜாவிற்கு வரியே இனி செலுத்தமாட்டார்கள் - என்றும் இல்லாததையும் பொல்லாததையும் ராஜாவிற்கு எழுதி விட்டார்கள். ராஜாவும் அதை ஏற்று ஆலயக் கட்டுமானப் பணிக்குத் தடை உத்தரவைப் போட்டுவிட்டான்.

இந்தக் கட்டத்தில் தான் ஒரு முக்கியமான உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த மாதிரி சூழ்நிலையில் தான் நாலும் தெரிந்த, நன்கு விஷயம் தெரிந்த, விபரமான தலைவர்கள் நமக்குத் தேவை.

இப்பொழுது அவர்களுக்குமுன்பு உள்ள கேள்வி ராஜாவின் தடை உத்தரவை எப்படி வாபஸ் வாங்க வைப்பது. பொதுவாக அரசாங்கம் ஒரு

உத்தரவை பிறப்பித்துவிட்டால் அதை வாபஸ் பெற வைப்பது ஒரு பெரிய Herculean Task - ஹெர்குலஸ் வேலை, இமாலயப்பணி - அந்தச் சவாலை ஆகாய் தீர்க்கதரிசி, செருபாபேல், யெசுவா, சகரியா - ஆகிய இந்த 4 தலைவர்களும் எடுத்துக்கொண்டு, ஒன்று கூடி ஆலோசனை பண்ணி தரியு ராஜாவிற்குக் கடிதம் எழுதினார்கள். அவர்கள் எழுதிய கடிதத்தின் சாராம்சம் வெகு நேர்த்தியானது. அந்தக் கடிதத்தின் உயிர்நாடியைப் போல உள்ள முக்கியமான விஷயம் என்ன தெரியுமா? கோரேஸ் ராஜா பல ஆண்டுகளுக்கு முன்பு பிறப்பித்த கட்டளையின் நகலை கஜானாவில் தேடிப்பார்க்கும் படியாக வேண்டுகோள் விடுத்தது.

இப்படி இவர்கள் எழுதிய கடிதம் ராஜாவின் உள்ளத்தை மாற்றியது. கஜானாவைத் தேடி கோரேஸ் ராஜாவின் உத்தரவின் நகல் கண்டுபிடிக்கப் பட்டது. இது யூதர்களுக்கு ஒரு மாபெரும் வெற்றி. அது மாத்திரமல்ல, அந்த ஆலயம் கட்டுவதற்கு உண்டான செலவை நதிக்கு அப்புறத்தில் வசூலிக்கப்படும் வரியிலிருந்து கொடுக்கும் படியும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது; இந்த ஆலயப்பணியை யாராவது தடை செய்தால் அவர்கள் கொல்லப்பட வேண்டும்; இந்த இரண்டுமே புது உத்தரவுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆம்! சில சமயங்களில் நமக்குத் தடைவந்ததின் விளைவாக இனிமேல் எந்த தடையும் வராதபடிக்கு நமக்கு வழி பிறக்கப்போகிறது. இனிமேல் யுத்தமே வராதபடிக்கு ஒரு சூழ் நிலையை உருவாக்குவதற்காக ஒரு யுத்தம் வருவது நல்லதுதானே. ஆலயம் கட்டுவதற்கு எந்த தடையுமே வராதபடிக்கு ஒரு வழியை உண்டாக்குவதற்காக ஒரு தடை வந்தால் நல்லது தானே.

3. செங்கடல் தடையா அல்லது எதிரியின் கல்லறையா?

செங்கடல் இஸ்ரவேல் மக்களுக்காக வைக்கப்பட்ட தடை அல்ல. ஆண்டவர் செங்கடலை வைத்ததின் முக்கியமான நோக்கம் - அது எகிப்தியர்களுக்கும் பார்வோன் சேனைக்கும் ஒரு சவக்குழியாக மாறுவது தான் ஆண்டவரது ஒரிஜனல் திட்டம். இந்த இஸ்ரவேல் மக்கள் வேறு எந்த வழியாகப் போயிருந்தாலும் இந்தப் பார்வோன் அவர்களைப் பின் தொடர்ந்து பிடித்திருப்பான். ஆனால் செங்கடல் வழியாக அவர்கள் வந்த காரணத்தினால் தான் அதில் அவர்கள் மூழ்க நேர்ந்தது. இதில் கவனிக்க வேண்டிய ஒரு முக்கியமான உண்மை - இஸ்ரவேல் மக்களுக்காக செங்கடல் திறந்தது ஒரு

பெரிய அற்புதம் அல்ல, அதைக் காட்டிலும் மிக முக்கியமான அற்புதம் - எல்லா இஸ்ரவேல் மக்களும் செங்கடலைத் தாண்டிய பின்பும், எல்லா எகிப்தியரும் செங்கடலுக்கு உள்ளே இருக்கும் போதும் - இந்த இரண்டு நிபந்தனைகளையும் நிறைவேறிய நிலையில் அந்தச் செங்கடல் மூடியதுதான் மிகப்பெரிய அதிசயம், அற்புதம். இஸ்ரவேல் மக்களை பின் தொடராத படிக்கு எகிப்தியரைத் தடுப்பதற்கு - இதைக் காட்டிலும் ஒரு Master Plan பெரிய செயல்திட்டத்தை யாராலும் வடிவம் அமைக்க இயலாது.

அப்படியானால் இப்பொழுது சொல்லுங்கள். செங்கடலை ஆண்டவர் வைத்ததின் நோக்கம் - இஸ்ரவேல் மக்களுக்கு தடையாக இருப்பதற்காகவா? நிச்சயமாக இல்லை! அதற்கு மாறாக செங்கடலை எதிரிகளின் சவக்குழியாக மாற்றி விட்டார்.

அதுபோலவே ஆலயக்கட்டுமானப் பணிக்கு ஒரு தடையுத்தரவு வந்தது. ஆனால் அப்படித் தடையுத்தரவு வந்ததினால் தான் கஜானாவைத் தேடி பழைய உத்திரவையும் அவர்கள் பார்க்க நேர்ந்தது. அதன் விளைவு இனி யாராலும் எந்த வித தடையும் வரமுடியாத படிக்கு ஒரு புது உத்தரவு பிறப்பிக்கப்பட்டது; அதுமாத்திரமல்ல, அந்த ஆலயம் கட்டுவதற்கு ராஜா தனது வரிப்பணத்தையும் கொடுக்க முன்வந்தார். வரிப்பண உதவி யூதர்கள் கேட்காத ஒரு வேண்டுகோள் என்பதும் கோரேஸ் ராஜாவின் உத்தரவில் இல்லாததும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தடைகளைப் பார்த்து நாம் தளர்ந்து போகக் கூடாது. தடைகளை வெற்றியின் படிகளாய் மாற்றக்கூடிய தளகர்த்தர் நமக்கு முன்பாகச் செல்கிறார். நமக்கு முன்பாக செங்கடல் இருக்கலாம்; யோர்தான் நதி கரை புரண்டு ஓடலாம்; எரிகோ மதில் வானளாவ நிற்கலாம். ஆனால் நாம் நமது உடன்படிக்கைப் பெட்டியைத் தோளில் சுமந்து கொண்டு யோர்தான் நதியில் ஓடும் தண்ணீரின் மேல் நமது விசுவாசக் கால்கள் பட்டவுடன் ஒரு அற்புதம் நிகழும்; வழி பிறக்கும்.

எரிகோ மதிலை நாம் தைரியமாக வலம் வரவேண்டும்; விசுவாசம் நிறைந்த வார்த்தைகளைச் சொல்லி ஆர்ப்பரிக்கும் போது அந்த எரிகோ மதில் கீழே விழும்.

தனது ஊழியத்தில் பல தடைகளைப் பார்த்து மனம் சோர்ந்து போய் ஒரு ஊழியக்காரர் உட்கார்ந்திருந்தாராம். அப்பொழுது ஒரு எறும்பு தன் வாயில் ஒரு சிறு வைக்கோலைக் கவ்விக்கொண்டு தரையில் ஊறிப்போய்க் கொண்டிருந்தது. அதன் பாதையில் ஒரு சிறு வெடிப்பு இருந்தது. அந்த வெடிப்பை எப்படித் தாண்டுவது என்று சற்று தயங்கி நின்றது. உடனே தன்வாயிலிருந்த வைக்கோலை அந்த வெடிப்பின் மேல் போட்டது. அது அந்த எறும்பிற்கு ஒரு அழகான பாலமாக அமைந்தது. அந்தப் 'பாலத்தைத்' தாண்டி அடுத்த பக்கம் போய், மீண்டும் அந்த வைக்கோலைத் தன் வாயில் கவ்விக்கொண்டு தன் நீண்ட பயணத்தைத் தொடர்ந்தது.

இந்தக் காட்சியைப் பார்த்த அந்த ஊழியக்காரரது உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சி தோன்றியது. ஒரு புது நம்பிக்கை தோன்றியது. அந்த எறும்பு தன் வாயிலிருந்த 'பாரத்தை' எவ்வளவு ஞானமாய் ஒரு 'பாலமாக' மாற்றியது. அதுபோல தானும் தனக்கு முன் இருக்கிற தடைகளையெல்லாம் தருணங்களாக, வெற்றியின் படிகளாக மாற்றக்கூடிய ஒரு புதிய சக்தியையும் புத்துணர்ச்சியையும் பெற்றுக் கொண்டு சென்றார்.

4. விடாமுயற்சி

நமது வாழ்க்கையில் பல தடைகளை நாம் சந்திக்கும் போது நாம் சோர்வடைவதற்குப் பதிலாக விடாமுயற்சியுடையவர்களாய் மாற வேண்டும். தாமஸ் ஆல்வா எடிசனை எடுத்துக்கொள்ளுங்கள். எலெக்ட்ரிக் பல்ப் கண்டு பிடிக்கும் முயற்சியில் 1000 வித்தியாசமான வாயுக்களை பல்பில் நிரப்பி சோதித்தார். எல்லாமே தோல்வி. யாரோ கேட்டார்களாம் - இந்த 1000 வாயுக்களை முயற்சித்தது அனைத்தும் வீண்தானே என்று. அதற்கு அவர் கொடுத்த பதில், "யார் சொன்னது அது வீண் என்று. இப்பொழுது இந்த 1000 வாயுக்களையும் இனிமேல் நான் முயற்சிக்கக்கூடாது - என்பது எனக்குத் தெரிந்து விட்டது". விரைவில் வெற்றியும் பெற்றார்.

சோம்பேறியாக நாம் இருக்கக்கூடாது. நமது முயற்சியால் ஏற்படும் ஒவ்வொரு தடையையும் ஒரு சவாலாக நாம் எடுத்துக் கொள்ளும் பக்குவமுள்ளவர்களாக மாற வேண்டும். இந்த உலகத்தில் பெரிய பெரிய சாதனைகளைப் படைத்தவர்களைப் போய் விசாரித்துப் பாருங்கள். ஒரு சாதனையை, ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னதாக எத்தனை தடைகள் வந்தது என்று அவர்கள் சாட்சி கூறுவார்கள்.

உதாரணமாக சென்ற வாரம் படுகா மொழியில் புதிய ஏற்பாடு வெளியிட்டோம். இதை வெளியிடுவதற்கு நாங்கள் எத்தனை தடைகளை சந்தித்தோம் என்பதை விவரிக்க முடியாது. ஆரம்பத்தில் சிலர் இது தேவையில்லை என்று கூறி எங்களை உற்சாகம் இழக்கச் செய்தனர்; ஒரு மொழிபெயர்ப்பாளர் போய் விட்டார்; இன்னொரு மொழிபெயர்ப்பாளர் இறந்து விட்டார். இப்படியாக ஒன்றன் பின் ஒன்றாக தடைகள் வந்து கொண்டேயிருந்தது. 20 ஆண்டுகளுக்குப் பின்பு இதை முடித்திருக்கிறோம்.

5. தடைகள் முன்னேற்றத்தின் ஏணிப்படிகள்

17-ஆம் நூற்றாண்டில் முதன் முதலாக சீனாதேசத்திற்குள் செல்ல சில மிஷனெரிகள் முயற்சித்தனர். ஆனால் அந்த முயற்சி தோல்வியடைந்தது. இரண்டாவதாக திபெத் வழியாகச் செல்ல முயற்சித்தனர்; அதுவும் தோல்வி. மூன்றாவது மாறுவேஷம் போட்டுக் கொண்டு போனார்கள், அதுவும் தோல்வியில் முடிந்தது. ஒரு நாள் அவர்களையும் சீனா தேசத்தையும் பிரித்திருந்த ஒரு மலையைப் பார்த்துக் கொண்டு இந்த மிஷனெரிகள் இவ்வாறு சொன்னார்களாம்: "பாறையே, பாறையே, எங்களுக்கு எப்போது பாதை திறப்பாய்". என்ன நடந்தது தெரியுமா? ஒரு நாள் எப்படியோ பாதை திறந்தது. இந்த மிஷனெரிகள் சீனா தேசத்திற்குள் சென்று ஆண்டவருக்காக ஆயிரக்கணக்கான ஆத்துமாக்களை ஆதாயம் செய்தார்கள்.

என் மாணவர்களுக்கு மைக்ரோவேவ் Microwave - பாடம் எடுக்கும் போது நான் சொன்ன ஒரு விஞ்ஞான உண்மை என் நினைவிற்கு வருகிறது. அதில் Transit Time - ட்ரான்ஸிட் டைம் என்பது மிகப்பெரிய தலைவலியாக - தடையாக இருந்தது. எக்காரணம் கொண்டும் அதைத் தவிர்க்க முடியாது. எனவே விஞ்ஞானிகள் என்ன செய்தார்கள் தெரியுமா? அந்த தடையாக - தலைவலியாக இருந்த இந்த Transit time-யை பிரதானமான Principle - தத்துவமாக பயன்படுத்தி Transit time devices - என்று ஒரு புதிய சகாப்தத்தையே உருவாக்கி விட்டார்கள். எது முட்டுக்கட்டையாக இருந்ததோ அதையே முதுகெலும்பாகவும், எது

தடங்கலாக இருந்ததோ அதையே வாய்க்காலாக நீரோட்டமாகவும் மாற்றி விட்டார்கள்.

ஆம்! நமது வாழ்க்கையில் தடைகளைப் பார்த்து நாம் சோர்வடையக் கூடாது. அதே தடைகளைத் தகர்த்து, உடைத்து, நொறுக்கி அதில் கொஞ்சம் விசுவாசம் என்ற சில சிமெண்டையும், விடாமுயற்சி என்ற மணலையும் கலந்து - வெற்றிக்கு நடத்திச் செல்லும் கான்க்ரீட் போடப்பட்ட நடைபாதையாக மாற்றக் கற்றுக் கொள்ளுங்கள்.

☆☆☆

14. எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றமாய் மாறும்போது

அப்பொழுது வெயில் யோனாவின் தலையில் படுகிறதினால் அவன் சோர்ந்துபோய், தனக்குள்ளே சாவை விரும்பி: உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்றான் (யோனா. 4 : 8).

நமது வாழ்க்கையில் நாம் எதிர்பார்க்கிற காரியம் நடக்கத் தவறும்போது, கைகூடி வராதபோது, உடனே நாம் சோர்வடைந்து விடுகிறோம். இது இயற்கை; மனித சுபாவம். ஆனால் நாம் நினைப்பதெல்லாம் நம் வாழ்க்கையில் நடக்க வேண்டும் - என்று எதிர்பார்ப்பது சுயநலமுள்ளது மாத்திரமல்ல; தேவனுடைய அதிகாரத்தையே (சித்தத்தையே) கேள்வி கேட்பதற்குச் சமம். இந்தக் கருத்தைத்தான், "நமது வாழ்க்கையில் நாம் நினைக்கிற, விரும்புகிற காரியங்கள் எல்லாம் நடந்து விட்டால், நமக்கு மேலே ஒரு கடவுள் அதிகாரம் செலுத்துகிறார் என்ற கூற்று அர்த்தமற்றதாகி விடும்" - என்று ஒரு கவிஞன் பாடுகிறான். அப்படியானால் நமது வாழ்க்கையில் நாம் எதிர்பார்க்கிற காரியங்கள் நடக்கவில்லையென்றால் அதனுடைய அர்த்தம் என்ன? ஆண்டவர் நம் வாழ்க்கையின்மீது அதிகாரமும் ஆளுகையும் செய்கிறார் - என்பது நிரூபணம் ஆகிவிடுகிறது.

இதே தத்துவத்தைத்தான் இன்னொருவர் இப்படி கூறுகிறார். "Disappointments are God's appointments" - அதாவது "நமது ஏமாற்றங்கள் ஆண்டவர் நமக்கு அளிக்கும் புது உத்தரவுகள்" இந்தக் கருத்தை யோனா புரிந்துகொள்ள மறுத்ததின் விளைவுதான், "நான் உயிரோடிருப்பதைப் பார்க்கிலும் சாவது நல்லது" என்று அவர் புலம்புகிறார். இந்த யோனாவின் ஏமாற்றம் ஒரு விநோதமானது மாத்திரமல்ல, விபரீதமானதும்கூட; அது என்னவென்று நாம் ஆராய்வது நல்லது.

"நினிவே பட்டணத்தை அழிக்கப் போகிறேன்" - என்று ஆண்டவர் கூறியது உண்மை தான்.

ஆனால் அந்த மக்களும் இராஜாவும் இரட்டுடுத்தி மனந்திரும்பியதைக் கண்ட ஆண்டவர் அந்தப் பட்டணத்தை அழிக்காமல் காப்பாற்றினார். இது யோனாவிற்கு வருத்தம். என்ன வருத்தம்? ஆண்டவர் நினிவே பட்டணத்தை அழிக்காதது. சோதோம் கொமாரோ பட்டணத்தைப்போல அக்கினியையும் கந்தகத்தையும் வானத்திலிருந்து அனுப்பி நினிவே பட்டணத்தை அழிப்பார்; அதை நாம் வேடிக்கை பார்க்கலாம் - என்று நினைத்தான் போலும்.

யோனாவின் விபரீத ஆசை

இந்தப் பட்டணத்திலுள்ள 1,20,000 பேர்களும் அழிய வேண்டும் என்று யோனா விரும்பியதற்கு இன்னொரு காரணம் உண்டு. இந்த நினிவே பட்டணத்தாரும், யோனாவின் சொந்த தேசமாகிய யூதாதேசமும் எப்பொழுதும் இந்தியா - பாகிஸ்தான் போல, இங்கிலாந்து - பிரான்சு நாடுகள்போல எலியும் - பூனையுமாக வாழ்ந்த அண்டை நாட்டவர்கள். எனவே நாட்டு வேற்றுமை - இன வேற்றுமை - துவேஷம் இவனது மனதில் புரையோடிப் போயிருந்தது. ஒரு வேளை அந்த வெறுப்பு இரத்தத்திலே ஓடியிருக்கலாம். இதனால்தான் ஆரம்பத்தில் நினிவே பட்டணத்திற்குச் சென்று ஊழியம் செய்ய ஆண்டவர் கட்டளையிட்ட போது. இவன் அங்கு போவதற்கு சண்டித்தனம் செய்கிறான்.

அது மாத்திரமல்ல ஒரு பட்டணத்தை ஆண்டவர் அழிக்கவில்லையே என்றதொரு ஏமாற்றம், கோபம், எரிச்சல் ஒரு தீர்க்கதரிசிக்கு வரலாமா? அது நியாயமா? இவனுடைய பைத்தியக்காரத்தனத்திற்குப் பாடம் கற்பிக்கும் பொருட்டுத்தான் ஒரு ஆமணக்குச் செடியை ஆண்டவர் முளைப்பித்து, பின்பு அதை அழிப்பதற்கு ஒரு பூச்சியையும் கட்டளையிட்டார். அந்த ஆமணக்குச் செடி பட்டுப் போனபோது. அதற்காக பரிதாபப்பட்டது, கோபப்பட்டது - இந்த தீர்க்கதரிசியின் முட்டாள் தனத்திற்கு ஒரு 'முத்தாரம்' வைத்தாற்போல் அமைந்தது. ஆமணக்குச் செடியின் மேல் இவன் வைத்திருந்த கரிசனையில் பாதியாவது நினிவே மக்கள் மீது வைக்க வேண்டாமா?

ஒருவேளை நாமும்கூட இந்த யோனாவைப் போல் எரிச்சலடையக்கூடும். எதற்காக? என் பக்கத்து வீட்டுக்காரன் எவ்வளவு மோசமானவன்; அவனை எப்படியாவது தண்டித்துவிடும்; அவனது

குடும்பத்தை அழித்து விடும் - என்று கோபமும் எரிச்சலும் அடைந்திருக்கிறோமா? இது தவறு; முற்றிலும் தவறு. இப்படிப்பட்ட பாவத்திற்குப் பெயர் யோனாவின் பாவம். இந்தச் சம்பவத்தில் இன்னொரு உண்மையையும் நாம் அறிந்து கொள்வது நல்லது. இதை யோனா அறிவதற்கு வழி இல்லை. அது என்ன தெரியுமா?

"நினிவே பட்டணத்தை அழிப்பேன்" என்ற ஆண்டவரது வார்த்தை அப்படியே நிறைவேறிய ஒரு உண்மை. யோனாவிற்குப்பின் ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்குப்பின் இதே நினிவே பட்டணம் நேபுகாத்நேச்சாரின் தகப்பனாகிய நெபோபாலாச்சார் என்ற பாபிலோனின் இராஜாவால் முற்றுகையிடப்பட்டு பின்பு அழிக்கப்பட்டது. அப்பட்டணத்தின் நடுவிலே ஓடிய டைக்ரஸ் நதியின் வெள்ளத்தினால் அரண்மனை இடிந்தது; தப்பி ஓட வழி இல்லாத நினிவே அரசன் தன் மனைவிகளோடு சேர்ந்து தீக்குளித்து மாளுகிறான்.

இதை நாகூம் தீர்க்கதரிசியின் புத்தகத்தில் வாசிக்கிறோம். யோனா புத்தகமும் நாகூம் புத்தகமும் ஒன்றோடொன்று சரித்திரத்திலும், தீர்க்கதரிசனத்திலும் பின்னப்பட்டுள்ளது. நினிவே பட்டணத்தின் தலைவிதியும், அழிவும் யோனாவில் ஆரம்பித்து, தற்காலிகமாக நிறுத்தப்பட்டு பின்பு நாகூமில் முற்றுப் பெறுகிறது. யோனாவின் காலத்தில் மனந்திரும்பிய அப்பட்டணத்தார், நாகூமின் நாட்களில் மனந்திரும்ப மறுத்துவிட்டார்கள். "நீங்களும் மனந்திரும்பாவிட்டால் இப்படியே அழிந்து போவீர்கள்" (லூக். 13 : 3) என்ற இயேசுவின் வார்த்தைகள் நமக்கும் ஒரு எச்சரிப்பு.

நினிவே பட்டணம் அழிந்திருந்தால் இந்த யோனாவின் உள்ளம் பூரித்திருக்கும். யோனாவின் இந்த விபரீத விருப்பமும் ஆபத்தான ஆசையும் நிறைவேறாததால் மனச்சோர்வு அடைகிறான். ஒருவேளை இதை வாசிக்கிற நாம் இந்த யோனாவைப்போல மற்றவர்கள் அழிய வேண்டும், ஒழிய வேண்டும் - என்ற தவறான ஆசை நமக்கும் இருக்கலாம். இதற்குப் பதிலாக நமக்குச் சரியான, நேர்மையான, நியாயமான விருப்பங்கள் இருக்குமானால் அது நல்லது. நல்ல வேலை கிடைக்க வேண்டும்; நல்ல வரன் கிடைக்க வேண்டும்; நல்ல ஒரு வீடு, வாகனம் கிடைக்க வேண்டும்; நல்ல Computer படிப்புப் படிக்க வேண்டும்; மகன் எஞ்ஜினீயர் அல்லது டாக்டராக வேண்டும்; வியாபாரத்தில் ஒரு கணிசமான லாபத்தை

எதிர்பார்த்தல்; மாணவனாக இருந்தால் விரும்பிய பாடப்படிப்பு கிடைக்க வேண்டும்; முதல் வகுப்பில் தேற வேண்டும்; இதுபோன்ற நமது பல நியாயமான ஆசைகள் நிராசையாக மாறியிருக்கக் கூடும். அந்தச் சமயத்தில் அப்படிப்பட்ட ஏமாற்றங்களை எப்படிச் சந்திக்கப் போகிறோம்?

ஏமாற்றமா அல்லது முன்னேற்றத்தின் ஏணியா?

உலகப்புகழ் பெற்ற பிரசங்கியாராகிய பில்லிகிரகாம் அவர்களது மனைவி, தான் எப்படி பில்லிகிரகாம் அவர்களைத் திருமணம் செய்ய நேர்ந்தது என்பதைச் சாட்சியாக சொன்னார்களாம். அந்தச் சாட்சியின் சாராம்சத்தை இப்படியாகச் சொல்லுகிறார், "நான் விரும்பியதையெல்லாம் ஆண்டவர் எனக்கு கொடுக்காததற்காக ஆண்டவருக்கு நான் நன்றி செலுத்துகிறேன் - எத்தனையோ தவறானவர்களை நான் திருமணம் செய்யாதபடி ஆண்டவர் என்னைத் தடுத்ததற்காக அவருக்கு நன்றி" - என்று கூறினார்களாம்.

நமது வாழ்க்கையில் நாம் சந்தித்த ஏமாற்றங்களை நாம் சரியான கோணத்தில் பார்க்க நாம் பக்குவம் அடைய வேண்டும். யாருக்குத் தெரியும் - நமது ஏமாற்றம் ஆண்டவர் நமக்காக வடிவம் அமைத்த திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம் அல்லவா? நமது ஏமாற்றங்கள் (our disappontments) ஆண்டவரது (Appointments) - உத்திரவாக இருக்கலாம் அல்லவா? கீழே கொடுக்கப்பட்ட கதை இந்தப் பாடத்தை நமக்குக் கற்றுக் கொடுக்கும்.

இரண்டு கண்ணீர்களின் கதைகள்

ஒரு நதியில் இரண்டு கண்ணீர்த்துளிகள் பிரயாணம் செய்து கொண்டிருந்ததாம். தண்ணீரின் ஓட்டத்தில் பிரயாணம் செய்த இந்த இரண்டு கண்ணீர்களும் ஒருவரோடு ஒருவர் பேசத் தொடங்கி - எதற்காக நீ அழுகிறாய்? என்று விசாரித்தது. முதல் 'கண்ணீர்த்துளி', "நான் ஒரு அழகான வாலிபனைக் காதலித்தேன். ஆனாலும் காதல் தோல்வியடைந்து நான் விரும்பியவனை திருமணம் செய்ய முடியாத காரணத்தால் வாழ்க்கை முழுவதும் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறேன்" என்று பதில் சொன்னதாம். அதற்கு அந்த இரண்டாவது கண்ணீர்த்துளி, "நீ காதலித்த அந்த வாலிபனை நான் திருமணம் செய்ததால் வாழ்நாள் முழுவதும் கண்ணீர் வடித்துக் கொண்டே வாழ்ந்து கொண்டு இருக்கிறேன்" என்று

பதில் கொடுத்ததாம். பார்த்தீர்களா? ஒரு பெண்ணிற்கு தான் விரும்பிய ஒரு பொருளை அடைந்த காரணத்தினால் கண்ணீர். ஆனால் மற்ற பெண்ணிற்கு தான் விரும்பிய பொருளை பெற முடியாத காரணத்தினால் கண்ணீர். இதைத்தான் சாலொமோன் மாயை என்று அழைக்கிறார்.

ஆம்! நமது வாழ்க்கையில் நாம் விரும்பியது கிடைக்காத காரணத்தால் அதையே நினைத்துக் கொண்டு ஏங்கி அழுது கொண்டிருப்பவன் என்றைக்குமே முன்னேற முடியாது. அவன் வாழ்க்கையின் தத்துவத்தை தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறான். இதற்கு ஒரு நல்ல பாடம் என்ன தெரியுமா? நீ விரும்பியது கிடைக்கா விட்டால், உனக்குக் கிடைத்ததை விரும்பக் கற்றுக்கொள். காதலித்தவ(ன)ள திருமணம் செய்ய முடியாவிட்டால் திருமணம் செய்தவ(ன)ள காதலிப்பது நல்லது.

நான் பொறியியற் கல்லூரியில் வேலை பார்த்த போது நான் கண்ட ஒரு நடைமுறை உண்மையை என் மாணவர்களுக்குச் சொல்லுவேன். எல்லா மாணவர்களும் எலக்ட்ரானிக்ஸ் அல்லது கம்ப்யூட்டர் பாடம் - பிராஞ்சுதான் வேண்டுமென்று கேட்பார்கள். சிலருக்குத் தான் தாங்கள் விரும்பிய பிராஞ்சு பாடம் கிடைக்கும். பலருக்கு தாங்கள் விரும்பிய பாடம் கிடைக்காத காரணத்தினால் சோர்ந்து போவார்கள். எனவே அவர்களைப்பார்த்து நான், "நீங்கள் விரும்பிய பாடம் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. கிடைத்த பாடத்தை விரும்பிப் படியுங்கள்; அந்தப் பாடத்தை நன்கு கற்று முன்னிலைக்கு வர முயல வேண்டும்; உனக்கு கிடைத்த பாடத்தில் நீ ஒரு பெரிய இன்ஜினீயராக வரமுடியும், வல்லவனுக்கு புல்லும் ஓர் ஆயுதம்" - என்று அந்த மாணவர்களுக்கு ஆலோசனை கொடுப்பேன்.

மிஷனெரிப் பணியா அல்லது காதலித்த பெண்ணா?

ஹென்றி மார்ட்டின் என்ற இளம் வாலிபர் ஸ்காட்லாந்து தேசத்தைச் சேர்ந்தவர். ஒரு அழகான பெண்ணைக் காதலித்தார். திருமணம் கூட நிச்சயமாகி விட்டது. இதற்கிடையில் அவர் தனது வாழ்க்கையை மிஷனெரிப் பணிக்கென அதுவும் இந்தியாவிற்குப் போகத் தன்னை ஒப்புக் கொடுத்தார். இந்த செய்தியைக் கேட்ட அவரது மணப்பெண் ஒருநாள் அவரிடம் வந்து, "என்னை நீங்கள் மணக்க விரும்பினால் இந்தியாவிற்கு மிஷனெரியாகப் போவதை மறந்து விடுங்கள்; அல்லது இந்தியாவிற்கு மிஷனெரியாகப் போக

விரும்பினால் என்னை மறந்து விடுங்கள்" என்று கூறிவிட்டுச் சென்று விட்டாள். அப்பெண்ணை உயிருக்கு உயிராய் நேசித்த இவருக்கு தலையில் இடி விழுந்ததுபோல அதிர்ச்சியும் ஏமாற்றமும் ஏற்பட்டது.

ஆனாலும் ஆண்டவருடைய ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்த அவர் - கலப்பையின் மேல் கைவைத்தபின்பு அவர் பின்னிட்டுத் திரும்பிப் பார்க்கவேயில்லை. இந்தியாவிற்கு வந்து உருது மொழியில் முதன்முதலாக வேதாகமத்தை மொழி பெயர்த்தார். தான் விரும்பிய பெண்ணின் மனதில் இடம்பெற முடியாத அவர், திருச்சபையின் சரித்திரத்தில் இடம் பெற்று விட்டார். அன்றைக்கு அவர் அப்பெண்ணை மணந்திருப்பாரானால், உலகம் அவரை யாரென்று அறியாதிருந்திருக்கும்.

ஆம்! நமது வாழ்க்கையில்கூட ஆண்டவர் சில ஏமாற்றங்களை அனுப்பும்போது, ஏமாற்றத்திற்குப் பதிலாக சிலகாலம் சென்றபின்பு ஒரு பெரிய ஆசீர்வாதத்தை அவர் அனுப்புவார். அந்த ஏமாற்றம் நமக்குத் தற்காலத்தில் ஒரு தீமையாகத் தெரிந்தாலும். அந்தத் தீமைக்குள் ஒரு நன்மை மறைக்கப்பட்டிருக்கும். இந்த உண்மையைத்தான் பவுல், "தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்குமென்று அறிந்திருக்கிறோம்" என்று எழுதுகிறார் (ரோ. 8 : 28).

இது மாத்திரமல்ல! தொழில் மற்றும் வியாபாரத்தில் நாம் எதிர்பார்த்த முன்னேற்றம் கிட்டவில்லை. சபையில் எதிர்பார்த்த வளர்ச்சி காணப்படாததால் ஊழியர்களுக்குச் சோர்வு. சாமுவேல் தீர்க்கதரிசி சவுலை இராஜாவாக அபிஷேகம் பண்ணினான். ஆரம்பம் நன்றாகத்தான் இருந்தது. சில ஊழியர்கள் ஆரம்பத்தில் நன்றாகத்தான் இருப்பார்கள். ஆனால் பல மாதங்கள், வருடங்கள் கழித்துத்தான் அவர்களது சாயம் வெளுக்கும். அதுபோலத்தான் சவுலின் வாழ்க்கையிலும் பல ஆண்டுகள் கழித்துத்தான் அவனது சுயரூபம் வெளிப்படுகிறது. இந்திராகாந்தியைப் பிரதம மந்திரியாக ஆக்கியதற்காகக் காமராஜர் வருந்தியதுபோல - சாமுவேல் சவுலை இராஜாவாக்கியதற்காக மிகவும் வருந்துகிறார்.

அன்று இரவு முழுவதும் சாமுவேலுக்குத் தூக்கமே வரவில்லை. ஆம்! நம்மால் நியமிக்கப்பட்டவர்கள், சவுலைப்போல, கடவுள் பயமே இல்லாமல் துணிகரமான பாவம் செய்யும்போது அவர்களை நியமித்தவர்கள் சோர்ந்து போய் விடுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் சோர்ந்து போகக் கூடாது. ஏனென்றால் சவுலுக்குப் பதிலாக ஆண்டவர் ஒரு

தாவீதைக் கொடுப்பார் - என்று நாம் எதிர்பார்க்க வேண்டும். இன்னும் சிலர் என் ஊழியத்தில் கனிகளைக் காண முடியவில்லையே என்று சோர்ந்து போவார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வேதவசனம் என்ன ஆலோசனை கூறுகிறது: "சோர்ந்து போகாமல் இருப்போமானால். ஏற்ற காலத்தில் அறுவடை செய்வோம் (கலா. 6 : 9).

"ஏற்றகாலத்தில் உங்களை உயர்த்தும்படிக்கு அவரது பலத்த கரத்துக்குள் அடங்கியிருங்கள்" (பேது. 5 : 6).

'சோர்வும் தீர்வும்' என்ற இச்செய்தி உங்களது சோர்வைப் போக்கி அதற்குப் பதிலாக உற்சாகத்தையும் ஊக்கத்தையும் உங்கள் உள்ளத்தில் அளித்திருக்குமென்று நம்புகிறோம். மனிதர்களின் கேலிப் பேச்சுகளும். பரியாசமான சொற்களும் உங்களுக்குச் சோர்வை உண்டாக்க ஒருபோதும் அனுமதிக்காதீர்கள். அவர்களது கேலிப் பேச்சுக்களை அலட்சியம் பண்ணுங்கள்; சந்திரனைப் பார்த்து நாய் குரைப்பதற்குச் சமானமாக அவற்றை அலட்சியம் பண்ணுங்கள். இரண்டாவது சோர்வுக்குக் காரணம் தோல்வி; தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல் அதே தோல்வியை வெற்றியின் அடிகோலியாக மாற்றப் பழகுங்கள். தோல்விதான் வெற்றியின் முதல்படி என்பதை மறக்காதீர்கள்.

நமது சோர்விற்கு மூன்றாவது காரணம் நமது வாழ்க்கையில் நாம் சந்திக்கும் திடீர் ஆபத்துக்கள், மரணங்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் சிக்லாக் பட்டணத்தில் தாவீது கர்த்தருக்குள் தன்னைப் பெலப்படுத்திக் கொண்டதுபோல, நம்மைக் கர்த்தருக்குள் திடப்படுத்திக் கொள்ள வேண்டும். தலைக்கு மேல் வெள்ளம் சாண் போனால் என்ன, முழம் போனால் என்ன - நீ அதில் எதிர் நீச்சல் போடக் கற்றுக் கொள். ஏபோத்தை எடுத்து கர்த்தரிடத்தில் விசாரித்துப் புறப்படு. நீ இழந்துபோன எல்லாவற்றையும் மீண்டும் பெற்றுக் கொள்வாய்.

சோர்வுக்கு இன்னொரு காரணம் ஆண்டவர் அனுப்பும் உபத்திரவங்கள். கர்த்தருடைய சிட்சையை அற்பமாய் எண்ணக் கூடாது. அடிக்கிற கைதான் அணைக்கும் என்பதை மறக்க வேண்டாம். கொட்டும் கரம் தான் கொடுக்கும் கரம் என்பதை நாம் மறக்கக் கூடாது. உபத்திரவப்பட்டது நல்லது; ஆண்டவரது பிரமாணங்களைக் கற்றுக் கொள்ள நல்ல வாய்ப்பு, நமது எதிர்ப்பார்ப்புகள் ஏமாற்றங்களாய் மாறும்போது சோர்வு ஏற்படுகிறது. நமது வாழ்க்கையில் வரும்

ஏமாற்றங்கள் ஆண்டவர் அனுப்பும் ஏணியாய், ஏற்றங்களாயிருக்கலாம். யாருக்குத் தெரியும் - நமது Disappointments ஏமாற்றங்கள் - ஆண்டவரால் உத்திரவிடப்பட்ட Appointments ஆக நியமனங்களாக இருக்கக்கூடும். சோர்ந்துபோக அவசியமில்லை.

இறுதியாக நமது சோர்விற்குக் காரணம் நமது பயம். எலியாவையும், எலியின் கதையையும் மறக்காதீர்கள். பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும். பயம் வந்து கதவைத் தட்டினால் உன் விசுவாசத்தை அனுப்பு. பயம் புறமுதுகு காட்டி ஓடி விடும். அப்படி நீ செய்வாயானால் உன்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் சோர்வு எந்த நாளிலும் எந்தச் சூழ்நிலையிலும் தலை தூக்காது; சோர்வு உன் வாழ்க்கையின் அகராதியிலிருந்தே அகன்றுவிடும். அநாதி தேவன் சோர்ந்து போவதில்லை. அப்படியிருக்கும்போது அவருடைய பிள்ளையாகிய நீ ஏன் சோர்ந்துபோக வேண்டும்? அதற்கு அவசியமேயில்லை.

கர்த்தருக்குக் காத்திருக்கக் கற்றுக்கொள். அவரது பாதத்தில் ஒவ்வொரு நாளும் உன்னுடைய பெலனைப் புதுப்பித்துக்கொள். பேட்டரியை சார்ஜ் பண்ணுவது போல உன் ஆத்துமாவைத் தேவன்மேல் வாஞ்சையாக வைத்து அவரது பாதத்தில் ஜெபிக்கவும், வேதம் வாசிக்கவும். அவரோடு நீ பேசி அவர் உன்னோடு பேசி இப்படியாக தேவனோடு ஐக்கியம் கொள்வாயானால் இந்தப் பூமியில் உள்ள எந்தச் சக்தியும் உன்னை அசைக்க முடியாது. ஆனால் நீயோ ஆண்டவரது கரத்தால் இந்தப் பூமியை அசைப்பாய்.

"சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார்" (ஏசா. 40 : 29).

"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள்; நடந்தாலும் சோர்ந்து போகார்கள்" (ஏசா. 40 : 31).

☆☆☆

15. மனச்சோர்வின் அறிகுறிகள்

ஒரு வியாதியிலிருந்து சுகமடைவதற்கு தேவையான முதல் உதவி-முதல் மருந்து-அந்த வியாதி நமது சரீரத்தில் இருப்பதை அதன் அறிகுறிகளை-அடையாளம் கண்டுகொள்ளுதல். நம்மிடத்திலோ அல்லது நமக்கு தெரிந்த நண்பர்களிடத்திலோ-ஒரு குறிப்பிட்ட வியாதி இருப்பதை கண்டுபிடித்தல்-அந்த வியாதிக்குப் பாதி மருந்திற்கு சமானம்.

இந்த மனச்சோர்வும் அப்படித்தான். ஒரு மனிதனை இந்த 'மனச்சோர்வு' என்ற வியாதி பாதிக்குமானால், அவனது உள்ளான மனம் பாதிக்கப்படுகிறது. அந்த உள்மனபாதிப்பு-அவனது அக வாழ்க்கையிலும், கொஞ்சம் கொஞ்சமாக வெளிவரத் தொடங்குகிறது. ஒரு கம்ப்யூட்டரை இயக்குவது அதனுள் உள்ள CPU - Central Processing Unit என்று அழைக்கப்படும் மத்திய பாகம்தான். அந்த CPU என்ற மத்திய மையத்தில் கோளாறு இருக்குமானால் அதனுடைய மற்ற எல்லா பாகங்களும் பாதிக்கப்படுகின்றன. அதுபோல மனிதனுடைய மத்திய மையமாகிய அவனது மனம்-இருதயம்-சோர்வடையும் போது. அந்தச் சோர்வு அவனுடைய சரீரத்தில் உள்ள ஐம்புலன்களும் பாதிக்கப்பட்டு அதன் வாயிலாகவும் அந்த பாதிப்பு வெளிப்படுகிறது. "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்", என்ற பழமொழிக்கினங்க அவனது மனதிற்குள் அவனை உறுத்திக் கொண்டிருக்கும் அந்த மனச்சோர்வு என்ற குட்டிப்பிசாசு-அவனை சும்மா இருக்கவிடாது. அவனது பேச்சிலும், செயலிலும், பார்வையிலும், நடை, உடை பாவனைகளிலும் அவனது ஒவ்வொரு அன்றாட சூழலிலும் அந்த மனச்சோர்வு தனது முத்திரையைப் போட்டு விடுகிறது. சில வேளைகளில் இந்த மனச்சோர்வு தனது முத்திரையை அந்த மனிதனின் முகத்தில போட்டு தன்னை வெளிப்படுத்திவிடுகிறது. சில சமயங்களில் இந்த மனச்சோர்வு வேறு ஏதாவது ஒரு முகத்திரையைப் போட்டு மற்றவர்களுக்கு வெளிப்படுத்தாமல் தன்னை மறைத்துக் கொள்கிறது. பசியின்மை, அடிக்கடி தலைவலி, தூக்கமின்மை என்ற நோய்களின்

முகத்திரைகளை அணிந்துள்ள மனச் சோர்வுகளின் முகத்திரையை நாம் கிழிக்கப் பழக வேண்டும். பக்குவப்பட வேண்டும். இதைத்தான் மன நோய் மருத்துவர்கள் செய்கிறார்கள்.

மனச் சோர்வு எப்படி வெளிப்படுகிறது? அதை எப்படி அடையாளம் கண்டுபிடிப்பது? அதன் முகத்திரையை எப்படிக் கிழிப்பது?

1. <u>முதலாவது அறிகுறி</u> - மனச் சோர்வினால் பாதிக்கப்பட்டவர் முகத்தில் மகிழ்ச்சியோ, சந்தோஷமோ இருக்காது. கவலையின் ரேகைகளை அவர்கள் முகத்தில் நீங்கள் எளிதில் காணலாம். முகத்தில் களையிருக்காது. ஏதோ பறிகொடுத்தது போல இருப்பார்கள். நீங்கள் ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள் என்று யாராவது கேட்டால், "இல்லையே, ஏன், நான் நன்றாகத்தான் இருக்கிறேன் எனக்கு ஒரு கவலையும் இல்லை" என்று மறைப்பார்கள். ஆனால் அந்த வார்த்தைகள் வெறும் வார்த்தைகள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

2. <u>இரண்டாவதாக</u> - அவர்கள் உடல் நிலை பாதிக்கப்படும். சரியாக தூங்கமாட்டார்கள். எப்பொழுதும் Restless-ஆக இருப்பார்கள் தூக்கமாத்திரை அடிக்கடி சாப்பிடுவார்கள். அவர்கள் Normal - ஆக இருக்கமாட்டார்கள். பொதுவாக அவர்கள் கொஞ்சம் வித்தியாசமாக நடந்து கொள்ளுவதை சில நாட்களாக நீங்கள் கவனிக்கலாம்.

3. <u>மூன்றாவதாக</u> - அவர்கள் எதற்கெடுத்தாலும் எரிச்சலடைவார்கள். எளிதில் கோபப்படுவார்கள். தொட்டதற்கெல்லாம் குற்றம் கண்டுபிடிப்பார்கள், குறைகூறுவார்கள், எப்பொழுதும் பதட்டமுடன் காணப்படுவார்கள்.

4. <u>நான்காவதாக</u> - மனச்சோர்வு உள்ளவர்கள் எப்பொழுதும் தனிமையையே நாடுவார்கள். கூட்டத்தோடு இருப்பதையோ அல்லது மற்றவர்கள் Company-யை ஒதுக்க Avoid பண்ணப்பார்ப்பார்கள். கணவன்-மனைவி தாம்பத்திய உறவில் நாட்டம் இருக்காது.

5. <u>ஐந்தாவது</u> மனச் சோர்வு உள்ளவர்கள் இதுவரை புகைபிடிக்காதவர்கள் இப்பொழுது புகைபிடிக்க ஆரம்பிப்பார்கள்.

இதுவரை மதுபானம் அருந்தாதவர்கள் இப்பொழுது மதுபானத்திற்கு அடிமையாவார்கள். 'புண்பட்ட நெஞ்சை புகைவிட்டு ஆத்தப்பா'-என்ற சித்தாந்தத்திற்கு அடிமையாவார்கள்.

6. ஆறாவது சிந்திக்கும் திறனை சற்று இழந்து விடுவார்கள். நன்றாக Sharp ஆக மூளை அறிவு உள்ளவர்கள் மனச்சோர்வு அடைந்த பின்பு மந்தமாக மாறிவிடுவார்கள்.

7. ஏழாவது மற்றவர்களோடு பேசும் போது விரத்தியாக பேசுவார்கள். வாழ்க்கையில் பிடிப்பு இல்லாதவர்களாக தங்களது தொழிலில் ஆர்வம் இல்லாதவர்களாகப் பேசுவார்கள். அவர்களது பேச்சில் அடிக்கடி சலிப்பு காணப்படும். சில சமயத்தில் தற்கொலை, மரணம் என்ற வார்த்தைகள் கூட அவர்கள் வாயிலிருந்து வெளிப்படும். செத்துப் போகலாமா - என்று நினைக்கிறேன் என்று யாராவது சொன்னால் அதை நீங்கள் அலட்சியப்படுத்தாதீர்கள். அப்படிச் சொன்னவர்களில் சிலர் அடுத்த நாளே தற்கொலை செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட வார்த்தைகள் அவர்களது மனதிற்குள் புகைந்து கொண்டிருக்கும் 'எரிமலையின்' சிதறலின் ஒரு சிறிய துகளாக இருக்கலாம். இப்படிப்பட்ட வார்த்தைகள் சரீரத்திற்குள் மறைந்து உருவாகிக் கொண்டிருக்கும் மனச்சோர்வு என்ற Cancer ருடைய ஒரு சிறிய 'கொப்புளமாக இருக்கலாம்.

மேலே கொடுக்கப்பட்ட மனச்சோர்வின் அறிகுறிகளை அடையாளம் கண்டு கொள்ள பழகுங்கள். மாத்திரமல்ல அப்படிப்பட்ட மனச்சோர்வு உங்களுக்கு வராவிட்டாலும், வேறுயாருக்காவது உங்களது நண்பருக்கோ, உறவினருக்கோ வரக்கூடும். அப்படி அவர்கள் மனச்சோர்விக்கு இலக்காவார்களானால் அதின் அறிகுறிகளை அவர்களிடம் நீங்கள் பார்க்க நேர்ந்தால் அவர்களுக்கு நீங்கள் உதவி செய்ய இந்தப்புத்தகத்திலுள்ள செய்திகள் உதவும் என்று நம்புகிறோம்.

சோர்வும் - தீர்வும் என்ற தலைப்பில் உள்ள இப்புத்தகத்தின் செய்திகள் உங்களது மனச் சோர்வை முற்றிலும் நீக்கி உங்களை மகிழ்ச்சியின் பாதையில் வழிநடத்தும் என்று நம்புகிறோம்.

16. மனச் சோர்வின் மிக மோசமான விளைவு

ஒரு மனிதனுக்கு மனச்சோர்வு ஏற்படும்போது அது அவனது வாழ்க்கையில் பல மோசமான பின் விளைவுகளை ஏற்படுத்துகிறது. சிலரது சரீரம் வியாதியினால் பாதிக்கப்படுகிறது. பலர் பரீட்சையில் தோல்வியடைகிறார்கள். சிலர் மனநிலை பாதிக்கப்பட்டு மன நோயாளிகளாக மாறிவிடுகிறார்கள். சிலர் விவாகரத்து செய்கிறார்கள். சிலர் வேலையிலிருந்து நீக்கப்படுகிறார்கள். இப்படி எழுதிக் கொண்டே போகலாம். ஆனால் இந்த மனச்சோர்வின் மூலமாக ஏற்படக்கூடிய மிக மிக மோசமான உச்சகட்ட பின்விளைவு என்ன தெரியுமா? தற்கொலை. ஆம் தற்கொலை. அதாவது நம்மை நாமே கொல்லுதல்.

இதில் கொடுக்கப்பட்டுள்ள செய்தியும், ஆலோசனைகளும் அப்படிப்பட்ட மனச் சோர்வின் உச்சகட்டத்தில் இருப்பவர்களுக்கு அவர்களது தவறான எண்ணத்தை அடியோடு மாற்றி அவர்களுக்கு புது நம்பிக்கையையும், புத்துணர்ச்சியையும் கொடுக்கும் என நம்புகிறேன். அது மாத்திரமல்ல வாழ்க்கையில் அப்படிப்பட்ட Negative Thought எதிர்மறை எண்ணம் இல்லாதவர்கள் கூட இதை வாசித்தால் - அப்படிப்பட்ட தற்கொலை மனப்பான்மை உள்ள மற்ற மனிதர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு - மனச்சோர்வு என்ற பள்ளத்தாக்கில் விழுந்து கிடக்கும் மக்களை வெளியே தூக்கியெடுத்து அவர்களை நம்பிக்கை என்ற கன்மலையின் மேல் நிறுத்த உதவும் ஆலோசனைகள் இதில் அடங்கியிருக்கிறது. உங்களுக்காக வாசிக்காவிட்டாலும் - ஆபத்திலுள்ள - மரண விளிம்பில் நின்று கொண்டிருக்கும் மற்றவர்களைக் காப்பாற்றுவதற்காக, அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளைக் கொடுப்பதற்காக நீங்களும் இச்செய்தியை வாசிக்கலாம்.

தற்கொலைக்கு மனச் சோர்வைத் தவிர வேறெந்தக்காரணமும் இருக்க முடியாது. சோர்வின் மிக மோசமான உச்சகட்ட விளைவு தற்கொலை. என்ன

ஒரு பரிதாபம். தற்கொலைக்கு நமது சமுதாயத்தின் எந்தச் சாராரும் விதிவிலக்கு அல்ல. ஆண்கள், பெண்கள், சிறுவர், வாலிபர், வயோதிபர், இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்கள், எல்லா நாட்டினரும், படித்தவர், படிக்காதவர் சமுதாயத்தின் எல்லா மட்டத்திலும் உள்ளவர்கள் யாருமே இதற்கு விதிவிலக்கு அல்ல. கிறிஸ்தவர்கள், ஏன், விசுவாசிகள் கூடத் தற்கொலை செய்து கொள்கிறார்கள்! பொதுவாக 15 வயதிலிருந்து 29 வயதுவரை உள்ளவர்கள்தான் அதிகபட்சமாக இந்தத் தற்கொலை என்ற சமுதாயக் கொள்ளை நோய்க்கு இலக்காகிறார்கள் என்று புள்ளி விபரம் கூறுகிறது. இதில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள்தான் அதிகபட்சமாகத் தற்கொலைக்கு முயற்சிக்கிறார்கள். இருப்பினும் பெண்களைக்காட்டிலும் அதிகமான ஆண்கள்தான் உண்மையாகவே தற்கொலை செய்து கொள்கிறார்கள். உலகம் அனைத்திலும் வருடத்திற்கு 10லட்சம் பேர்கள் தற்கொலை செய்கிறார்கள். இதில் 1 லட்சம் பேர்கள் இந்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் செய்தியை நீங்கள் வாசிக்க ஆரம்பித்ததிலிருந்து அதாவது கடந்த 5 நிமிடத்திற்குள்ளாக ஒரு தற்கொலை நடந்து முடிந்துவிட்டது. ஆனால் இந்த 5 நிமிடத்தில் ஒருவர்தான் தற்கொலை செய்து கொண்டார் என்றாலும், 15 பேர்கள் தற்கொலை செய்ய முயற்சித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த தற்கொலையை தவிர்ப்பதற்கு ஏறக்குறைய 2000 புத்தகங்கள் இதுவரை வெளிவந்திருக்கிறது. இருப்பினும் தற்கொலை என்ற கொள்ளை நோய் இன்றும் மக்களை வாட்டி வதைத்துக் கொண்டுதான் இருக்கிறது.

நம்மை நாமே கொல்லுவது, நமக்குப் பிடிக்காத இன்னொருவரைக் கொலை செய்வதற்குச் சமம்தான் என்ற உண்மையை நாம் உணரவேண்டும். ஏதோ ஒரு கோபத்தில், அவசர புத்தியில் நமது கையிலிருக்கிற ஒரு கண்ணாடி டம்ளரைத் தரையில் வீசி உடைப்பது போல, சிலர் தங்களது உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள். 1960-ம் ஆண்டில் நான் PUC வகுப்பு கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போது என்னோடு படித்த மாணவன் ஒருவன், அப்பா ஏதோ தன்னைத் திட்டினார் என்ற ஒரே காரணத்திற்காக எங்களது ஹாஸ்டலில் விஷத்தைக் குடித்துத் தற்கொலை செய்து கொண்டான். இதுபோன்ற ஒரு முட்டாள்தனமான காரியம் இருக்க முடியாது.

வேதத்தை நாம் புரட்டி வாசிப்போமானால் இந்தத் தற்கொலை என்ற மிக மோசமான, கோழைத்தனமான செயலை இருவர் செய்திருக்கிறார்கள். பழைய ஏற்பாட்டில் அகித்தோப்பேல் என்ற அப்சலோம் ராஜாவின் பிரதான ஆலோசகனும், புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ்காரியோத்தும். இவர்களது வாழ்க்கையையும் ஆராய்ந்து பார்த்தால், இந்த இருவரது தற்கொலை சிறுபிள்ளைத்தனமாயும், முட்டாள்தனமாயும் காணப்படுகிறது-என்பதை நாம் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

I அகித்தோப்பேல்

அகித்தோப்பேல் எதற்காகத் தற்கொலை செய்து கொண்டான்? இதை வேதத்தில், "அகித்தோப்பேல் தனது யோசனையை ராஜாவாகிய அப்சலோம் ஏற்றுக் கொள்ளவில்லை என்று அறிந்து தன் வீட்டுக்குப்போய் தன் வீட்டுக் காரியங்களை ஒழுங்கு படுத்திவிட்டு, நான்று கொண்டு செத்தான்" என்று வாசிக்கிறோம். (II சாமு, 17:23).

இந்த அகித்தோப்பேல் ஒரு நாட்டிற்கும், ராஜாவிற்கும் ஆலோசனை கொடுத்தவன், தனக்குத்தானே ஆலோசனை கொடுக்கத் தவறிவிட்டான், தனது தகப்பனாகிய தாவீதை நாட்டைவிட்டு விரட்டிவிட்டு, அப்சலோம் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான். தாவீது தனக்கு விசுவாசமாயிருக்கும் சில வீரர்களை தன்னுடன் அழைத்துக் கொண்டு நாட்டைவிட்டு ஓடிவிட்டான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் உடனே சென்று யுத்தம் தொடுத்தால் தாவீதைக் கொன்றுவிடலாம்-என்று இந்த அகித்தோப்பேல் புதிதாக ஆட்சிப் பொறுப்பெடுத்திருக்கும் ராஜாவாகிய அப்சலோமிற்கு ஆலோசனை கொடுத்தான். உண்மையிலேயே, அப்சலோமைப் பொறுத்தவரையில், இந்த யோசனை சரியான யோசனை தான். இருப்பினும் அகித்தோப்பேலின் 'ராஜதந்திர' ஆலோசனையை அப்சலோம் ஏற்றுக் கொள்ளாமல் நிராகரித்து இன்னொருவனது ஆலோசனையை ஏற்றுக்கொண்டது இவனுக்குத் தலையில் இடி விழுந்தாற்போல் இருந்தது. அதுமாத்திரமல்ல தனது யோசனை நிராகரிக்கப்பட்டதின் பின்விளைவுகளை அகித்தோப்பேல் நினைத்துப் பார்த்தான். நிச்சயம் அப்சலோம் ஆட்சியை இழப்பான், தாவீது மீண்டும் ராஜாவாக இங்கு வருவான். அப்பொழுது தன்னைத் தாவீது கொன்று விடுவான் என்ற எதார்த்தமான உண்மையையும் அகித்தோப்பேல் அறிந்திருந்தான்.

ராஜாவிற்கு ஆலோசனை கொடுத்தவன் தனக்குத்தானே ஆலோசனை கொடுக்கத் தவறினான்.

இருப்பினும் இவன் தற்கொலை செய்தது ஒரு கோழைத்தனமான, இழிவான செயல்-என்பதை யாராலும் மறுக்க முடியாது. யுத்தகளத்திற்கு-அப்சலோமோடு சென்று அங்கு யுத்தத்தில் மரித்திருந்தால் அது தவறல்ல; அது ஒரு வீரமரணம். அல்லது தாவீது திரும்பவும் ராஜாவாக வந்தாலும், இவன் தாவீது ராஜாவினிடத்தில் மன்னிப்புக் கேட்டிருக்கலாம். யாருக்குத் தெரியும்? தாவீது ராஜா இவனை மீண்டும் தனக்கு ஆலோசகராக நியமித்திருக்கலாம். இதை விட்டுவிட்டுத் தற்கொலை செய்து கொண்டது ஒரு அபத்தமான, அவசர முடிவு. ராஜாவிற்கு ஆலோசனை கொடுப்பது - என்பது ஒரு சாதாரணமான காரியமல்ல. இன்றைய பிரதம மந்திரிக்கு Personal Secretary ஆக பிரதான ஆலோசகராக இருப்பதற்குச் சமம்.

ஒரு நாட்டிற்கு, ஒரு வீட்டிற்கு ஒரு முக்கியமான விஷயத்தில் ஒரு முடிவு எடுக்க வேண்டுமானால், அதை ஒருவரது ஆலோசனையை மாத்திரம் கேட்டு முடிவு எடுக்க முடியாது. பலரது யோசனைகளைக் கேட்டு முடிவு எடுப்பதுதான் சாலச் சிறந்தது. எடுத்த முடிவு சரியோ, தவறோ-என்பது முக்கியம் அல்ல. ஆனால் பலரது யோசனைகளைக் கேட்டு முடிவு எடுப்போமானால், அதில் ஒரு வலிமை, ஒரு பலம் இருக்கும். இதைப்பற்றி வேதம், "பலரது யோசனை பெலப்படும். ஆலோசனைக்காரர் அநேகர் இருந்தால் அவைகள் உறுதிப்படும்" (நீதி 15:22) என்றும், ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம், அவர்களது பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும். முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது" (பிர 4:9,12) என்று வேதம் கூறுகிறது.

இந்த உண்மைகளையெல்லாம் நன்கு அறிந்த இந்த அகித்தோப்பேல் இப்படிப்பட்ட ஒரு முட்டாள்தனமான முடிவை எடுத்தது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இதை வாசிக்கிற நீங்களும் நானும் இந்த அகித்தோப்பேலைப் போல இப்படிப்பட்ட ஒரு முட்டாள் தனமான முடிவை எடுக்கக்கூடாது. நமது யோசனையை மற்றவர்கள் ஏற்க மறுக்கலாம். இது சகஜம். இதனால் நாம் மனச்சோர்வு அடையக் கூடாது. இந்த மனச்சோர்வுதான் அநேகரைத் தற்கொலை என்ற ஒரு முட்டாள்தனமான

முடிவிற்கு ஒரு விஷவித்தாக மாறுகிறது. இந்த மனச்சோர்வுதான் அகித்தோப்பேலின் தற்கொலைக்கும் காரணமாக இருந்தது. இந்தக் காரணத்தைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

உங்கள் ஆலோசனையை மற்றவர்கள் கட்டாயம் ஏற்றுக்கொள்ள வேண்டுமா?

நீங்கள் ஒரு குறிப்பிட்ட விஷயத்தில்-குடும்பத்தில், சபையின் காரியத்தில், ஒரு ஆலயம் கட்டும் விஷயத்தில் அல்லது ஏதோ ஒரு பொதுநல திட்டத்தில்-ஒரு யோசனை கொடுக்கிறீர்கள்; அந்த யோசனை நிராகரிக்கப்படுகிறதாக வைத்துக் கொள்வோம். இதனால் நீங்கள் ஏன் சோர்வடைய வேண்டும்? நீங்கள் கொடுக்கும் ஆலோசனையை இந்த உலகத்திலுள்ள எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது கட்டாயமல்லவே. மற்றவர்கள் உங்களுக்குக் கொடுக்கும் எல்லா ஆலோசனைகளையும் நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? இல்லையே. அப்படியிருக்கும்போது நீங்கள் கொடுக்கும் எல்லா ஆலோசனைகளையும் மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது ஒரு சர்வாதிகார மனப்பான்மையல்லவா?

உங்களது ஆலோசனைகளை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில், நீங்கள் இந்த அகித்தோப்பேலைப்போலத் தற்கொலை செய்யத் தீர்மானிக்காவிட்டாலும், ஒருவேளை உங்களது ஆலோசனையை ஏற்றுக் கொள்ளாத, அதை எதிர்த்த சிலர்மேல் நீங்கள் கோபமடையலாம், இதுவும் தவறுதான். இது உங்களது சுயநலத்தையும், 'நான்' என்ற அகம்பாவத்தையும்தான் வெளிக்காட்டுகிறது.

இப்படிப்பட்ட 'மனச்சோர்வு' வருவதற்கு முக்கியக் காரணம் நான் என் யோசனையை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அகம்பாவம், சுயநலம், சுய பெருமை. அதுமாத்திரமல்ல, இன்னொருவரது-தனது எதிரியின்-யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டதும்- இவனால் ஜீரணிக்க முடியவில்லை.

II யூதாஸ் காரியோத்

வேத புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணற்ற மனிதர்களின் சரித்திரங்களில் தனது உயிரை மாய்த்துக் கொண்ட இரண்டாவது நபர் இந்த

யூதாஸ். இவன் இயேசுகிறிஸ்துவை முத்தத்தினால் காட்டிக் கொடுத்து, யூதர்களிடம் 30 வெள்ளிக்காசைக் கூலியாகப் பெற்றுக்கொண்டு, குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக் கொடுத்தேன் என்று மனஸ்தாபப்பட்டு அந்த வெள்ளிக்காசை தேவாலயத்திலே எறிந்துவிட்டு அதன்பின்பு வெளியே சென்று நான்று கொண்டு செத்தான் என்று வேதம் கூறுகிறது. (மத் 27:4,5)

இந்த யூதாஸ் ஸ்காரியோத் இயேசுவைக் காட்டிக் கொடுத்ததின் மூலம், இந்த உலகம் முழுவதும் காட்டிக் கொடுத்தலுக்கு ஒரு முன்னுதாரணமாக காட்டிக் கொடுத்தலின் சின்னமாக மாறிவிட்டான். இவன் இயேசுவைக் காட்டிக் கொடுத்த ஒரு குற்றத்துக்காக-அதாவது 12 சீஷர்களும் ஒரே மாதிரி இருக்கும் சூழலில்-இவர்தான் நீங்கள் தேடும் இயேசு-என்று சொல்லிய- இந்தத் தவறு-அச்செயலைச் செய்த மனிதனைத் தற்கொலைக்கு நேராக வழிநடத்தியிருக்க அவசியமில்லை. இவன் செய்தது இமாயலயத் தவறாக இருப்பினும் ஆண்டவரது மன்னிக்கும் சுபாவம் - இரக்கம் அந்த இமாலயத்தைக் காட்டிலும் உயரமானது என்ற உண்மையை இந்த யூதாஸ் அவரோடு பல ஆண்டுகள் நெருங்கிப் பழகியிருந்தும் மறந்து விட்டான். இயேசு கிறிஸ்துவினால் மன்னிக்கப்பட முடியாத பாவம் எதுவுமே இல்லை.

<u>குற்றமுள்ள நெஞ்சு :</u> இந்த யூதாஸ் ஸ்காரியோத்-தன்னைத்தானே மாய்த்துக் கொள்வதற்கு முக்கியமான காரணம்-அவன் செய்த தவறு. ஒரு பாவமும் செய்யாத இயேசுவை 'நான் காட்டிக் கொடுத்துவிட்டேனே' என்றதொரு குற்றமுள்ள உணர்வு இரவு பகலாக அவனை வாட்டி வதைத்தது.

இதேபோன்ற சூழ்நிலையில்தான் அபிகாயிலின் முதல் கணவனான நாபால் தாவீதிற்குச் சேரவேண்டிய சம்பளப் பணத்தைக் கொடுக்காமலும் அவனது பணியார்களைக் கேவலப்படுத்தி அனுப்பிய தவறுக்காக அவன் மனது வாதிக்கப்பட்டது; அவனது இருதயம் உள்ளுக்குள் செத்து (அதாவது மாரடைப்பு ஏற்பட்டு) கல்லைப்போல் மாறினான். 10 நாட்கள் கழித்து அவன் மரித்துப் போகிறான். இச் சம்பவத்திலும் இந்த நாபால் தாவீதினிடத்தில் மன்னிப்புக் கேட்க முன்வந்திருந்தால் இவன் மாரடைப்பு ஏற்பட்டு

மரித்திருக்க அவசியமில்லை. ஆம்! பலரது தற்கொலைக்குக் காரணம் குற்றமுள்ள நெஞ்சு.

ஒரு வாலிபப் பெண் திருமணம் ஆவதற்கு முன்பு கர்ப்பிணியாகக் காணப்பட்டாள். இந்தக் குற்ற உணர்வையும், அவமானத்தையும் தாங்க முடியாமல் துப்பாக்கியை எடுத்து தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டாள். முதலில் செய்த தவறைக் காட்டிலும் இரண்டாவது அவள் செய்த தவறு மிகப் பெரியது. இந்த இளம்பெண் செய்த முதல் தவறைச் சரி செய்ய பல வாய்ப்புக்கள் உண்டு. இதைத் தன் பெற்றோரிடத்தில் சொல்லி யார் மூலமாக இவள் கர்ப்பம் ஆனாளோ, அந்த வாலிபனை இவள் திருமணம் செய்ய வாய்ப்பு இருக்கிறது. அல்லது வேறு ஏதாவது வழியில் ஆண்டவர் அவளுக்கு வாழ்வு கொடுத்திருக்கலாம். இவள் தற்கொலை செய்ததின் மூலமாகக் குடும்பத்திற்கும் தனக்கும் ஏற்பட்ட அவமானத்தை உலகத்திற்கு அம்பலப்படுத்தி விட்டாள். ஊட்டி மலை உயரமுள்ள தவறை மறைப்பதற்கு இமாலய மலை உயரமுள்ள தவறைச் செய்யலாமா?

இந்த இமாலயத் தவறை (தற்கொலை) ஏன் செய்கிறார்கள் என்று பல ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து பார்த்ததில் இந்த மனச் சோர்வின் மிகமிக மோசமான உச்சகட்ட முடிவிற்குப் பல காரணங்களைக் கண்டுபிடித்துள்ளார்கள். அதில் சிலவற்றைக் கீழே கொடுக்கிறேன்.

III சோர்வின் உச்சகட்ட விளைவிற்கு மற்ற காரணங்கள்

இந்தத் தற்கொலைக்குப் பல காரணங்கள் இருப்பினும், அவற்றில் கீழே கொடுக்கப்பட்ட 7 முக்கியக் காரணங்கள் கூறப்படுகின்றன :

(1) இந்த உலகத்தில் நான் யாருக்குமே பிரயோஜனமில்லை - என்ற ஒரு உணர்வு.

(2) திடீர் வேலை இழப்பு.

(3) வேலையின்மை (4) பணக் கஷ்டம் (5) குடும்பப் பிரச்சனை (6) தீராத வியாதி (7) காதல் அல்லது பரீட்சை தோல்வி

III. 1) இந்த உலகத்தில் நான் யாருக்குமே தேவையில்லை

இந்த 'தற்கொலை' என்ற நோயை ஆராய்ந்த பல ஆராய்ச்சியாளர்கள், மனநோய் மருத்துவர்கள் கூறும் கருத்து மேலே கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த உலகத்தில் இனி நான் யாருக்குமே பிரயோஜனமில்லை, மற்றவர்களுக்கு நான் பாரமாக இருக்க விரும்பவில்லை. நான் வாழ்வதினால் யாருக்குமே பிரயோஜனமில்லை. இப்படிப்பட்ட ஒரு விரக்தியான மனநிலை பலரை இந்தத் தற்கொலை என்ற பாவத்தைச் செய்ய தூண்டிவிடுகிறது.

இந்த உலகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும், இந்த உலகத்தில் இருக்கும் ஒவ்வொரு உயிரினத்திற்கும்-தரையில் ஊரும் எறும்பிலிருந்து வானில் பறக்கும் பறவை வரைக்கும்-புல் பூண்டிலிருந்து வானளாவ ஓங்கி வளர்ந்து காணப்படும் ஓக் மரம் வரைக்கும்-ஒவ்வொன்றிற்கும் ஆண்டவர் ஒரு அருமையான நோக்கம் வைத்திருக்கிறார். ஒரு முறை நான் இரவு ரயில் பயணத்தின்போது வெளியே எட்டிப் பார்த்தேன். பயங்கரமான இருட்டு, அந்தச் சமயத்தில் மின் மினிப்பூச்சிகள் அந்த இருளில் பறந்து வெளிச்சத்தைக் கொடுத்த காட்சி-என்னைப் பரவசப்படுத்தியது. அவைகளைப் பார்த்து 'Thankyou'என்று சொன்னேன். அப்படியானால், அந்த மின்மினிப் பூச்சிக்கும்கூட ஆண்டவர் ஒரு நோக்கம் வைத்திருக்கிறார் என்றால் உங்களைக் குறித்தும் ஒரு நல்ல நோக்கம் வைத்திருக்கிறார். சோர்வை நீக்கி உங்களைச் சுற்றிலும் இருக்கிற தூசியை உதறிவிட்டு எழுந்திருங்கள். உங்கள் சேவை இந்தச் சமுதாயத்திற்கு ரொம்பத் தேவை. உங்கள் ஜீவன் விலையேறப் பெற்றது. உங்களது கடைசி மூச்சு இருக்கும் வரைக்கும் இந்த உலகத்திற்கு, உங்களது குடும்பத்திற்கு நீங்கள் தேவை.

III. 2) வேலை இழப்பு

ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான மக்களின் சோர்விற்கு முக்கியக் காரணம்-தங்களது வேலையை இழப்பது அல்லது வேலை கிடைக்காமல் அலைவது. ஆண்டவர் ஒரு கதவை அடைக்கும்போது இன்னொரு கதவை அவர் திறப்பார். ஒரு வேளை இதை வாசிக்கும்போது உங்களது வேலையை நீங்கள் இழந்திருக்கக்கூடும். என்னுடைய நண்பர் ஒருவர் என்னிடம் இப்படியாகச் சொன்னார்; ஒரு நாள் எனது கம்பெனி மேனேஜர் என்னை அவரது அறைக்கு அழைத்து, "நாளையிலிருந்து நீங்கள் வேலைக்கு வரவேண்டாம். உங்களுக்கு 3 மாத சம்பளம் முன்பணமாகக் கொடுக்கப்படும்" என்று கூறியபோது என் தலையில் இடிவிழுந்தாற்போல்

இருந்தது. இருப்பினும் நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாகவே இருக்கிறேன். ஆண்டவர் ஒரு கதவை அடைத்தால் இன்னொரு கதவை நிச்சயம் திறப்பார்"-என்று கூறினார். அதேபோல ஒரு மாதத்திற்குள் அவருக்கு இன்னொரு வேலை-அதிக சம்பளத்துடன் கிடைத்தது!

வேலையை இழந்ததினால் ஒரு செல்வந்தனாக மாறிய ஒருவரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். அவருக்கு எழுதப் படிக்கவோ கையெழுத்துப் போடவோ தெரியாத ஒரே காரணத்தினால் ஆலயத்தில் மணி அடிக்கும் வேலையிலிருந்தும் அவர் நீக்கப்பட்டார். வேலையை இழந்த அவர் மனச்சோர்வுடன் தெருவில் வந்து நின்றார். அப்பொழுது களைப்பு நீங்க ஒரு டீ சாப்பிட விரும்பி தெரு முழுவதும் டீக்கடையைத் தேடினார். ஒரு டீக்கடை கூட அங்கு இல்லை. எனவே அவருக்கு ஒரு புது ஐடியா கிடைத்தது. அந்தத் தெருவில் ஒரு டீக்கடை ஆரம்பித்தால் நல்லதென நினைத்து, அந்த வீதியில் ஒரு டீக்கடையும், பெட்டிக்கடையும் ஆரம்பித்தார். விரைவில் பெரிய பணக்காரனாக மாறினார். பேங்கில் பணத்தைப் போடச் சென்றவருக்குக் கையெழுத்துப் போடத் தெரியவில்லை. "கையெழுத்துப் போடத் தெரியாமலே இவ்வளவு பணம் சம்பாதித்திருக்கிறீர்களே" என்று கேட்டபோது, "கையெழுத்து போடத் தெரியாத ஒரே காரணத்தினால்தான் என் வேலையை இழந்தேன். வேலையை இழந்ததினால்தான் இவ்வளவு பணம் சம்பாதித்தேன்"-என்று கூறினாராம்.

யாருக்குத் தெரியும், நீங்கள் வேலையை இழந்தது ஆண்டவர் அனுப்பிய ஒரு எதிர்பாராத ஆசீர்வாதமாக இருக்கலாம். சோர்ந்து போகாதிருங்கள்.

III. 3) பணக்கஷ்டம்

அநேகர் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்வதற்கு இன்னொரு காரணம் 'பணக் கஷ்டம்'. சென்ற ஆண்டு ஆந்திராவில் பல விவசாயிகள் நூற்றுக்கணக்கான விவசாயிகள்-பயிர் சேதம் ஏற்பட்டு, பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் நஷ்டமடைந்ததினால் தற்கொலை செய்து கொண்டார்கள். இது எவ்வளவு முட்டாள்தனம். இதை எளிதில் தடுத்திருக்க முடியும். விவசாயத்தில், வியாபாரத்தில் நஷ்டமும் இலாபமும்-இரவும்

பகலும் போல மாறி மாறி வருவது சகஜம். சில ஆயிரம் ரூபாய்கள் நஷ்டத்திற்காக விலைமதிப்பற்ற மனித உயிர்களைப் பலி கொடுக்க வேண்டுமா? "உலகம் முழுவதையும் ஒரு மனுஷன் ஆதாயப்படுத்தித் தனக்குச் சொந்தமாக வைத்துக் கொண்டாலும், தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?" என்று வேதம் (மத் 16:26) கூறுகிறது. அப்படியானால் மனித உயிர் அதற்குள் வாசம் பண்ணும் அழியாத வஸ்துவாகிய ஆத்துமா விலையேறப் பெற்றது. அதனுடைய விலை சில ஆயிரம் ரூபாயா? சிந்தித்துப் பாருங்கள்.

பணமும், ஐசுவரியமும் இன்றைக்கு வரும், நாளைக்கே போனாலும் போய்விடும். பணம் நிரந்தரமற்றது. 'பண நஷ்டம்' 'வியாபாரத்தில் வீழ்ச்சி' இவைகள் மனித வாழ்க்கையில் அவ்வப்பொழுது தோன்றி மறையும் மேகங்கள்.

இதுபோன்ற தோல்விகள் என்ற கார்மேகங்கள் அவ்வப்பொழுது தோன்றினாலும், விரைவில் அது மறைந்து நம்பிக்கை என்ற சூரிய வெளிச்சம் மீண்டும் உங்கள் வாழ்க்கையில் பிரகாசிக்கும். உன்மேல் படிந்திருக்கிற சோர்வு என்ற தூசியை உதறிவிட்டு, உன் கழுத்திலுள்ள கடன் என்ற முடிச்சை அவிழ்த்துவிட்டு நீ எழுந்திரு. எழும்பிப் பிரகாசி நம்பிக்கை என்ற ஒளி உன்மேல் உதிக்கிறது. தற்காலிகமான இந்தத் தோல்விகள், கஷ்டங்கள் உன் வாழ்க்கையைப் பாதிக்க ஒரு போதும் அனுமதிக்காதே, நீ வாழப் பிறந்தவன். மனித வாழ்க்கை என்ற யுத்தத்தில் புறமுதுகு காட்டாதே, எண்ணற்ற தோல்விகள், ஏமாற்றங்கள் வந்தாலும் அதை எதிர்த்துப் போராடு, எதிர் நீச்சல் போடு, கோழைகள்தான் தற்கொலை செய்வார்கள்.

III. 4) குடும்பப் பிரச்சனை

கணவன் என்னைக் கேவலமாகப் பேசினார், மாமியார் கொடுமை தாங்க முடியவில்லை. வரதட்சனைப் பிரச்சனையில் என் கணவனால் துன்புறுத்தப்படுகிறேன். வீட்டிலே எப்பொழுது பார்த்தாலும் சண்டையும், சச்சரவும் தலைவிரித்தாடுகிறது. என் கணவன் இன்னொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருக்கிறார். மனைவியின்மேல் கணவனுக்குச் சந்தேகம். என் கணவனின் குடிப்பழக்கம் என் குடியைக் (குடும்பத்தை) கெடுத்துக்

கொண்டிருக்கிறது. குடித்துவிட்டு வீட்டிற்கு வந்து என்னைப் போட்டு அடிக்கிறார்-இப்படியாகக் குடும்பத்திலுள்ள பிரச்சனைகளை நான் அடுக்கிக் கொண்டே போகலாம். இதுபோன்ற பிரச்சனைகள் மாத்திரமல்ல இதைக் காட்டிலும் பன்மடங்குப் பிரச்சனைகள் உங்கள் குடும்பத்தில் இருக்கலாம். ஆனால் அந்தப் பிரச்சனைகள் என்ற குட்டிப் பிசாசுகள் உங்களை வாட்டி வதைத்து, உங்களைத் தற்கொலைக்கு நேராக வழிநடத்தி, உங்கள் உயிரை மாய்த்துக் கொள்ள ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.

பிரச்சனை இல்லாதவர்கள் இந்த உலகத்தில் யாருமே கிடையாது. பிரச்சனையே இல்லாத ஒரு மனிதன் போய்த் தற்கொலை செய்து கொண்டானாம். வாழ்க்கையில் பிரச்சனையே இல்லாததுதான் அவனது பிரச்சனை. இதுபோன்ற முட்டாள்களும் சமுதாயத்தில் இருக்கிறார்கள் என்பதை நினைத்துப் பார்த்தால் ஆச்சரியப்படுவதைக் காட்டிலும் நாம் வெட்கப்படுவதுதான் சாலப் பொருந்தும்.

ஆம்! பிரச்சனை இல்லாதவர்கள் யாருமே இந்த உலகத்தில் இல்லை. ஒவ்வொருவருடைய தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையை அலசி ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொருவருடைய குடும்பத்திலும் பல பிரச்சனைகள் இருப்பதை நீங்கள் கண்கூடாகக் காணலாம். 'வீட்டுக்கு வீடு வாசல்படி' என்ற பழமொழியை மறக்க வேண்டாம், "நீங்கள் என்ன சொன்னாலும் என்னுடைய குடும்பப் பிரச்சனையைப் போல இந்த உலகத்தில் யாருக்குமே இருக்க முடியாது''-என்று கூறுகிறீர்களா? தர்க்கம் செய்கிறீர்களா? வேண்டாம். உங்கள் கூற்று உண்மைக்குப் புரம்பானது. உங்களது குடும்பப் பிரச்சனையைப் போலப் பன்மடங்கு அதிகமான பிரச்சனையுள்ளவர்கள் இந்த உலகத்தில் பலர் இருக்கிறார்கள். இது ஒரு நடைமுறை உண்மை உங்களது பிரச்சனையை நீங்கள் பெரிதுபடுத்துகிறீர்கள். இது உங்களது 'சுய நலத்தையும்' சுய பட்சாதாபத்தையும், உங்களது பிடிவாதத்தையும், Ego ஈகோவையும் அதாவது தான் என்ற அகம்பாவத்தையும்தான் காட்டுகிறது.

சில சமயங்களில் வயதுவந்த பிள்ளைகள் அம்மாவை ஏதாவது சூடான வார்த்தையினால் சற்றுக் கடுமையாக கேவலமாக ஏளனமாகப் பேசுவார்களானால் இதைக் கேட்ட தாய் மனமுடைந்து சோர்வின் மிகமோசமான உச்சகட்ட விளைவாகிய இந்தத் தற்கொலைக்கு

ஆளாகிவிடுகிறார்கள். உணர்ச்சிவசப்பட்டு, ஆத்திரத்திலும் அவசரத்திலும் எடுக்கப்படும் ஒரு முட்டாள்தனமான முடிவு. இதைத் தடுப்பதற்கு இரண்டு வழிகள் உண்டு. முதலாவது மற்றவர்கள் சொல்லும் கடுமையான, கேவலமான வார்த்தைகளைத் தாங்கிக் கொள்ள, சகித்துக் கொள்ள இப்படிப்பட்ட தாய்மார்கள் மனரீதியாகத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். உங்கள் பிள்ளைகள் அவசரத்தில் சொன்ன வார்த்தைகளை நீங்கள் பொருட்படுத்தக் கூடாது. நீங்கள் கூட இதே போன்ற வார்த்தைகளை பல ஆண்டுகளுக்கு முன்பு உங்கள் பெற்றோர்களைப் பார்த்து கூறியிருக்கக்கூடும். "தாங்கள் பேசுவது இன்னதென்று தெரியாமல் பேசியிருக்கிறார்கள், உளறிக் கொட்டியிருக்கிறார்கள்" என்று நீங்கள் நினைக்க பக்குவப்படவேண்டும். இதைப்போய் பெரிதுபடுத்தி, உங்களது உயிரை மாய்த்து, அதன்மூலம் குடும்பத்தில் குழப்பத்தை வரவழைப்பது-அவர்கள் செய்த தவறைக் காட்டிலும் நீங்கள் செய்யப்போவது மிகப்பெரிய தவறு-இதை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

இரண்டாவது இப்படிப்பட்ட தவறான ஒரு முடிவிற்கு-ஒருவரைத் தற்கொலைக்கு நேராக வழிநடத்தக்கூடிய வார்த்தைகளைச் சொன்ன மற்றவர்கள் தங்களது தவறை உணர வேண்டும். குடும்பத்திலுள்ள ஒருவர் மற்றவர்களைத் திட்டும் போது. கோபத்தில் பேசும்போது, 'உங்கள் வார்த்தைகள் மற்றவர்களைப் புண்படுத்தக்கூடும்'-ஏன் குடும்பத்திலுள்ள இன்னொருவரை அந்த வார்த்தைகள் உயிரை மாய்த்துக் கொள்ளக்கூடிய கொடூர செயலுக்கு நேராகக்கூட வழி நடத்தக்கூடும்-என்ற ஒரு அபாயத்தை உணர்ந்து ஜாக்கிரதையாய் பேசுங்கள். 'தீயினால் சுட்டபுண் உள்ளாறும், ஆறாதே நாவினால் சுட்டவடு'-என்ற குறளை மறக்காதீர்கள் உங்கள் வார்த்தைகள் தீயாக மாறி, மற்றவர்களைக் காயப்படுத்துவது மாத்திரமல்ல, அது மற்றவர்களைச் சுட்டெரித்துவிடும் அக்கினியாக மாறக்கூடும் என்பதை ஒரு போதும் மறவாதீர்கள்.

'தன் சகோதரனைப் பகைக்கிறவன் கொலையாளி' என்று இயேசு கூறுகிறார். ஆனால் நீங்கள் உங்கள் வார்த்தை என்ற கத்தியினால் மற்றவர்களைக் குத்திக் கொலை செய்யக்கூடிய கொலையாளிகளாக

மாறிவிடாதீர்கள். குடும்பத்தில் சண்டை வருவது சகஜம், ஆனால் அதுவே அநேகர் மரிக்கக்கூடிய யுத்தகளமாக மாறிவிடக் கூடாது.

உங்களது குடும்பப் பிரச்சனையினிமித்தம் உங்களை நீங்களே சாகடித்துக் கொண்டால், அந்தப் பிரச்னை தீர்ந்து விடுமா? நிச்சயமாக இல்லை, உண்மையிலே பார்க்கப் போனால், உங்களது முட்டாள்தனமான முடிவினால் உங்களது குடும்பப் பிரச்சனை குறைவதற்குப் பதிலாகப் பன்மடங்கு கூடுகிறது. நன்கு யோசித்துப் பாருங்கள், நன்கு சிந்தித்துப் பாருங்கள். அவசரக்காரனுக்கு புத்திமட்டு. உங்களது குடும்பப் பிரச்சனையினால் சோர்ந்துபோய் மனமுடைந்து காணப்படும் உங்களுக்குத் தேவை-தற்கொலையல்ல-மாறாக உங்களது சோர்வை மாற்றக்கூடிய மாற்று மருந்து-ஒரு புது உற்சாகம்-ஒரு புத்துணர்வு-புது நம்பிக்கை-புது ஜீவன்-புத்துயிர். இயேசுவின் வார்த்தைகளை வாசியுங்கள், 'திருடன், திருடவும் கொல்லவும், அழிக்கவுமே வருகிறானே தவிர வேறொரு நோக்கமும் அவனுக்கு (பிசாசிற்கு) இல்லை. ஆனால் நானோ உங்களுக்கு ஜீவன் உண்டாகவும், அது பரிபூரணப்படவுமே வந்தேன்' (யோ. 10:10) என்று இயேசு கூறுகிறார்.

ஆம்! பிசாசு உங்களுக்கு மனச்சோர்வைக் கொடுத்து, உங்களை அலைக்கழித்து, அழிக்க விரும்புகிறான். அவனுக்கு இடம் கொடுக்காதீர்கள். உங்களது குடும்பப் பிரச்சனைகளுக்கு யதார்த்தமான, ஆக்கபூர்வமான தீர்வுகளைக் குறித்து ஆழமாய், அகலமாய், பொறுமையாகச் சிந்தியுங்கள். உங்கள் குடும்பத்தில் யார், யார், எந்தெந்தப் பிரச்சனைகளுக்குக் காரணமாயிருக்கிறார்களோ அவர்களோடு உட்கார்ந்து மனம்விட்டுப் பேசுங்கள்; உங்கள் உள்ளான உணர்வுகளை இறுக்கிக் கட்டாமல் அவிழ்த்து விடுங்கள்; 'ஓ' வென்று அழுது உங்கள் மனப்பாரத்தைக் குறையுங்கள். உங்கள் குடும்பம் என்ற வட்டத்திற்குள், கோர்ட்(Court)டிற்குள் உங்களது பிரச்சனைகள், வழக்குகள் தீர்க்கப்படாத பட்சத்தில், உங்களுக்கு நம்பிக்கையான வயதில் பெரியோர்களை, உங்கள் நலத்தில் உண்மையான அக்கரை காட்டும் நண்பர்களை அழைத்து, உங்களது குடும்பப் பிரச்சனைகளைத் தீர்க்க முயலுங்கள்.

தீர்வுகாண முடியாத பிரச்சனை ஒன்றுமேயில்லை. உங்கள் பிரச்சனைகளை நீங்கள் உங்களுக்குள்ளே அடக்கி வைக்க, அடக்கி வைக்க, பிரஷர் குக்கருக்குள் உள்ள அழுத்தம் அதிகமாவதுபோல உங்களுக்குள்ளும், மனதிற்குள்ளும் இருக்கிற அழுத்தம் அதிகமாக-திடீரென்று ஏதாவது ஒருநாள் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் வெடித்துக் கிளம்பும், அதுதான் தற்கொலையில் போய் முடிகிறது. இந்த அபாயத்தைத் தடுக்க அவ்வப்பொழுது உண்டாகும் உங்களது உள்ளான மன அழுத்தத்தை எப்படியாவது, யார் மூலமாவது பேசியோ, அழுதோ குறைத்துக் கொள்ள முயலுங்கள். மனச்சோர்வு உடையவர்கள் யாரிடமும் எதுவும் பேசாமல் தனிமையாய் இருப்பது ஆபத்தானது.

அன்னாள் (I சாமு 1:16,18) ஆண்டவரது சமூகத்தில்போய் மனங்கசந்து அழுது தனது மனதின் பாரத்தை உடைத்து ஊற்றினாள். அதன் விளைவு-அந்த மனப்பாரம் திரும்பவும் அவளைத் தொந்தரவு செய்யவேயில்லை. மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளப்படும் எந்த மனபாரமும், எவ்வளவுக்கதிகமாய்ப் பகிர்ந்து கொள்கிறோமோ அவ்வளவுக்கதிகமாகக் குறைந்து கொண்டே போகிறது.

எறும்புப் புற்றுபோல் உள்ள உங்களது குடும்பப் பிரச்சனையை எரிமலையாக்கி விடாதீர்கள். மன நிம்மதி என்பது தேவன் அருளும் ஒரு ஆசீர்வாதம். ஆனால் அதைத் தெரிவு செய்வது உங்கள் கையில்தான் இருக்கிறது. தற்கொலையா? தன்னம்பிக்கையா? உங்கள் சாய்ஸ் என்ன? உங்கள் ஜீவனை அழிக்கவந்த பிசாசா? அல்லது உங்களுக்கு ஜீவனை பரிபூரணமாக அளிக்க வந்த இயேசுவா? உங்கள் சாய்ஸ் என்ன? உங்கள் வாழ்க்கையின் தோட்டத்தில் முட்களும் உள்ளது-மலர்களும் உள்ளது. முள்ளா? மலரா? இரண்டில் உங்கள் சாய்ஸ் எது?

உங்களுக்கு முன்பாக-மரணத்தையும் ஜீவனையும் வைக்கிறேன் எதைத் தெரிந்து கொள்ள விருப்பமோ அதைத் தெரிந்து கொள்ளுங்கள் என்று வேதம் (உபா. 30 : 15) எச்சரிக்கிறது.

III. 5) தீராத வியாதி

இதை வாசிக்கிற உங்களில் சிலர் தீராத வியாதியினால் பல வருடங்களாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கலாம் "நான்

கஷ்டப்படுவதுகூட எனக்குக் கவலையில்லை ஆனால் என்னால் மற்றவர்களும் கஷ்டப்படுகிறார்களே. அதைத்தான் என்னால் பொறுக்க முடியவில்லை"-என்று சிலர் கூறும் வார்த்தைகள் என் செவிகளில் விழுகிறது. உங்களது நிலை-உதவியற்ற பரிதாபமான நிலை எனக்குப் புரிகிறது. இதற்கு விளக்கம் அளிப்பதற்கு முன்பு ஒரு சிறு கேள்வியை உங்களிடம் கேட்க விரும்புகிறேன்.

இந்த உலகத்தில் நீங்கள் பிறந்தபோது நீங்கள் விருப்பம் தெரிவித்தா இம் மண்ணில் பிறந்தீர்கள்? ஏன் சம்மதம் இல்லாமல் என் முன் அனுமதி இல்லாமல் ஏன் என்னைப் பெற்றீர்கள்-என்று உங்களது பெற்றோர்மேல் Court Case நீதி மன்றத்தில் வழக்கு போடப் போகிறீர்களா? நிச்சயமாக இல்லை. அது ஒரு முட்டாள்தனம். அதுபோலவே இந்த உலகத்தை விட்டுப் போவதும் உங்கள் கையிலில்லை. இது ஆண்டவனின் கையில்தான் இருக்கிறது. நமது கடைசி மூச்சு-நமக்கு முதல் மூச்சைக் கொடுத்த ஆண்டவனின் கையில்தான் உள்ளது. நமது வாழ்க்கை என்ற 'விளக்கின்' ON/OFF Switch ஆண்டவரது கையில்தான் உள்ளது. நமது ஜீவன்மேல் ஆண்டவர் வைத்துள்ள அதிகாரத்தை-கொடுக்கவும் எடுக்கவும் உள்ள அந்தத் தெய்வீக அதிகாரத்தை நீங்கள் துஷ்பிரயோகம் செய்ய முயற்சி செய்யாதீர்கள்.

வியாதியினால் கஷ்டப்படாதவர்கள் இந்த உலகில் யாராவது இருக்கிறார்களா? நிச்சயமாக இல்லை. வியாதி நீங்குவதற்காக ஜெபியுங்கள். ஆண்டவர் அற்புத சுகம் அளிக்க ஊக்கமாக ஜெபியுங்கள். சில வேளைகளில் அற்புத சுகம் கிடைப்பதற்குக் காலதாமதம் ஆகலாம். பொறுமையோடு காத்திருங்கள். வியாதியினால் ஏற்படும் வேதனைகளைக் குறைக்க மருத்துவர்களிடம் ஆலோசனையை நாடுங்கள். வியாதியின் வேதனை தாங்க முடியாமல் அல்லது வேறொரு காரணத்திற்காக நீங்கள் தற்கொலை செய்ய நினைப்பது பைத்தியக்காரத்தனம். வியாதியினால் ஏற்படும் வேதனை அநுபவிப்பதைத் தவிர்ப்பதற்குத் தற்கொலை செய்வதென்றால் இந்த உலகத்தில் யாருமே உயிரோடு இருக்க மாட்டார்கள். உங்களைப் பெற்றெடுத்த தாய் கூட-உங்களைப் பெற்றபோது அநுபவித்த பிரசவ வேதனையும் இதில் அடங்கியிருக்கிறது. இந்தப் பிரசவ வேதனையைத் தவிர்த்திருந்தால் நீங்கள் பிறந்திருக்கவே முடியாது.

ஆண்டவர் உங்களுக்குக் கொடுத்த ஜீவனை அநுபவிக்கத்தான் உங்களுக்கு அதிகாரமுண்டே தவிர அதைத் கொடுக்கவோ, எடுக்கவோ உங்களுக்கு அதிகாரமில்லை.

III. 6) காதல் தோல்வி - பரீட்சையில் தோல்வி

தற்கொலைக்கு இன்னொரு முக்கியமான காரணம் காதலில் தோல்வி-மற்றும் பரீட்சையில் தோல்வி. திருமணம் பரலோகத்தில் நிச்சயக்கப்பட்டு பூலோகத்தில் உடைக்கப்படுகிறது-என்று சற்று சுவாரஸ்யமாகக் கூறுகிறார்கள். ஒருவன் ஒருத்தியை விரும்பினான், ஒருத்தி ஒருவனைக் காதலித்தாள். ஆனால் அது கைகூடி வரவில்லை. எனவே அவன் அல்லது அவள்-அல்லது இருவரும் தற்கொலை செய்து கொண்டார்கள்-என்று அடிக்கடி செய்தித்தாளில் வாசிக்கிறோம். உடனே இதற்குக் காரணமாயிருந்த பெற்றோர்கள் மேலும், சமுதாயத்தின் மேலும், சமுதாயக் கட்டுப்பாட்டின் மேலும் நமக்குக் கோபம் வருகிறது. ஆனால் இப்படிப்பட்ட துரதிருஷ்ட சம்பவங்களைத் தடுக்க வேண்டுமானால் இதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவையாயிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட சாரார் மாத்திரமல்ல எல்லோரும் இதைத் தடுக்க முன்வர வேண்டும். இது ஒரு Multi Dimensional Social Problem காதலித்தவர்களும், பெற்றோர்களும், முழு சமுதாயமும், - எல்லோருக்குமே இதில் பங்கும்-பொறுப்பும் உண்டு.

முதலாவது காலித்தவர்களை எடுத்துக் கொள்ளுங்கள். காதலுக்கு கண்ணில்லை என்பார்கள். கண் இல்லாத காதலுக்கு மூளையும் இருப்பது சற்று சந்தேகம் தான். இதற்கு ஒரு உதாரணம் நடந்த சம்பவத்தைக் கூறுகிறேன்.

அவள் ஒரு மருத்துவக் கல்லூரியில் MBBS படிக்கும் மாணவி-அவளது அப்பா ஒரு பெரிய டாக்டர். பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போது அந்த பஸ்ஸை ஓட்டும் ஓட்டுநரைக் காதலித்தாள். அப்பா அம்மாவிற்குத் தெரியாமல் ஓடிப்போய் அந்த பஸ் டிரைவரைத் திருமணம் செய்து கொண்டாள். ஆனால் அவனுக்கு ஏற்கனவே திருமணமாகிக் குழந்தை இருப்பது. இவளுக்குத் தெரியாது. காதலுக்குத்தான் கண்ணில்லையே.

இப்பொழுது இவனோடும் வாழ முடியவில்லை; அப்பாவின் வீட்டிற்கும் போக முடியவில்லை. இறுதியில் தற்கொலை செய்து கொண்டாள்.

இதில் யாரைக் குற்றப்படுத்துவீர்கள்? அந்தப் பெண் தன் பெற்றோர்கள் மூலமாகப் போயிருந்தால் அவர்கள் தீர விசாரித்திருப்பார்கள். அவள் காதலிப்பது திருமணமாகி குழந்தைக்குத் தகப்பனாக இருப்பவன் என்ற உண்மை வெளிவந்திருக்கும். அந்த டிரைவர் விரித்த வலையில் இவள் எளிதில் விழுந்து விட்டாள். 20 வருடமாகத் தன்னை வளர்த்த பெற்றோரைத் தள்ளிவிட்டு 2 மாதமாகப் பழகிய முன்பின் அறியாத அந்நியன் பின்னால் போய்விட்டாள். இருப்பினும் தற்கொலையை இவள் தெரிந்தெடுத்திருக்கக் கூடாது. உயிரோடு இருந்து வாழ்க்கைப் போராட்டத்தை நடத்தியிருக்க வேண்டும். இப்படிப்பட்ட பெண்களுக்கு இவள் ஒரு எச்சரிப்பின் - சிவப்பு வெளிச்சமாக வனாந்திரத்திலே கூப்பிடுகிற ஒரு சத்தமாக மாறியிருக்கலாம்.

இவள் காதலித்தது தவறல்ல. ஆனால் கொஞ்சம் யோசித்து காதலித் திருக்கவேண்டும்.

காதலில் தோல்வியடைந்த காரணத்தினால் மனம் உடைந்து சோர்ந்து போயிருக்கிறவர்களுக்குக் கீழே கொடுக்கப்பட்டிருக்கிற சம்பவம் ஒரு மனமாற்றத்தை, திசை மாற்றத்தை உண்டாக்கும் என்று நம்புகிறேன்.

ஒரு ஆற்றில் இரண்டு கண்ணீர்த் துளிகள் மிதந்து கொண்டு சென்றன. அவைகள் பேசிக்கொண்டே போனது, 'நீ ஏன் அழுகிறாய்' என்று முதல் கண்ணீர் இரண்டாவது கண்ணீரைக் கேட்டது. அதற்கு, "நான் ஒரு வாலி பனைக் காதலித்தேன், காதல் கைகூடி வரவில்லை, அவன் இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்துவிட்டான். அவனையே நினைத்து நான் தினந்தோறும் அழுது கொண்டேயிருக்கிறேன்" என்று இரண்டாவது கண்ணீர் பதில் கொடுத்தது. இதைக்கேட்ட முதல் கண்ணீர், நீ காதலித்த அதே வாலி பனை நான் திருமணம் செய்ததால் தினம்தினம் கண்ணீர் விடுகிறேன்"- என்று பதில் சொன்னதாம்.

பார்த்தீர்களா? இதுதான் வாழ்க்கைப் புதிர், வாழ்க்கைப் பாடம், அவன் தனக்குக் கிடைத்ததினால் ஒரு பெண் அழுகிறாள். அவன் தனக்குக் கிடைக்காத காரணத்தினால் இன்னொரு பெண் அழுகிறாள்!

யாருக்குத் தெரியும்-உங்களது காதல் தோல்வி, உங்கள் நிஜ வாழ்க்கைக்கு மகிழ்ச்சியின் முதல் படியாக இருக்கலாமே. விரும்பியது கிடைக்காவிட்டால், கிடைத்ததை விரும்பப் பழகுங்கள். காதலித்த பெண்ணை திருமணம் செய்வதைக் காட்டிலும், திருமணம் செய்த பெண்ணை காதலிப்பது எவ்வளவோ மேலானது. கூட்டிக் கழித்தால் வாழ்க்கையின் ஏட்டில் எல்லாமே ஒன்றுதான். இல்லாததை நினைத்து நினைத்து ஏங்கிக் கொண்டிராமல், உங்களிடத்தில் உள்ளதைப் பார்த்து-எனக்கு இது இருக்கிறது-அது இருக்கிறது என்று சொல்லப் பழகுங்கள்.

III 7) பரீட்சையில் தோல்வி

இன்றைக்கு வாழ்க்கையில் முன்னேறியவர்கள் பலரை உங்கள் வெற்றியின் ரகசியம் என்ன? என்று கேட்டால், நான் சந்தித்த தோல்விதான் எல்லாவற்றிற்கும் முதல்படி" என்று பதில் கூறுவார்கள். தோல்வியும் வெற்றியும் நிரந்தரமானதல்ல. உனது தோல்வி கூடியவிரைவில் வெற்றியாக மாறும். இதற்காக நீ மனச்சோர்வடைந்து உன் வாழ்க்கையை முடித்துக் கொள்ள விரும்புவது மடமை. பரீட்சையில் ஏன் தோல்வியடைந்தாய் என்று ஆராய்ந்து பார். பரீட்சைக்கு உன்னை ஆயத்தம் பண்ணிய முறையை மாற்று. நீ படித்ததை நன்கு சிந்தித்துப் பார்; ஒருமுறை முக்கியமான குறிப்புகளை எழுதிப்பார். பரீட்சை ஹாலில் 3 மணி நேரம் பரீட்சை என்றால் அதில் கடைசி 15 நிமிடங்களை நீ ஏற்கனவே எழுதியவற்றை ஒருமுறை திருப்பிப் பார்த்து அதிலுள்ள தவறுகளைத் திருத்துவதற்கு பயன்படுத்து. உன் வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்வியைக் குறித்தே சிந்தித்து, கவலைப்பட்டுக் கலங்குவதை விட்டுவிட்டு, அடுத்த பரீட்சையில் எப்படி வெற்றி பெறுவது-என்று ஆக்கபூர்வமாகச் சிந்திக்க உன் சிந்தனையை அனல் மூட்டி எழுப்பு. தோல்விதான் வெற்றியின் முதல்படி என்ற கோட்பாட்டை மறந்து விடாதே.

இப்பொழுது சிந்தியுங்கள், ஆழமாய்ச் சிந்தியுங்கள். ராஜாவிற்கு ஆலோசனை சொல்லிய அகித்தோப்பேல் செய்த இமாலயத் தவறை நீங்கள் செய்ய வேண்டாம். இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் ஸ்காரியோத் என்ற இன்னொரு மனிதன் தற்கொலை செய்து கொண்டான். இவர்கள் செய்த முட்டாள்தனமான கோழைத்தனமான செயல்கள் கடுமையாகக்

கண்டிக்கத்தக்கது. ஒரு மனிதனின் வாழ்க்கை ஓட்டப் பந்தயத்தைப் போன்றது; அது எப்படி ஆரம்பமாகிறது என்பது முக்கியமல்ல; ஆனால் அவனது வாழ்க்கை எப்படி முடிகிறது என்பதுதான் முக்கியம். உன்னுடைய வாழ்க்கை இந்த உலகிற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக அமையட்டும்.

உனது வாழ்க்கையில் நீ சந்தித்த பல தோல்விகள்-வியாபாரத்தில், காதலில், பரீட்சையில்-இது போன்ற தோல்விகள்-இவைகளெல்லாம் உன்னைச் சோர்வடைய வைக்க அனுமதிக்காதே-அந்த தோல்விகள், உன் தலைக்கு மேல் பறக்கும் பறவைகளைப் போல-சில விநாடிகள் உன் தலைக்கு மேல் பறந்துவிட்டு, பின்பு கண்ணுக்குத் தெரியாத தொலைவிற்கு ஓடிவிடும். உன்னுடைய வேலை போய்விட்டால் இன்னொரு வேலை கிடைக்காமலா போய்விடும்? யாருக்குத் தெரியும், வேலையை இழந்த உன்னை ஆண்டவர் உயர்த்தி, பலருக்கு வேலை கொடுக்கும் தொழில் அதிபராக மாற்ற முடியும். போத்திபார் வீட்டில் வேலை பார்த்த யோசேப்பு, எஜமானின் மனைவியினிமித்தம், வேலையை இழந்து சிறையில் அடைக்கப்பட்டான். ஆனால் அதே யோசேப்பு சில ஆண்டுகளுக்குப் பின்பு எகிப்து தேசத்தின் அதிபதியாக மாறி தன்னை வேலையிலிருந்து நீக்கிய போத்திபாருக்கு இந்த யோசேப்பு வேலை கொடுத்தான்!

குடும்பப் பிரச்சனை உன் குடியைக் கெடுக்க அனுமதிக்காதே. இது உன் குடும்பம், நீ உருவாக்கிய குடும்பம். நீ பெற்றெடுத்த பிள்ளைகள், நீ தாலிகட்டிய மனைவி, அவர்களுடன் உட்கார்ந்து நேரில் பேசு, பிரச்சனை தானாகவே தீர்ந்துவிடும். ஒரு ஊரில் ஒரு கணவனும் மனைவியும் பல ஆண்டுகளாக ஒருவரோடு ஒருவர் பேசாமலே வாழ்ந்து வந்தார்கள். எதற்காக இருவரும் சண்டை போட்டு, பல ஆண்டுகளாகப் பேசாமலி ருக்கிறீர்கள் என்று யாரோ கேட்டபோது எதற்காகச் சண்டை போட்டோம் என்பதையே இருவரும் மறந்துவிட்டார்களாம். இது ஒரு சிறுபிள்ளைத்தனம். பல குடும்பப் பிரச்சனைகள் இப்படித்தான் சிறுபிள்ளைத்தனமாக இருக்கிறது. உங்கள் குடும்பப் பிரச்சனை எப்படி? இதுபோல உப்பு-சப்பு இல்லாததா? எறும்புப் புற்றை எரிமலையாக்கி விடாதீர்கள்.

மனச்சோர்வின் மிக மிக மோசமான உச்சகட்ட விளைவாகிய தற்கொலை மனப்பான்மையை அடியோடு அழிக்கத் தீர்மானம்

எடுப்போமாக. வாழ்க்கை வாழ்வதற்கே. வாழ்க்கை என்ற பூமாலையை நமது கரத்தில் ஆண்டவர் கொடுத்திருக்கிறார். அந்த வாழ்க்கை, குரங்கு கையில் கொடுக்கப்பட்ட பூமாலையாக மாறக்கூடாது. அந்த பூமாலையை நமது கழுத்தில் அணிந்து அழகு பார்த்து, மகிழ்ச்சியடைய வேண்டுமே தவிர, அதைத் தாறுமாறாகப் பிய்த்து, அந்த மலர்களைத் தரையிலே வீசியெறியக் கூடாது. இதை வாசிக்கும் சகோதரனே, சகோதரியே, ஒரே ஒரு நிமிடம் நேர்மையாக, ஆழமாக, ஆக்கபூர்வமாகச் சிந்தித்துப் பார். உன்னிலே காணப்படும் கோபம், தாபம், ஆத்திரம், அவசரம், சுயபட்சாதாபம், வெறுப்பு, வேதனை, அகங்காரம், பெருமை- இவையெல்லாவற்றையும் சற்று ஒதுக்கி வைத்து, அவற்றிற்கு ஒரு நாள் அல்லது ஒரு மணி நேரம் விடுமுறை கொடுத்துவிட்டு, உன்னையே எண்ணிப்பார். உன் வாழ்க்கையைச் சீர்தூக்கிப்பார். உனது வாழ்க்கை இந்த உலகிற்கு மிக அவசியம். "நீ உதவி செய்வாய், நீ வாழ்வு கொடுப்பாய்" என்று பலர் உன்னை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உனக்காக வாழ்வது சுயநலம்; ஆனால் நீ பிறருக்காக வாழ்வது தெய்வீகச் செயல். பிறருக்காக வாழ்வதில்தான் உனது வாழ்க்கையின் அர்த்தமே அடங்கியிருக்கிறது-என்ற வாழ்க்கைத் தத்துவத்தை நீ புரிந்து கொள். அதில் திருப்தியடைய பழகிக் கொள். உனது பிரச்சனையை மாத்திரம் பார்த்துக் கொண்டிராதே, மற்றவர்களது பிரச்சனையைப் பார்க்கவும், அடையாளம் கண்டுகொள்ளவும் பழகு. அப்பொழுது உனது பிரச்சனையை நீ மறந்து விடுவாய். வாழ நினைத்தால் நீ வாழலாம். நீ வாழ்ந்தால் மாத்திரம் போதாது, மற்றவர்களையும் நீ வாழ வைக்க வேண்டும்.

நூலாசிரியரைப் பற்றி

சகோ.S.பன்னீர்செல்வம் அவர்கள் ரோமன் கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்தவர்.தன் 18-வது வயதுவரை வேத புத்தகத்தை அவர் பார்த்ததே இல்லை. பொறியியற் கல்லூரியில் பயிலும்போது ஆண்டவரால் சந்திக்கப்பட்டார். பின்பு பொறியியற் கல்லூரில் பேராசிரியரான போது ஆண்டவரது ஊழியத்தில் பங்கெடுத்தார். ஒரு நாள் அவர் தமிழ் வேதாகமத்தைப் படித்துக்கொண்டு பேருந்தில் பயணம் செய்யும்போது 'வேதாகமத்தை ஒவ்வொருவர் தாய் மொழியிலும் மொழிபெயர்க்கவேண்டும்' என்ற தரிசனத்தைப் பெற்றார். அதன் விளைவாக அவர் தொடங்கியதே இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் ஊழியம். *(Indian Bible Translators).*

I.B.T. இயக்க இதழான 'வார்த்தை' மூலம் பல செய்திகளை இவர் வெளியிட்டு வருகிறார். இவரது செய்திகளை கிறிஸ்தவர்கள்,போதகர்கள்,பேராயர்கள், பாராட்டுவதோடு தம் ஆராதனைகளிலும் பயன்படுத்தி வருகின்றனர். "சகோதரரது செய்தியைப் படிக்கும்போது இவர் நேருக்கு நேர் பேசுவது போல் உணர்கிறோம்" என சிலர் கூறுகின்றனர். அமெரிக்க நாட்டில் ஒருவர் "இவர் செய்தி கருத்தாழமானது, சீரானவார்த்தைகளும் மொழி வளமும் நிறைந்து நேர்த்தியாக ஓடும் நதி போன்றது" என்று வர்ணிக்கிறார்.

தமிழ் நாட்டிலுள்ளோர் பலர் "வார்த்தை இதழ் வந்தால் ஆர்வத்தோடு படித்து முடித்தபின்தான் கீழே வைப்போம்" என்கின்றனர். சிலர் "வேதாகமத்திற்கு அடுத்து வார்த்தை இதழில் வரும் சகோதரர் செய்திதான் அதிக விருப்பம்" என்கின்றனர்.

25ஆண்டுகள் பொறியியல் கல்லூரியில் மின்னணுத்துறையில் பேராசிரியராகப் பணிசெய்த இவர் தன் எழுத்து மூலமாக வேதத்தில் புதைந்திருக்கும் சத்தியங்களை வெளிக்கொணரவும் அதில் உறங்கிக்கிடக்கும் உண்மைகளை உசுப்பி விடவும் ஆற்றல் பெற்றவர்.இப்புத்தகத்திலுள்ள செய்திகள் ஒரே தலைப்பில் ஒரே கருத்தை மையமாக்கி எழுதப்பட்டவை. வார்த்தை இதழில் "சோர்வும் தீர்வும்" என்ற தலைப்பில் வந்த செய்தியே விரிவாக்கப்பட்டு புத்தகமாக வெளிவந்துள்ளதை நோக்கின் 'வார்த்தை'யில் வரும் ஒவ்வொரு செய்தியும் ஒரு புத்தகமாக மாறும் தகுதியுடையது என்பது தெளிவாகும்.

இப்புத்தகச் செய்திகள் உங்கள் சோர்வு நீக்கும் பானமாக மட்டுமல்ல அடிக்கடி ஏற்படும் சோர்வு நோய் நீக்கும் நிரந்தர மருந்தாகும் என நம்புகிறோம். 'சோர்வு' உங்களை சந்தித்தால் இப்புத்தகத்திலுள்ள 'தீர்வை' பயன்படுத்த மறவாதீர்.

Word Publishers Trust
Coimbatore-14.